# தமிழரசு

திங்கள் இருமுறை டிச 16 1971 35 காசு



# பணமழையில் நனைந்திடக் கணமும் தயங்காதீர்!

**கொடுங்கள் ஒரு ரூபாய்! பெறுங்கள் ஒரு லட்சம்!!**

ஒரு ரூபாய் கொடுத்து தமிழ்நாடு பரிசுச் சீட்டு வாங்கினால் உங்களுக்கு ஒருலட்சம் ரூபாய் பரிசாகக் கிடைக்கலாம்... எனவே

## இன்றே வாங்குங்கள்
## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

**ஒரு சீட்டின் விலை ஒரு ரூபாய் தான்.**

(ஒவ்வொரு வரிசைக்கும்)

## முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய்




| | | |
|---|---|---|
| **5** இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. **10** ஆயிரம் | ரூ. | **50,000** |
| **10** மூன்றாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. **5** ஆயிரம் | ரூ. | **50,000** |
| **50** நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. **1000** | ரூ. | **50,000** |
| **1000** ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. **100** | ரூ. | **1,00,000** |

மொத்தப் பரிசுகள் 4264.

மொத்தப் பரிசுத் தொகை ரூ. *

# 14,00,000

## குலுக்கல் நாள்: 31-12-71

*தமிழ்நாடு பரிசுச் சீட்டு இதுவரை 264 லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது.*

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9

எல்லா விவரங்களுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு, சென்னை-2

*4 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

# கொடி நாள்
(7-12-71)



முதல்வர் நிதி வழங்குகிறார்



கொடியைக் குத்திக் கொள்கிறார்



வங்கதேச மக்களுக்கு உதவத் தஞ்சையிலிருந்து சென்ற மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சென்னையில் சிறப்பாக வழியனுப்பி வைக்கப்பட்டனர். (3.12.71)



ஜலந்தரிலுள்ள படைவீரர்களுக்கு அந்நகர மக்கள் பொதுநலச் சங்கம் இலவசமாகத் தேநீர் வழங்குகிறது.



கிழக்கிந்திய முனையில் நமது பீரங்கிப் படையினர்.



ராஜஸ்தான் பகுதியில் நமது விஜயந்தா டாங்கி.



கைதாகியுள்ள பாகிஸ்தான் படையினர்.



வங்க தேச அகதிகளிடையே குடியரசுத் தலைவர் வி.வி. கிரி உரையாற்றுகிறார்.



பஞ்சாபின் முன்னணிப் பகுதியிலுள்ள படைவீரர்களிடம் தலைமையமைச்சர் இந்திரா காந்தி உரையாடுகிறார்.



ராஜஸ்தான் முன்னணிப் பகுதியிலுள்ள படைவீரர்களிடம் பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் உரையாற்றுகிறார்

5-12-71ல்
சென்னையில்
போர்வெறிக்
கண்டனக்
கூட்டம்





பாக்கிஸ்தான் போர் வெறியை
எதிர்த்து சென்னையில் அனைத்துக்
கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!
(24-11-71)



நாட்டின் பாதுகாப்புக்காகப் போரிடும் நமது படை வீரர்களுக்கும், அவர்களுடையகுடும்பங்களுக்கும் உதவி அளிக்க, அரிசன நல அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் தலைமையில் தொழிலதிபர்கள், சமூகப் பணியாளர்கள் கூட்டம் சென்னையில் நடைபெற்றது.
(7-12-71)



# இந்தியாவின்மீது பாகிஸ்தான் படையெடுப்பு!
# தமிழ்நாடு சட்டப்பேரவையின் கண்டனத் தீர்மானம்

கிழக்கு வங்கத்தின் ஜனநாயகக்குரலை பதிக்க மறுத்து, அதன் காரணமாக அந்த மக்கள் கொதித்தெழுந்து சுதந்திரப்பங்களாதேஷ் முழக்கத்தைச் செய்ய முன் வந்த போது அவர்கள் மீது ஈவு இரக்கமின்றி ராணுவ நடவடிக்கை மேற்கொண்டு பல இலட்சக் கணக்கானவரைக் கொன்று குவித்ததோடு அல்லாமல், ஒரு கோடி அகதிகளை இந்தியாமீது சுமத்தியதன் மூலம் இந்திய நாட்டின் மீது மறைமுகத் தாக்குதலைத் தொடங்கி விட்ட பாகிஸ்தான் சர்வாதிகாரி, இறுதியாக இந்திய மண்ணின்மீது படையெடுக்கவே துணிந்து விட்ட செயலைத் தமிழக மக்கள் அனைவரின் சார்பில் இப்பேரவை வன்மையாகக் கண்டிப்பதோடு எதிரிகளை முறியடித்து இந்தியா பெரும் வெற்றி பெறுவதற்கு எல்லா விதமான ஒத்துழைப்பையும் மத்திய அரசுக்குத் தருமென்கிற உறுதியை மேற்கொள்கிறது.

நாடு காக்கப் போர்க்களம் புகுந்துள்ள வீர மறவர்களை வாழ்த்துவதிலும், அவர்தம் அருந் தியாகச் செயல்களைப் போற்றுவதிலும் இப்பேரவை பெருமை கொள்கிறது.

வெளிப்பகையை விரட்டியடிக்கப் போதுமான ஆற்றலை, உட்பகை ஏதும் உருவாகாத சூழ்நிலைதான் தோற்றுவிக்கும் என்பதை உணர்ந்து சாதிமத பேதங்கள், அரசியல் மாறுபாடுகள் அனைத்தையும் மறந்து மக்களின் பேரணி ஓரணியாகத் திரண்டு நின்று எதிரியை வென்றிடவேண்டிய அவசியத்தையும் இப்பேரவை வலியுறுத்துகிறது.

சர்வாதிகாரக் கொள்கை, மக்களாட்சித் தத்துவத்தின் மீது நடத்தத் தொடங்கியுள்ள இந்தப் போராட்டத்தில் இறுதி வெற்றி இந்தியா போற்றி வருகிற ஜனநாயகத்திற்கே என்ற நம்பிக்கையை இப்பேரவை பிரகடனம் செய்கிறது.

முகப்பில்: உதகைப் பழங்குடியினரின் வாழ்வியலில் ஒரு காட்சி.




தொடக்க காலத்திலிருந்தே பாகிஸ்தானின் மனிதாபிமானமற்ற போக்கை இந்திய அரசு உலக நாடுகள் அனைத்துக்கும் தெளிவாக்கியிருப்பதோடு நியாயமுணர்ந்து நடக்கும் நாடுகள் பலவற்றின் ஆதரவையும் பெற்றுள்ளது. அவ்வண்ணம் ஆதரவு தர முன் வந்துள்ள நாடுகளுக்கு இப்பேரவை நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

பகைப்புலம் மாய்த்து வாகை சூடும் வண்ணம் இந்தியப் படையினர் ஊக்கமும் உறுதியும் கொண்டிடப் போருக்குத் தேவையான ஆள், பொருள், கருவி அனைத்தையும் வழங்கிடவும், இந்தியப் பிரதமர் எடுக்கும் முடிவுகளை ஏற்று உறுதுணையாக இருக்கவும் தமிழ்நாட்டு அரசுக்குத் தமிழ் மக்கள் தயக்கமின்றி ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமென்று இப்பேரவை கேட்டுக் கொள்கிறது.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் முதல்வர் கலைஞர் 6—12—1971 அன்று முன்மொழிந்து நிறைவேற்றிய தீர்மானம்

# வெற்றி நமதே—எதிரி வீழ்வது உறுதி!

இன்று கொடிநாள்; கொடியவர் ஆக்கிரமிப்பை எதிர்த்துத் தகர்த்து வெற்றிக் கொடி ஏந்த இந்தியா சூளுரைக்கும் நாளும் இந்நாளே யாகும். இந்தியா விடுதலை பெற்ற போது பாகிஸ்தான் தோன்றியது. தோன்றிய போதே அந்த நாடு ஓர் அவலட்சண அமைப்போடு தோன்றியது. மேற்குப் பாகிஸ்தானுக்கும் கிழக்குப் பாகிஸ்தானுக்கும் இடையிலே ஆயிரம் மைல். அந்த ஆயிரம் மைலுக்கு இடையே நமது இந்தியப் பூபாகம்.

உலகத்தில் எந்த ஒரு நாடும் இப்படி இடையிலே ஆயிரம் மைல்களை இரு பகுதிகளுக்கிடையே பெற்றிருக்கவில்லை. அமைப்பு முறையிலே மட்டுமல்லாமல் ஆதிக்க வெறிக்கு அடிமைப்படுவதிலும் கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் பெருந் தொல்லைக்கு ஆளாயினர்.

அவர்களது வாழ்க்கைத் தரம் உயரவில்லை. மொழி உரிமை நசுக்கப்பட்டு, மொழி ஆதிக்க வெறி உச்சக் கட்டத்திற்குச் சென்று அந்த மக்களின் உணர்ச்சி எரிமலைத் திக் குழம்பாயிற்று. தங்கள் மாநில உரிமைகள் நசுக்கப்படுவதைத் தாங்காத கிழக்கு வங்க மக்கள், ஜனநாயக ரீதியில் தங்கள் தீர்ப்பைச் சென்ற ஆண்டு தேர்தலில் வழங்கினர்.

மாநில உரிமை கேட்ட மக்களின் குரல் வளையை நெரிப்பதுபோல் தேர்தல் தீர்ப்பைப்புறக்கணித்துவிட்டுக் கிழக்கு வங்க மக்களின் மதிப்புக்குரிய தலைவர் முஜிபுர் ரகிமானையும் சிறையில் அடைத்துவிட்டு, லட்சக்கணக்கான கிழக்கு வங்க மக்களின் உயிரையும் பறித்து, ஒரு கோடி மக்களை அகதிகளாக இந்தியாவுக்குத் துரத்திவிட்டு, மனிதாபிமானமற்ற முறையில் பேயாட்டம் போடத் தொடங்கியது பாகிஸ்தான் சர்வாதிகார ஆட்சி!

மிதிபட மிதிபடப் புழுவும் புலியாகும் என்பதற்கேற்பக் கிழக்குப் பாகிஸ்தான், கிழக்கு வங்கமாகி, கிழக்கு வங்கம், 'பங்களா தேஷ்' சுதந்திர நாடாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டது. பங்களாதேஷின் முக்திபஹனி என்ற விடுதலைப்படையினர், பாகிஸ்தான் இராணுவ ஆட்சிக்கு மரண அடி கொடுக்கத் தொடங்கியதும் ஆதிக்க வெறியர் யாகியா கானின் ஆத்திரம் இந்தியா மீது திரும்பியது.

'பங்களா தேஷ்' பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தேவை என்று வலியுறுத்தியது இந்தியா செய்த குற்றமாம். அதற்காக அழகுமிகு தாஜ் மகால் ஒளியுமிழும் ஆக்ரா மீது குண்டு வீச்சு. சீக்கியரின் பொற்கோயில் எழுந்து நிற்கும் அமிர்த சரஸ் மீது குண்டு வீச்சு. ஸ்ரீநகர், ஜோத்பூர் போன்ற இந்திய மண்ணிலே எதிரிகள் திடீர் தாக்குதல். இந்தியா மீது பாகிஸ்தான் படையெடுப்பு!

ஆம், தூங்கும் புலியை இடறி விட்டார்கள்; இப்போது அதன் விளைவை அனுபவிக்கிறார்கள். விரைவில் பங்களா தேசில் பாகிஸ்தான் படை, இருந்த இடம் தெரியாமல் போகும்.

இந்திய நாடாளுமன்றத்தில் இந்தியாவின் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்களால் அங்கீகாரப் பிரகடனம் செய்யப்பட்ட 'பங்களா தேஷ்' புதிய அரசின் கொடி, விடுதலை வீரர்களின் புகழ் பாடியபடி விரைவிலே பறக்கப் போகிறது. பாகிஸ்தானின் தோல்விக் காய்ச்சல், இந்தியா மீதும் கடும் பாய்ச்சலுக்குக் காரணமாவதில் வியப்பில்லை.

நெருக்கடி நீண்ட நாள் இருக்குமா என்பதைவிட முற்றுமா என்ற கேள்விக்கு நாம் விடை கண்டாக வேண்டும். முற்றக்கூடும். எதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும். போர்க்கால விளைவுகள் —போருக்குப் பின் சமாளிக்க வேண்டிய பிரச்சினைகள் இவைகள் அனைத்தையும் மனத்திற் கொண்டு நாடு நடவடிக்கைகளை மேற்கொண்டு ஆகவேண்டும்.

இந்த மண்ணைக் காக்கும் போரில் மான மறவர்கள் களம் நோக்கிச் சென்ற வண்ணமிருக்கின்றனர். தாயின் அன்பு முத்தம் பெற்றுத் துப்பாக்கி ஏந்திக் கிளம்பிடும் வீரர்கள்—தந்தையின் ஆசி பெற்றுத் தோள் தட்டிச் செல்லும் தகைமைசால் மைந்தர்கள்—தோகையாள் கண்ணீர் துடைத்து எதிரியின் வியூகத்தைப் பிளக்கச் செல்லும் இளங்காளையர்—மழலைக்கு முத்த மழை பொழிந்து மாற்றுரைப் புறங் காணப் பறந்தோடும் புறநானூற்றுச் செல்வங்கள்— இவர்கள் எல்லாம் சாவின் கோரக்கரங்களுக்கு அஞ்சாமல் சமர்க்களம் செல்லும் தியாகச் சுடர்கள் அன்றோ!

விடைபெற்றுக் களம் சென்ற மகனின் இராணுவ உடைகள் மட்டும் திரும்பி வந்து--அவைகளைக் கண்ணீரால் நனைக்கும் தாய்களின் பாதங்களுக்கு மலர்கள் தூவி வணங்குகிறோம். என்றாலும், அந்தத் தாயும் அந்தக் குடும்பமும் வாழும் பொறுப்பினை நாமல்லவா ஏற்றுக்கொள்ள வேண்டும்?

களத்தில் நிற்போர் காக்கி உடை அணிந்த வீரர்கள்.... அந்த உடை அணியாத நாம் போர்க்களத்தில் இருக்கிற உணர்ச்சியோடு காரியங்கள் ஆற்றியாக வேண்டும்.

வெளிப்பகை, யுத்த தளவாடங்களோடு வரும். உட்பகை, கறுப்புச் சந்தைக்காரர்கள், கொள்ளை வியாபாரிகள், பதுக்கல்காரர்கள், அவசர நிலை உணராமல் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் ஐந்தாம் படையினர் ஆகியோர் உருவிலே வரும். அவர்கள் மீது அரசு, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் எதிரிகளுக்கு இடம் கொடுத்த தீங்கினைச் செய்த குற்றத்திற்கு ஆளாகும். அவர்களை அரசு மட்டுமின்றி நாட்டு நலனில் அக்கறையுள்ள பொதுமக்களும் அடையாளங் காட்டிடத் தவறக் கூடாது. போர் நேரத்தில் வதந்திகள்

எதிரியின் கணைகளை விடக் கொடியவைகளாகும். வதந்திகளைப் பரப்புவோர் ஐந்தாம் படையினரில் ஒரு பிரிவினரேயாகும்.

போர்க்காலத்தில் உற்பத்தி பெருக, தொழிலாளத் தோழர்களும் தொழில் அதிபர்களும் தங்கள் ஒத்துழைப்பைத் தந்தாக வேண்டும்.

நாட்டின் பாதுகாப்பு— நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி இவைகளை மாணவ நண்பர்கள் உணர்ந்து பணியாற்றுவார்கள் என நம்புகிறேன். அவர்களிடையே இந்தியாவின் எதிரிகள் மாணவர் வேடத்தில் நுழையக்கூடும்; தூண்டி விடக் கூடும். அந்த எதிரிகள் தொலைவிலிருந்து அல்ல; துரோகச் சகதியிலிருந்து முளைத்திருப்பவர்களே யாவர். அவர்கள் சூது மதிக்கு மாணவர்களும் மற்றவர்களும் இரையாகிவிடக்கூடாது.

போருக்கு நிறைய நிதி தேவைப்படுகிறது. நேற்று, சட்டப் பேரவையில் நிதி பற்றி நான் அறிவித்த பிறகு 'யுத்த நிதி' குவியத் தொடங்கிவிட்டது.

நிதி அனுப்புவோர் நாட்டுப் பாதுகாப்பு நிதி (நேஷனல் டிபன்ஸ் பண்ட்) என்ற தலைப்பில் தமிழக அரசுத் தலைமைச் செயலகத்திற்கு முதலமைச்சரின் முகவரிக்கு அனுப்பிட வேண்டுகிறேன்.

போரில் பாதிக்கப்பட்டோர், கால்—கை இழந்தோர், உயிர் தந்தோர் ஆகியோர் குடும்பங்களைக் காப்பாற்றத் தமிழக அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

தமிழ் நாட்டிலிருந்து களம் சென்று போரில் இறந்தோர்

## உலகைக் கவர முடியும்!

மேலை நாடுகளில் உள்ள விதவிதமான கட்டடங்களைப் பார்க்கும்போது—நம் நாட்டிலுள்ள பொறியாளர்களுக்கும் தக்க வாய்ப்பு உருவாக்கப்பட்டால் — அவற்றைப் போலவே உறுதியாக எடுத்துக்காட்டாக அமைக்க முடியும்.

வாஷிங்டனில் வளைந்து வளைந்து போகிற சாலைகளையெல்லாம் பார்த்த போது நம் நாட்டில் நம்முடைய பொறியாளர்களுக்கு இவ்வளவு வாய்ப்பு ஏற்படவில்லையே என்று தான் எண்ணினேன். வாய்ப்பும் வசதியும் செய்யப்படுமானால் இங்குள்ள பொறியாளர்களும் உலக நாடுகளின் கவனத்தைக் கவருகிற மாதிரிப் பணியாற்றக் கூடியவர்களே!

—பொறியாளர் பேரவைத் தொடக்க விழாவில் முதல்வர்.

குடும்பங்களுக்கும், அங்கஹீனமாகி, பணியாற்றிடத் தகுதியிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் ஐயாயிர ரூபாயும், மூன்று ஏக்கரா புஞ்சை அல்லது $1\frac{1}{2}$ ஏக்கரா நஞ்சையும் தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும். அவர்கள் வீட்டுக் குழந்தைகளின் படிப்புச் செலவுக்கும், உடைகளுக்கும் உதவி அளிக்கப்படும்.

யுத்த நேரத்தில் ரத்த தானம் இன்றியமையாத அறச் செயல்! அதனைச் செய்திட அனைவரும் ஒருவரையொருவர் முந்திக் கொள்ள வேண்டும்.



செருமுனையில் நாடு!

சிங்க முழக்கம் செய்திடும் ஆற்றல் மறவர், போரில்!

எதிரிகளைத் தூளாக்கிட எக்காள முழக்கம் எங்கணும் கேட்குது!

கடைசி யுத்தமெனக் கர்ச்சிக்கிறார் யாகியாகான்!

தன் முடிவைத் தானே தெரிந்து கொண்டு போருக்கு வந்திருக்கிறார் என்று புரிகிறது.

உண்மை உணர்ந்த நாடுகள் நம் பக்கம். நியாயமுணர்ந்த தேசங்கள் நம் பக்கம். உண்மை உணர்ந்தும் நம்மை அலட்சியப்படுத்துகிற நாடுகள் விரைவில் திருந்துகிற அளவுக்கு இந்தப் போரில் பாடங் கற்றுக் கொடுப்போம். அதற்கு நம்முடைய ஒற்றுமையைப் பலப்படுத்துவோம். கட்சி, மத, சமய, சாதி வேறுபாடுகளை மறப்போம்.

வீரச் செயல் புரிவோம். தீரத்தை நிலைநாட்டுவோம்.

வீர விருதுகள் பெறுவோர்க்குத் தமிழக அரசு பொற்கிழி அளிக்கிறது. பரமவீர சக்கர விருது பெற்றவர்க்குப் பத்தாயிர ரூபாய் என்று இதுவரையில் இருந்ததைப் பதினைந்தாயிரமாக இனிமேல் வழங்கப்படும். மகா வீர சக்கர விருது பெற்றவர்க்கு ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாய் என்று இதுவரையில் இருந்ததை இனிமேல் பத்தாயிரமாக உயர்த்தித் தரப்படும்.

வீர சக்கர விருது மூவாயிரம் என்று இருந்தது ஐயாயிரம் ரூபாயாக இனிமேல் உயர்த்தித் தரப்படும். சேனா விருதுக்கு முதல் தடவையாக நமது தமிழக அரசின் சார்பில் மூவாயிர ரூபாய் வழங்கப்பட இருக்கிறது. வீரர்களுக்கு அரசு காட்டும் ஊக்கத்தைப் போலவே தமிழகப் பெருமக்களும் ஊக்கம் காட்டிட வேண்டும்.

பொதுச் சேவை புரிவோர் இந்த நற்பணியில் இன்றே இறங்கிட வேண்டும். எதிரியை நோக்கி இந்தியாவின் 110 கோடிக்கு மேற்பட்ட கரங்கள் வீர முழக்கத்தோடு உயர்ந்துள்ள உணர்ச்சிமிகு காட்சியை அனைத்துலகும் கண்டு வியக்கும் வண்ணம் போரில் ஈடுபடுவோம்.

வெற்றி நமதே!

எதிரி வீழ்வது உறுதி!

வணக்கம்.

(முதல்வரின் வானொலி உரை)



# முதல்வர் தாயகம் திரும்பினார்



அமெரிக்க நாட்டு அரசின் அழைப்பிற்கிணங்கத் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கருணாநிதி அவர்கள் தமது அமெரிக்கச் சுற்றுப் பயணத்தை 8—11—'71 அன்று தொடங்கினார். சென்னையிலிருந்து புறப்பட்ட அவர், 9—11—'71, 10—11—'71 அன்று லண்டன் மாநகரில் தங்கி, 11—11—'71 அன்று வாஷிங்டன் நகர் சென்றடைந்தார்.

அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதுவர், அமெரிக்க அரசு வரவேற்பு அலுவலர், உயர் அதிகாரிகள், அங்கு வாழும் தமிழ் மக்கள் ஆகியோர் அளித்த வரவேற்புக்குப் பின், பால்டிமோர் நகரில் ''வாஷிங்டன் போஸ்ட்'' செய்தித்தாளினைச் சார்ந்த திரு வாரன் அன்னா, ''பால்டிமோர்சன்'' செய்தித் தாளினைச் சார்ந்த திரு ஆடம்க்ளேமர் ஆகியோர் முதலமைச்சரைப் பேட்டி கண்டனர்.

பேட்டியின்போது ''மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்குவது மத்திய அரசின் சுமைகளைக் குறைக்கும்; அதன் மூலம் மத்திய அரசு மிக முக்கியமான பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் எனவும், மாநிலங்கள் வலுவாக இருந்தால்தான் மத்திய அரசு வலுவாக இருக்க முடியும்'' எனவும், முதல்வர் கூறினார். ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி மக்கள் தொகையைப் பெருக்கும் இந்தியா, வங்க தேச அகதிகளைக் காட்டி உதவி கேட்பது எந்த வகையில் நியாயம் என வினா எழுப்பிய போது, — நாட்டில் நிகழும் மக்கள் தொகைப் பெருக்கத்தையும் வங்காள தேச நெருக்கடியின் காரணமாக வரும் அகதிகளின் பெருக்கத்தையும் ஒன்றாகக் கருதக் கூடாது, எனவும், மக்கள் தொகைப் பெருக்கத்தினால் ஏற்படும் சுமைகளை அந்தக் குடும்பங்கள் பகிர்ந்து கொள்கின்றன என்றும், வங்காள தேச அகதிகள் பலர் முதியோராகவும், பலவீனப் பட்டவர்களாகவும் உள்ள காரணத்தால் அவர்களது தேவையை முழுமையாகத் தீர்த்து வைக்கும் பொறுப்பு அரசுக்கே உள்ளது எனவும், எனவேதான் பண உதவி கேட்கின்றோம் எனவும் முதலமைச்சர் விளக்கம் அளித்தார். அத்துடன் அமெரிக்க மக்களின் நெஞ்சை நெகிழ வைக்கும் வண்ணம் ''மடியில் கைவைத்துப் பணம் கேட்கவில்லை; இதயத்தைத் தொட்டுத்தான் கேட்கிறோம்'' என உருக்கமாகக் கூறினார். வங்க அகதிகளுக்கு உதவுவதில் தமிழ்நாடு அக்கறை காட்டவில்லை என்ற கூற்றை மறுத்த முதல்வர், அவதியுறும் மக்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்கு உதவத் தமிழகம் என்றும் தயங்காது என்றும் தெரிவித்தார்.

11—11—'71, அன்று அமெரிக்க வெளிவிவகாரத் துறை அளித்த விருந்தில் முதல்வர் கலந்து கொண்டார். அப்போது செனட்டர் திரு எட்வர்டு கென்னடி, செனட்டர் திரு பாப் டோலா பாகிஸ்தானுக்கு அமெரிக்கா செய்யும் ஆயுத உதவியைத் தடுப்பதில் முனைப்பாக இருந்தவரும், செனட் சபையின் ஆயுதப் படைக்குழுவின் உறுப்பினருமான செனட்டர் திரு சாக்ஸ்பி, அமெரிக்க நாட்டு வெளிவிவகாரக் குழுவின் ஆசியா விவகாரத் துணைக் குழுவின் தலைவர் திரு காலங்கர், செனட்டர் திரு கேல் மெக்கி ஆகியோர்களுடன் உரையாடி ''வங்காள தேசப் பிரச்சினையில் இந்தியாவின் நிலை என்ன, என்பதைத் தெள்ளத் தெளிவாக முதல்வர் விளக்கினார்.

''காலம் பொன் போன்றது— கடமை கண் போன்றது'' என்ற பொன்மொழிகளை நாட்டுக்கு நல்கியதுடன், தனது வாழ்க்கையிலும் கடைப்பிடித்துவரும் முதல்வர் அமெரிக்க நாட்டில் அடியெடுத்து வைத்தவுடனேயே தாய்த்திரு நாட்டிற்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்து முடித்தார். ஆம்! இன்று நாட்டை அச்சுறுத்திவரும் வங்க தேச அகதிகள் பிரச்சினையை அமெரிக்க நாட்டுச் செனட்டர்களுக்கு விளக்கினார். முதல்வர் அவர்கள்

தனது கடமைகளை முடிக்கும் நேரந்தவிர மிகுதியான நேரத்தில், தொல்லை தரும் தனது கண்ணுக்கு அமெரிக்க நாட்டின் பால்டிமோர் நகரிலுள்ள புகழ்மிக்க ஜான் ஹோப்கின்ஸ் கண் மருத்துவமனையில் மருத்துவம் பெற்றுக்கொண்டார்.

மருத்துவம் பெறும் முன்னர் 12—11—'71 அன்று உலகிலேயே மிகப் பெரிய விவசாயப் பண்ணை எனக் கருதப்படும் ''மேரி லாண்ட்'' மாநிலத்தில் உள்ள பெல்ட்வில்லி என்னுமிடத்தில் உள்ள விவசாய ஆராய்ச்சிப் பண்ணையை முதல்வர் பார்வையிட்டார்.

இப்பண்ணையில் உள்ள அலுவலர் அங்குச்சேகரிக்கப்பட்டுள்ள சிறு தானியங்களின் சிறப்பை விளக்கினார்; முதல்வர் இப்பண்ணையைப் பார்வையிட்டதன் பயனாகத் தமிழ் நாட்டில் 1,000 ஏக்கர் நிலத்தில் அமைத்துள்ள ''அண்ணா பண்ணையும்'' அங்குள்ள ''கலைஞர் கருணாநிதி விவசாய ஆராய்ச்சி நிலையமும்'' பயனடையும்; இதன் மூலம் நாடு நலன் பெறும் என நம்பலாம்.

கண்ணுக்கு மருத்துவம் பெற்ற கலைஞர், மருத்துவர் ஆலோசனைக் கிணங்க ஓய்வெடுத்துக் கொண்டபின்—தனது பயணத்தில் ஆற்ற வேண்டிய கடமைகளைத் தொடர்ந்தார்.

20—11—'71அன்று கென்னடி முனைக்கு அருகில் உள்ள ஏரிகள் நிறைந்த எழில் நகராம் ஆர்லாந்தோவில் நுண்கலை, மற்றும் கலாச்சாரக் கழகத்திற்கு நிதி சேர்க்கும் சிறப்பு விருந்தில் கலைஞர் ''சிறப்பு விருந்தினராகச்'' சிறப்பிக்கப்பட்டார். விழாவிற்கு வந்திருந்தோர் அனைவரும் அமெரிக்காவின் பழங்கால நாகரிக உடைகளிலும் சிவப்பு இந்தியர் உடைகளிலும் வந்திருக்கத் தமிழக முதல்வர் தமிழ் நாட்டு உடையான வேட்டி, சட்டை, துண்டு அணிந்திருந்தார்; விழா மேடையிலேயே வியத்தகு கவிதை புனைந்து தமிழ் நாட்டு மக்களை மகிழ்வித்து வந்த முதல்வர் கலைஞர், ஆர்லாந்தோவிலும் அத்தகையதோர் அருமையான கவிதையைப் புனைந்து அமெரிக்க நாட்டு மக்களை மகிழ்வித்தார்.

அமெரிக்க நாட்டின் முன்னாள் குடியரசுத் துணைத் தலைவர் ஹம்ப்ரே, கலைஞரை வரவேற்கிறார். தமிழ்நாடு அரசு நிதித்துறைச் செயலாளர் திரு வெங்கிடரமணன், திரு முரசொலி மாறன் எம்.பி., ஆகியோரும் அருகில் உள்ளனர்.



21—11—'71அன்று முதல்வர் அவர்கள் சைப்ரஸ் தோட்டம், உலகப் புகழ் வாய்ந்த அமெரிக்கத் திரைப்பட இயக்குநர் திரு வால்ட்டிஸ்னி அமைத்துள்ள ''டிஸ்னிலாந்து'' எனும் அற்புத உலகம் ஆகியவற்றைச் சுற்றிப் பார்த்தார். அத்தகைய அற்புத உலகைத் தமிழ்நாட்டில் அமைக்க வேண்டுமென்ற ஆர்வத்தில் 'டிஸ்னிலாந்தின்' ஒவ்வொரு பகுதியினையும் பார்த்தார்.

22—11—'71 அன்று, அமெரிக்க விண்வெளிக் கப்பல்களைப் பறக்கவிடும் கென்னடி ராக்கெட் தளத்திற்கு முதல்வர் சென்றார். 1,00,000 ஏக்கர் நிலத்தில் உள்ள இந்தத் தளத்தில் 15,000பேர் பணி புரிகின்றனர். ஆண்டொன்றுக்குச் சுமார் 2,000 கோடி ரூபாய் வரவு-செலவு செய்யும் இந்த ராக்கெட் தளத்தில் மனிதர்களால் இயக்கப்படும் விண்வெளிக் கப்பல்களையும், தானே இயங்கும் விண்வெளிக் கப்பல்களையும் முதல்வர் பார்வையிட்டார். அமெரிக்க நாட்டிற்கு வருகை தருவோருக்குக் காட்டப்படாத ராக்கெட் தளத்தில் பல இடங்களை முதலமைச்சருக்கு ராக்கெட் தளத் தலைவர் சுற்றிக் காண்பித்தார். 1972-ஆம் வருடப் மார்ச்சு மாதம் பறக்கவிடப்படும் 'அப்போலோ 16' ராக்கெட்டை முதல்வர் பார்வையிட்டார். ராக்கெட் தளத்தை முதலமைச்சர் பார்வையிட்டதில் சிறப்பான பகுதி, விண்வெளி ஆராய்ச்சியின் பயன்களை அமைதியான பணிகளுக்கு எந்த அளவு பயன்படுத்தலாம் என்று குறித்து ராக்கெட் தள அலுவலர்களுடன் கலந்துரையாடியது ஆகும்.

22—11—'71 பிற்பகல் முதல்வர் சிகாகோ நகருக்கு வருகை தந்தார். அங்கு வாழும் இந்திய மக்கள் அவருக்கு மகத்தான வரவேற்பளித்தனர்.

23—11—'71 சிகாகோ பல்கலைக் கழகத்தில் அரசியல் கருத்தரங்கில் முதல்வர் பேருரை ஆற்றினார். இக்கருத்தரங்கிற்கு ஏராளமான ஆசிரியப் பெருமக்களும், மாணவர்களும் வந்திருந்தனர்.

முதல்வர் கலைஞர் தமது உரையில் தமிழகத்தில் சுயமரியாதை இயக்கம் தோன்றி வளர்ந்த வரலாறு, பெரியாரின் சமூக, அரசியல் தொண்டுகள், அதனைத் தொடர்ந்து பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்து அரசியல் கட்சியாகவும், ஆளுங் கட்சியாகவும் உருவாக்கிய வரலாறு, பண்டித நேருவின் ஜனநாயகக் கொள்கைகள் ஆகியவை பற்றி நீண்ட நேரம் சொற்பொழிவாற்றினார். சொற்பொழிவைத் தொடர்ந்து, ஏறத்தாழ ஒருமணிநேரத்திற்குக் கருத்தரங்கிற்கு வந்திருந்த ஆசிரியர்களும், மாணவர்களும் எழுப்பிய ஐய வினாக்களுக்குச் சிறந்த முறையில் விடையளித்தார் முதல்வர்.

அதன்பின் சிகாகோ பல்கலைக் கழக வளாவுக்குள், பல்கலைக் கழகப் பேராசிரியர் ரூடில்ப், முதல்வருக்குச் சிறப்பு விருந்தளித்தார். பின்னர் சிகாகோ நகரில் உள்ள விஞ்ஞான-தொழில் நுட்பப் பொருட் காட்சியை முதல்வர் பார்வையிட்டார். அங்கு அவருக்குச் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது. அவர் முக்கிய விருந்தினராகக் கௌரவிக்கப்பட்டுக், கௌரவ உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். தமிழ் நாட்டில் இதுபோல் விஞ்ஞான-தொழில் நுட்பப் பொருட்காட்சியை அமைப்பது பற்றி ஆலோசிக்கப்படும் என்று கூறினார்.

24—11—'71-லும் சிகாகோவில் தங்கியிருந்த முதல்வர், 25-11-'71-ல் நியூயார்க்நகருக்குப் புறப்பட்டுச் சென்றார். நியூயார்க்கிலுள்ள இந்தியத் தூதுவரக அலுவலர்களும், அங்கு வாழும் இந்திய மக்களும் முதல்வருக்குச் சிறப்பான வரவேற்பளித்தனர்.

26—11—'71-ல் நியூயார்க் நகரில் உள்ள ''ஸ்டாக் எக்சேஞ்சிற்கு'' முதல்வர் வருகை தந்தார். அங்கு கணக்குப்போடும் இயந்திரங்களைப் (கம்ப்யூட்டர்களை) பயன்படுத்தும் முறையை முதல்வர் கண்டறிந்தார்.

பின்னர் நியூயார்க் நகரில் உள்ள ''உலக நாடுகள் சபை''க்கு முதல்வர் வருகை தந்தார். அங்கு மிக முக்கியமானவர்களுக்கு வழங்கப்படும் வரவேற்பு, தமிழக முதல்வருக்கு அளிக்கப்பட்டது.

உலக நாடுகள் சபையில் முதல்வருக்கு நண்பகல் விருந்து அளிக்கப்பட்டது. இவ்விருந்தில் உலகநாடுகள் சபையின் பொதுச் செயலாளரின் தலைமை ஆலோசகர் திரு சி. வி. நரசிம்மன் அவர்களும், உலகநாடுகள் சபையில் இந்தியத் தூதுவராக உள்ள திரு சாமர்சனும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

26—11—'71 பிற்பகல், உலக நாடுகளின் பொதுச் சபையில் இந்தியப் பிரதிநிதிகளுடன் முதல்வர் வீற்றிருந்தார்.

பின்னர் உலக நாடுகள் சபையின் உயர் அலுவலர் திரு சி. வி. நரசிம்மன் அவர்கள் முதல்வருக்கு வரவேற்பு வழங்கினார். முதல்வர் தக்க முறையில் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

சௌட்டர் கூப்பருடன் முதல்வர் கலைஞர்



உலக நாடுகள் சபையின் பொதுச் செயலாளரான திரு ஊதாண்ட், உடல் நலமின்றி மருத்துவ மனையில் இருப்பதாலும் அவரைப் பார்க்க மருத்துவ மனையில் ஒருவரும் அனுமதிக்கப்படாதகாரணத்தாலும், முதல்வர், திரு ஊதாண்ட் அவர்களைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவரது உடல்நலம் பற்றி விசாரித்தார். முதல்வரது நல்லெண்ணங்களுக்குத் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்ட திரு ஊதாண்ட் முதல்வருக்குத் தமது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

நியூயார்க்கில் உள்ள செய்தியாளர்கள் 'வங்காள தேசத்தில் சுதந்திரப் படையினருக்கு இந்தியா ஆதரவு அளித்தால் இந்தியாவில் பிரிவினை கேட்கும் திராவிடர்களையும், சீக்கியர்களையும் இந்தியா எதிர்நோக்க வேண்டியிருக்கும்' என உலக நாடுகள் சபையில் பாகிஸ்தான் தூதுவர் பேசியுள்ளதாகக் குறிப்பிட்டபோது ''இந்தியாவில்

யாரும் பிரிவினை கேட்கவில்லை'' என ஆணித்தரமாக முதல்வர் கூறினர்.

'' அமெரிக்க செனட்டர் திரு எட்வர்டு கென்னடியைச் சந்தித்துப் பேசியபோது, வங்காள தேசப் பிரச்சினையில் இந்தியாவின் நிலைமையைத் தெளிவாகக் கூறினேன். அத்துடன் வங்காள தேசப் பிரச்சினையில் இந்தியாவுக்கு ஆதரவான திரு எட்வர்டு கென்னடி அவர்கள் அமெரிக்கப் பாராளுமன்றத்தில் மட்டும் பேசினல் போதாது ; இந்தியாவை ஆதரித்து அமெரிக்க மக்களிடையேயும் திரு எட்வர்டு கென்னடி மேலும் மேலும் பேசவேண்டுமெனக் கேட்டுக் கொண்டேன். வங்காள தேசப் பிரச்சினையில் அமெரிக்க மக்களும், செய்தித்தாள்களும் இந்தியாவுக்கு அளித்துவரும் ஆதரவிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டேன்.

மேலும் கென்னடி முனையில் உள்ள ராக்கெட் தளத்தைப் பார்வையிட்டபோது சந்திரனில் மனிதனை இறக்குவதற்கு மட்டுமல்லாமல், வேளாண்மை வளர்ச்சிக்கும் அமெரிக்காவில் வளர்ந்துள்ள விஞ்ஞான வளமும், தொழில் நுட்ப நுண்ணறிவும் பயன்படுத்தப்படுவதைக் கண்டறிந்தேன். அமெரிக்காவில் கணக்குப் போடும் இயந்திரங்களினல் (கம்ப்யூட்டர்களினல்) ஏற்படும் பயன்களைக் கண்டேன். கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்துவதால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும் என இந்தியாவில் கருதப்படுவது தவறு என்பதை உணர்ந்தேன்'' என்று நியூயார்க் செய்தியாளர்கள் பேட்டியின் போது முதல்வர் கூறினர்.

நியூயார்க்கில் தங்கி இருந்த முதல்வர், தமிழகத்தில் அளிக்கப்பட்டுவரும் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக அமெரிக்க நாட்டுக் கல்வி நிபுணர்களுடன் கலந்துரையாடினர். இதற்கென, 'சான்பிரான்சிஸ்கோ' விலிருந்தும், ''மினிசாட்டோ' விலிருந்தும் கல்வி நிபுணர்களை வரவழைத்தார்.

நியூயார்க் கல்வி வாரியத்தின் வேந்தரான டாக்டர் ஆர்வே ஸ்கிரிப்னருடன் முதல்வர் தமிழகக் கல்வி வளர்ச்சிபற்றிக் கலந்து பேசினர். மேலும் உலகின் பல பகுதிகளில் உள்ள 180 கல்லூரிகளுக்கு, ஆலோசகராக விளங்குபவரும், அமெரிக்காவில் உள்ள 'விஸ்கன்சின்' பல்கலைக்கழகத்தில் பணியாற்றுபவருமான டாக்டர் பிரஸ்டிரபா அவர்களுடனும், மற்றொரு கல்வி மேதை டாக்டர் லோவட் ஆகியோருடனும் முதல்வர் இரண்டு மணிநேரம் கலந்துரையாடினர். பின்னர் தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு ஆலோசனை கூறத் தமிழ்நாட்டிற்கு வரும்படி அக்கல்வி மேதைகளை முதல்வர் அழைத்தார். முதல்வரது அழைப்பினை அக்கல்வி மேதைகள் அன்புடன் ஏற்றுக் கொண்டனர். விரைவில் சென்னையில் கல்லூரிக் கல்வி பற்றி அந்த மேதைகள் ஆய்வு செய்வார்கள்.

பாரிசில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டைத் துவக்கி வைத்த தமிழக முதல்வர், தனது அமெரிக்கச் சுற்றுப்பயணத்தில் நியூயார்க் நகரிலும் ''தமிழ்ச் சங்கத்தைத்'' துவக்கிவைத்தார். இத்துவக்க விழாவில் உரையாற்றிய கலைஞர், நாம் பணிபுரிகின்ற நாட்டின்கலாச்சாரத்திற்கு நேசக்கரம் நீட்டி உறவு கொண்ட போதிலும், தமிழினத்திற்குள்ள தனித்தன்மையை இழந்துவிடக் கூடாது. அதனைப் போற்றிக் காக்க வேண்டும். அதேநேரத்தில் ''பழங்காலத் தமிழ் இலக்கியங்களில் இல்லாதது ஒன்றுமில்லை என்ற எண்ணத்தில் இருந்திடாமல், அமெரிக்காவில் வளர்ந்துள்ள விஞ்ஞானப் புதுமைகளைக் கற்றிட வேண்டும்'' எனக் கூறினர்.

அத்துடன் அமெரிக்க நாட்டில் பணிபுரியும் தமிழ்நாட்டு விஞ்ஞானிகள், தொழில்நுட்ப மேதைகள் ஆகியோரின் அறிவும் ஆற்றலும் தமிழ் மக்களுக்குக் கிடைக்கும் வகையில் தமிழ் நாட்டில் ''கௌரவப் பேராசிரியர்கள் பதவி'' (Honorary Professor) உருவாக்கப்படும் எனவும், அப்படித் தமிழகத்திற்கு வருகின்ற விஞ்ஞானிகள், அமெரிக்க நாட்டில் தங்களுக்குள்ளதொடர்பினைத்துண்டித்துக்



கொள்ளத் தேவை இல்லை எனவும், தமிழகத்தில் அவர்களது பணி முடிவடைந்தவுடன் அவர்கள் அமெரிக்கா திரும்புவதற்கு வழிவகை செய்யப்படும் என்றும் கூறினர்.

அரசின் நீண்ட நாளைய முயற்சியான உணவுப்பொருள்களின் உற்பத்தி, தேவைக்கேற்பப் பெருகிவிட்டதால், சமுதாய நலம், மக்கள் நல்வாழ்வுடன் கல்வி மக்களின் வாழ்வில் முதலிடம் பெற்றுவிட்டது. எனவே கல்வி மேம்பாட்டிற்குத் தமிழக அரசு ஆவன செய்யும் எனக்கூறினர்.

ஐந்து நாட்கள் நியூயார்க்கில் தங்கியிருந்த முதல்வர், ''ராகா'' எனும் மிகச்சிறந்த இசைப்படம் ஒன்றினையும், 'ரவிசங்கரின்' ஓவியச் சிற்பங்களையும் கண்டு களித்தார். இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே கலை, பண்பாட்டுப் பாலங்களை உருவாக்கியுள்ள கலைஞர்களுக்கு டாக்டர் கலைஞர் தன் பாராட்டுதல்களைத் தெரிவித்தார்.

பின்னர் 29—11—'71 மாலை நியூயார்க் நகரிலிருந்து வாஷிங்டனுக்குப் புறப்பட்டார்.

30—11—'71-ல் வாஷிங்டன் திரும்பிய முதல்வர், 1—12—'71-ல் அமெரிக்க நாட்டில் உள்ள 'மேரிலாண்ட்' என்ற மாநிலத்திற்கு வருகை தந்தார். தமிழகத்தின் மக்கள் தொகையில் பத்தில் ஒரு பங்கே (4 மில்லியன் மக்கள் தொகையே) உள்ள இம்மாநிலம் அமெரிக்க நாடு உருவாகும் போது இருந்த 13 மாநிலங்களில் ஒன்றாகும். இம்மாநிலத்தின் ஆளுநர் திரு மார்வின் மண்டல் அவர்களை 'அண்ணா போலிஷ்' என்னுமிடத்தில் தமிழக முதல்வர் சந்தித்தார்.



அமெரிக்க செனட்டில் நிதியுதவித் துணைக் குழுவின் தலைவரான செனட்டர் கேல் மெகி, ஜே. என. கேஞ்சி, முரசொலி மாறன் எம்.பி. ஆகியோருடன் தமிழக முதல்வர்

'அமெரிக்க நாட்டில் நிலவும் மத்திய மாநில உறவுகள், மாநிலங்களின் அதிகாரங்கள் வருவாயினைப் பெருக்கிக்கொள்வது, மாநிலங்களின் நிருவாகம், மாநிலங்களுக்கு மத்திய அரசு ஜனநாயக முறையில் வழங்குகின்ற மான்யங்கள் ஆகியவை பற்றி மேரிலாண்ட் மாநில ஆளுநருடன் தமிழக முதல்வர் கலந்துரையாடினர்.

அடுத்து, இந்தியாவின் நீண்ட நாளைய நண்பரும், அமெரிக்க முன்னாள் துணை ஜனாதிபதியும், இந்நாள் செனட்டருமான திரு ஹம்ஃப்ரே அவர்களைச் சந்தித்து அரை மணி நேரம் கலந்துரையாடினர். அப்போது, இந்தியாவிற்குள் வங்கதேச அகதிகள் வருவது இந்தியாவின் மீது ஏற்படும் மறைமுகமான தாக்குதல் என்றும், அகதிகள் பிரச்சினையைத்தீர்ப்பது அனைத்துலகத்தின் பொறுப்புஎன்பதையும் முதல்வர் எடுத்துக் கூறினர். திரு ஹம்ஃப்ரே அவர்களை இந்தியாவிற்கும் குறிப்பாகத் தமிழகத்திற்கும் வரும்படி முதல்வர் அழைத்தார்.

அடுத்து, அமெரிக்க அரசாங்கச் சமுதாய, மறுவாழ்வுத் துறையைச் சார்ந்த டாக்டர் மக்கார்தி அவர்களை முதல்வர் சந்தித்துப் பேசினர். அப்போது தமிழகத்தில் பொதுவாகப் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கெனவும் குறிப்பாகத் தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கெனவும் ஓர் ஆராய்ச்சி நிலையத்தை நிறுவுவது பற்றிப் பேசினர்.

உலக பாங்கியின் தலைவரான திரு மக்னமாரா அவர்களைச் சந்தித்துத் தமிழ்நாடு அரசு செயல்படுத்திவரும் சத்துணவுத் திட்டம், குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம், குடிநீர் வடிகால் வாரியத் திட்டங்கள் ஆகியவைகளை விளக்கிக் கூறி அவைகளை மேலும் சிறப்பாகச் செயல்படுத்த உதவி அளிக்குமாறு வேண்டிக் கொண்டார்.

தமிழகத்தில் வாழும் ஒவ்வொரு நாளும்—ஏன் ஒவ்வொரு விநாடியும், ஏழைப்பாட்டாளி மக்கள் ஏற்றம் பெற—தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வு வளம் பெற, அவர்கள் கல்வியில் மேம்பாடு பெற அயராது உழைக்கும் நமது முதல்வர் அமெரிக்க நாட்டுச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு 5—12—'71 அன்று தாயகம் திரும்பினர்.



# நீலமலையின் பழங்குடி மக்கள்

“தனி ஒருவனுக் குணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்பது பாரதிக் கவிஞனின் வாக்கு.

காடுகளிலும் மலைகளிலும் ஒளிந்தும் ஒதுங்கியும் வாழ்கின்ற இனத்தவரையும் கண்டு, அவர்க்குத் தேவையானவற்றைத் தருவது மக்கள் நல அரசின் கடமையாகும்.

இதனை உணர்ந்த தமிழக அரசு, ஆதிவாசிகள் நலனுக்காக அரிய திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றி வருகிறது.

தமிழக அரசு நிதானமாகவும் உறுதியுடனும், இழப்புகளையும் இடுக்கண்களையும் பாராமலும், அத்தகைய பூர்வீகக் குடிகளுக்குப் புதுவாழ்வு தரும் வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டு இன்று ஓரளவுக்கு நல்விளைவுகளை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறது. பழங்குடி மக்களின் பிடிவாதங்கள் மெள்ளத் தகர்ந்து வருகின்றன. அரசின் நேசக் கரத்தைப் பற்றிக்கொண்டு அவர்கள் வாழ்வில் ஒளி பெறத் தொடங்கியிருக்கின்றனர்.

நீலகிரி மலையில் உதகை, கூனூர், கூடலூர் என்னும் மூன்று வட்டங்கள் உண்டு, அவற்றில் 1961-ஆம் ஆண்டின் கணக்குப்படி 4,09,308 பேர் வாழ்கின்றனர். அவர்களில் ஆதிவாசிகள் மட்டும் 12,948 பேர் ஆவர். தாங்கள் வாழும் இடத்தாலும், தங்கள் தொழிலாலும் அவர்கள் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றனர்.

இனம் வாரியாக அவர்களின் எண்ணிக்கை வருமாறு:—

| | |
|---|---|
| பணியர் | 4,777 |
| இருளர் | 4,502 |
| குறும்பர் | 1,174 |
| கோத்தர் | 832 |
| தோதவர் | 706 |
| காட்டு நாய்க்கர் | 552 |
| சோலகைர் | 177 |
| கோகர் | 2 |
| குடியர் | 2 |
| பள்ளியர் | 1 |
| எதிலும் சேராதோர். | 223 |
| | 12,948 |

அவர்களில் பணியர்களும் காட்டு நாய்க்கர்களும் மலைச்சரிவுகளில், 4,000 அடிக்குக் கீழே வாழ்கின்றனர். குறும்பர்களும், இருளர்களும் 4,000 அடிக்குமேல் 6,000 அடிக்குக் கீழே உறைகின்றனர். 6,000 அடி உயர்வுள்ள இடங்கள் கோத்தரின் இருப்பிடங்கள். அதற்கும் மேல் உச்சியில் வாழ்வோர் தோதவர்கள் எனப்படுவோர்.

இந்தப் பழங்குடி மக்களின் பண்பாடுகளிலும் பெருத்த மாறுபாடுகள் உண்டு. தோதவர்கள் எருமைகளை மேய்த்து வாழ்கின்றனர். கோத்தர்களோ கைவினைஞர்கள்! மற்ற இனத்தவர்கள் காடுகளில் விளையும் பொருள்களை விற்று வாழ்வோர். கன்னட நாட்டிலிருந்து வந்த படகர் நீலகிரிக்கு வந்து வேளாண்மைத் துறையில் ஈடுபட்டதிலிருந்து விவசாயமும் அங்கு நன்கு செழிக்கத் தொடங்கியது.

மலைவாசிகளின் நிலையை உயர்த்தத் திட்டமிட்ட அரசு முதலில் அவர்களுக்குத் தூய்மையும் சுகாதார வசதிகளும் நிறைந்த இல்லங்களைக் கட்டித் தர ஆரம்பித்தது. அதற்காக 1,000 ரூபாய் கடனாகத் தரப்பட்டது. இன்று அத்தொகை 1,250 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையில் ரூ. 937.50 உதவித்தொகையாகத் தரப்படுகிறது. மீதிப் பணம் ரூ. 2.50 வீதம் 101 மாதங்களிலும், ரூ. 5 வீதம் 12 மாதங்களிலும் திருப்பிச் செலுத்தப்படவேண்டும். மூன்றாவது ஆண்டுத் திட்டக்காலத்தில் 811 இல்லங்கள் அவ்வாறு கட்டித்தரப்பட்டன.

| | குடியிருப்புகளும். | இல்லங்களும். |
|---|---|---|
| இருளர் | 19 | 275 |
| குறும்பர் | 9 | 158 |
| காட்டுநாய்க்கர் | 3 | 57 |
| தோதவர் | 58 | 143 |
| கோத்தர் | 11 | 76 |
| பணியர் | 7 | 102 |
| | 107 | 811 |

கடனைத்திருப்பிச் செலுத்துவதற்கு மிகவும் தாராளமாகச் சலுகைகள் தரப்பட்டும், கடன் பகுதியைக் கட்டுவதில் ஆதி

வாசிகள் காலதாமதம் செய்வதையே காண்கிறோம். வீடுகள் பழுதடையும்பொழுதுஅவற்றைச் செப்பனிடவும் இயலாத நிலையில் பழங்குடி மக்கள் உள்ளனர். அவ்வாறு சேதமடைந்து அவர்களால் கைவிடப்பட்ட மூன்று குடியிருப்புக்களை அரசு தன் செலவில் கட்டிக் கொடுத்திருக்கிறது. உறையுள் வழங்கும் அரசு, பழங்குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் எண்ணம் கொண்டு, வருவாய் மிக்க தொழில்களில் அவர்களைப் பயிற்றுவித்து வருகிறது. அன்றாடக் கூலிகளாகப் பாடுபடும் அவர்களுக்கு நிலத்தினை அளித்து வேளாண்மைத் துறையில் ஈடுபடுத்தி வருகிறது. வென்லாக் சரிவிலும் அதற்குப் புறத்திலும் வாழும் தோதவர்களுக்குப்பட்டா நிலங்கள் வழங்கப்பட்டு உழுவதற்கான கருவிகளும் விதைகளும் சலுகையுடன் தரப்படுகின்றன. நீலமலையில் வாழ்கின்ற ஏறக்குறைய 300 தோதவர் குடும்பங்களுக்கும் பட்டா நிலங்களைக் கொடுத்து உழைப்பை நம்பிவாழும் விவசாயிகளாக அவர்களை மாற்றுவதற்கு அரசு முயற்சி செய்துவருகிறது.

அதுபோன்றேகோத்தர், குறும்பர், இருளர், பனியர் ஆகியோருக்கும் நிலங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இவர்களில் பனியர் நாடோடி வாழ்க்கை நடத்துபவர்கள். ஓரிடத்தில் தங்கி வாழாத அவர்களை நிலைக்குக் கொணர்ந்து, வேளாண்மைத் துறையில் ஈடுபடுத்துவது பெரும்பாடாக இருக்கிறது. அவ்வகையில் கூடலூர் வட்டத்தில் 100 ஏக்கர் நிலம் நீலகிரி ஆதிவாசிகள் சங்கத்திற்காகஒதுக்கப்பட்டு அங்குப் பனியர்களுக்காக அரசின் செலவில் வீடுகளும் கட்டித்தரப்பட்டுப் பனியர்களை அங்குக் குடியேற்றிச், சுற்றியுள்ள நிலத்தில் அவர்களைப் பாடுபடவைக்கப் பெரும் முயற்சிகள் நடந்து வருகின்றன.

விவசாயத் துறையில் மட்டுமன்றி வேறு தொழில்களிலும் சிறக்கவும் பூர்விகக் குடிகளுக்கு அரசு ஊக்கமளித்து வருகிறது. கோத்தர்கள், கருமான் வேலை, தச்சு வேலை போன்றவற்றில், மிக்க ஆற்றல் உள்ளவர்கள். இவர்கள் மூங்கிலைக் கொண்டு முடைவதில் இணையற்றவர்கள். குறும்பர்கள் காட்டின் செல்வத்தினைத் தேடிக் கொணர்வதில் திறனுடையோர். மலைவாழ் மக்களின் இத்தகைய திறமையெல்லாம், பயனுள்ள முறையில்வெளிப்படப் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அரசின் ஆதரவோடு முன்னேறி வருகின்றன. பனியர்களுக்காக மூங்கில் முடையும் தொழிலுக்கான சங்கங்கள் பம்பலக் கொம்பையிலும், கூழூலையிலும் இயங்கி வருகின்றன. காட்டில் சேகரிக்கப்படும் பொருள்களுக்கான சந்தையுண்டு. கசபர்களுக்காகவும் இருளர்களுக்காகவும் இரண்டுசங்கங்கள் இருக்கின்றன. உதகையில் தோதவர்களுக்கான பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்செயல்பட்டு வருகிறது. தோதவர் பெண்களின் கைவண்ணம் வளரவும், அதன் மூலம், வருவாய் பெருகவும் ''எம்ப்ராய்டரித் தொழிற்பள்ளி'' ஒன்றும் உதகையில் உண்டு. கோத்தர்களுக்காகத் திரிசிகாடியில் பொம்மை உற்பத்திச் சாலையும், சிவப்பு மண்பாண்ட உற்பத்திக் கூடமும், கீழ்கோத்தகிரியில் தையற்கலைப் பள்ளியும் இயங்கி வருகின்றன.

ஆலயம் ஆயிரம் அமைத்தலை விட ஆங்கொரு ஏழைக்கு எழுத்தறிவித்தல் புனிதமான பணியல்லவா? அரசின் தீவிரமான முயற்சியினால் பள்ளிக்குச் செல்லும் பூர்விகக் குடிகளின் குழந்தைகளின் எண்ணிக்கை பெருகிவருகிறது. மலை எங்கும் ஆதிவாசிகள் பரவி வாழ்வதாலும், இடம் விட்டு இடம் அவர்கள் அடிக்கடி மாறிக்கொண்டு இருப்பதாலும், அரசு அமைத்துள்ள 18 பள்ளிகளில், சிறுவர்கள் தங்கிப் படிக்க வசதிகள்செய்துதரப்பட்டுள்ளன. அரசினர் பள்ளி, தனியார் நடத்தும்தக்கர்பாபா குருகுலம், தூசத் குரு சேவா சங்கம் ஆகியவற்றிலும் சேர்ந்து 1,456 பிள்ளைகள் படித்து வருகின்றனர். கல்வித் துறையைப் பொறுத்த வரையில் தங்கள் குழந்தைகள் படித்துப் பட்டம் பெற வேண்டும் என்ற விழிப்புணர்ச்சி நீலகிரி மக்களிடையே வேகமாகப் பரவி வருகிறது. அரசும் பள்ளிகளில் மாணவர்க்கு உணவு, உறையுள் வழங்கியும், உதவித் தொகை கொடுத்தும் அவர்களுக்கு ஊக்கமளித்துக் கொண்டிருக்கிறது.

மக்கள் சுகாதாரத்துடன்வாழ, சுற்றுப்புறத் தூய்மை அவசியமாகும். சுத்தமான தண்ணீர் மக்களுக்குக் கிடைக்கப் பெறுதல் வேண்டும்; கழிவு நீர் வடிகால்கள் அமைக்கப்பட்டு வெளியேற்றப்பட வேண்டும். இவையெல்லாம் நிறைவேற, நீலகிரி மாவட்டத்தில் உள்ள பூர்விகக் குடிகளின் 250 குடியிருப்புகளில் அரிசன நலத்துறை துரிதமாகச் செயலாற்றி வருகிறது. புதிய குடிநீர்க்கிணறுகள் தோண்டப்படுவதோடு பழைய கிணறுகளை ஆழப்படுத்தலும், அவற்றில் தூர் எடுத்தலும் நடந்து வருகின்றன. குடியிருப்புகளைச் சுற்றிப் பாதைகள் வெட்டவும் நடை பாதைகள் அமைக்கவும் அரசு இன்று ஆவன செய்துகொண்டிருக்கிறது.

பழங்குடிமக்களின் நல்வாழ்விற்காக இரண்டு நகரும் மருந்தகங்கள் நீலகிரி மாவட்டத்திற்குத் தரப்பட்டுள்ளன. அவை உதகையிலும் கூடலூரிலும் பிணி நீக்கும் பணியினை மேற்கொண்டுள்ளன. உதகையிலுள்ள நகரும் மருந்தக வண்டி, தோதர்கள், கோத்தர்களின் நோய்களைத் தீர்த்து வருகிறது. கூடலூரில் உள்ளஅத்தகையவண்டிப்பாதைக் கருகாமையில் உள்ள குடியிருப்புகளில் வாழ்வோருக்கு உதவி அளிக்கிறது. இன்னும், தாய் சேய் நல விடுதிகளும் மருந்தகங்களும், மருத்துவ மனைகளும் ஆதிவாசிகளுக்காக அமைக்க அரசு உறுதி பூண்டிருக்கிறது.

மாநில, மாவட்ட மட்டங்களில் பூர்விகக் குடிகளுக்காக நல்வாழ்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தோதவர் இனத்தைச் சேர்ந்த சமூக ஊழியர் திரு முத்திக்கண் இடம் பெற்றுள்ளார். பூர்விகக் குடிகளின் நம்பிக்கையைப் பெற்று அவர்களுடைய ஒத்துழைப்புடன் அவர்களின் வாழ்வில் சுமையைக் குறைத்துச் சுவையைக் கூட்டத் தமிழக அரசின் அரிசனநலத் துறை தன்னலியன்ற அரும்பணிகளையெல்லாம் ஆற்றி வருகிறது. பல முனைகளில் வெற்றியும்கண்டு வருகிறது. முனைப்புடன் உழைத்தால் முயற்சிக்குரிய பலன் கிட்டாமலா போய்விடும்?

### நற்றத்தம்

தமிழில் யாப்பிலக்கணம் உணர்த்தும் நூல்களில் ஒன்று நற்றத்தம். இந்நூல் இப்போது இல்லை. யாப்பருங்கல விருத்தியில் மேற்கோளாக வந்துள்ளது. இதன் ஆசிரியர் நற்றத்தனர்.



1602 ஆம் ஆண்டு—

''ஏசுபிரான் போதித்த உண்மைகளை ஏற்றுக்கொண்ட மக்களில் சிலர் நீலகிரி மலையில் ஒதுங்கி வாழ்கின்றனராம். அவரைத் தேடிக் கண்டுபிடித்து அவருடன் தொடர்புகொள்க'' என்று ஓர் ஆணை பிறந்தது கொச்சி சிரியன் கிறித்துவ ஆலயத்தின் பாதிரியாரிடமிருந்து! இரு போர்த்துகீசியப் பாதிரியார்கள் புறப்பட்டனர். இருள்

அதுமுதல் தோதவர்களைப் பற்றித்தான் எத்தனை விந்தைமிகு ஆராய்ச்சிகள்!

''ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் காணாமற்போன இஸ்ரேல் மக்களின் தொகுதி அல்லவா இங்கே வாழ்கிறது'' என்று வியந்தார் ஒருவர். பண்டைத் தமிழகத்தில் வாணிபத்தின் பொருட்டு வந்து தங்கியிருந்த ரோமானியர்கள் பின்னர் இங்கு வந்துற்றனரோ என்று ஐயுற்றார் மற்றொருவர். சுமேரிய மக்களுக்கு இவர் நெருங்கிய

பல்லவர் உறவென்றார் சிலர். உணவுப் பழக்கத்தையும், திருமண முறையையும் கண்டு இவர்கள் பாண்டவர் மரபென்றார் சிலர். ''ஐயிரண்டு திசைமுகத்தும் புகழ்வைத்த தென்னிலங்கைப் பெருவேந்தன்'' இராவணனின் பல்லக்குச் சுமப்போரின் பரம்பரை என்று கருத்துரைத்தார் வேறு சிலர்.

தோதவர்கள் மொழி கன்னட மொழியுடன் தொடர்புடையது என்பது டாக்டர் மெட்லின் கூற்று. அது மலையாளத்தின் கிளை



மண்டிய காடுகளைக் கடந்து மலை ஏறினர். அங்கு வாழும் மக்களைக் கண்டனர். அவர்கள் கரத்தில் பைபிள் இல்லை. கழுத்தில் சிலுவை இல்லை. அவர்கள் கிறித்துவர் அல்லர் என்பது தெளிவாகிவிட்டது. எனினும் அவர்களுடைய நெடிதுயர்ந்த தோற்றமும், அகன்று விரிந்த கண்களும், நீண்டு நிமிர்ந்த நாசியும், சிவந்த நிறமும், உள்ளத்து உணர்ச்சிகளைக் கள்ளமின்றி எடுத்துரைக்கும் சீர்மிகு முகமும் அவர்களைக் கவர்ந்துவிட்டன.

உறவாதல் வேண்டும் என்று கணித்தார், ஒரு வரலாற்று ஆசிரியர். ''இவர்கள் திராவிடரே!'' என்று முடிவு கூறினார் ஒரு மொழிநூல் வல்லுநர். இவர்கள் ஆரிய வழியினர் என்று விளக்கினார் மக்களின் தொன்மையை ஆயும் புலவரொருவர்.

மாமல்லபுரத்துக் குடவரைக் கோயில்கள் போல அமைந்த தோதவர்களின் வீடுகளையும் ஆலயங்களையும் கண்டு இவர்கள்

என்பது ரிவர்லின் கருத்து. அது சுந்தரத் தெலுங்கின் உதரத்தே எழுந்த மொழி என்பது டாக்டர் ஆப்பர்ட்டின் ஆராய்ச்சி. தமிழின் அண்மைக்காலச் சேய் என்பது கால்டுவெல் தரும் விளக்கம். சுமேரிய மொழிக்கும் தோதவர் மொழிக்கும் இடையே வியத்தகு ஒற்றுமை உள்ளது என்பது கிரேக்க இளவரசரும் ஆராய்ச்சியாளருமான பீட்டரின் கண்டுபிடிப்பு.





# சின்னச் சின்னக் குழந்தைகள் வரைந்த வண்ண வண்ண ஓவியம்

கடந்த ஐந்து ஆண்டுகளாகத் திருச்சியிலுள்ள 'ஜூனியர் சேம்பர், என்னும் இளைஞர் கழகம் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கான ஓவியப் போட்டிகளை நடத்தி வருகிறது.

ஆறுவது ஆண்டான இவ்வாண்டில் நடைபெற்ற குழந்தைகள் ஓவியம் வரையும் போட்டியை வேளாண்மை அமைச்சர் திரு அன்பில் தருமலிங்கம் அவர்கள் துவக்கி வைத்தார். மின்துறை அமைச்சர் திரு ஓ.பி. இராமன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினர்.

திருச்சி புனித சூசையப்பர் கல்லூரி லாலி மன்றத்தில் நடைபெற்ற இந்த ஓவியப் போட்டியில் 2,261 குழந்தைகள் கலந்து கொண்டனர்.

சின்னஞ்சிறு பிஞ்சு உள்ளங்களின் கற்பனைத் திறனை ஆக்க வழியில் உருவாக்கும் இப்போட்டியை நடத்தியவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

போட்டியில் கலந்து கொண்ட குழந்தைகள், வயதுக்கு ஏற்ப நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுக் கலந்துகொண்டனர்.

ஒவ்வொரு பிரிவுக்கும், முதலாவது, இரண்டாவது, மூன்றுவது பரிசுகளும் ஏழு ஆறுதல் பரிசுகளும் அளிக்கப்பட்டன. அதிகப் பரிசுகள் பெற்ற குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கூடத்திற்குச் சுழற்கேடயம் வழங்கப்பட்டது.

---

நீலகிரி மலையில் ஆறுயிரம் அடிகளுக்குமேல் வாழ்கின்ற தோதவர்களின் எண்ணிக்கை ஆயிரத்துக்குமேல் இராது. ஆனால், அவர்களைப் பற்றிய ஆராய்ச்சிகளோ முடிவுறாது நீண்டு கொண்டிருக்கின்றன. இந்தியாவில் உள்ள வேறு எந்த மலைவாழ் இனத்தைப் பற்றியும் இத்தனை விரிவான ஆராய்ச்சிகள் நடந்ததில்லை எனலாம். ஆங்கிலேயருக்கும் மேலை நாட்டவருக்கும் தோதவர்களைப் பற்றி அப்படி ஒரு தனிமோகம்!

காரிருள் அமர்ந்த காடுகளில் கருத்த இனத்தவராய் வாழும் மற்ற மலைவாழ்மக்களிலும் முற்றிலும் வேறுபட்ட தோதவர்களின் தோற்றம் கண்டு அவர்கள் நெஞ்சம் மயங்கினரோ? "புத்துக்குளி" என்னும் அங்கி அணிந்து பண்டை ரோமானியர் போல் அவர்கள் நடந்த ஏற்றம் மிகு நடையழகில் சித்தம் பறி கொடுத்தனரோ? அவர்தம் விசித்திரமான சமுதாயப் பழக்கங்களில் சிந்தையைக் கிளறும் ஆவல்தான் ஊற்றெடுத்ததோ?

நிலத்தின் வெம்மை தாங்காது மலை ஏறிவந்த தங்களை அன்புடன் வரவேற்ற தோதவரின் பண்பினைக் கண்டு மேனி குளிரும் உதகைச் சூழ்நிலையி மேனாட்டாரின் உள்ளமு குளிர்ந்ததுவோ? அறியோம்!

உலகின் மற்றெல்லா இன தாரையும் விடத் தாங்கள் உயர் தவர்கள் என்னும் எண்ண தோதவர்களுக்கு இருக்கிறது மலையில் வாழும் பிற இன மக்க ளும், பின்னாளில் அங்குக் கு யேறியவர்களும் தோதவர் ளையே மலையின் நாயகர்களாக கொண்டு "குடு" என்னும் திறை செலுத்தும் வழக்கமும் நெடு நாட்களாக இருந்து வந்திரு கிறது. தோதவர்கள் தங்களை 'ஆள்' என்று அழைத்துக்கொள வர். அவர்கள் அகராதியி அதற்கு மனிதர் என்று பொருள். மற்ற மக்களை பேடர்கள் என்று அழைப்பர்

தோதவர்கள் இனத்தில் தார்த் தசாள், தெவ்லியாள் என்னு இரு பெரும் பிரிவுகளும் 14 உ பிரிவுகளும் உண்டு. திருமண கள் உட்பிரிவுகளுக்குப் புறத்தே யும் பெரும் பிரிவுகளுக்கு உள்ளே யும் நிகழ்கின்றன. தார்த் சாள் குலத்துப் பெண்ணுக்கு தெவ்லியாளர் குலத்து ஆண் மகனுடன் காதல் தொடர்பு இருக்கக் கூடும். ஆயினு கடிமணமாக மலரச் சமுதாய அனுமதிப்பதில்லை. உட்பிரிவு குள்ளே வாழ்பவர் உடன் பிறப்புகளைப்போல எண்ண படுவதால் வெவ்வேறு உட்பிரி கள் எனப்படும் குழுக்களை சேர்ந்த ஆணுக்கும் பெண்ணு கும்தான் திருமணம் நிச்சயிக்க படும்.

அண்மையில் எடுக்கப்பட்ட கணக்குகளின்படி இன்று நீலகிரி யில் வாழும் தோதவர்களின் எண்ணிக்கை 776 ஆகும். 19 ஆம் நூற்றுண்டின் கிறித்துவ மிஷன் முயற்சியினால் மத மாறிய தோதவர்களையும் நில பெயர்ந்து நாடு நகரங்களை அடைந்த தோதவர்களையு சேர்க்க இந்த எண்ணிக்கை தொள்ளாயிரமாக உயரக் கூடும்

தோதவர்கள் 'மந்துகள்' எனப்படும் சிறு கிராமங்களி வாழ்கின்றனர். எருமை மந்தை

ளை ஒமப்பவர் ஆதலால் இத்தகைய மந்தைகள் தங்கிய இடங்களே மந்துகள் ஆகியிருக்கக்கூடும். நீலகிரி மலையில் அத்தகைய மந்துகள் நூற்றிபத்து மூன்று இருக்கின்றன. அவற்றில் 89 மந்துகள் காலமெல்லாம் இங்கேயே கழித்திடமாட்டோமா என்னும் எண்ணத்தைத் தூண்டும் அளவுக்கு விரிவும் வனப்பும் வளமையும் பொங்கித் ததும்பும் வென்லாக் சரிவுகளில் (wenlock downs) அமைந்திருக்கின்றன. முத்தநாடு மந்து என்பது முக்கியமானதாகக் கருதப்படுகிறது. பெரும்பாலும் சுற்றுலாப்பயணிகளின் கண்களுக்கும் காமிராக்களுக்கும் இலக்காவது அரசினர் தாவரப் பண்ணையை ஒட்டிய மஞ்சக்கல் மந்தாகும்.

அரை வட்ட வடிவில் மூங்கிலும் பிரம்பும் கொண்டு நெருக்கமாக வேயப்பட்ட தோதவர்களின் வீடுகள் தோற்றத்தில் சற்றுப் புதுமையானவை. வீட்டின் வெளியே இரு சிறு திண்ணைகள் இருக்கும். இரு கால்களையும் கைகளையும் தரையில் வைத்துத் தவழ்ந்து தான் நாம் குடிலுக்குள் புக வேண்டும். அத்தனைச் சிறிய வாயில்! உள்ளே புகுந்ததும் உதகையின் குளிரை வெல்வதற்கு இதனினும் உயர்ந்த இடம் இருக்க முடியாது என்பதை உணர்வோம். வீட்டின் ஒரு புறத்தில் படுப்பதற்கு மேடையும் பாத்திரங்கள் வைப்பதற்கும் ஓர் இடமும் ஒரு மூலையில் அடுப்பும் உண்டு. தானியங்கள் இடிப்பதற்குத் தரையில் குழி அமைக்கப்பட்டிருக்கும்.

தோதவர்களின் கலையும், பண்பாடும், கடவுள் நெறியும் அவர்கள் வளர்க்கும் எருமையுடன் சேர்த்துப் பின்னப்பட்டிருக்கின்றன. நீலகிரியில் வாழும் தங்களுடைய 3,000 எருமைகளையும் தோதவர்கள் தனித்தனியாக அறிவர். எருமைகள் அவர்களுக்குத் தெய்வீகமானவை. பெண்ணுக்குச் சீதனமாக எருமைகளே வழங்கப்படுகின்றன. தவறுகளுக்கு அபராதங்களாக எருமைகளே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. எருமையின் பாலையும் பாலில் உற்பத்தியாகும் பொருள்களையுமே தோதவர்கள் முக்கிய உணவாகக் கொள்கின்றனர். தோதவர் இறக்கும்பொழுதும் அவர்களுக்குத் துணையாக அவர் வளர்த்த எருமைகளே பலியாகத் தரப்படுகின்றன. ஒதுக்கப்பட்ட மந்துவின் அருகே ஓடும் இரு சிற்றோடையில் ஒன்று, தெய்வீக எருமைகள் நீர் அருந்துவதற்கென்றே ஒதுக்கப்பட்டிருக்கும். கிராமத்தில் ஓர் ஓடை வறண்டுபோனாலோ எருமை நீர் அருந்தும் நிலைக்குக் கீழ் இருந்துதான் மக்கள் தண்ணீர் எடுக்க வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் எருமை அருந்தும் நீரை யாரும் கறைப்படுத்தக் கூடாது. நீண்டு வளைந்த கொம்புகளைக் கொண்ட இந்தத் திண்மையான எருமைகள் பசிய புல்களோடு மூலிகைச் செடிகளையும் விரும்பித் தின்கின்றன. இவை இருநூறு முதல் முந்நூற்றைம்பது அவுன்சு வரை பாலினைப் பொழிந்த காலம் உண்டு. கூட்டமாகக் கூடி நின்று இவை தாக்கினால் காட்டு விலங்குகளும் கதிகலங்கிவிடும்.

## மாணவிக்குப் பரிசு

காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவை ஒட்டிச் சென்னை விக்டோரியா தொழில் நுட்பக் கழகத்தினர் ஓவியப் போட்டி ஒன்று நடத்தினர். தமிழ் நாடு, ஆந்திரம், கேரளம், மைசூர் மாநிலங்களைச் சேர்ந்த 103 ஓவியர்கள் இதில் பங்கு கொண்டு 203 ஓவியங்கள் அனுப்பினர்.

சென்னை ஓவிய நுட்பக் கலைக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி. சுசீலா சொக்கலிங்கம் அவர்களின் ' கிராமத்து அழகி ' என்னும் ஓவியம் பரிசு பெற்றது.

கிராமத்து அழகி ஓவியம், கடற் சிப்பிகள், மணிமாலைகள், கண்ணாடித் துண்டுகள் வெள்ளைச் சிமெண்டு, செங்கல் தூள் போன்றவற்றால் செய்யப்பட்டது.

கட்டுப்பாடுகள் மிகவும் குறைவான தோதவரின் இல்லற வாழ்க்கை புதுமையானது. திருமணம் என்பது புனிதமான சடங்காகவோ காலமெல்லாம் போற்றப்பட வேண்டிய தளையாகவோ அங்குக் கருதப்படுவதில்லை. எந்த நேரத்திலும் ஒரு கணவன் தன் மனைவியை அவள் பிறந்தகத்துக்கு அனுப்ப முடியும். அதே போன்று மனைவியும் எந்த நேரத்திலும் எவ்விதத் திருமண முறிவையும் கோராமல் தான் விரும்பும் ஆண் மகனுடன் உறவு கொள்ள முடியும்.

குழந்தைகளுக்கு இரண்டு அல்லது மூன்று வயது நடக்கும்பொழுதே தோதவர் இனத்தில் '' நிச்சயதார்த்தங்கள் '' நிகழ்ந்து விடுகின்றன. தாய் மாமன்மகள் அல்லது அத்தையின் மகளே ஒரு பையனுக்கு மிகவும் பொருத்தமான மனைவியாவாள். இத்தகைய நிச்சயதார்த்தங்கள் ஒவ்வொரு ஆண்டும் பெண்ணுக்குப் ' புத்துக்குளி ' எனப்படும் ஆடையினை வழங்குவதன் மூலம் மேலும் உறுதி செய்யப்படுகின்றன. ஆனால் இந்த உறவினை முறித்துக்கொள்ளும் உரிமை இரு சாராருக்கும் எப்பொழுதும் உண்டு. வயது வந்த பெண்ணொருத்திக்கு அவளுக்கு நிச்சயம் செய்விக்கப்பட்ட ஆண் மகன் பிடிக்காதவனாக இருந்தால் அவனை மறுப்பதற்கு அவள் முழு உரிமை பெற்றிருக்கிறாள். ஆனால், அதற்குரிய அபராதத்தினைப் பஞ்சாயத்தார் குறித்தபடி பையனுக்குச் செலுத்த வேண்டும்.

நிச்சயம் செய்விக்கப்பட்ட பெண் பதினாறு அல்லது பதினேழு வயது வரை அவனுடைய தந்தை வீட்டிலேயே காலம் கழிக்கிறாள். அவளுக்காக உறுதி செய்யப்பட்டவனுடன் தான் அவள் முதன் முதலாக உடல் உறவு கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. தோதவர் இனத்தில் பருவமடைந்த ஓர் பெண்ணும் ஆணும் காதல் கொண்டு, கருத்தொருமித்தால், ஆண், பெண்ணின் தந்தையை அணுகி அவளை அவன் மனைவியாக அடைவதற்கு அனுமதியைக் கோருவான். அவள் ஏற்கனவே மற்றொருவனுக்கு நிச்சயமானவளாக இருந்தால் பஞ்சாயத்தார் தீர்ப்பின்படி சில எருமைகளை அவளுக்குரியவனுக்கு அவன் அபராதமாகச் செலுத்த வேண்டியிருக்கும்

இவ்வாறு ஒருவன் மனைவியை மற்றவன் ‘கவர்வது’ என்பது தோதவர் இனத்தில் வழக்கமாகவே இருந்து வந்திருக்கிறது. தன் வாழ்நாளில் ஒரு தோதவர் பெண் சராசரியாக நான்கு முறை மணம் புரிந்துகொள்கிறாள்.

தோதவர் இனத்தில் எழுபத்தைந்து சத வீதத்திற்கு மேற்பட்ட ஆண்கள் பத்தொன்பது வயதிற்கு முன்னாலேயே இல்வாழ்வில் ஈடுபட்டு விடுகின்றனர். பெண்களில் தொண்ணூற்றெட்டுச் சத வீதத்திற்கும் மேலாகப் பதினான்கு வயதிலேயே தாம்பத்தியச் சுவையை உணர்ந்து விடுகின்றனர்.

கருவுற்ற தோதவர் பெண் ஐந்தாம் திங்களில் தனித்ததோர் குடிசையில் வைக்கப்படுகிறாள். ஏழாம் மாதத்தில் அவளுக்குத் திருமணம் நிகழ்கிறது. திருமணம் என்பது இங்குப் பொருத்தமற்ற வார்த்தையாகும். ஏனெனில் இந்தச் சடங்கு ஒரு வகையில் அவளுடைய குழந்தைகளுக்குத் தந்தையாகவும், அவளைக் காப்பாற்றுவதற்குக் கணவனாகவும் ஒருவனை நிர்ணயிக்கும் சடங்காகும். சமுதாய வழக்கப்படியும், சட்டப்படியும், அவனே அவள் வயிற்றில் தற்போது வளரும் குழந்தைகளுக்கு மட்டுமின்றி இனிப் பிறக்கும் குழந்தைகளுக்கும் தந்தையாவான்.

ஒரு நாவல் மரத்தடியின் கீழ் இந்தப் புதுமையான சடங்கு நிகழ்கிறது. எல்லாருடைய விருப்பத்துடனும் பஞ்சாயத்தார் கூடி முடிவு செய்த மாப்பிள்ளையும் பெண்ணும், முன் வரிசையில் பெண்களும் பின் வரிசையில் ஆண்களுமாகக் குழுமியிருக்கும் பெரியோர்களிடம் ஆசி பெறுகின்றனர். பின்னர் ‘ புப்தூர் ’ என்னும் செடியினைத் தேடி மாப்பிள்ளை புறப்படுகிறான். சிறிது நேரத்தில் அந்தச் செடியின் கிளையினால் ஆன வில்லுடனும் அம்புடனும் அவன் திரும்புகிறான். அவற்றை அன்புடன் பெண்ணிடம் ஒப்படைக்கிறான். இனி இது போன்றதோர் சடங்கினை மற்றொருவன் நிகழ்த்தும் வரை அவனே அவளுக்குக் கணவனும் அவளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் தந்தையும் ஆவான். மணவினை முடிந்ததும் விருந்து தொடங்குகின்றது. ஆண்கள் களிபொங்க ஆடி மகிழ்கின்றனர்.

**சிறையிலே இளஞ் சிட்டுகள் !**

இந்தியாவில் சராசரியாக நாள்தோறும் 20,000 இளங் குற்றவாளிகள் (21 வயதுக்குட்பட்டவர்கள்) சிறைவாசம் அனுபவிக்கிறார்கள். சிறையில் ஓர் இளங்குற்றவாளிக்கு ஒரு நாள் ஆகும் செலவு மூன்று ரூபாய்; ஆண்டுக்கு மொத்தம் ஆகும் செலவு சுமார் இரண்டேகால் கோடி ரூபாய்.

தோதவர் இல்வாழ்க்கை முறையில் ஆராய்ச்சியாளர்களின் கவனத்தைக் கவரும் ஒரு பழக்கம், ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்ட மனைவி அவனுடைய உடன் பிறப்புகளுக்கும் மனைவியாக இருப்பதாகும். முன்னாளில் தோதவர் இனத்தில் பெண்கள் மிகவும் குறைவாக இருந்தது தான் இந்தப் பழக்கத்திற்கு அடிப்படை என்பர். மனப் போக்கில் மாற்றம், பெண்கள் கூடுதலின் விளைவாக இந்தப் பழக்கம் இந்நாளில் மெல்ல மறைந்து வருகிறது.

குழந்தை பிறந்ததும் ஒரு குடிசைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடுத்த அமாவாசை வரை அங்கேயே வளர்க்கப்படுகிறது. குழந்தை பிறந்த மூன்று மாதங்கள் அதன் முகத்தைப் பார்ப்பதற்கு யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. இந்த வழக்கமும் இந்நாளில் அருகி வருகின்றது. ஆண் குழந்தை பிறக்கும்பொழுது, சேயினைத் தாயும் தந்தையும் தங்கள் பிரிவினைச் சேர்ந்த ஒரு புனிதக் குடிலுக்கு எடுத்துச் சென்று இறை வழிபாடு புரிந்து பெயரிடுகின்றனர். பெண் குழந்தைகளுக்கு அத்தகைய ‘ பெருமை ’ கிடைப்பதில்லை. மலையும், நதியும், வாழும் மந்துவும், கோயிலும் ஆண் குழவிகளுக்குப் பெயர்களாக அமைகின்றன. நகைகளின் பெயர்களைப் பெண் குழந்தைகளுக்குச் சூட்டுகின்றனர். எனினும் ஒருவருக்கு வைத்த பெயரைத் தோதவர்கள் மறு முறை யாருக்கும் சூட்டுவதில்லை. ஒருவன் இறந்த பிறகு தேவனாவதால் அவனுடைய பெயரை மற்ற யாரும் உச்சரிக்கக் கூடாது என்பது அவர்கள் கொள்கையாகும்.

தோதவர்கள் சந்திக்கும் பொழுது தங்களுக்கே உரிய முறையில் வணக்கம் செலுத்துகின்றனர். பெரியவர் ஒருவர் பெண்மணி ஒருத்தியைக் காண நேர்ந்தால் தனது பாதங்களை ஒவ்வொன்றாக மாற்றித் தன் முன்னால் குனிந்து அமர்கின்ற பெண்ணின் சிரசில் வைக்கிறார். அவள் தனது வலது கரத்தால் அவருடைய பாதங்களைப் பரிவுடன் பற்றிச் சுமக்கிறாள். வயதான பெண்மணியும் ஓர் இளைய ஆண் மகனும் சந்திக்கும்பொழுது மேற்கூறிய பழக்கம் மாறுபடுகிறது. ஆணின் தலையில் வயதான மாதின் பாதங்கள் பதிகின்றன.

பஞ்சாயத்து என்பது தோதவர் இனத்தின் வலிமை மிக்கதோர் அம்சமாகும். கோயில் பூசாரிகளை நியமிப்பது முதல், திருமணங்கள், மண முறிவுகள், பிணக்குகள் வரை பஞ்சாயத்தாரால் எல்லா வழக்குகளும் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றன. அபராதங்கள் எருமைகள் வடிவில் செலுத்தப்படுகின்றன. இனத்தில் முதுமை மிக்க மக்கள் சிலர் வட்டமாக அமர்ந்து பேசி இவ்வாறு எடுக்கும் முடிவுகளை எல்லாரும் எவ்விதத் தடையுமின்றி ஏற்றுக்கொள்கின்றனர்.

தோதவர்கள் இவ்வுலகைத் தோதவர் நாடென்றும், இறந்தவர் புகுவதை அம்ம நாடென்றும் அழைக்கின்றனர். தோதவர் குலத்தில் இறப்பு நிகழும் பொழுது அது பெரும் சடங்காகக் கொள்ளப்படுகிறது. இறந்த பின் நிகழும் சடங்குகள் இரண்டு பிரிவுகளாகச் செய்யப்படுகின்றன. இறந்த உடன் நிகழ்வது ‘‘ பச்சைச் சாவு ’’ எனப்படுகிறது. சின்னாட்கள் கழித்து, மாண்டவரை ‘‘ அம்ம நாட்டிற்கு ’’ அனுப்பும் விழா மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. இறந்தவருக்கு எருமைகள் பல அன்று பலியாகத் தரப்படுகின்றன. முன்னாளில் இறந்தவரின் மந்தை முழுவதும் அன்று வெட்டிப்பலியாக்கப்பட்டு விடுமாம். அம்ம நாட்டில் இறந்தவருக்குத் துணை போவதற்காக எருமைகள் இவ்வாறு காணிக்கையாக்கப்பட்ட விசித்திரமான கொடிய வழக்கம் அரசினரின் தடை காரணமாக இன்று மறைந்து வருகிறது

தோதவர்களின் மதத்தைப் பற்றிய உண்மைகள் ஆராய்ச்சியாளர்களுக்கு இன்றும் எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது. அவர்களுக்குக் கோயில்கள் உண்டு எனினும் அவர்கள் உருவ வழிபாட்டில் நம்பிக்கை உடையவர் அல்லர். பெண்கள் கோயில்கள் அருகே வரக்கூட அனுமதிக்கப்படுவதில்லை. லவ்டேலுக்கும் பேர்ன் குன்றத்திற்கும் இடையே ஒரு கோயில் உள்ளதனால் இன்றும் தோதவர் பெண்கள் அவ்வழியில் புகைவண்டியில் பயணம்செய்வதில்லை. மதத்தின் பெயரால் அவர்கள் திருவிழாக்கள் நடத்துவதில்லை.

எருமைகளில் சிலவற்றைத் தோதவர்கள் புனிதமானவையாய்க் கருதுகின்றனர். ஒவ்வொரு மந்துவிற்கும் அருகே ஒரு கோயில் உண்டு. அதற்கருகே உள்ள தொழுவத்தில் இந்த எருமைகள் பூசாரியினால் பேணிக் காக்கப்படுகின்றன. பஞ்சாயத்தாரால் நியமிக்கப்படுகின்ற பூசாரி கடுமையான கட்டுப்பாடுகளுடன், வாழ்க்கையின் வசதிகளிலிருந்தும் வசீகரங்களிலிருந்தும் ஒதுங்கி வாழ்பவராவார். இடையில் அணிந்திருக்கும் கருப்புத் துண்டுதான் இவருடைய ஒரே அங்கியாகும். கோயிலுக்குள் ஒரு பகுதியில் இவர் வாழ்கிறார். தோதவர்கள் கோயில் ஒருவகையில் பால் பண்ணையாகவே விளங்குகிறது. தெய்வீக எருமைகளை மேய்ப்பதும் அவற்றினின்றும் பால்கறப்பதும், வெண்ணெய் தயிர் எடுப்பதும், '' பாலாள் '' எனப்படும் பூசாரியின் பணியாகிறது. இவற்றைத் தவிர, இறப்பு, பிறப்புச் சடங்குகளின் போது பூசாரி பங்கேற்கிறார். அந்நியரின் கால்களும் பெண்டிரின் பாதங்களும் படாமல் இவர் கோயிலைக் காக்கிறார். '' தீட்டுகள் '' நேரும்பொழுது விரதங்கள் இருந்து பிராயச்சித்தம் செய்வதும் இவர் பொறுப்பாகும். பாலைக் கறக்கும் பொழுதும், தயிரைக் கடையும் பொழுதும் இவருடைய இதழ்கள் மந்திரங்களை ஓதிக்கொண்டே இருக்கும்.

தோதவர்களின் கோயில்களில் எருமை நெய்யைக் கொண்டுதான் பூசாரி விளக்கேற்றுகிறார். விளக்கேற்றுவதற்குக் கோயில்களில் தீக்குச்சிகள் பயன்படுத்தப்படுவதில்லை. இரண்டு அடி நீளமுள்ள குச்சிகளை உரசித் தீப் பற்ற வைக்கின்றனர். மொனி எனப்படும் புனித மணி ஒன்று கோயிலில் உண்டு.

தோதவரின் ஆலயங்களில் சிறப்பு மிக்கதாகக் கருதப்படுவது சத்தி மந்துவைச் சேர்ந்த கோயிலாகும். இருவர்க்கிடையே பூசல்கள் நேரும்பொழுது, அவர்களை இந்தக் கோயிலில் அழைத்து விசாரித்தால் உண்மை வெளியாகும் என்பது தோதவர்களின் நம்பிக்கையாகும். சத்தி மந்துவின் ஆலயத்தின் முன்னால் சத்தியத்திற்கு மாறாக யாரும் நடந்துகொள்ள முடியாது என்பது தோதவர்கள் கருத்தாகும்.

தோதவர் குலப்பெண்கள் எருமை நெய்யைத் தடவித் தங்கள் கூந்தலைச் சுருள் சுருளாகத் தொங்கவிட்டிருப்பர். கால்களின் அளவும் கார் குழலின் சிறப்பும் தான் ஒரு பெண்ணின் அழகுக்கு அளவுகோல் என்று தோதவர் எண்ணுகின்றனர்.

தோதவர் இனத்துப் பெண்களும், ஆண்களும் ஒன்பது அடி நீளமும் நாலரை அடி அகலமும் உள்ள 'புத்துக்குளி' என்னும் ஆடையை அணிகின்றனர். கோவையில் உருவாகும் துணிக்குப் புது மெருகேற்றிப் புத்துக்குளியாக மாற்றுவது தோதவர் பெண்களின் கைவண்ணமாகும். விரைவாகவும் மிகுந்த கற்பனையுடனும் இவர்கள் துணியின் மீது வண்ண நூல்களைக் கொண்டு பின்னுகின்றனர். வேலைப்பாடுகள் மிகுந்த புத்துக்குளிகளைக் கண்டு வெளிநாட்டார் பலர் பித்துப்பிடித்து அலைகின்றனர் எனின் மிகையாகாது.

தோதவர்கள் மாமிச உணவைத் தீண்டாதவர்கள். எருமைப் பாலை அதில் விளையும் வெண்ணெய், தயிர், நெய் மற்றும் கேழ்வரகு, சாமை, கிழங்குகள், தேன் போன்றவற்றையுமே உண்டு வளர்பவர்கள். அஞ்சா நெஞ்சர்கள் ; எனினும் அன்பு நெறியில் பயில்பவர்கள். மந்துகளுக்கு எதிரே ' வீரக்கல் ' எனப்படும் பெரியதோர் கல் உண்டு. இரு கரங்களாலும் இதனை எடுத்து மார்பகத்திற்கு மேல் உயர்த்தித் தோளில் சுமப்பது வீர விளையாட்டாகக் கருதப்படுகிறது. ஈமச் சடங்குகளின் பொழுது, சீறிவரும் எருமைகளை அடக்கிக் கொல்வதனைக் காண்போர் தோதவர்களின் தோள் வலியினை உணர்வர். எனினும் தங்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும்பொழுது பஞ்சாயத்துக்களின் மூலம் வழக்குகளைத் தீர்த்துக்கொள்கின்றனர். ஆயுதங்கள் தாங்குவது இவர்கள் அறியாத ஒன்று.

தோதவர்களின் புலமையைப் பற்றி ஆராய்ந்த எம். பி. எமனோ என்பவர் '' தொடர் பாடல்கள் '' என்னும் மாபெரும் நூலையே எழுதியிருக்கிறார். வட்டமாக நின்று ஒருவரையொருவர் கைகளால் பற்றிக்கொண்டு '' ஹ ! ஹொ ! ஹா ! ஹொ !'' என்று சுற்றிச் சுற்றி ஆடும்பொழுது ஒருவர் அங்கேயே பாடல் புனைந்து பாடுவாராம். அவ்வாறு பாடப்பட்ட பாடல்களில் உள்ள கற்பனை ஆழத்தைக் கண்டு அதிசயிக்கிறார் எம். பி. எமனோ.

தோதவர்கள், தமிழ், கன்னடம் முதலிய மொழிகளை எளிதில் கற்று உரையாடுகின்றனர். ஆனால் அவர்களின் மொழியை மற்றவர்கள் புரிந்துகொள்வது கடினம். அவர்கள் பேசும் பொழுது, சொல்லின் முதல் எழுத்துச் சற்றுவலுவாக ஒலிக்கக் கடை எழுத்து இரகசிய ஓசையுடன் காற்றோடுகலந்துவிடுகிறது.

### பொடி தூவினால் தீ அணையும் !!

மின்சாரக் கருவிகளால் ஏற்படும் தீ விபத்துக்களைத் தடுக்கத் தண்ணீரைப் பயன்படுத்தினால் மேலும் கோளாறுகள் ஏற்படக் கூடும். எனவே இதுபோன்ற தீ விபத்துக்களை அணைக்க ஒரு விதப் பொடியை இங்கிலாந்து நாட்டில் கண்டு பிடித்திருக்கிறார்கள். மின்சாரக் கருவி, தீப் பிடித்துக் கொண்டதும் இந்தப் பொடியினைத் தூவினால் தீ அணைந்து விடும்.

அத்துடன் இந்தப் பொடி பட்ட இடத்தில் எந்தவிதக் கறையும் படாது. துடைத்தவுடன் சுத்தமாகிவிடக் கூடியது.

தோதவர் மொழியை உற்று ஆராய்ந்த டாக்டர் கால்டுவெல், அது தமிழின் சேயே என்று அறுதியிட்டுக் கூறுகிறார். தற்காலத் தமிழின் அன்றாடச் சொற்களோடு, சங்க காலத் தமிழ்ச் சொற்களான, திட்டை, நஞ்சு, கூகை, உகிர், மிடறு, புள், கரும்பொன், கோடு, உணங்கு, துவி, திங்கள் போன்றவையும் தோதவர் மொழியில் வழங்கப்படுகின்றன.

பழங்குடி மக்கள்—என்னும் நீலகிரி வாழ்கின்ற தோதவர் இனத்தில் நீள் நிலத்தில் காணாத புதுமைகள் எல்லாம் நிறைந்திருக்கக் காண்கிறோம்.

**1972-ல்**

**உலகப் பொருட்காட்சி!**

டெல்லியில் 1972 ஆம் ஆண்டு நவம்பர் 3-ஆம் தேதி உலகப் பொருட்காட்சி தொடங்குகிறது. ஏறக்குறைய 47 நாடுகள் கலந்து கொள்ளப் போவதாகத் தெரிகிறது. ரூபாய் 4 கோடி செலவில் 100 ஹெக்டர் நிலப் பரப்பில் இந்தப் பொருட்காட்சி அமைக்கப்படவிருக்கிறது.

நிறத்தில், தோற்றத்தில் மற்ற மலைவாழ் மக்களிடத்தில் காணாத புதுமை! இவ் வாழ்க்கை முறையில் இதிகாசத்திலன்றி எவரிடத்தும் கேள்வியுறாத புதுமை! எருமைகளைப் போற்றுவதில் வேறெங்கும் எதிர்ப்படாத புதுமை!

மதம் உண்டு! எனினும் மத குரு இல்லை. வழிபட உருவங்கள் இல்லை! திருவிழாக்கள் இல்லை!

ஊன் உணவு கொள்வதில்லை.

உடல் உரம்மிக்கோர், எனினும் உற்றதோர் பகை வரின் கருவிகள் எடுப்பதில்லை!

ஆடலும் பாடலும் ஆடவர் தான் அறிவார்! . . . . .

—எனப் புதுமைகள் பல மிளிரும் இந்தப் பழங்குடி மக்களிடத்தில் ஆராய்ச்சியாளர்கள் தனி ஆர்வம் காட்டுவதில் வியப்பென்ன?

CHETTINAD BRAND

உறுதிக்கும்
உழைப்பிற்கும்

செட்டிநாடு
சிமெண்ட்

எங்கும் கிடைக்கிறது

தயாரிப்பாளர்கள்:
செட்டிநாடு சிமெண்ட்
கார்ப்பரேஷன் லிமிடெட்
6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1.
தந்தி: 'BESTCEMENT' போன்: 27256
பாக்டரி: புலியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்.
தந்தி: 'CEMENT' போன்: 144.

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

Sarath

நமது நாட்டின் வேளாண்மையை மேம்படுத்துவதற்கு ஜெர்மன் நாடு சென்ற பத்து ஆண்டுகளாக உதவி வருகிறது. இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள 'மாண்டி' என்ற மாவட்டத்தில் ஜெர்மன் கூட்டுறவுடன் துவக்கப் பட்ட திட்டம் மாபெரும் வெற்றியடைந்து, புகழ் பெற்றுள்ளது. இத் திட்டத்தின் பயனாக, மாண்டி மாவட்டத்தின் பொருளாதார நிலையில் விரைவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இரண்டாவது இந்திய-ஜெர்மனி வேளாண்மைத் திட்டம் 1967-ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் துவக்கப்பட்டது.

[... column continues]யான கருவிகளையும் வழங்கி வருகிறது.

இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற, தமிழ்நாடு அரசு, அலுவலர்களையும் நிருவாகச் செலவிற்குத் தேவையான நிதியையும் வழங்கி வருகிறது.

### திட்டத்தின் நோக்கம்

இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்.

1. நீலகிரி மாவட்டத்தில் வேளாண்மை உற்பத்தியை விரைவாகப் பெருக்குதல்.

தொழில் நுணுக்கங்களும் வழங்கப்படும். விதைகள், இரசாயன உரங்கள், பூச்சிப் பூஞ்சாள மருந்துகள், கருவிகள் முதலிய தேவைப் பொருள்கள் (Inputs) கடன் தொகைகள், விற்பனை வசதிகள், ஆகியவைகளை ஒருங்கிணைத்து வழங்கி, தீவிரச் சாகுபடிக்கான உத்திகள் மேற்கொள்ளப்படும். இத் திட்டத்தின் சிறப்பியல்புகளாவன :

*உருளைக் கிழங்கு, காய்கறிகளில் மிகு விளைச்சல் தரும் வகைகளைப் புகுத்துதல் ; தீவனப் பயிர் அபிவிருத்தி.

*ஏற்றதோர் பயிர் சுழற்சி (Rotation) ஏற்படுத்துதல்.



# ஜெர்மனி கூட்டுறவுடன் நீலமலையில் வேளாண்மைப் புரட்சி!

இந்திய அரசுக்கும், ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசுக்கும் (Federal Republic of Germany) இடையில் 1966-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 28-ஆம் நாள் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவே இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டம். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இத் திட்டத்திற்குத் தேவையான தொழில் நுட்ப விவரங்களை ஜெர்மன் ஆலோசகர் குழு ஒன்றின் மூலமாக, ஜெர்மன் அரசு வழங்கி வருகிறது. அத்துடன் திட்டப் பணிகளுக்குத் தேவை

2. நீலகிரி மாவட்ட உழவர்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துதல்.

திருந்திய தொழில் நுட்பவியல் மூலமாகவும், அதைத் தொடர்ந்து திறமையான விரிவினைத் திட்டத்தைச் செயல்படுத்துவதின் மூலமாகவும், பரம்பரையாக மேற்கொள்ளப்பட்டு வரும் வேளாண்மையில் ஒரு மாபெரும் முன்னேற்றம் ஏற்படுத்துவதற்காக, நீலகிரி மாவட்டத்தின் உழவர்களுக்குத் தேவையான பொருள்களும்,

*விதைகள், இரசாயன உரங்கள், இரசாயனப் பொருள்கள், கருவிகள் ஆகிய தேவைப் பொருள்களைத் தேவையான காலத்திலும், தேவையான அளவிலும் வழங்குதல்.

* உற்பத்திப் பெருக்கின் காரணமாக, அதிகமாக விற்பனைக்குக் கிடைக்கும் விளைபொருள்களை விற்பனை செய்ய மாநிலத்தின் உள்ளேயும், வெளியேயும் உள்ள விற்பனை வசதிகளை வலிவு பெறச் செய்தல்.





* வேளாண்மையில் திருந்திய தொழில் நுட்பவியல் விரைவாக மேற்கொள்ளப்படுவதற்கு விரிவினைப் பணிகளைத் தூண்டி விடுதல்.

## தலையாய பணிகள்

இத் திட்டத்தின் தலையாய பணிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:—

1. நீலகிரி மாவட்டத்தின் கால நிலைக்கேற்ற அனைத்து நாட்டுக் கோதுமை, உருளைக் கிழங்கு, காய்கறிகள், ஸ்ட்ராபெரி, கிளாடியோலி, ரோஜா மற்றும் இதர ஏற்றுமதிக்கேற்ற மலர் வகைகளைச் சாகுபடிக்குக் கொண்டு வருதல்.

2. நோய், வைரஸ் ஆகியவைகளால் தாக்கப்படாத உயர் விளைச்சல் தரும் உருளைக்கிழங்கு வகைகளை விதைக்காகப் பெருக்கம் செய்து வழங்குதல்.

3. மிகு விளைச்சல் தரும் முட்டைக்கோசு, காலி பிளவர் ஆகியவைகளின் விதைகளை உற்பத்தி செய்து வழங்குதல்.

4. கூடலூர் பகுதி உழவர்களுக்கு நோய் தாக்காத உயர் விளைச்சல் தரும் இஞ்சியின் (ரியோ டி ஜெனிரோ) விதைக் கிழங்குகள் வழங்குதல்.

5. உருளைக்கிழங்கு, இஞ்சி, நெல், காய்கறிகள் ஆகியவற்றிற்குரிய திருந்திய கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளைப் பற்றிய செயல் விளக்கம் அமைத்தல்.

6. உருளைக்கிழங்கைத் தாக்கும் பொன்னிற நூற் புழுக்களை ( Golden Nematode ) 'டாசனிட்' ( Dasanit ) மருந்து மூலமாகக் கட்டுப்படுத்தல்.

7. நீலகிரி மாவட்டத்தில் சமுதாய-வேளாண்மைப் பொருளாதார நிலைமை பற்றிய விசாரணை மேற்கொள்ளல்.

8. உருளைக்கிழங்கு, இஞ்சி, காய்கறிகள் ஆகியவைகளுக்கு விற்பனை வசதி பற்றிய ஆய்வு மேற்கொள்ளுதல்.

9. சிறு நிலக்கிழார்களுக்கான குறுகிய காலக் கடன் நிதித் திட்டத்தை நிருவாகித்தல்.

10. மண் பரிசோதனை செய்தல்.

11. நீர்வளம் மேம்படுத்தல்; மண்வளம் பாதுகாத்தல்.

### ஆராய்ச்சி நிலையங்களும், பண்ணைகளும்

இத் திட்டத்தின்கீழ் ஆறு ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. அவைகளின் விவரம் வருமாறு :

1. பழ ஆராய்ச்சி நிலையம், கல்லார்.

2. பழ ஆராய்ச்சி நிலையம், பர்லியார்.

3. பழவகைப் பண்பியல் ஆராய்ச்சி நிலையம், குன்னூர்.

4. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், நஞ்சநாடு.

5. சிம்ஸ் பூங்கா, குன்னூர்.

6. அரசினர் பூந்தோட்டம், உதகை.

இத்துடன் தொட்டபெட்டா, உட்அவுஸ், கோல்கிரைன், குருத்துக்குளி, நஞ்சநாடு, தும்மனட்டி, விஜயநகரம், காக்காத்தோப்பு ஆகிய எட்டு இடங்களில் உள்ள பண்ணைகளில் வேளாண்மை ஆராய்ச்சியும், விதைப் பெருக்க வேலையும் நடைபெற்று வருகின்றன.

### கருகல் நோய் தாக்காத உருளைக் கிழங்கு

மலைப் பகுதிக்கேற்ற, கருகல் நோய் தாக்காத உருளைக்கிழங்கு ரகத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக, உலகின் பல பாகங்களிலும் இருந்து ஏறத்தாழ 120 உருளைக் கிழங்கு வகைகள் வரவழைக்கப்பட்டு, திட்டப் பண்ணைகளில் பயிரிட்டுப் பார்க்கப்பட்டன. இதுவரை 12 உருளைக்கிழங்கு வகைகள் கருகல் நோயினால் தாக்கப்படாதவை எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சோதனை மேலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அந்த 12 வகைகளில் 'குப்ரிமுத்து' (Kufri Muthu) என்னும் வகையே கருகல் நோயால் மிகவும் தாக்கப்படாதிருப்பதுடன், மிகு விளைச்சல் தரக்கூடியது என்பதும் தெளிவாகியுள்ளது. இந்த வகை திட்டப் பண்ணைகளில் விதைப் பெருக்கம் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

### உயர் விளைச்சல் தரும் காய்கறிகள்

காய்கறி வகைகளில் கீழ்க் கண்டவைகள் உயர் விளைச்சல் தரும் வகைகள் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன:—





| [illegible] பெயர். | வகையின் பெயர். |
|---|---|
| புஷ்பீன்ஸ் | 1. எக்சிகியூடிவ் (Executive)<br>2. ஓரிங்கர். (Oeringer) |
| போல் பீன்ஸ் | 1. ரிகோர்டு (Rekord)<br>2. கோல்டு ரீஜென். (Gold regen) |
| பட்டாணி (உயரம்). | 1. ஸெனிட் (Zenit)<br>2. நுக்கெட். (Nugget) |
| பட்டாணி (குட்டை). | 1. எக்செலென்ஸ். (Excellenz)<br>2. யூபெரிச். (Ueberreich) |
| காலிபிளவர். | 1. கிபோ ஜெயிண்ட். (Kibogaint)<br>2. டாக்டர் ஜென்ஸ்மா. (Dr. Jensma)<br>3. டெல்ஃப்டர் மார்க்கட். (Delfter Markt) |
| முட்டைக்கோசு (பச்சை). | ஓ. எஸ். கிராஸ். (O. S. Gross) |
| முட்டைக்கோசு (சிவப்பு). | ஃப்ருகா (Frueka) |
| முள்ளங்கி | 1. ரோட்டர் நெக்கரும். (Rotor Neckarruhm)<br>2. வெய்ஷெர் நெக்கரும். (Weisser Necharruhm) |

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பீன்ஸ், பட்டாணி வகைகள் உள்ளூர் வகைகளை விட முறையே 40 சதம், 30 சதம் அதிக மகசூல் அளித்துள்ளன. முள்ளங்கி வகைகள் உள்ளூர் வகைகளை விட 50 சதம் அதிக மகசூல் அளித்துள்ளன.

### ஸ்ட்ராபெரி

புதிதாகச் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்ட பினுமினன் (Phenomenon), மெஜஸ்டிக் (Mejestic) என்ற 2 வகைகளும் உள்ளூர் வகைகளை விட மகசூலிலும், தரத்திலும் உயர்ந்தவை என்பது ஆரம்ப சோதனைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

## உருளைக் கிழங்கு நோயும் வைரஸும்

உருளைக் கிழங்குச் செடிகளுக்கு 5 முறை டைத்தேன் எம். 45 மருந்தை ஒரு 'டா' பரப்புக்கு (கால் ஏக்கர்) 180 கிராம் வீதம் 10 நாள் இடைவெளியில் தெளிப்பது உச்சளவு மகசூல் கொடுக்கும் என்பது சோதனைகளின் மூலம் தெளிவாகியுள்ளது.

உருளைக் கிழங்கை எக்ஸ் (X), ஒய் (Y), எஸ் (S), எம் (M), இலைச் சுருட்டும் வைரஸ் ஆகிய 5 வகை வைரஸ்கள் தாக்குவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இறைவையாகப் பயிரிடப்படும் உருளைக் கிழங்கில் அசுவிணிப் பூச்சிகளால் பரவும் வைரஸ் நோய்கள் (இலைச் சுருட்டும் வைரஸ், உருளைக் கிழங்கு வைரஸ் 'ஒய்') மிகுதியாகத் தாக்குகின்றன. வைரஸ் நோய் தாக்கிய செடிகளை அகற்றுவதும், 'டேட்டுரா ஸ்ட்ராமோனியம்' என்னும் ஊமத்தச் செடி வகை, புகையிலை, 'சினபோடியம் அமராண்டிக்கலர்' என்னும் செடிகள் ஆகியவைகளை வளர்ப்பதும் வைரஸ் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய நல்வழிகள் என்று ஆராய்ச்சி மூலம் தெரிய வந்துள்ளது.

இத் திட்டத்தின் கீழ் பணியாற்றும் பூச்சியியல் பிரிவு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் கூட்டுறவுடன், கீழ்க்கண்ட சாதனைகளை நிகழ்த்தியுள்ளது.

1. பேரி, ஆப்பிள், ஆரஞ்சு, கோகோ, மங்குஸ்தான் மலையில் சாகுபடியாகும் காய்கறிகள், உருளைக் கிழங்கு ஆகியவைகளில் தோன்றும் புதிய பூச்சிகள் என்னென்ன என்பதை ஆய்வின் மூலம் அறியப்பட்டுள்ளது.

2. வெட்டுப் புழு, டைமண்ட் பிளாக் மாத், 'சான் ஜோஸ் ஸ்கேல்', பிளம்பழ ஈ, முட்டைக்கோசு பச்சைப்புழு ஆகியவைகளின் வாழ்க்கைச் சரிதம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

3. உருளைக் கிழங்கின் வெட்டுப் புழுவை ஆல்ட்ரின் 5 சதத் தூள் அல்லது ஹெப்டாகுளோர் 6 சதத் தூள் தெளித்துக் கட்டுப்படுத்தலாம் என்பது தெரியவந்துள்ளது.

## விளம்பரத் திறமை !

ஒரு விமான நிறுவனத்தினர் தங்களிடமிருந்த சிக்கனத்திற்குக் கட்டுப்படாத ஒரு விமானத்தை விற்பதற்கு முடிவு செய்தனர். கையிலிருக்கும் சரக்கு, பழைய சரக்கானதால், அதனைக் கெட்டிக் காரத்தனமாக, செய்திப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார்கள். அந்த விளம்பரம் இது :—

பழமை பாராட்டுக்குரியது; விமானம் விற்பனைக்குக்கிடைக்கும். ஐந்தாம் ஜார்ஜ் மன்னர், வின்ஸ்டன் சர்ச்சில், அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட் ஆகியோரை ஏற்றிச்சென்ற பெருமை படைத்தது இந்த விமானம். இந்த அரிய விமானத்தின் அமைப்பை உருவாக்கிய மேதை விக்டோரியா மகாராணியின் காலத்தில் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இருபது பயணிகளைக் கவனிப்புடன் அழைத்துச் செல்லும் சேவைக்கு இந்த விமானத்தில் நான்கு ஓட்டுநர் இருக்கிறார்கள். இதய நோயாளிகள் பயணம் செய்வதற்கு இதுவே ஏற்றது ; ஏனென்றால் இந்த விமானம் அவர்களை வெகு வேகமாகவோ வெகு உயரத்திலோ அழைத்துச்செல்லாது. இதை வாங்குபவருக்கு, மிக விரைவில் ஒரு புதிய விமானத்தில் பயணம் செய்யும் அரிய வாய்ப்பும் கிடைக்கும்.

4. முட்டைக் கோசில் தோன்றும் 'டைமண்ட் பிளாக் மாத்' என்னும் பூச்சியையும், அசுவிணிப் பூச்சியையும் 'மெட்டாசிட் கோம்பி' என்னும் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 4.5 மில்லி லிட்டர் வீதம் கலந்து 3-வது வாரத்தில் தெளித்தும், மாலத்தியான் 0.125 சதக் கரைசலை 6-வது வாரத்தில் தெளித்தும் கார்பரில் 0·2 சதக் கரைசலை 9-வது வாரத்தில் தெளித்தும், கட்டுப்படுத்தலாம் என்பது தெளிவாகியுள்ளது.



## பொன்னிற நூற்புழு

உருளைக் கிழங்குச் செடிகளைத் தாக்கும் பொன்னிற நூற்புழுக்கள் பரவியுள்ளதைக் கண்டுபிடிப்பதற்காக 1964-ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தீவிர ஆய்வு முடிவடைந்துள்ளது. 16,800 தனிப்பட்ட உழவர்களுக்குச் சொந்தமான 9,380 ஹெக்டேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் போது, பொன்னிற நூற்புழுவின் தாக்குதல் உதகை நகரசபை எல்லைக்குள் அதிக அளவில் இருப்பதாகவும், அப்பகுதியிலேயே அதிக அளவில் பரவி வருவதாகவும் தெளிவாகியது. பொன்னிற நூற்புழு எவ்வாறு பரவுகிறது என்பதைஅறிய மேற்கொள்ளப் பட்ட ஆய்வில், நூற்புழுக்கள் விதைக் கிழங்குகள், காற்று, மழை நீர், நூற்புழு தாக்கிய வயலில் நாற்று விட்டு நூற்புழு தாக்காத வயலில் நடுதல் ஆகியவைகளின் மூலம் பரவுகின்றன என்பதும் புலனாகியது.



இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டம் துவக்கப்படுவதற்கு முன்பும், துவக்கப்பட்ட பின்பும் நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தும் மருந்துகள் பற்றிய பல சோதனைகள் நடத்தப்பட்டன. ஹெக்டேருக்கு 300 கிலோ 'டாசனிட்' (Dasanit) எனப்படும் 'பினைல் பாஸ்பரோதியோவேட்' (Phenyl Phosphorothioate) மருந்தைப் பயன்படுத்தினால், பொன்னிற நூற்புழுக்கள் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படுவதுடன், மகசூலும் அதிகரிக்கிறது என்பது தெரியவந்துள்ளது. "டாசனிட்" மற்ற மருந்துகளைவிட பின்கண்ட வகைகளில் சிறந்து விளங்குகிறது.

*குருணை வடிவில் இம்மருந்து இருப்பதால், இரசாயன உரங்களுடன் கலந்து இடுவதற்கு ஏற்றது.

*இம்மருந்து செடிகளுக்குத் தீங்கு விளைவிப்பதில்லையாதலின், உருளைக் கிழங்கு நடப்படும் சமயத்திலும் இடலாம்.

*மண்ணில் இருக்கும் வரையில் இம்மருந்து, பொன்னிற நூற்புழுக்கள் செடியின் வேர்ப் பகுதியைத் தாக்குவதைத் தடுத்துவிடுவதால், பொன்னிற நூற்புழுக்களால் உருளைக் கிழங்குச் செடிகள் தாக்கப்படுவதில்லை.

நூற் புழுக்களைக் கட்டுப்படுத்தும் இதர மருந்துகளைப் பயன்படுத்திய பின், உருளைக்கிழங்கு பயிரிட்டால் செடிகள் இறந்துவிடக்கூடும். ஆனால், டாசனிட் மருந்து பயன்படுத்தும் போது உருளைக் கிழங்கு பயிரிடுதல் அவசியமாகிறது. இன்னும் பல மருந்துகள் பற்றிய சோதனைகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

அண்மையில், இந்திய-ஜெர்மனி விரிவினைக்குழு ஒன்று உருளைக் கிழங்குச் சாகுபடியில் உள்ள பிரச்சினைகளைப் பற்றி ஆய்வு செய்து, அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய முறைகளையும் பரிந்துரைத்துள்ளது. நாட்டின் நலம் காக்கும் பணியாக (National Security Measure) பொன்னிற நூற்புழுவால் பாதிக்கப்பட்டுள்ள பரப்பு முழுவதிலும் ஹெக்டேருக்கு 300 கிலோ வீதம் டாசனிட் மருந்து உபயோகிக்கப்படவேண்டும் என்பதே அக்குழுவின் முக்கியப் பரிந்துரையாகும்.

## இலவச மருந்து

இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பொன்னிற நூற்புழுக்களைக் கட்டுப் படுத்துவதற்காக 3,049.57 ஏக்கரில் டாசனிட் 10 சத மருந்து பயன்படுத்தப்பட்டுள்ளது. பொன்னிற நூற்புழுவால் 1970–71-ஆம் ஆண்டில் தாக்கப்பட்டிருந்த வயல்களின் சொந்தக்காரர்களுக்கு 328.52 மெட்ரிக் டன் டாசனிட் மருந்து இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. 1971 நவம்பர் திங்களில், இரண்டாம் முறையாக டாசனிட் மருந்து பயன்படுத்தப்பட்டுள்ளது. 1972–73-ஆம் ஆண்டில் மூன்றும் முறையாக மருந்து தூவும் பணி மேற்கொள்ளப்படும்.

ரூபாய் 75 இலட்சம் மதிப்புள்ள டாசனிட் மருந்தை நீலகிரி மாவட்ட உழவர்கள் 3,000 ஏக்கரில் 3 முறை பயன்படுத்துவதற்காக, மேற்கு ஜெர்மனி அரசு, இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசின் மூலம் இலவசமாக வழங்கியுள்ளது. இம்மருந்திற்குச் சுங்கவரி மட்டும் ரூபாய் 40 இலட்சம் ஆகியுள்ளது. இத்தொகையைத் தமிழ்நாடு அரசு கொடுத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அமைந்துள்ள பரிசோதனைச் சாலையில் 1,400 மண் மாதிரிகளும், 297 செடிகளும் இதுவரை பரிசோதிக்கப்பட்டுள்ளன.

### காட்டெருமைக் கூட்டம்!

மலைவளம், வனவளம் மிகுந்த நீலகிரி மாவட்டம், பல அரிய வனவிலங்குகளின் தாயகம் போல இருக்கின்றது.

கூட்டம் கூட்டமாகத் திரியும் காட்டெருமைகள், யானைகள், புலி, சிறுத்தை, புள்ளிமான், கடமான், பில்லாய் மான், முயல் மான், முயல் வகைகள், மலை அணில், செந்நாய், காட்டுக் கோழிகள், மயில், காட்டுப் பன்றி ஆகியவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

## உழவியல் முடிவுகள்

இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உள்ள உழவியல் பிரிவினர் உருளைக் கிழங்குச் சாகுபடியில் மேற்கொண்ட ஆராய்ச்சிகளிலிருந்து கீழ்க்கண்ட சிறப்புமிகு முடிவுகள் கிடைத்துள்ளன:—

*நெருக்கமான இடைவெளியில் உருளைக் கிழங்கு அதிக மகசூல் அளிக்கும்.

*'கிரேட் ஸ்காட்' என்னும் உருளைக் கிழங்கு ரகம், 'பிரசிடெண்ட்' என்ற ரகத்தைவிடச் சிறந்தது.

* விதைக் கிழங்குகளின் பருமன் அதிகமாவதற்கு ஏற்ப, மகசூலும் அதிகமாகிறது.

*பல்வேறு நிலைகளில் உருளைக் கிழங்குச் செடிகளுக்கு மண் அணைப்பது, மகசூலை அதிகப்படுத்தவில்லை.

*உருளைக் கிழங்குச் செடிகளில் மெக்னீசியம் எந்தவித பயனும் அளிக்கவில்லை.

* தழைச்சத்தை மண் மூலமாகத் தெளிப்பதனால் அல்லது இலை மூலமாகத் தெளிப்பதனால் ஏற்படும் பயனில் எவ்வித வேறுபாடும் இல்லை.

* 'கிரேட் ஸ்காட்', 'பிரசிடெண்ட்' ஆகிய ரகங்கள் முறையே 98 நாட்களிலும், 119 நாட்களிலும் அறுவடை செய்யப்படும்போது அதிக அளவு மகசூல் கொடுத்துள்ளன.

* எஸ். எல். பி/இசட்/785 என்ற ரகம் உச்ச அளவு மகசூல் (ஒரு 'டா' பரப்புக்கு 42.5 குவிண்டால். ஒரு 'டா' என்பது கால் ஏக்கர்.) அளித்துள்ளது. இதற்கு அடுத்தபடியாக 'சபீர்' (Saphir) என்ற ரகம் மகசூல் கொடுத்துள்ளது.

## கோதுமை

இரசாயன உரம் இடாமல் சாகுபடி செய்யும் போது 'எஸ். 216' என்ற கோதுமை ரகமும், இரசாயன உரமிட்டுச் சாகுபடி செய்யும்போது 'சோட்டிலெர்மா' என்ற கோதுமை ரகமும் அதிக அளவு மகசூல் அளித்துள்ளன என்பது சோதனைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

## மலர்கள்

ஏற்றுமதிக்கு ஏற்ற மலர் வகைச் செடிகளை ஏராளமாகப் பயிரிட நீலகிரி மாவட்டத்தில் பெரும் வாய்ப்பு இருப்பதால், ஏற்றுமதிக்கு ஏற்ற மலர்கள் பற்றிய ஆய்வும் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்ட அலுவலர்கள் நீலகிரி மாவட்ட உழவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க அயராது உழைத்து வருகின்றனர் என்பது வெள்ளிடை மலையாகும்.

யானைகளைக் கூட்டம் கூட்டமாகப் பார்க்க வேண்டுமா? வாருங்கள் முதுமலைக் காட்டுக்கு....!

உலகத்திலேயே இப்பொழுது மூன்று வகையான யானை இனங்கள்தான் இருக்கின்றன. அவை யானை இனம், ஆப்பிரிக்க யானை இனம், ஆப்பிரிக்க சிறிய காட்டு யானை இனம் என்பவை. இந்த மூன்று இனங்களிலும், ஆப்பிரிக்க யானை தான் அளவிலும், பருமனிலும் பெரியது.

யானையின் பருமனையும், பெரிய அளவையும், அதற்கில்லாத நுண்ணறிவையும் கண்டு மனிதர்கள் மிகவும் பயப்பட்டனர். யானை தனது நுண்ணறிவினால் பாலங்களில் நடக்காதென்றும், புதை மண்ணை மிதிக்காதென்றும், கால் வழுக்கி விழாதென்றும் மிகைப்படுத்திக் கூறிவந்தனர். ஆனால் இந்தக் கூற்று உண்மையென்றால் யானையைக் குழியில் விழவைத்துப் பிடிப்பது முடியாத காரியமாகிவிடும். மேலும் எத்தனையோ யானைகள் சகதியில் அமுங்கித் தத்தளித்துத் தவித்ததற்கும் ஆதாரம் இருக்கிறது. மிகுந்த பலமும், நுண்ணறிவும் உள்ள மிருகமானால் அவை இவ்வளவு எளிதில் மனிதனால் பழக்கப்பட்டிருக்க முடியாது. மனிதனுக்குப் பணிந்து வேலை செய்ய வைத்திருக்க முடியாது.

யானைக்குக் கண்பார்வை குறைவானது. ஆனால் யானை வாசனையை நுகர்ந்து அறிவதில் திறமையும், கூர்மையான செவியையும் உடையது. ஒரு காலத்தில் நமது கானகத்தில் தன்னிச்சையாகப் பெருகிப் பரந்து வாழ்ந்து வந்த யானைக் கூட்டம் உலகப் பெரும் போர்க் காலத்தில் காடுகளை அழித்ததாலும், பல யானைகளைப் பிடித்து உலகத்திலுள்ள மிருகக் காட்சி சாலைகளுக்கு அனுப்பியதாலும் எண்ணிக்கையில் குறைந்து வந்தன. ஆனால் அவைகள் குறைந்து வரும் வேகத்தைக் கண்டு பயந்து, சரணாலயங்கள் அமைப்பதன் மூலமும், சட்டங்களைக் கடுமையாக்கியும், இப்பொழுது யானைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

யானைகளுடைய தந்தங்களுக்காகத் திருட்டுத்தனமாக யானைகளைச் சுடுவதும் குறைந்திருக்கிறது. மேலும் அவைகள் கூட்டங் கூட்டமாக வாழ்வதனாலும், அடர்ந்த காடுகளில் மட்டுமே வாழ்வதாலும் தங்களை அழிவிலிருந்து காத்துக் கொள்கின்றன. யானைகள், அடர்ந்து

சாப்பிடுகின்றன. மாலை வேளையில் தண்ணீர் குடித்துத் தாகம் தணிக்கின்றன. நீர்நிலைகளிலோ ஆற்றிலோ மூழ்கி, நீந்தி விளையாடும்போது, துதிக்கை மூலம் நீரை வாரி இறைத்துப் பீளிறிக் கொண்டும், ஊளையிட்டுக் கொண்டும் குளிப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.




வளர்ந்த பசுமையான குளிர்ந்த காடுகளையே மிகவும் விரும்புகின்றன. ஆதலால் அவைகளைக் கடும் வெயிலில் வேலை செய்ய வைப்பது உசிதமானதன்று.

இவைகள் காட்டுத் தழைகளையும், மூங்கிலையும், பசுமையான புல்லையும் விரும்பிச்

யானை கருவுற்று பத்தொன்பது மாதங்களுக்குப் பிறகு பெண் குட்டியையும், இருபத்தொரு மாதங்களுக்குப் பிறகு ஆண் குட்டியையும் ஈனுகிறது. வனத்துறையில் யானைகளைப் பிடித்துப் பழக்கி, காட்டு வேலைகளுக்காக நிர்வாகிக்கப்படும் யானைக் கோட்டங்களில்

உள்ள யானைகளும் அங்கேயே உள்ள ஆண்யானையுடன் சேர்க்கை செய்தும், குட்டி போடுகின்றன. வேலை முடிந்து மேய்ச்சலுக்காகக் காட்டிற்குள் விடப்படும்போது காட்டு ஆண்யானையுடன் சேர்ந்தும் இனப்பெருக்கம் செய்கின்றது.

ஆண் யானைகளுக்குச் சில சமயங்களில் 'மதம்' பிடித்து விடுகிறது. 'மதம்' கொள்ளும் யானைகளுக்கு, கண்ணிற்கும் காதுக்கும் இடையிலுள்ள பகுதியில் ஒரு "சுரப்பி" சாதாரண காலத்திலுள்ளதைவிட சற்றுப் பெரிதாக வீங்கி அதிலிருந்து திரவம் வடிய ஆரம்பிக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் யானை மிகவும் எரிச்சல் அடைகிறது. ஆதலால் அந்த யானையின் அருகில் செல்வது அபாயகரமானதாக முடியும். மதம் ஏன் பிடிக்கிறது என்பதற்கு உறுதியிட்டு எந்தக் காரணத்தையும் சொல்ல முடியாத நிலையிலிருக்கிறோம். இனச் சேர்க்கைக்காகப் பால் உணர்வு ஏற்படும் காலங்களில் யானை மதம் கொள்ளும் என்றும் சிலர் கருத்தறிவிக்கின்றனர். சாதாரணமாக ஆண் யானைகளுக்குத்தான் மதம் பிடிக்கிறது. ஆனால் ஒரு சில பெண் யானைகளுக்கும் மதம் பிடித்த ஆதாரக் குறிப்புகள் காணக்கிடக்கின்றன. மதப்பிடிப்பு ஒரு சில நாட்களிலிருந்து ஒரு சில வாரங்கள் வரை நீடிக்கிறது. ஆண்டில் எந்தக் காலத்தில் குறிப்பாக மதம் பிடிக்கிறது என்றும் திட்டமாகச் சொல்ல முடியாது.

யானையுடைய தந்தத்தை சொகுசுப் பொருளாக உலக மக்கள் கருதுகின்றனர். 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்' என்பது பழமொழி. விலை மதிக்க முடியாத தந்தத்தினால் தான் இந்தப் பழமொழி வழக்கில் வந்தது. பர்மிய யானைகளுக்குள்ள தந்தம் நீளத்திலும் நிறையிலும் குறைவானதாக இருக்கும். பெண் யானைகளுக்குத் தந்தம் மிகமிகச் சிறியதாகவே இருக்கும். இலங்கையிலுள்ள ஆண் யானைகளில் பெருவாரியானவற்றிற்குத் தந்தங்களே கிடையாது. இப்படிப்பட்ட யானைகள் நமது நாட்டிலும் சில இருக்கின்றன.

## யானை மேலே அம்பாரி!

முதுமலை வனவிலங்குக் காப்பகத்துக்கு உள்ளே செல்ல நுழைவுக் கட்டணம் ஒரு ரூபாய். மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் அனுமதிக்கப்படுவதில்லை.

இங்கு யானை மேல் சவாரி செய்ய 4 பேர்களுக்கு 4 மணி நேரத்துக்குக் கட்டணம் பத்து ரூபாய். முன்கூட்டி எழுதிப் பணம் அனுப்பி இதற்குப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

தந்தமில்லாத யானைகளை 'மக்னு' என அழைக்கிறோம்.

வனவிலங்குச் சரணாலயங்களில் யானைகளைப் பிடிப்பது தவிர்க்கப்பட்டிருக்கிறது. நமது நீலகிரி மாவட்டம் முதுமலை வனவிலங்குச் சரணாலயத்தில் கூட்டங் கூட்டமாக யானைகள் சுற்றித் திரிவதைப் பார்க்கும் வாய்ப்பு உடல் சிலிர்க்க வைக்கும்.

நமது நாட்டு மலைக்காடுகளில் காணப்படும் மற்றுமொரு உன்னத மிருகம் "கவுர்" என்று சொல்லப்படும் காட்டு மாடுகள், தென் மாநிலங்களில் மைசூர், கேரளாவிலும், ஆனமலை, முதுமலைக் காடுகளிலும் மந்தை மந்தையாகத் திரிகின்றன. நன்கு வளர்ந்த வயதான காளைகள் மினுமினுவென்று கரு நிறமாக இருக்கும். கால்களில் குளம்பிலிருந்து முட்டுவரை வெள்ளைக் காலுறை அணிந்தது போன்று வெண்மையாக இருக்கும். அவைகளுடைய கொம்புகள் வளைந்து கூர்மையாகவும் பலமுடையதாகவும் இருக்கும். மூங்கில் அதிகமுள்ள காடுகளில் மூங்கிலின் இளம் தாளைத் தின்று வாழும். வேட்டைப் பிரியர்கள் அதிகமாக இந்த மாடுகளை வேட்டையாடியதால் அடியோடு அழியும் நிலைக்கு வந்து விட்டது. ஆனால் இப்பொழுது காட்டு மாடுகளை வேட்டையாடுவதற்குக் கடுமையான விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதால்இம்மிருகங்கள்அழிவிலிருந்து காப்பாற்றப் பட்டிருக்கின்றன. மேலும் முதுமலை, பந்திப்பூர், சரணாலயங்களில் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருப்பதால் வெகுவாகப் பெருகி வாழ்ந்து வருகின்றன.

நமது நாட்டு மாடுகளுக்கு ஏற்படும் தொத்து நோய்களும், இந்தக் காட்டு மாடுகளுக்கும் பரவி விடுகிறது. வனவிலங்கு சரணாலயங்களில், அதைச் சுற்றியுள்ள கிராமத்து மாடுகள் உள்ளே வந்து மேய்வது தடுக்கப்படாமலிருப்பதால், படு நோய்கள் காட்டு மாடுகளுக்கும் பரவி, அநேகம் செத்து மடிகின்றன. இந்த நோய் பரவியதன் காரணமாக 1968-ஆம் ஆண்டு முதுமலையில் மட்டும் சுமார் 70—80 காட்டு மாடுகள் செத்து மடிந்தது மிகவும் பரிதாபமானது.

இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படாமலிருக்க அரசு தேவையான நடவடிக்கை எடுத்துள்ளது.

முதுமலையில் யானைச் சவாரி செய்து விலங்கினங்களைப் பார்க்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறையும் சுற்றுலா வருபவர்களுக்காகப் புதிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து வருகிறது.



# உழைப்போம்! ஒன்றுபடுவோம்!! ஒத்துழைப்போம்!!!

நமது நாட்டில் வங்க தேசப் பிரச்சினை காரணமாக இருள் சூழ்ந்து தேசிய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. அவசர நிலைமை நாடு முழுவதும் அறிவிக்கப் பட்டுள்ளது. இராணுவ ஆட்சியின் பேயாட்டத்தைக் கண்டு பீதியுற்று இலட்சக்கணக்கான மக்கள் நமது நாட்டைப் புகலிடமாக நாடி வந்த வண்ணமாய் இருந்தனர். இதன் காரணமாக நமது நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் தொழில் உறவுகளை நன்முறையில் நாம் பேணிக் காத்துவர உறுதி கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இப்பெரு முயற்சியில் தொழிலாளர்களும், தொழில் நிருவாகிகளும் தொழிற் சங்கத் தலைவர்களும் தோளோடு தோள் நின்று உதவி புரிய வேண்டும். இதற்கு அரசும் தன்னாலியன்றமுழுஒத்துழைப்பை எப்போதும் நல்கத் தயாராக உள்ளது.

தொழில் துறையில் அமைதி நிலவினால்தான் தொழில்வளர்ச்சி தொழிலாளர் நலன் என்ற உறுதியான மாளிகையை எழுப்ப முடியும். ஆகவே, தொழில் அதிபர்களும், தொழிலாளர்களும் மேலும் கட்டுப்பாடும், பொறுமையுணர்வும் கொண்டு தொழில் அமைதியைக் குலைக்கிற அல்லது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டிக் காப்பதையே நோக்கமாகக்கொண்டு பாடுபடுவதற்குத் தடையாக இருக்கிற எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாதிருப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

இதற்கு முன்பு ஒரு முறை, அதாவது, 1962-ல் நமது வட எல்லையைச் சீனா தாக்கிய நேரம். அந்தச் சந்தர்ப்பத்தில், நமது மாநிலத்தில் எல்லாத் துறையினரும், நமது மாபெரும் நாட்டின் ஏனையமாநிலத்தினரைப்போலவே ஒன்றுபட்டு வீறு கொண்டு எழுந்தனர். நாட்டின் பாதுகாப்புக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் முழு முயற்சி எடுத்துக்கொள்வதென்றும் தேசிய ஒற்றுமைக்கும், உள்நாட்டு அமைதிக்கும் ஊறு ஏற்படும் எச்செயலிலும் ஈடுபடுவதில்லை என்ற உறுதியையும் மேற்கொண்டனர்.

அக்கூட்டத்தில் மேற்கொண்ட பிற முடிவுகளுக்கிடையே கீழ்க்கண்ட முடிவுகளும் ஒருமனதாக ஏற்கப்பட்டன :—

1. சூழ் நிலை:—தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களின் அளவை உயர்த்திடும் வகையில் தொழிலாளர்களின் இடைவிடாத உழைப்பிற்குஉறுதி செய்யும் பொருட்டுத் தொழில் அமைதியைப் பேணுவதற்கும், உற்பத்தி அளவை உயர்த்துவதற்கும் உரிய தேவையினை எடுத்துக் கூறும் முழக்கங்கள் தொழிற்சாலை வளைவுகளிலும், மற்றும் முக்கியமான எல்லா இடங்களிலும் தென்பட வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.



தொழிலாளர் நல அமைச்சர்
திரு. என். வி. நடராசன்

2. தொழில் அமைதி:— இயன்ற வரையில் தகராறுகள் அனைத்தும் இரு தரப்புப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலமோ அல்லது சமரசப் பேச்சு வார்த்தைகள் மூலமோ தீர்க்கப்பட வாய்ப்பில்லை என்றால் வேலையிலிருந்து நீக்கிவிடுதல், வேலையிலிருந்து விடுவித்தல், ஆட்குறைப்புச் செய்தல் போன்றதனிப்பட்ட தொழிலாளர்களைப் பாதிக்கின்ற தகராறுகள் தொழிலாளர் நல ஆணையாளரிடம் நடுவர் தீர்ப்புக்குக் கண்டிப்பாக அனுப்பப்பட வேண்டும் என்னும் அவரது முடிவு இரு தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

3. உற்பத்தி:—இயன்ற இடங்களிலெல்லாம் புதிய முறை மாற்றுப் பணிகள் நடத்தியும் கூடுதல் மணி நேரங்கள் வேலை செய்தும் உற்பத்தி பெருக்கப்பட வேண்டுமெனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. மூலப் பொருள்களைக் கருத்துடன் பயன்படுத்துவதிலும், பொருள்கள் வீணாகாமல் பார்த்துக்கொள்வதிலும் நிருவாகமும் தொழிலாளர்களும் ஒத்துழைக்க முடியும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

தொழில் அமைதித் தீர்மானத்தைச் சொல்லளவில் நிறைவேற்றியதுடன் நின்றுவிடாமல்,

[illegible] உண்மையாகவும் நேர்மையாகவும் செயலிலும் கடைப்பிடித்தோம். தொழில் அமைதியைக் காப்பதற்கும், தொழில் உற்பத்தி அளவை உயர்த்துவதற்கும், தொழிலாளர்களும் தொழிலதிபர்களும் முழுமனத்துடன் ஒத்துழைத்தனர்; தொழிலாளர்களின் நியாயமான குறைகள் தனியே நடுவர் தீர்ப்பிற்கு விடும் ஏற்பாட்டின் மூலம் தீர்க்கப்படுவதற்கும் வகை செய்யப்பட்டது. நம் நாட்டிலுள்ள ஏனைய மாநிலங்களைவிடத் தமிழ்நாட்டில் தனிப்பட்ட இந்த நடுவர் தீர்ப்பின் மூலம் பல தொழில் தகராறுகள் தீர்த்து வைக்கப்பட முடிந்துள்ளது.

தற்போதுள்ள நமது தொழில் துறை உறவு நிலை, நாட்டின் ஏனைய பல பகுதிகளில் நிலவி வரும் உறவு நிலையைவிடச் சிறந்த நிலையில் உள்ளதென்றாலும், இது இன்னும் உறுதி வாய்ந்த அடிப்படையில் அமைய வேண்டியுள்ளதுடன், மேலும் பெருமளவில் சமநிலையையும் அடைய வேண்டியுள்ளது. நாடு இன்றுள்ள நெருக்கடி நிலையில் நமக்கிடையேயுள்ள சிறு வேறுபாடுகளை நாம் மறந்து விட வேண்டும்; நமது அரசியலிலும், சமுதாயத்திலும், கோட்பாடுகளிலும் நமக்குள் எந்தவிதமான வேற்றுமைகள் இருப்பினும், நாட்டின் பொது நலன் என்னும் உயர் தனிக் கொள்கையைக் கருதி நமது தனிப்பட்ட நலன்களையும் கருத்து வேறுபாடுகளையும் இச்சமயத்தில் புறக்கணிக்கச் சித்தமாயிருக்க வேண்டும்; நாட்டின் நலனுக்காக எவ்விதத் தயக்கமும் இன்றி நம்மை அர்ப்பணித்துக் கொள்ள முன்வர வேண்டும்.

தொழில் அமைதி, உற்பத்தி, தொழிலாளர் நலன் ஆகியவற்றைக் கட்டிக் காக்க நாம் மேற்கொண்டுள்ள முயற்சியில் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்ற இந்த நெருக்கடியான சூழ்நிலையில் நாம் உறுதி கொள்வோமாக:—

1. பொருள்களை உற்பத்தி செய்தல், பணிகளை நிறைவேற்றுதல் இவற்றில் எத்தகைய சூழ்நிலையிலும் குறுக்கீடுகள் எதுவும் ஏற்படாமலிருக்க நாம் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

2. தொழிலாளர்களையும், இயந்திரங்கள், பொருள்கள் ஆகியவற்றையும் நல்ல முறையில் பயன்படுத்துவதற்குத் தடையாக உள்ள இடையூறுகள், பொறிகள் எவையும் செயல்படாமலோ அல்லது விரயம் எதுவும் ஏற்படாமலோ கண்காணிப்பதுடன் தொழிற்சாலைகளை நடத்துவதில் நிருவாகத்தினர் பெருமளவுக்குச் சிக்கனத்தைக் கடைபிடிப்பதிலும் கண்ணும் கருத்துமாயிருக்கவேண்டும்.

3. தொழிலுக்கு வராமல் நின்றுபோகும் நிலை, பணியில் அசட்டை, கடமைப் புறக்கணிப்பு ஆகியவைகள் ஏற்படாத வகையில் தொழிற் சங்கங்கள் கடமையாற்ற வேண்டும்.

4. தொழில் அமைதிக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்பதனாலோ, உற்பத்தியைப் பெருக்க முனைப்பான முயற்சி மேற்கொள்ளப்படவேண்டும் என்பதனாலோ, தொழிற்சாலைகளில் எழக்கூடிய நியாயமான தகராறுகள் அடக்கப்பட்டுவிடும் என்பது பொருள் அல்ல. ஆனால், இத்தகைய தகராறுகள் முடிவற்ற சச்சரவில் அல்லது வழக்கில் முடியக் கூடாது என்பதுதான் தமிழக அரசின் நோக்கமாகும். நேரடிப் பேச்சு வார்த்தைகளின் மூலமோ, சமரச உடன்படிக்கையின் மூலமோ வேறுபாடுகள் விரைவாகத் தீர்க்கப்பட முயற்சிப்பதுடன், அவ்வாறு தீர்க்கப்பட முடியாவிட்டால், இரு தரப்பினரும் தாமே முன்வந்து நடுவர் தீர்ப்பின் மூலம் அத்தகராறுக்குத் தீர்வு காண வேண்டும்.

5. அவசியமேற்பட்டால் அரசு சமரச உடன்படிக்கையை விரைவாக நிறைவேற்றவும் நடுவர் தீர்ப்பு விரைவில் கிடைப்பதற்கும் தேவையான ஏற்பாடுகளைச் செய்யும்.

விடுதலைப் போராட்டமாயிருப்பினும், சமூக அமைதியைக் காப்பதாயிருப்பினும், வெள்ளத்தினாலோ, பஞ்சத்தினாலோ, பாதிக்கப்பட்ட பகுதிக்கு விரைந்து உதவியளிப்பதாயிருப்பினும் அல்லது பிற நெருக்கடி நிலைமை அல்லது மக்கள் தேவை எதுவாயிருப்பினும், நாட்டின் அறைகூவலுக்குச் செவிமடுத்து நற்பணி புரிவதில் நமது மாநிலம் எப்போதும் திரண்டெழுந்து விழிப்புடன் செயலாற்றி வந்துள்ளது. சீன ஆக்கிரமிப்பு நடந்த காலத்தில் செயல்பட்டது போல தற்போதும் தொழிலாளர்களும், தொழிலதிபர்களும் தங்களது அயராத ஒத்துழைப்பைத் தந்தால்தான் நம் நாட்டு நலனைச் சிறந்த வகையில் பேணிக்காக்க இயலும். எனவே, தொழிலதிபர்களும், தொழிலாளர்களும், தொழிற்சங்களுங்கம், எப்போதும் போலவே ஒன்றுபட்டுத் திரண்டு உதவுவார்கள் என்பதில் அரசுக்கு எள்ளளவும் ஐயமில்லை.

தமிழக அரசு, போர் வெறியர்களின் அட்டூழியத்தைத் தகர்த்தெறியத் தனது ஒத்துழைப்பை இந்திய அரசுக்கு இதய பூர்வமாகத் தருவதென்று ஏற்கெனவே எடுத்துள்ளமுடிவை மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளதைத் தொடர்ந்து தொழிலாளத் தோழர்களும் தொழிற்சங்கத் தலைவர்களும், தொழிலதிபர்களும் தங்களின் தூய்மையான ஒத்துழைப்பைத் தருமாறு அரசின் சார்பில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.



### மூவரில் ஒருவர்

இன்று, உலகத்திலுள்ள 500 நாடுகளின் தலைவர்களில் மூன்று பேர் மட்டுமே கவிஞர்கள்.

சீன நாட்டின் தலைவர் மாசேதுங், செனகல் நாட்டின் தலைவர் லியோபோல்ட் செதார் செங்கர், தமிழ் நாட்டின் முதல்வர் டாக்டர் கலைஞர் ஆகிய மூவருமே அந்தப் பெரும் புகழுக்குரியவர்கள்.

டாக்டர் மால்கம் ஆதிசேஷையா, 'கவியரங்கில் கலைஞர்' நூல் வெளியீட்டு விழாவில்




கம்பளி உற்பத்தியில் இந்தியா முக்கிய அங்கம் வகித்துவருகிறது. விரிப்புக் கம்பளி (Carpet-Wool) உற்பத்தியில் உலகிலேயே முதலிடம் வகித்து வரும் சீனவிற்கு அடுத்த படியாக இந்தியாவே இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. ஆனல், தரம் மிகுந்த விரிப்புக் கம்பளி உற்பத்தியில் உலகத்திலேயே இந்தியா தான் முதலிடம் வகித்து வருகிறது.

இந்தியா ஆண்டுதோறும் 10 முதல் 12 கோடி ரூபாய் மதிப்புள்ள விரிப்புக் கம்பளிகளை ஏற்றுமதி செய்து வருகிறது. ஆனல் அதே அளவு மதிப்புள்ள மெல்லிய நயமான கம்பளி இழையை ஆண்டுதோறும் இறக்குமதி செய்ய வேண்டிய இக்கட்டான நிலையில் இந்தியா இருந்து வருகிறது. இறக்குமதி செய்யாவிட்டால், நம் நாட்டிலுள்ள கம்பளி நூலிழை நூற்கும் ஆலைகளுக்கும், கம்பளம் நெய்யும் தொழிற்சாலைகளுக்கும் தேவையான கம்பளி இழை கிடைக்காது.

கம்பளியால் செய்யப்பட்ட உடைகளை ஏற்றுமதி செய்தவகையில் இந்தியாவிற்குச் சென்ற ஆண்டு 30 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைத்துள்ளது. இதுவரை நிகழாத ஒரு சாதனை இது. சோவியத்து யூனியனுக்கு ஏற்றுமதி மும்மடங்காகப் பெருகியுள்ளது. ஹாங்காங், சிங்கப்பூர், ஷாம்பியா, சுவீடன் முதலிய இடங்களுக்கும் பெருமளவில் கம்பளி உடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. எனவே இந்தியாவில் கம்பளி உற்பத்தியைப் பெருக்க வேண்டியது அவசியமாகிறது.

இந்தியாவில் மெல்லிய கம்பளி இழைகளைக் கொடுக்கவல்ல செம்மறியாடுகளை வளர்ப்பதற்கு ஏற்ற பகுதிகள் மிகவும் குறைவாகவே உள்ளன. ஜம்மு-காஷ்மீர் அடங்கிய இமய மலைப் பகுதி, இமாசலப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் மற்றும் பஞ்சாப் மாநிலத்தின் மலைப் பிரதேசங்கள், தமிழ் நாட்டிலுள்ள நீலகிரி மாவட்டம் ஆகிய பகுதிகளில் மட்டுமே மெல்லிய நயமான கம்பளி கொடுக்கக் கூடிய செம்மறியாடுகள் வளர்க்கப்படுகின்றன. மேற்கூறிய பகுதிகளில் உற்பத்தியாகும் மெல்லிய கம்பளியின் அளவு, இந்தியாவின் மொத்தக் கம்பளி உற்பத்தியில் 6 சதமே உள்ளது. மீதியுள்ளவை விரிப்புகள் தயாரிக்கப்பயன்படும் கம்பளியாகவே உள்ளது.

இந்தியாவில் ஆண்டு தோறும் 1·9 கோடி கிலோ கிராம் உயர் தரக் கம்பளி இழையும், 1·2 கோடி மீட்டர் உயர்தரக் கம்பளி ஆடைகளும், 4 கோடி கிலோ கிராம் மற்றக் கம்பளங்கள், துணி வகைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. நம் நாட்டில் 4·2 கோடி செம்மறி ஆடுகள் உள்ளன. இவைகளிலிருந்து 3·2 கோடி கச்சாக் கம்பளம் உற்பத்தியாகிறது.

மெல்லிய கம்பளி உற்பத்தியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, நீலகிரி மாவட்டத்தில் மெல்லிய கம்பளி கொடுக்கும் செம்மறியாடுகளை வளர்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மாநிலக் கால்நடை மேம்படுத்தும் வாரியத்தின் பரிந்துரைக்கு ஏற்ப 1946-ஆம் ஆண்டிலேயே மெல்லிய கம்பளி கொடுக்கவல்ல செம்மறி ஆடுகளைப் பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக, நீலகிரி மாவட்டத்தில் உள்ள 'சாண்டி நல்லா' (Zandynallah) என்னும் இடத்தில் செம்மறி ஆடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் துவக்கப்பட்டது. இந்த ஆராய்ச்சி நிலையம் பெற்றவளர்ச்சியின் காரணமாக அனைத்திந்திய முக்கியத்துவம் பெற்றது.

மண்டல அடிப்படையில் கம்பளி மற்றும் செம்மறி ஆடுகள் மேம்பாட்டிற்கான ஒரு திட்டத்தை இந்த ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படுத்த 1956-ஆம் ஆண்டில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் அனுமதித்தது. இத் திட்டம் 1968-ஆம் ஆண்டுவரை தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. இந்த ஆராய்ச்சி நிலையம், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் செம்மறி ஆடுகளை மேம்படுத்தும் தீவிரத் திட்டப்படி 1956-ஆம் ஆண்டு முதல் தீவிரஆராய்ச்சியில் ஈடுபட்டது. இப்பொழுது இந்த ஆராய்ச்சி நிலையம் கால்நடைக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மேற்பார்வையில் செயலாற்றி வருகிறது.

தமிழ்நாடு அரசும், இந்திய அரசின் கீழ் செயலாற்றும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும் கொடுத்த ஆக்கத்தினுலும் ஊக்கத்தினுலும் போதுமான அடிப்படை ஆராய்ச்சிப் பணிகள் இந்த ஆராய்ச்சிநிலையத்தில் கடந்த 20 ஆண்டுக் காலமாக நடைபெற்று வந்துள்ளன.

'சாண்டி நல்லா' வில் உள்ள செம்மறி ஆடுகள் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் கம்பளி உற்பத்தியைப் பெருக்குவதுடன் தரத்தையும் உயர்த்துவதற்காகக் கீழ்வரும் முறைகளை மேற்கொண்டுள்ளது:—

(1) நீலகிரி மாவட்டத்தில் செம்மறி ஆடுகளிடையே தேர்ந்த வளர்ப்பு முறையை ( Selective breeding ) மேற்கொள்ளல்.

(2) மெல்லிய கம்பளி தரக்கூடிய வெளிநாட்டுச் செம்மறி ஆடுகளுடன் நீலகிரிச் செம்மறி ஆடுகளை இனக்கலப்புச் செய்து, நீலகிரிச் செம்மறி ஆடுகளின் தரத்தை உயர்த்துதல்.

இந்த ஆராய்ச்சி நிலையம் செம்மறி ஆடுகளை நவீன முறையில் பராமரிக்கும் நிலையமாக விளங்கி வருகிறது. கம்பளியைப் பகுத்து ஆயும் பரிசோதனைச் சாலையும் இங்கே உள்ளது.

இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள ஆராய்ச்சியின் அடிப்படையில் பார்க்கும் பொழுது, நீலகிரி மாவட்டச் செம்மறி ஆடுகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு ''ரோம்னே மார்ஷ்'' (Romney Marsh) என்ற அயல் நாட்டு இனத்தைவிட 'மெரினோ' (Merino) என்னும் அயல் நாட்டு இனமே சிறந்தது என்பது புலனாகிறது. நயமும் தரமும் மிகுந்த கம்பளி உற்பத்தியைப் பெருக்கும் குறிக்கோளை நிறைவேற்றி வைக்க 'மெரினோ' செம்மறி ஆடுகள் பெருந்துணை புரியும் என்பதில் ஐயமில்லை.

மெல்லிய கம்பளி அளிப்பதில் 'மெரினோ' செம்மறி ஆடுகளே உலகத்திலேயே சிறந்து விளங்குகின்றன. நீலகிரி மாவட்டத்திற்கு 'மெரினோ' செம்மறி ஆடுகள் ஏற்றதாக அமையுமா என்பதையும், அவை மெல்லிய கம்பளி உற்பத்தியைப் பெருக்க உதவுமா என்பதையும் அறிவதற்காக 1965-ஆம் ஆண்டில் 10 மெரினோ செம்மறி கடாக்களும், 40 மெரினோ பெண் செம்மறி ஆடுகளும் ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அவைகள் நீலகிரி மாவட்டத்தின் சூழ்நிலை, பருவநிலைகளுக்கு ஈடுகொடுத்து எவ்வித இடர்ப்பாடும் இன்றி வளர்ந்து வருகின்றன. இப்பொழுது இவ்வாராய்ச்சி நிலையத்தில் உள்ள 1,632 செம்மறி ஆடுகளில் 152 செம்மறி ஆடுகள், (35 செம்மறி கடா, 80 பெண் செம்மறி ஆடுகள், 34 செம்மறி யாட்டுக் குட்டிகள்) கலப்படமற்ற மெரினோ செம்மறி ஆடுகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தச் செம்மறியாட்டு ஆராய்ச்சி நிலையம் ஆராய்ச்சியில் ஈடுபடுவதுடன் கூட, விரிவினைப் பணிகளையும் மேற்கொண்டுள்ளது. செம்மறியாடுகளைப் பராமரித்தல், கம்பளி உற்பத்தியை மேம்படுத்தல் ஆகிய விரிவினைப் பணிகளை 4 நிலையங்களின் மூலம் செம்மறியாடு வளர்ப்பவர்களுக்குச் செய்து வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் உள்ள 25,000 பெண் செம்மறியாடுகளின் தேவைக்காக ஏறத்தாழ 500 பொலி கடாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

கம்பளி உற்பத்தியை உச்ச அளவுக்கு உயர்த்த வேண்டும் என்ற குறிக்கோளின் அடிப்படையில் 'சாண்டி நல்லா' ஆராய்ச்சி நிலையம் கீழ்வரும் பணிகளை மேற்கொண்டுள்ளது.

* கலப்படமற்ற தனித்தன்மை வாய்ந்த 'மெரினோ' செம்மறியாட்டு இனத்தையும், நீலகிரி இனச் செம்மறியாடுகளையும் வளர்த்தல்.

* கம்பளியின் தரத்தையும், உற்பத்தியையும் உயர்த்த நீலகிரி இனத்தை 'மெரினோ' இனத்துடன் இனக் கலப்புச் செய்து, நீலகிரி இனத்தை மேம்படுத்துதல்.

* கம்பளி கொடுப்பதற்கும், மாமிசத்திற்கும் ஏற்ற இருவகைப் பயனளிக்கும் (Dual purpose breed) இனத்தை உருவாக்க 'ரோம்னி மார்ஷ்' இனத்துடன் இனக்கலப்புச் செய்தல்.

* மேய்ச்சல் தரைகளை மேம்படுத்துதல்.

* இறக்குமதி செய்யப்பட்ட, பனியால் தாக்கப்படாத புற்களை மேய்ச்சல் தரைகளில் சாகுபடிக்குக் கொண்டுவருதல்.


# நெய்வேலியும்...நமது நாடும்

**நெய்வேலி யூரியா:**
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரோஜன் கூட்டப்பட்ட உரம் தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

**மின்விசை:**
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.

**கட்டிக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ**
வீடுகள், ஓட்டல்கள், பல்வேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திறம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.



**தார்ப்பொருள்கள்:**
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், ஸைலினால், பாலிவாலென்ட் ஃபினால் கலவை.

**நெகோலின்:**
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தரவல்ல இன்ஸுலேட்டர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஜவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத்

**நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட், நெய்வேலி—1**



* தேர்ந்த வளர்ப்பியல் மூலம் கம்பளி உற்பத்தியையும் தரத்தையும் பெருக்குதல்.

* திறந்த வெளி முறையில் செம்மறியாடுகளை வளர்த்தல்.

* மேய்ச்சல் தரைகளிலும், செம்மறியாடுகளிலும் காணப்படும் கொள்ளை உயிரிகளைக் (Parasites) கட்டுப் படுத்தல்.

— கொள்ளை உயிரிகளாலும், பாக்டீரியாக்களாலும் ஏற்படும் தீங்குகளை அறவே ஒழித்தல்.

* பண்ணையை இலாபமாக நடத்த 10 ஆண்டுக்காலத்திற்குள் செம்மறியாடுகளின் எண்ணிக்கையை 5,000-க்கு உயர்த்துதல்.

* தனிப்பட்டவர்களுக்கும் கூட பொலி கடாக்களையும் பெண் செம்மறியாடுகளையும் அதிக அளவில் வழங்க ஆவன செய்தல்.

* நீலகிரியில் செம்மறியாடுகள் வளர்ப்பதைத் துணைத் தொழிலாக்கிக் கம்பளி உற்பத்தி செய்வதற்குரிய வாய்ப்பைப் பெருக்குதல்.

* கம்பளி விற்பனையை முறைப் படுத்தல்.

* கம்பளி நூலிழை நூற்கும் ஆலையையும் கம்பளம் நெய்யும் தொழிற்சாலையையும் கூட்டுறவுத் துறையில் அமைத்தல்.

நீலகிரி மலையில் உள்ள பருவ நிலையையும், ஏராளமான மேய்ச்சல் தரையையும் பயன்படுத்தி இப்பொழுது உள்ள மெல்லிய கம்பளி கொடுக்கும்செம்மறியாடுகளின் தொகையை 5 அல்லது 6 மடங்கிற்கும் அதிகமாக ஆக்க முடியும். இவ்வாறு செய்தால் மெல்லிய கம்பளி உற்பத்தி பெருகவும், 3 முதல் 5 ஆண்டுகளில் கம்பளி நூற்பு ஆலையும், கம்பளம் நெய்யும் ஆலையும் ஏற்படுத்த இயலும். இதனால் நீலகிரி மாவட்டத்தில் சிறந்த பயன்கள் விளையும்.

* கிராமப்புறப் பொருளாதாரம் செழிக்கும்.

* நிலமற்ற ஏழை எளியவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

* இறக்குமதியால் இழந்து வரும் அந்நியச் செலாவணி மீதமாகித் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும்.

'சாண்டிநல்லா' செம்மறி ஆடுகள் ஆராய்ச்சி நிலையத்தின் இன்றியமையாமையை உணர்ந்த தமிழ்நாடு அரசு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்படுத்தவிருக்கும் 5 மிகப் பெரிய செம்மறியாடு வளர்ப்புப் பண்ணையில் ஒன்றாக இவ்வாராய்ச்சி நிலையத்தையும் சேர்க்க வேண்டும் என்று இந்திய அரசுக்குப் பரிந்துரைத்துள்ளது. அதுமட்டுமா? நயமிகு கம்பளி, அதைக் கொடுக்கும் செம்மறியாடுகளைப் பேணுதல் பற்றி ஆராய்வதற்காக ஏற்படுத்தவிருக்கும் மண்டல நிலையங்களில் ஒன்றாக இவ்வாராய்ச்சி நிலையத்தை மேம்படுத்த, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் (U. N. D. P.) கீழ் கிடைக்கும் உதவிகளைப் பெறுவதற்காகவும் இந்திய அரசுக்குத் தேவைக் கோரிக்கையைத் தமிழ்நாடு அரசு அனுப்பி வைத்துள்ளது.

அண்மையில் 'சாண்டிநல்லா' செம்மறியாடுகள் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்திற்கு வருகை தந்த தேசிய வேளாண்மைஆணைக் கழகம் மெல்லிய கம்பளி கொடுக்கும் செம்மறியாடுகளை வளர்க்க நீலகிரி மாவட்டத்தில் பெரும் வாய்ப்பு உள்ளது என்றும், அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள இந்த ஆராய்ச்சி நிலையம் பெருந்துணை செய்யும் என்றும் கருத்தறிவித்துள்ளது.

எனவே, மெல்லிய கம்பளி உற்பத்தியில் நீலகிரி மாவட்டம் விரைவில் முன்னேறும் என்பதும், அத்துடன் நீலகிரி வாழ் பழங்குடி மக்களின் வாழ்வும் செழிக்கும் என்பதும் உறுதி.

உறுதியான கட்டடங்கள்: *கிராமங்களில்-1*





காலநடைகளுக்கும் நவீன கொட்டில்கள் தேவை

# சங்கர் சிமெண்ட்

IS:269

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது

ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

IS:269

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2

25 ஆண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!

இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை-18

FDSIC-1446TM-R

# முன்மேமைப் பணிபுரியும் சென்னைச் சுழற் சங்கம்

'' வறியோர்க் கெல்லாம்
கல்வியின் வாடை
வரவிட வில்லைமதக்
குருக்களின் மேடை
நறுக்கத் தொலைந்த
தந்தப் பீடை
நாடெலாம் பாய்ந்தது
கல்விநீ ரோடை''

என்று, பிரான்சு நாட்டில் ஏற்பட்ட கல்விப் புரட்சியினை வரவேற்றுப் பாடி மகிழ்ந்த புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன், நமது தாய்த் தமிழ்நாட்டிலும் 'கல்விச் செல்வம்'—சமுதாயத்தின் அடிமட்டத்தில் கடைகோடியில் வாழ்வோர்க்கு எட்டாத ஒன்ருகத்—துய்க்க முடியாத ஒன்ருக இருந்த இழிநிலையைக் கண்டு, மனம் நொந்து,

'' எளிமையினுல் ஒரு தமிழன்
படிப்பில்லை யென்ருல்
இங்குள்ள எல்லாரும்
நாணிடவே வேண்டும்''

என்று பாடினுர். ஆம்! உண்மை தானே!

நாடு உரிமை பெற்ற பின், துறைதோறும் மாற்றமும் வளர்ச்சியும் காண்பதற்கான திட்டங்கள் தீட்டப்பெற்றுச் சிறப்பான முறையில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. கல்வித் துறை மட்டும் இதற்கு விலக்கா என்ன?

ஆம்! 'எல்லார்க்கும் கல்வி, இலவசக் கல்வி, என்னும் திட்டத்தை நோக்கித் தமிழகம் வீறு நடைபோட்டு முன்னேறிக் கொண்டிருக்கிறது. பல்வேறு கல்வித் திட்டங்களில் தமிழகம் முன்னேடியாக இருக்கிறது! சீருடை, இலவசப் பகல் உணவு, கல்லூரிப் புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி என்பன யாவும் இந்த உண்மையைப் புலப்படுத்தும்.

அண்மையில், 23—11—71-ல் சென்னை ரோட்டரிக் கழகத்தின் இளைஞர் பணிக்குழு ஒரு நல்ல திட்டத்தைத் தொடங்கியிருக்கிறது. ஆம்! ஏழைமையின் காரணமாகப் பகல் உணவு சாப்பிடாமல் பட்டினி கிடந்து கல்லூரிக் கல்வி பயிலும் ஏழை மாணவர்களுக்கு உதவும் நோக்கத்துடன் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. சென்னை 'கன்னிமாரா ஹோட்டலில்', கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இத்திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்கள். கல்வியமைச்சர் அவர்கள், 'ஏழைக் கல்லூரி மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கும் நற்பணியை—திட்டத்தைத் தொடங்கி வைக்கையில், சமூகத்தின் மேல் மட்டத்தில் இருப்பவர்களுக்கு இத்தகு ஈகையுணர்ச்சி ஏற்பட்டிருப்பதைப் பாராட்டினுர்.

தமிழகத்தில் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பகல் உணவு அளிக்கும் திட்டம், அமெரிக்க நாட்டின் 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் நல்ல முறையில் நடைபெறுகிறதென்றும், 30 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பள்ளிக்கூடங்களில் பயிலும் 18 இலட்சம் ஏழைக் குழந்தைகள் இன்று பயன் பெறுகின்றனர் என்றும், அமெரிக்கக் 'கேர்' நிறுவனம் கடந்த 10 ஆண்டுகளில் உணவு தானியங்கள், பால் தூள், எண்ணெய் போன்ற உதவிகளாக 10 இலட்சம் ரூபாய் உதவியிருக்கிறதென்றும் குறிப்பிட்டார்.

சென்னை ரோட்டரிக் கழகத்தினர் சென்ற ஆண்டு மயிலாப்பூரிலுள்ள செவிட்டுமைப் பள்ளிக்கு ஒரு விடுதி கட்டித்கொடுத்திருக்கின்றனர். இப்போது, ரோட்டரிக் கழகத்தின் இளைஞர் பணிக்குழு, ஏழைக் கல்லூரி மாணவர்களின் நண்பகல் உணவுக்காக ரூ. 40 ஆயிரம் உதவ முன்வந்து, திட்டத்தின் முதற்படியாக நகரிலுள்ள லயோலா கல்லூரி, புதுக்கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரி, விவேகானந்தா கல்லூரி, சட்டக் கல்லூரி, எத்திராஜ் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த 180 ஏழை மாணவர்களுக்குப் பகலுணவு வழங்குவதற்கு உரிய பணத்தை அந்தந்தக் கல்லூரி நிருவாகிகளிடம் அமைச்சர்அவர்கள் வழங்கி 'இத்திட்டம் மாநிலம் முழுதுமுள்ள எல்லாக் கல்லூரிகளிலும் அமல் நடத்தப்பட ரோட்டரிக் கழகத்தினர் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

விழாவில் ரோட்டரிக் கழகத்தின் இளைஞர் பணிக்குழுத் தலைவர் திரு ஜி. இராமசாமி, 'கல்லூரியில் பயில வரும் மாணவர்களில் சிலர் தங்கள் மதிய உணவுப் பிரச்சினையைப் பட்டினியுடனேயே கழித்து விடுகிருர்கள்' என்றும், 'சிலர் வெற்று உணவுப் பாத்திரங்களோடு வந்து சாப்பிடுவதுபோலப் பாசாங்கு செய்கிருர்கள்' என்று கூறியது பலரது உள்ளங்களை உலுக்குவதாக இருந்தது. இத்தகைய இழிநிலையை ஒழிக்க எண்ணி முன்வந்து முன்மாதிரியாக நடந்து கொண்டிருக்கும் சென்னை ரோட்டரிக் கழகமும், இளைஞர் பணிக்குழுவும் கொண்டுள்ள மனிதத் தன்மை மிக்க இப்பணி மேலும் மேலும் வளர்ந்து, தமிழக மெங்கும் விரிந்து பரவும் என்பதில் ஐயமில்லை! அந்த நற்பணி வெல்க! வழிகாட்டும் சென்னை ரோட்டரிக் கழகம் வாழ்க!



# செல்வி கன்னுவின் வாழ்க்கையில் பெருமைக்குரிய நிகழ்ச்சியாகும் இது

தங்கள் ஓய்வு நேரத்தைப்பயனுள்ள பணியில் செலவிட்டால் எந்தப் பெண்ணும் பெருமை பெற லாமே ! ஆமாம் **செல்வி கன்னு** தனது ஓய்வு நேரத்தைச்சிறுசேமிப்பு முகவராகப்பணியாற்றுவதில் செலவிட்டார்.

மேலே உள்ள படத்தைப் பாருங்கள். 1970-71 ஆம் ஆண்டில் சிறுசேமிப்பு வாடிக்கை யாளர்களைச் சேர்ப்பதில் பெருஞ் சாதனையைச் செய்தமைக்காக மத்திய அரசு துணை நிதியமைச்சர் திருமதி **சுசிலா ரோஹட்கி** யிடமிருந்து பரிசு பெறுகிறார்.

செல்வி கன்னுவின் தனிப்பட்ட முயற்சியால் கூடுதலான வருவாய் கிடைத்ததை நீங்கள் அறி வீர்கள். சிறு சேமிப்புக்காக வாடிக்கையாளர்களைச் சேர்ப்பது சுலபமானது. நீங்கள் கூடச் சிறுசேமிப்பு வாடிக்கையாளராகப் பணியாற்றலாம். அதன் மூலம் வருவாய் பெறுவதுடன் பரிசுகளையும் பெறலாமே!

உங்கள் ஓய்வு நேரத்தை இப்படிப் பயனுள்ள பணியில் செலவிட்டு நாட்டுக்கும் சமுதாயத்துக்கும், நற்றொண்டாற்ற இன்றே சிறுசேமிப்பு முகவராகச் சேருங்கள்.

விவரங்களுக்குத் தொடர்பு கொள்க

வட்டார இயக்குநர்
**தேசிய சேமிப்பு நிறுவனம்**
எண் 1/18 அண்ணா சாலை
சென்னை - 2.
தொலைபேசி: 85962

சிறுசேமிப்பு இயக்குநர்
**தமிழ்நாடு அரசு**



# இந்தியாவில் ஒரு சுவிட்சர்லாந்து!

பூமிப்பந்தின் 77 டிகிரி கிழக்கு தீர்க்க ரேகைக்கும் 11 டிகிரி வடக்குத் தீர்க்க ரேகைக்கும் இடையே, கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் மேற்குத் தொடர்ச்சி மலைகளும் கூடும் இடத்தில் நீலகிரி அமைந்திருக்கிறது.

மேலை நாட்டு மக்கள் விரும்பிக் கூடுகின்ற கீழைநாட்டுத் தலமல்லவா அது!

சமவெளியில் 200 மைல்கள் பரந்திருக்கும் நீலமலைகளைச் சுற்றி மோயாறு, சிறுபவானி என ஓடும் இரு ஆறுகள் பசுமையைவளர்த்து இறுதியில் பவானி எனப் பெயர் பெற்றுச் சமவெளியில் பாய்கின்றன.

கிழக்கில் கோவையும்வடக்கில் கருநாடகமும் மேற்கிலும் தெற்கிலும் கேரளமும் சூழ்ந்திருக்கக் தடாகத்துத் தாமரை போல் தனித்த எழிலுடன் விளங்கும் நீலகிரி மலையின் அடிவாரத்தில் அழகும் பயனும் மிக்க காடுகள் அடர்த்தியாக உள்ளன. நீலகிரி மாவட்டத்தின் பரப்பு 982 சதுர மைல்கள். கடல் மட்டத்திற்கு மேலே 5,000 அடி முதல் 8,000 அடிவரை உயர்ந்தும் தாழ்ந்தும் தோன்றும் கணக்கற்ற சிகரங்களின் வனப்பும் கணவாய்கள், பீடபூமிகளின் சிறப்பும் காணக் காணத் தெவிட்டாதவை!

மலையின் மிக உயர்ந்த சிகரமாகத் தொட்டபெட்டா 8,760 அடியில் எடுப்புடன் நிற்கிறது. அதற்குச் சற்றுக் கீழே, 7,500 அடி மட்டத்தில் ''கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் குளிர் தருவாகத் தருநிழலாக'' பல்லாண்டுகளாகப் பலருக்குச் சுகமளித்து வருகிறது உதகை என்னும் மலைநகரம்.

மனோகரமான அந்த இடத்தைக் கண்ட வெளிநாட்டார், அதனை ''இந்தியாவின் சுவிட்சர்லாந்து'' எனப் பாராட்டினர். கோடைப் புகலிடங்களிலும் ஒரு குறை உண்டு. அங்குக் கோடையில்வெம்மை கடுமையாக இருக்கும்; பனிக்காலத்தில் உறைபனி பொழியும். சுவிட்சர்லாந்தும் இதற்கு விதி விலக்கல்ல. ஆனால் உதகையில் எந்த நாளிலும் வெப்ப அளவு 68 டிகிரி (எப்)யைத் தாண்டியதில்லை. பூமியின் நடுநிலைக் கோட்டிற்கு அருகாமையில் இருப்பதால் இங்கு உறைபனியும் பெய்வதில்லை எனவே மென்மையான உடல்வாகு படைத்தோர் மேனி நலமுடன் வாழ உதகையை விட மேலான இடம் உலகிலேயே இல்லை எனலாம். இது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை!

## இனியது இனியது உதகை!

''பார்க்குமிடமெல்லாம்பசுமை! பாறை என்பதே தெரியாத புதுமை! இது போன்ற இன்பம் தரும் பயண அனுபவத்தை இதுவரை அறிந்ததே இல்லை! எண்ணாயிரம் அடிகளுக்கும் மேலே ஏறிச் சென்று தொட்ட பெட்டாவில் நின்று சமவெளியைக்காணும் பொழுது, ஆகா! அதன் அழகை என்னென்பேன்! அந்த அரிய காட்சிகளைக் காண அன்பே என் அருகே நீ இல்லையே!''

என்று தன் மனையாளுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறார் ஸர் தாமஸ் மன்ரோ!

அத்தனை இனியது உதகை!

## மலை ஏறிய மதகுருக்கள்

புனித தாமஸின் மூலமாக ஏசுவின் கருத்துக்களை ஏற்ற பழம் கிறித்துவரில் சிலர், நீலமலையின் மேல், வெளி உலகத் தொடர்பின்றி வாழ்வதாகக் கேள்வியுற்றார், சிரியன் சர்ச்சின் பிஷப் பிரான்சிஸ்கோ ராய். மதக் கோட்பாடுகளில் அவர்களை மேலும் ஈடுபடுத்த 1602-ஆம் ஆண்டு மத போதனையாளர் ஒருவரை நீலகிரிக்கு அனுப்பினார். அவர் தந்த செய்தி திருப்தி தராமற் போகவே வேறு ஒருவரை அனுப்புமாறு ரோமன் கத்தோலிக்கக் குழுவை வேண்டினார்கள்.

மதகுரு அருள்தந்தைஜேகோம் பெர்ரைரி அப்பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கள்ளிக்கோட்டையிலிருந்து புறப்பட்ட பெர்ரைரி குளிரைத் தாங்கிக் கொண்டு நீலகிரி ஏறினார். பல மைல்களைக் கடந்து சென்ற அவர் அங்குக் கிறித்துவர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்களைக் காணவில்லை: எனினும் அங்கு வாழ்ந்த படகர்களுடனும் தோதவர்களுடனும் பழகி அவர்களைப் பற்றிய பயன்மிகு விவரங்களை அறிந்து வந்தார்.

## கள்வனைத் தேடினர்!

### கவின் மலை கண்டனர்

கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியில் இந்தியா வாழ்ந்த காலம் அது. பாளையக்காரன் ஒருவன் குடியானவர்களைக்கொடுமைப்படுத்திக் கொண்டிருந்தான். கம்பெனியின் கணக்கர் அவன் மீது பாயவே தேவ நாயக்கன் கோட்டை வழியாக அவன் நீலகிரி மலைக்குத் தப்பிஓடிவிட்டான்.

அவனைத் தேடி 1818-ஆம் ஆண்டில் கோவை உதவி கலெக்டர்களான விஷ் ( Whish ) கிண்டர்ஸ்லி (Kindersly) ஆகியோர் புறப்பட்டனர். வழியெல்லாம்அவர்கள்கண்ட பசுமையான காட்சிகளும், இதம் தரும் இனிய காற்றும் குளிர்ந்த சூழ்நிலையும் உதவிக் கலெக்டர்களை உவகையில் ஆழ்த்தின.

கோத்தகிரி அருகே ஒரு குடிசையில் அவர்கள் தேடி வந்த பாளையக்காரர்களைக் கண்டனர். பழமும் தேனும் பல்சுவை உணவும் தந்து அவர்களைப் பரவசப்படுத்திய பாளையக்காரன் ''பருகப் பால் கொண்டு வருகிறேன்'' என்று கூறி மறைந்து விட்டான்.

ஆனால் உதவிக் கலெக்டர்கள் மனம் குலையாது கள்வனைத் தேடுவதைக் கைவிட்டு அந்தக் கவின் மலையின் மேலே மேலும் ஏறிச் சென்று அதன் அமைப்பை ஆராய்ந்தனர்.

நீலகிரியின் அழகையும் பருவச் சூழ்நிலையின் சிறப்பையும் பற்றி உதவியாளர்கள் உரைக்கக் கேட்ட கலெக்டர் சல்லிவானின் உள்ளத்தில் அதனைத் தானும் காண வேண்டும் என்ற ஆசைக் கனல் மூண்டது.

## கடமையை மறந்த கலெக்டர்!

1818 ஆம்-ஆண்டில் கோவையின் கலெக்டராகப் பொறுப்பேற்றவர் சல்லிவான் என்ற ஆங்கிலேயர். அவர்,ஆங்கிலேயர் ஆரோக்கியமுடன் வாழ நீலமலையே சிறந்த இடம் என்ற முடிவுக்கு வந்தார்.

அவர் 1833-ஆம் ஆண்டு உதகையில் ஏக்கர் ஒரு ரூபாய் வீதம் தோதவர்களிடமிருந்து நூறு ஏக்கர் நிலம் வாங்கினார். அங்கு உதகமண்டலத்திலேயே முதன் முறையாகக் கட்டடம் எழுப்பினார். உதகையை விட்டுப் பிரிய மனமின்றி அங்கிருந்து கொண்டே கோவையை நிர்வகிக்கத் தொடங்கினார். அவரைத் தொடர்ந்து ஆங்கிலேய அதிகாரிகள் பலர் உதகையில் குடியேறினர்.

1835 ஜனவரியில் அவர் ரெவின்யூ போர்டு உறுப்பினரானார். 1836-ல் கவுன்சில் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 1841 மே திங்களில் ஓய்வு பெற்றார். தன் பதவிக் காலத்தில் உதகையின் உயர்வுக்காக ஓய்வின்றி உழைத்த சல்லிவான் சிறந்த தோட்டக்கலை வல்லுநர்; விவசாயத்தில் ஆர்வம் மிக்கவர். தன்னுடைய சொந்தச் செலவில் இங்கிலாந்தில் ஓர் தோட்டக்கலை நிபுணரை வரவழைத்துத் தன் தாயகத்திலிருந்தும் தென்னாப்பிரிக்காவிலிருந்தும் கொணர்ந்த பழம் தரும் மரங்களையும் காய்கறிச் செடிகளையும் அவர் உதகையில் பயிரிட்டார்.

இன்று உதகையில் வானுற வளர்ந்திருக்கும் மரங்களில் பல, சல்லிவான் காலத்தில் திட்டமிடப்பட்டவை. உயர்தர ஆப்பிள், பீச், ஸ்ட்ராபெர்ரி வகைகளும் எண்ணற்ற புதிய ரோசாச் செடிகளும் அவரால் உதகையில் அறிமுகப்படுத்தப்பட்டன. சல்லிவான் கொண்டு வந்த வீரியம் மிகுந்த பார்லி வகையை இன்னும் நீலகிரியில் சல்லிவான் காங்கி ( sallivan gangi ) என்றழைக்கின்றனர்.

சிறுமுகையிலிருந்து ( siru mugai ) உதகைக்குச் செல்லும் பழையபாதை ஒன்று சல்லிவான் அவர்களால் செப்பனிடப்பட்டது.

இன்று உதகையில் உள்ள உல்லாச ஏரி சல்லிவான் அவர்களால் அமைக்கப்பட்டது தான். உதகையை உருவாக்கியவர் சல்லிவான்! உலகம் போற்றும் நிலைக்கு அதனை உயர்த்தியவர் சல்லிவான்! உதகையின் சூழ்நிலையில் ஏங்கி அங்கேயே தம் காலத்தின் பெரும் பகுதியைக் கழித்ததனால் கோவையை நிர்வகிக்கும் கடமையை மறந்தவர் என்ற பழியையும் சுமந்தவர் சல்லிவான்!

## கலெக்டர் கட்டிய கல் பங்களா!

உதகையில் தொடர்ந்து வாழ நினைத்த சல்லிவான் 1822-ஆம் ஆண்டு ஏப்ரலில் கட்டத் துவங்கிய மாளிகைக்கு '' கல் பங்களா '' என்று பெயர். முழுதும் கருங்கற்களினாலேயே அது கட்டப்பட்டது. அதற்கான கற்கள் எங்கிருந்து

---

# வெண்பாப் போட்டி-25

ஈற்றடி : யாரைநாம் போற்றிடுதல் ஈங்கு

முடிவு நாள் : 2—1—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),

"தமிழரசு" அலுவலகம்,

அரசினர் தோட்டம்,

சென்னை-2.

குறிப்பு—நேரிசை வெண்பாக்களே அனுப்பப் பெற வேண்டும். அஞ்சல் அட்டையிலேயே எழுதி அனுப்புதல் வேண்டும்.

கொண்டுவரப்பட்டன என்பது இன்றளவும் தெரியாமலேயே இருந்து வருகிறது.

1823 முதல் 1827 வரை கல் பங்களாவில் வாழ்ந்த சல்லிவான் பின்னர் அரசினருக்கு மாளிகையை அளித்து, மாதம் ரூ. 490 வாடகையாகப் பெற்ருர். 1846-ஆம் ஆண்டு ஒரு மேஜருக்கு விற்ருர். பின்னர் அது பல கரங்களுக்கு மாறியது. ஒரு முறை ‘கல் பங்களா’ பள்ளிக்கூடமாக இருந்த பொழுது அங்கு டாக்டர் ஜி. யு. போப் முதல்வராகப் பணியாற்றியிருக்கிருர். இறுதியில் 1869-ல் பொதுப்பணித்துறை அதனை ஏற்றது. இன்று கல் பங்களா, அரசினர் கல்லூரியாக இருக்கிறது.

கல் பங்களாவின் பெரும் பகுதி சல்லிவான் கட்டியது போலவே இன்றும் இருக்கிறது. எனினும் ஆயிரக்கணக்கில் செலவழித்து அரசினர் சிறு மாற்றங்களைச் செய்திருக்கின்றனர். பங்களாவினை அடுத்துப் பல புதிய கட்டடங்களை எழுப்பியுள்ளனர்.

கல் பங்களாவுக்குப் பக்கத்திலிருக்கும் மணிக்கூண்டு 1,700 ரூபாய் செலவில் 1878-ஆம் ஆண்டு அரசினரால் கட்டப்பட்டதாகும்.

கல் பங்களாவுக்கு அருகே நெடிதுயர்ந்து நிற்கும் கருவாலி மரம் ( OAK ) சல்லிவான் அவர்களால் நடப்பட்டது. அவர் நினைவாக இன்னும் அது ‘‘சல்லிவான் ஓக்’’ என்று அழைக்கப்படுகிறது.

### ஓரே பெயர்; பல கதை

1821-ஆம் ஆண்டு கலெக்டர் சல்லிவான் முதன்முதலில் வந்து இறங்கிய இடத்தில் மந்து ஒன்று இருந்ததாம். மந்து என்பது தோதவர் வாழும் கிராமத்திற்குப் பெயர். அதற்கு அருகே ‘ஒற்றைக்கல்’ ஒன்று இருந்ததால் அது ஒற்றைக்கல் மந்து என்று அழைக்கப்பட்டதாம். சல்லிவான் கல் பங்களாவைக் கட்டிய இடம்தான் அந்த‘ஒத்தக்கல் மந்து’. அதுவே ‘மருவி ‘‘ஒத்தகமந்து’’ ஆனது என்பது உதக மண்டலத்தின் பெயரைப் பற்றிப் பொதுவாகத் தரப்படும் விளக்கமாகும்.

தமிழரசு
சந்தா
ஓர் ஆண்டு ரூ. 8.00
அரை ஆண்டு ரூ. 4.00
தனிப்பிரதி 35 காசுகள்
விவரங்களுக்கு
நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை - 2

ஒட்டை என்ருல் மூங்கில் என்று பொருள். மூங்கில் புதர்களும் சோலைகளும் நெருங்கி வளர்ந்து உள்ள இடமாதலால் ஒட்டைகாய் ‘மந்து’ என்பது ஒத்தகமந்து வாயிற்று என்பது ஒரு சிலரின் வாதம்.

பக்த்மத் எனப்பட்ட தோதவர் கிராமம் படகர்களால் ‘ஒத்தக மந்து’ எனத் திரித்துக் கூறப்பட்டது என்பது சிலரின் கருத்து. காண வருவோருக்கெல்லாம், மகிழ்ச்சியை ஊட்டி வளர்ப்பதால் ‘‘ஊட்டி’’ எனப் பெயர் பெற்றது என்பது உல்லாசப் பயணத்திற்காக உதகை வந்த பள்ளிச் சிறுவன் ஒருவனின் ஆராய்ச்சி!

### உல்லாச ஏரி உருவான விதம்

இரண்டு மலைத் தொடர்களின் முனைகளுக்கும் இடையே சிறியதோர் அணையைக் கட்டி 1823-ஆம் ஆண்டில் கலெக்டர் சல்லிவான் அவற்றை இணைத்தார். அதன் விளைவாக ஆறு அல்லது ஏழு மலைகளில் பிறந்து வந்த அருவிகள், இரண்டு மைல் நீளத்திற்கும் பசிய மலைகள் நடுவே பாம்பு போன்றதோர் ஏரியாக நெளிந்தன. எழுநூறு கஜம் அகலம் கொண்ட ஏரி உதகையின் எழிலுக்கு எழில் சேர்த்தது. 1830-ஆம் ஆண்டி உதகை ஏரியில் உல்லாசப் படகு விட்டு மகிழ்ந்திருக்கிருர்.

பெருமழையின் விளைவாக ஏரி உடைத்துக்கொண்டதால் 1831-ஆம் ஆண்டில் அணை மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. ‘வில்லோ பண்ட்’ என வழங்கும் இடைக்கரைப்பாதையும் அமைக்கப்பட்டது.

ஏரியை மேலும் விரிவுப்படுத்தி அணையை உயர்த்தி, நீலகிரி, மைசூர் கிராமங்களின் நிலங்களின் பாசனத்திற்கு ஏரியின் நீரைப் பயன்படுத்தும் திட்டம் ஒன்றும் இருந்தது. ஈரோட்டில் உள்ள நிலங்களுக்கு உதகை ஏரியிலிருந்து நீர் வேண்டும் என்று தாசில்தார் 1829–ஆம் ஆண்டு விண்ணப்பம் செய்திருந்தார். ஆனல் செலவினைக் கருதி அத்தகைய திட்டம் ஆரம்பத்திலேயே கைவிடப்பட்டது. இடைக்கரைப் பாதைக்குக் கிழக்கே தேங்கி உள்ள நீர் நாற்றமெடுக்க ஆரம்பித்தது. மலேரியா கொசுக்களின் பிறப்பிடமாகி உதகையில் நோய்கள் பரவக் காரணமாயிற்று. இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் ஏரியின் அந்தப் பகுதி சென்ற நூற்ருண்டின் இறுதியில் மூடப்பட்டது. உள்ளூரில் அதற்குத் தேவையான ஆட்கள் கிடைக்காமல் தினந்தோறும் ஐந்நூறு பேருக்கு மேற்பட்ட சிப்பாய்கள் ஏரியின் மேற்பகுதியைத் தூர்க்கும் பணியைச் செய்தனர்.

1849–50ல் ஆஸ்திரேலியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட 20,000 வேல மரங்கள் ஏரியின் கரைகளில் நடப்பட்டன. பாதுகாப்பு இன்மையாலும், ஆடுகளின் ‘கவனிப்பினலும்’ 1854-ஆம் ஆண்டு 154 செடிகள்தாம் எஞ்சியிருந்தன ! 1888-ல் 26,150 ரூபாய் செலவில் ஏரிக் கரைகள் செப்பனிடப்பட்டு அழகுமிக்க செடிகள் வளர்க்கப்பட்டன. ஐரோப்பாவிலிருந்து உயிருடன் கொண்டு வரப்பட்ட மீன் வகைகள் ஏரியில் விடப்பட்டன.

இன்று ஆண்டுக்கு ஆண்டு அரசின் முயற்சியில் ஏரி புத்தெழில் பெற்று வருகிறது. உதகை வரும் உல்லாசப் பயணிகள் எல்லாரும் ‘‘விரும்பும் இட

ரும் அவர்தம் தோள் தழுவிய கணவரும் தோணிகள் ஓட்டி விளையாடி வரும் நீர்நிலையாக உதகை ஏரி புகழ் பெற்று விளங்குகிறது.

## உதகைக் குளிரின் பெருமை

'' பெரியதோர் கோட்டு அணிந்து உடலை மூடியிருக்கிறேன். ஆனாலும் பேனாவைப் பிடிக்க முடியாமல் என் கரங்கள் நடுங்குகின்றன. சமவெளியில் இருந்தபொழுது போர்வை ஏதும் இல்லாமலேயே நான் உறங்கியதுண்டு. ஆனால் உதகையிலோ, போர்வையும் அதற்கு மேல் ஆங்கிலக் கம்பளியும், அதற்கும் மேலே இரண்டு மெல்லிய மெத்தைகளையும் போட்டுக் கொள்ளுகிறேன். சுமைதான் அமுத்துகிறதே தவிர குளிர் குறையக் காணேன் '' என்றார் சென்னை கவர்னராக இருந்த சர் தாமஸ் மன்ரோ. உதகைக் குளிரின் பெருமைக்குச் சான்று வேறென்ன வேண்டும் !

## ஆங்கிலேயரின் மோகம்

கலெக்டர் சல்லிவானுக்குப் பிறகு ஆங்கிலேய அதிகாரிகள் பலர் உதகைக்குப் படையெடுத்தனர் !

இருவரைத் தவிர, சென்னை மாநிலத்தை ஆளவந்த கவர்னர்கள் அனைவருமே உதகைக்கு வந்திருக்கின்றனர். அங்கு சிறு வீடுகளைக் கட்டி அதிகமான வாடகைக்கு விட்டுப் பெரும் பொருள் ஈட்டிய அதிகாரிகள் பலர் உண்டு. 38,000 ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஒரு வீட்டிற்கு வருடத்திற்கு 20,000 ரூபாய் வாடகையாகக் கிடைத்ததாம்.

1829-ஆம் ஆண்டு பல்லக்கில் ஏறி உதகைக்கு வந்த லார்டு வாஷிங்டன் வீடுகளுக்கு விதிக்கப்பட்ட வாடகையை அறிந்து கோபம் கொண்டார். அதிகாரிகளின் இந்தச் செயலைத் தடுக்க உத்தரவிட்டார்.

கூடலூர் வழியாக இடர்ப்பாடுகள் மிகுந்த செங்குத்தான நெல்லித்துறையிலிருந்து புதிய மலைப்பாதையை அமைக்கவும் ஆணையிட்டார். 1832-ஆம் ஆண்டு மலைப்பாதை வெட்டும் வேலை தொடங்கியது.

லார்டு எல்பின்ஸ்டன் என்ற கவர்னர் '' தேக நிலை '' கருதி உதகைக்குச் சென்றபோது தன்னுடன் 13 பேர்களடங்கிய பரிவாரத்தையும் அழைத்துக் கொண்டு சென்றார். இது தலைமை அரசாங்கத்திற்குச் சினத்தை யூட்டியது. '' தலை நகரான சென்னையிலிருந்து அத்துணைத் தூரத்தே மாகாணத்தின் அரசாங்கம் செல்வது உசிதமல்ல; உடனே திரும்புக'' என்ற உத்தரவு பறந்தது.

உதகைக்கும் கோத்தகிரிக்கும் இடையே சாலை அமைத்தார் லார்டு டிவீட்டேல் ( Lord Tweeddale) என்ற கவர்னர். அங்குப் பொதுப் பூங்கா அமைக்கும் முயற்சிக்கும் பெரும் ஆதரவு அளித்தார் அவர்.

சர் சார்லஸ் டிரிவெல்யான் (Sir Charles Trevelyan) என்ற கவர்னருக்கு, உதகைக்கு '' விக்டோரியா '' என்று பெயர் வைக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் அது நிறைவேறாமலே போய்விட்டது

லார்டு வில்லியம் பெண்டிங்க், டல்ஹௌஸி, லார்ட் லிட்டன் லார்ட் கர்சன் போன்ற கவர்னர் ஜெனரல்களும், வைசிராய்களும் உதகைக்கு வந்து அளவற்ற ஆனந்தம் அடைந்திருக்கின்றனர்.

### முதல் நாவல்

தமிழ்நாட்டில் தோன்றிய முதல் நாவல் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் எழுதி 1876-ல் வெளியிட்ட பிரதாப முதலியார் சரித்திரம்.

பொழுதில் முதன் முறையாக நான் உதகையைக் கண்டேன். உதகை என்னும் உவகை ஊற்றில் மூழ்கி எழுந்தோர் அதனைப் பற்றிப் பெரிதும் புகழ்பாடக் கேட்டிருக்கிறேன். ஆனால் எல்லா வகையிலும் அவர்கள் உரைத்ததைவிட எழில் மிக்கதாக உதகை இருப்பதைக் கண்டேன். இன்று மாலைப் பொழுதில் மழை பொழிந்தது. ஆனால்; எத்தனை அழகான ஆங்கில மழை ! எவ்வளவு சுவையான ஆங்கிலச் சேறு! இங்கிலாந்து, ஸ்காட்லாந்தின் அழகுள்ள பகுதிகளெல்லாம் இங்கு ஒரு சேர உள்ளனவோ என்ற மலைப்பு ஏற்படுகிறது. ! கண்ணே ! உதகை ஒரு சொர்க்கம் தான் என்பதற்கு அட்டியில்லை !''

—என்று தன் மனைவிக்கு எழுதிக் குறிப்பிட்டார் லிட்டன் பிரபு.

கர்சன் பிரபு வந்தபோது தோதர்கள் பாடியும் ஆடியும் வரவேற்றனர். '' சென்றேன், கண்டேன், வென்றேன் '' என்பது சீஸரின் வாக்கு அல்லவா ! மூன்று நாட்களுக்குப் பிறகு உதகைப் பொது மக்களிடமிருந்து விடைபெற்ற கர்சன் பிரபு சொன்னார் !

'' நான் உதகைக்கு வந்தேன்; கண்டேன்; வெல்லப்பட்டேன்!''

1869-ஆம் ஆண்டில் உதகையைக் காணவந்த சென்னை கவர்னர் நேப்பியர் பிரபு கோடைக் காலந்தோறும் சென்னை அரசாங்கம் உதகையில் இயங்கலாம் என்று எண்ணினார். 1870-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் உதகை வந்த அரசாங்கம் செப்டம்பர் இறுதியில்தான் திரும்பியது. அதற்காக ஏற்பட்ட செலவு ரூ. 7,016—14—11 ஆகும்.

ஆண்டுதோறும் அரசாங்கம் கோடையில் உதகையில் இயங்கும் இந்த வழக்கம் தொடர்ந்தது. 1937-ல் திரு சி. இராசகோபாலாச்சாரியார் தலைமையில் முதல் காங்கிரஸ் அமைச்சரவை அமைந்தபோதுதான் இது நிறுத்தப்பட்டது.




மக்களுடன் தொடர்பு கொண்டு, குறைகளை அறிந்து அவற்றைக் களைவதற்கான மனு நீதித் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் எல்லா வட்டங்களுக்கும் திங்கள்தோறும் அலுவலர் குழு சென்று பார்வையிடும் ஏற்பாடு 1969 செப்டம்பரிலிருந்து கடைப்பிடிக்கப் பட்டு வருகின்றது. சம்பந்தப் பட்ட வட்டத்தின் டிப்டி தாசில்தார், பொதுப்பணித் துறை, மின்சாரத் துறை, வனத்துறை அலுவலர்கள், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய விரிவினை அலுவலர் ஒருவர் ஆகியோர் அக் குழுவில் இடம் பெறுகின்றனர். உடனடியாகத் தீர்வு காணக் கூடிய மனுக்கள் குறித்து அங்கேயே தீர்வு காண்பதும், மற்ற மனுக்கள், உரிய நடவடிக்கைக்காக அந்தந்தத் துறைகளுக்கு அனுப்பப் பெறுவதும் நடைமுறையாகும். இந்தத் திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் மூன்று வட்டங்களிலும் உள்ள கிராமங்கள் அனைத்தும் 1970 மே மாதத்துக்குள் பார்வையிடப் பெற்றன.

இரண்டாவது ஆண்டிலும் அலுவலர்கள் மக்களுடன் தொடர்பு கொண்டு மனுக்களைப் பெற்றுத் தீர்வு காணும் அலுவல் 1970 செப்டம்பரில் தொடங்கியது. 1971 மே மாதத்துக்குள் 55 கிராமங்களிலும் இப் பணி முடிவு பெற்றது. மூன்றும் ஆண்டில் இந்த மக்கள் தொடர்புப் பணி 1971 செப்டம்பரில் தொடங்கப் பெற்று, மொத்தம் உள்ள 55 கிராமங்களில் 1971 அக்டோபர் முடிய, 18 கிராமங்களுக்கு அலுவலர் குழு சென்று வந்தது. இப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

அலுவலர்கள் குழுவிடம் மக்கள் அளித்த மனுக்கள், உடனடியாக அதே இடத்தில் தீர்வு காணப்பட்டவை, பின்னர் தீர்வுகாணப்பட்டவை, ஏற்கப் பட்ட கோரிக்கைகள், மறுக்கப் பட்டவை இன்னும் தீர்வு காணுமல் இருப்பவை பற்றிய விவரங்களைக் கீழே காணலாம்.

1969-ஆம் ஆண்டு பெறப் பட்ட மனுக்கள் 1838. அவற்றிற்கு உடனே அதே இடத்தில் தீர்வு காணப்பட்டவை 82 மனுக்கள். ஏற்றுக்கொள்ளப் பட்டன. 502 நிராகரிக்கப் பட்டன. பின்னர் 110 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. 839 நிராகரிக்கப்பட்டன. மற்றத் துறைகளுக்கு 272 மனுக்கள் அனுப்பப்பட்டன. இன்னும் 33 மனுக்கள் தீர்ப்பாகாமல் உள்ளன.

1970-ஆம் ஆண்டு பெறப் பட்ட மொத்த மனுக்கள் 477. அவற்றிற்கு உடனே அதே இடத்தில் தீர்வு காணப்பட்டது. 9 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டன. 88 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. பின்னர் 76 மனுக்கள் எற்றுக்கொள்ளப் பட்டன. 125 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. மற்றத் துறைகளுக்கு 143 மனுக்கள் அனுப்பப் பட்டன. இன்னும் 36 மனுக்கள் தீர்ப்பாகாமல் உள்ளன.

1971-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் வரை 41 மனுக்கள் பெறப்பட்டன. அதே இடத் [illegible] பட்டது. மற்றத் துறைகளுக்கு 14 மனுக்கள் அனுப்பப்பட்டன. 19 மனுக்கள் நிராகரிக்கப் பட்டன. பின்னர், 1 மனு ஏற்றுக் கொள்ளப்பட்டது. 7 மனுக்கள் தீர்ப்பாகாமல் இன்னும் உள்ளன.

1971-ஆம் ஆண்டு எப்ரல், மே மாதங்களில் மொத்தம் 65 மனுக்கள் பெறப்பட்டன. அவைகளுக்கு அதே இடத்தில் தீர்வு காணப்பட்டது. 1 மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது. 5 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. மற்றத் துறைகளுக்கு 32 மனுக்கள் அனுப்பப்பட்டன. இன்னும் தீர்ப்பாகாமல் இருப்பவை 27 மனுக்கள்.

1971-ஆம் ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் மொத்தம் 131 மனுக்கள் வந்தன. அவற்றிற்கு அதே இடத்தில் தீர்வு காணப்பட்டது. மற்றத் துறைகளுக்கு 18 மனுக்கள் அனுப்பப்பட்டன. 1 மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது. 45 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. 67 மனுக்கள் இன்னும் தீர்ப் பாகாமல் இருக்கின்றன.

மனுக்கள் பெரும்பாலும் நில ஒதுக்கீடு, சாலை வசதிகள், மனை இடங்கள், குடிநீர் வசதி, கல்வி வசதி பற்றியவையாகும்.

நீலகிரி மாவட்டத்தில் வழங்கப்பட்ட மனை நிலப் பட்டாக்கள் கடைசியாக உள்ள நிலவரம் :—

| | | |
|---|---|---|
| 1. | உதகமண்டலம் வட்டத்தில் வழங்கப் பட்டவை | 281 |
| 2. | குன்னூர் வட்டத்தில் வழங்கப்பட்டவை | 606 |
| 3. | கூடலூர் வட்டத்தில் வழங்கப்பட்டவை | 87 |
| | மொத்தம் .. | 974 |

## பள்ளிகளுக்கு வசதி

மாவட்டத்தில் 1971 ஜூலையிலிருந்து 1971 செப்டம்பர் வரை கீழ்க்கண்ட வேலைத் திட்டங்கள் செயல்படுத்துவதற்காக மேற் கொள்ளப்பட்டுள்ளன :—

குஞ்சபானை, ஜகனரி கிராமங்களில் பழங்குடியினருக்கான தங்கிப் படிக்கும் பள்ளிக் கட்டடங்

ஆசிரியர் குடியிருப்பு களுக்கும் மின் வசதி அமைப்பு.

கூடலூர் வட்டம் கப்பாலா வில் பழங்குடியினருக்கான தங்கிப்படிக்கும் பள்ளிக்கு மின் வசதி, எலமன்னு கிராமத்தில் பழங்குடியினருக்கான தங்கிப் படிக்கும் பள்ளிக்குக் குடிநீர்க் கிணறு அமைப்பு.

## குடிநீர்க் கிணறுகள்

ஆனைக்கால்மண்டு பழங்குடி யினர் குடியிருப்பில் புதுக் குடி நீர்க் கிணறு அமைப்பு; வாழைத் தோட்டம் பழங்குடி யினர் குடியிருப்பில் புதுக் குடி நீர்க் கிணறு அமைப்பு; முத்த நாடுமண்டால் கிணற்றில் தூர் எடுப்பு இறைவைக் கிணறு அமைப்பு.

கோத்தகிரி மாதிரி கிராமத் தில் சாலையில் சிறுபாலம் அமைப்பு; இதே கிராமத்தில் நீர்த்தொட்டியும் பம்பு செட்டும் அமைப்பு;

## புதிய சாலைகள்

திரிச்சிகுடியில் உள்ள பழங்குடியினருக்கான தங்கிப் படிக்கும் பள்ளிக்குச் சாலை அமைப்பு; நஞ்சநாடு கிராமத் தில் தக்கர் பாபா குருகுலத் துக்குச் சாலை அமைப்பு; நெல்லி யாளம் பழங்குடியினர் குடி யிருப்புக்கும் பள்ளிக்கும் சாலை அமைப்பு;

குறும்பர் பள்ளம், சக்கநள்ளி ஆகியவைகளில் பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள கிணறுகளை மேலும் ஆழப் படுத்தும் பணிகள்; குந்தே கோடுமண்டு பழங்குடியினர் குடியிருப்புச் சாலை அமைப்பு; பொக்குபுரம் பழங்குடியினர் தங்கிப் படிக்கும் பள்ளி பழுது பார்க்கும் பணிகள்; தாரநாடு மண்டில் பழங்குடியினர் குடி யிருப்புக்கு படிக்கட்டுத் தடம் அமைத்தல் ஆகியன.

## நன்னிலை எய்தப் பலமுனைப் பணி

தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மக்கள் சமநீதியும், சரிசம வாய்ப்பும் பெற்று முன்னேற்றம் காண வேண்டு மென்பதற்காக நீலகிரி மாவட் டத்தில் பல்வேறு துறைகளிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

மாவட்டத்தில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களில் ஆதி திராவிடர், ஆதி கர்னுடிகள், சக்கிலியர், அருந்ததியர், பள் ளர், பறையர் ஆகியோர் குறிப் பிடத்தக்க இனத்தவராவர்.

மாவட்டத்தில் அரிசன முன்னேற்றத்திற்காக அரசினர் பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளனர்.

கல்வித் துறையில் அரிசன நலத்துறை இவர்களுக்காகப் பதினொரு தங்கும் விடுதிகளை நடத்தி வருகின்றது. தனிப் பட்டவர்களால் நடத்தப்பட்டு வரும் நான்கு விடுதிகளுக்கு மானியம் வழங்கி வருகிறது. வினோபா நகரிலும், கோபால புரத்திலும் இம்மக்களின் குடும்ப நலம் கருதி இரு சமுதாய நிலையங்கள் நடைபெற்று வரு கின்றன. இவை தீண்டாமை அகற்றவும், மாறுபாடில்லா மனத்துடன் கூடி வாழவும், உதவுவதுடன் குழந்தைகள் நலத்தையும் பேணிவருகின்றன. இந்நிலையங்களுக்கு வானொலிப் பெட்டி, விளையாட்டுப் பொருள் கள், முதலுதவிப் பெட்டிகள், இசைக்கருவிகள் போன்றவை வழங்கப்படுகின்றன. அன்றி யும் செய்தித் தாள்களும், மாத வார இதழ்கள் போன்ற அறிவு வளர்க்கும் பத்திரிகைகளும் அளிக்கப்படுகின்றன.

அரிசன நலத்துறை 4 பள்ளி களையும் மலைச்சாதியினர் தங்கிப் படிக்கும் 21 பள்ளிகளையும் நடத்தி வருகிறது.

## உதவித் தொகை

பள்ளிகளில் பயிலும் அரிசனப் பிள்ளைகளுக்கு அரசு தாராள மாக உபகாரச் சம்பளம் உதவி வருகிறது. ஆண்டுக்கொருமுறை முதற் படிவம் முதல் 5-ஆம் படி வம் வரை பயிலும் மாணவர்க்கு அரசாங்கம் உடைகள் வழங்கு கிறது. அரசினர் பெண்கள் விடுதிகளில் இருக்கும் மாணவி கட்கும் ஆண்டுக்கு நான்கு உடைகள் கொடுக்கப்படுகின் றன.

பழங்குடி மக்கள் தங்கிப் பயிலும் பள்ளிகளில் உள்ள பிள்ளைகட்கும் அரிசன நலப் பள்ளிகளில் பயிலும் குழந்தை கட்கும் புத்தகங்களும் எழுது பலகையும் அளிக்கப்படுகின்றன.

## பொருளாதார நிலை

ஏழை அரிசனங்களுக்கு இல்லங் களைக் கட்டி அரசு வழங்குகிறது. வீடில்லா அரிசனங்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் கொடுத் துள்ளது. இதுவரையும் 1,655 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அரிசன மக்களுக்கு இதுவரை 2,162 வீடுகட்டும் மனைகள் வழங்கப்பட்டிக்கின்றன. ஒவ் வொரு கிராமத்திலும் வாழும் அரிசன மக்களுக்கு வீட்டு மனைகள் அளிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. பயி ரிடுவதற்குரிய நிலங்களும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. தொழில் துறைகளில் பயிற்சி பெற்றவர்க்கு அவ்வத் துறை களில் தொழிலாற்றுவதற்கு வேண்டிய கருவிகள் முதலியன ஆண்டு தோறும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. உதவி பெறத் தக்கவர்க்கு வீடுகட்டும் பொருட்டுக் கடனுதவி செய்யப் படுகிறது. சிறு தொழில்- வியாபாரம் தொடங்க வட்டி யில்லாக் கடனும் வழங்கப் படுகிறது.

## நல்வாழ்வு

அரிசன மக்கள் சுகாதார நல்வாழ்வுக்குச் செய்யப்பட்ட பணிகளுள் சிறப்பாகக் குறிப் பிடத்தக்கது அவர்கள் குடி யிருப்புகளிலே குடிநீர் பெற வசதி செய்ததைச் சொல்ல வேண்டும். இது தவிர, சாலைகள், பாதைகள், கழிநீர், வடிகால் கள், கண்மாய்கள், சிறுபாலங் கள், குளிக்கும் அறை போன்ற வசதிகளும் செய்து கொடுக்கப் பட்டிருக்கின்றன.

43அரிசனக் குடியிருப்புக்களில் இதுவரை 27 குடியிருப்பு களுக்கு மின்சார வசதி அளிக்கப் பட்டிருக்கிறது.

## வேளாண்மை

ஏர்த் தொழிலுக்குரிய எருது கள், விதைகள், எரு உரம் முதலியனவும் அரிசனங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன.

அரிசன மக்கள் முன்னேற்றத் திற்கான திட்டங்கள் பல அடிக்கடி மாவட்ட மாநில அள வில் விவாதிக்கப்பட்டு நிறை வேற்றப்படுகின்றன.

# தமிழ்நாடு அரசின் திட்டம் தென் ஆசியா முழுமைக்கும்
# பெருமை அளிக்கும்





## உலகவங்கியின் துணை இயக்குநர் கிரிகோரி வோட்டா கூறுகிறார்

''தமிழ்நாடு அரசின் குடிசை மாற்றும் பணிகள் ஆசிய நாடுகள் முழுமைக்கும் பெருமை அளிக்கக் கூடியதாகும்.

''உலகத்தின் மறுபக்கத்திலிருந்து இந்த வேலையைப் பற்றி-தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் பணிகளைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இப்போது அப் பணிகளை எனது கண்களால் கண்டு களித்தமையால் பெரிதும் மகிழ்கிறேன்.

''சமூக நீதியில் அக்கறை கொண்டுள்ள எங்கள் அனைவருக்கும் இந்தப் பணி ஊக்கம் அளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

''கிழக்காசிய நாடு அனைத்திலும் இந்தத் திட்டத்தைப் பரப்ப நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

''தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் தொடர்ந்த வெற்றிக்கு என் வாழ்த்துக்கள்''

—இப்படிக் கூறியவர் யார் தெரியுமா? வாஷிங்டனிலிருந்து வந்திருந்த உலக வங்கியின் தென் ஆசிய துணை இயக்குநர் திரு. கிரிகோரி வோட்டா.

கடந்த 27-11-'71 அன்று சென்னை மாநகரிலுள்ள பல்வேறு குடிசைப் பகுதிகளுக்குக் குடிசை மாற்று வாரியத் தலைமைப் பொறியாளர், மற்றும் அலுவலர்களுடன் சென்று பார்வையிட்டார். அப்பகுதிகளில் குடிசைகளை மாற்றி, மாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டங்களைக் கண்டு, சாதனைகளைக் கேட்டறிந்து தமது மகிழ்ச்சியினைத் தெரிவித்தபோதுதான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.





தமிழ்நாடு
கதர்ப்பட்டு
விற்பனை
10 சதவிகிதம்
தள்ளுபடி
கொடுக்கப்படும்
உங்கள் தேவைக்கு
கதர் கிராமத்தொழில்
விற்பனை
நிலையங்களுக்கு
வருகை தாருங்கள்

# திருமதி பில்ஜெயின் சொல்கிறார்...

நாகரிகம் என்றால் என்ன ?''

கருத்துச், சுருண்ட கூந்தலும், செக்கச் சிவந்த நிறமும், நம்பிக்கை ஒளி விடும் விழிகளும், ஆங்கிலமும் தமிழும் சரளமாக அலை புரளும் இதழ்களுமாக நம் முன்னால் நிற்கின்ற ஒரு பெண்மணி தான் இப்படி ஒரு வினாவை எழுப்புகிறார்.

அதற்கான விடையும் அவரிடத்திலிருந்தே வருகிறது.

'' அன்பை, அறநெறியைப் போற்றவேண்டும் ; பொறாமை பொச்சரவு இருத்தல் கூடாது! எல்லாருக்கும் எல்லாம் என்றிருப்பதான முறை வேண்டும். இருப்போர் இல்லாதாருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்; இந்தக் குணங்களைப் பெற்றதுதான் நாகரிகம் மிகுந்த சமுதாயம். அப்படிப் பார்க்கும் பொழுது, தோதவர் இனம்தான் உலகிலேயே மிகவும் நாகரிகம் மிக்க சமுதாயம் என்பேன் ''.

திருமதி பில்ஜெயின் (Piljain) அவர்களின் பேச்சிலுள்ள அழுத்தமான உண்மை நம்மை அதிசயிக்க வைக்கிறது !

திருமதி பில்ஜெயினைப் பார்ப்பவர்கள், பிற்போக்கு மிக்க சமுதாயப் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கும் தோதவர்களின் பிரதிநிதியா இவர் என்று பலர் ஆச்சரியப்படுவர். அவரது தோற்றமும் பேச்சும் உரையாடுவோரின் உள்ளத்தில் தோதவர்களைப் பற்றிய உயர்ந்த எண்ணத்தை உருவாக்கிவிடும்.

இவாம் பில்ஜெயின் இளம்வயதில், பள்ளி நாட்களில், ஒருமுறை பிளாரன்ஸ் நைட்டிங்கேள் பாத்திரத்தை ஏற்றார். அவளைப் போலத் தானும் கதியற்றவர்களுக்குத் தன்னலமற்ற சேவை புரியவேண்டுமென்னும் இலட்சியம் இவாமின் மனத்தில் அன்றே பதிந்து விட்டது.

கிறித்துவ மிஷனின் உதவியாலும், அரசினர் ஆதரவாலும், அவர் வேலூரிலும், டெல்லியிலும் உள்ள கல்லூரிகளில் மருத்துவ உதவியாளர் (Nursery and Midwifery) பயிற்சி பெற்றார். பின்னர் இங்கிலாந்தில் உள்ள செயின்ட் பால் மருத்துவ மனையிலும், மருத்துவ உதவி யாளருக்கான புகழ் பெற்ற மருத்துவக் கல்லூரி ஒன்றிலும் மேலும் பயிற்சி பெற்றார்.

அவருடைய பயிற்சியின் பயனைத் துய்க்கப் பல நிறுவனங்கள் முன்வந்தன. அவற்றில் உலகச் சுகாதார நிறுவனம் (W.H.O.) ஒன்று. இதனை எண்ணி அவர் மகிழ்ந்திருக்கையில் இடிபோன்ற சேதி ஒன்று தாயகத்திலிருந்து கிடைத்தது. 1939-ஆம் ஆண்டு தோதவர்களின் வாழ்க்கைநிலையை ஆராய்ந்த கிரேக்க இளவரசர் பீட்டர் மீண்டும் 1949-ஆம் ஆண்டு அத்தகைய முயற்சியில் ஈடுபட்டிருந்தார். தோதவர்களின் எண்ணிக்கையில் பெரும் சரிவு ஏற்பட்டதை உணர்ந்தார் அவர். இதற்குக் காரணம், தோதவர்களின் இல்வாழ்க்கை முறையில், தோதவர் பெண்களில் 20 சதவிதம் பேர் மலடுகளாக இருப்பதாகும். ஆண்களில் பெரும்பாலோர் சிபிலிஸ், கொனேரியா போன்ற கொடிய நோய்களுக்கு ஆட்பட்டு அல்லலுறுவதும்தான் என்று கண்டறிந்தார். இவற்றைச் சீர்செய்ய அரசு உடனடியாக முன் வராவிடில் தொன்மையும் சிறப்பும் வாய்ந்த தோதவர் குலம் விரைவில் பூண்டற்றுப் போய்விடும் என்று எச்சரித்தார் பீட்டர்.



பீட்டரின் அறிக்கையைக் கண்ணுற்ற பில்ஜெயினின் நெஞ்சம், தான் பிறந்த இனத்தின் அவல நிலையை எண்ணிக் குமுறியது. அவர் இரவு பகல் ஊண், உறக்க மின்றித் துடித்தார். தான் பணி புரிய வேண்டிய இடம்

TIDCO

# தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்

(தமிழ்நாடு அரசுக்கு உரியது)

150-A, அண்ணா சாலை, மத்திய நூலகக் கட்டிடம், சென்னை-2.

(நிறுவனத்தின் நெறியாளர் குழுவினரால் 26-10-71ல் ஏற்கப்பெற்ற விளம்பரத்தின் வாசகம்)

நிறுவப் பெற்ற தேதி : 21-5-1965

பதிவுத் தலைமை அலுவலகம் : மத்திய நூலகக் கட்டிடம், 150-A, அண்ணா சாலை, சென்னை-2.

பொது மக்கள் மற்றும் இதர நிறுவனங்களிலிருந்து ஆயிரம் ரூபாயோ அல்லது அதற்கு மேற்பட்டு (ஆயிரக் கணக்கில்) செலுத்தப்படும் டிபாசிட் தொகைகளை இத் தொழில் நிறுவனம் கீழ்க்கண்ட வருடாந்திர வட்டி விகிதங்களில் ஏற்றுக்கொள்ளும்.

| | | | |
|---|---|---|---|
| ஓர் ஆண்டும் அதற்கு மேலும் ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குள் | 9% | இரண்டு ஆண்டுகளுக்கும், அதற்கு மேலும் | 9 1/2% |

## மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வட்டி கொடுக்கப்படும்

### நெறியாளர்கள் குழு:

திரு. வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்.,
சிறப்புச் செயலாளர்
தொழில்துறை,
தமிழ்நாடு அரசு — தலைவர்

திரு. எஸ். வெங்கிட்டரமணன், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்
நிதித்துறை,
தமிழ்நாடு அரசு — நெறியாளர்

திரு. ஆர். நடராசன், ஐ.ஏ.எஸ்.,
சிறப்புச் செயலாளர்,
பொதுப் பணித்துறை,
தமிழ்நாடு அரசு — நெறியாளர்

திரு. ஏ. பத்மநாபன், ஐ.ஏ.எஸ்.,
தலைவர் & நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு சிறு தொழிற் வளர்ச்சி
நிறுவனம், சென்னை.
— நெறியாளர்

திரு. சி. என். ராகவன், ஐ.ஏ.எஸ்.,
நெறியாளர்
தொழில்-வணிகத்துறை,
சென்னை.
— நெறியாளர்

திரு. பி. சிவலிங்கம், பி.இ., (ஆனர்ஸ்)
தொழில் நுட்பக் கல்வி நெறியாளர்,
சென்னை.
— நெறியாளர்

திரு. ஜி. துவாரகாநாதன், ஐ.ஏ., & ஏ.எஸ்.,
— நெறியாளர் (நிதி)

திரு. டி. எஸ். விஜயராகவன், ஐ.ஏ.எஸ்.,
— நிர்வாக இயக்குனர்

கம்பெனி மேற்கொண்டுள்ள அலுவல்கள் :

(A) தமிழக அரசுக்கு சொந்தமான தொழிற்கூடங்களை நிர்வகித்தல்
தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம். எஃகு தொடர்பு வார்ப்பு ஆலை, அரக்கோணம்.

(B) கூட்டுத் துறையில் தொழில்களை துவங்க ஊக்குவித்தல்.
தூத்துக்குடி உர ஆலை, ஹைட்ரோ சல்பைட் ஆலை,
ஆட்டோமோபைல் டயர் & டியூபுகள், சிகரெட்டுகள் முதலியன.

தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலை 5-2-70ல் உற்பத்தியை துவக்கியுள்ளது. இந்தத் தேதிக்கு முன் செய்யப்பட்ட செலவுகள் எல்லாம் மூலதனத்தோடும், தொழிற்சாலை கட்டுமானச் செலவுகளுடனும் சேர்க்கப்பட்டுள்ளன.

1970—71ல் நஷ்டம்: ரூ. 78,30,009

அறிவிக்கப்பட்ட பங்கு வீதம் : ஒன்றுமில்லை

| | | (லட்சத்தில்) |
|---|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் (31—3—71ல் உள்ளபடி) | | ரூ. 686,74 |
| அரசு வழங்கிய கடன் | ,, | ரூ. 444.33 |
| ரிசர்வ் தொகை | ,, | ரூ. *Nil* |
| கடன் பத்திரங்கள் மூலம் (*Debentures*) | ,, | ரூ. 75.00 |
| ரொக்க கடன் | ,, | ரூ. 75.00 |
| அதிகப்பற்று (*Overdraft*) | ,, | ரூ. *Nil* |

விண்ணப்ப நமூனாக்களுக்கும் விதிமுறைகளுக்கும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தாருக்கு (டிபாசிட் பிரிவு), 150-A, அண்ணா சாலை, சென்னை 2-க்கு எழுதிக் கேட்கவும்.

உதகைதான் என்ற முடிவுக்கு வந்து தாயகம் நோக்கி வந்து விட்டார். அது முதல் தம் வாழ்க்கையைத் தோதவர்களின் முன்னேற்றத்திற்காக பில்ஜெயின் அர்ப்பணித்து வருகிறார். மருத்துவ உதவிகளைத் தன்னுடைய செலவிலேயே புரிந்ததனால் கைப்பொருள் சின்னாளில் கரைந்து விடவே, 1955ஆம் ஆண்டு பண்டித நேரு தமிழகம் வந்திருந்த போது அவரைச் சந்தித்தார் பில்ஜெயின். அவருடைய விடா முயற்சியையும், தளரா ஊக்கத்தையும், தன்னலமற்ற உள்ளத்தையும், பாராட்டிய பண்டிதர் மலைவாழ் மக்களின் மருத்துவ நலனுக்காகத் தமிழகஅரசு அளித்திருந்த நடமாடும் மருத்துவப் பிரிவிற்குத் தலைமை மருத்துவ ஊழியர் (Head Nurse) பணியை அவருக்கு அளிக்க ஏற்பாடு செய்தார்.

தோதவர்களின் சில பழக்கங்களுக்கு மாறாக அவர்களுக்கு மருத்துவ உதவியளித்தல் என்பது எளிதல்ல. ஆனால் தோதவர்களின் அளவற்ற நம்பிக்கையைப் பெற்ற பில்ஜெயின் அவர்களிடையே சுழன்று பணியாற்றி வருகிறார். தாயைச் சுற்றிச் சேய்கள் கூடுவது போல் தோதவர்கள் அவர் செல்லும் இடத்திலெல்லாம் அவரை மொய்த்துக்கொள்வதைக் காணலாம்.

ஒரு முறை பில்ஜெயின் சகோதரிக்குப் பிள்ளைப் பேற்றுக் காலம் நெருங்கியபோது அவர் அபாயமான நிலையில் இருந்ததை அறிந்த பில்ஜெயின் மருத்துவ மனைக்குக் கொண்டுவந்து விட்டார். அதனை அறிந்த அவளுடைய கணவன் ஆத்திரமடைந்து, மருத்துவ மனைக்கு வந்து கதவுகளை எல்லாம் நொறுக்கி விட்டுப் போய்விட்டான். பில்ஜெயின் சகோதரியின் உடல்நிலை திருந்தத் தன் இரத்தத்தை அளித்தார்; என்றாலும் அவசரமாக ஓர் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. அதற்கு அவளுடைய கணவனின் அனுமதி வேண்டும். தோதவர் குலத்து ஆண்களும், செல்ல அஞ்சுகின்ற காட்டு வழிப்பாதையில் இருளில் தன்னந்தனியாகச் சகோதரியின் கணவனை நோக்கிப் புறப்பட்டார். அவருடைய அஞ்சா நெஞ்சம் சகோதரியின் கணவனின் மனத்தைக் கரைத்து விட்டது. தன் மனைவியின் மீதும், அவளைப் போன்ற மற்ற தோதவர் குலச் சகோதரிகள் மீதும் பில்ஜெயினுக்கு உள்ள அன்பின் ஆழத்தை அவன் புரிந்துகொண்டு அனுமதி அளித்தான். இரண்டு உயிர்கள் அன்று பிழைத்துப் பில்ஜெயினுக்கு நன்றி கூறின.

மனிதர்களிடத்துமட்டுமின்றிப் பிராணிகளிடத்திலும் ஆதரவு காட்டுபவர் பில்ஜெயின்.

### மலையைத் தோண்டினால்

நீலகிரி மலைகளில் கிடைக்கும் முக்கியமான கனிப்பொருட்கள்:-

அலுமினியம் தயாரிப்பதற்குப் பயன்படும் பாக்சைட்; தரமான களிமண், மைகா, இரும்புத் தாது ஆகியன ஆகும்.

கோத்தகிரி, உதகை ஆகியவைகளின் சுற்றுப்புறப் பகுதிகளிலும் இந்த இரண்டு இடங்களுக்கும் இடையில் உள்ள பகுதிகளிலும் சுமார் 16 அடி ஆழத்தில் பாக்சைட் படிவங்கள் உள்ளன.

கூடலூர், சேரங்காடு பகுதியில் தரமான மைகா உள்ளது. ஆனால் சுரங்கத்தில் நீர்க்கசிவின் காரணமாக இதை அதிகம் பயன்படுத்த இயலவில்லை. இடப்பள்ளி, இல்லித்துரை, கொள்ளிமலை, தொட்டபெட்டா, உதகை முதலிய பகுதிகளில் 22 இலட்சம் டன் இரும்புக்கனி கிடைக்கலாம் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

### முட்டை கோசு கிலோ 10 காசு!

நீலகிரி மாவட்டத்தில் முக்கிய அறுவடைப் பருவக் காலங்களில் முட்டைக் கோசு போன்றவை கிலோ 10 காசுக்கு விற்கப்படுகின்றன. எனவே இந்த வகைப் பொருட்களை, தொழில்களுக்குப் பயன்படுத்தவும், உலர்பதனம் செய்து பயன்படுத்த ஏற்ற தொழில்களைத் தொடங்கவும் நல்ல வாய்ப்பு உள்ளது.

நாங்கள் சென்ற சமயம், கையில் அழகியதோர் அணிற் குஞ்சினை வைத்துக் கொண்டு சிறிய ஃபில்லரினால் அவர் உணவூட்டிக் கொண்டிருந்தார்.

மருத்துவத் துறையோடு பில்ஜெயினின் பணிகள் நிற்கவில்லை. தோதவர்களின் சமுதாய முன்னேற்றத்திற்கும் அவர் பல வகைகளிலும் பாடுபடுகிறார். தோதவர் குலத்து இளைஞர்களின் மேற்படிப்புக்கான வழி வகைகள் முதல் தோதவர் வளர்க்கும் எருமைகள் எங்காவது தவறி மேய்ந்து விட்டால் ஏற்படும் தொல்லைகளிலிருந்து அவற்றை விடுவிப்பது வரை பல சிக்கல்கள், தீர்வுக்காக இவரை நாடி வருகின்றன.

பில்ஜெயின் கிறித்துவ மத நெறியைத் தழுவியவர். ஆனாலும் தோதவரின் பண்பாடுகளைப் பற்றிப் பேசும்பொழுது இவரது விழிகள் சுடர் விடுகின்றன. எம்முடைய இனத்திற்கு நிகர் எவருமில்லை என்ற எக்காளம் பேச்சிலே தெரிகிறது.

தோதவர்களைப் பற்றி எத்தனையோ பேர் ஆராய்ச்சிகள் நடத்தி வந்திருக்கிறார்களல்லவா? அதைப்பற்றி பில்ஜெயின் சற்றுப் பெருமைப்படுவார் என்று எண்ணினோம். ஆனால், எல்லாரும் எல்லாவற்றையும் சரியாக எழுதி விடவில்லை என்ற வருத்தம் பில்ஜெயினுக்கு இருக்கிறது. சிலர் விபரீதமான முறையில் தோதவர்களைப்பற்றி எழுதி விடுகிறார்களாம்.

''அரசு, தோதவர்களின் முன்னேற்றத்திற்காக ஆற்றி வரும் பணிகள் பற்றி உங்கள் கருத்து என்ன?'' என்று கேட்டோம்.

''தோதவர் இனமே அழிந்து விடுமோ என்று நாங்கள் அஞ்சிய காலத்தில், மருத்துவ உதவி புரிந்து இந்த இனத்தை அழிவின் பிடியிலிருந்து மீட்ட அரசாங்கத்தின் பணியினை நாங்கள் எப்படி மறக்க முடியும்?''

நன்றியுணர்வுடன் நா தழுதழுக்க பில்ஜெயின் கூறும் பதில் நம்மைப் புல்லரிக்க வைக்கிறது.

# நெற்பயிரையும் களையை யும் வேற்பிரித்தறிவது கடினமானதால், நாங்கள் களையை மட்டும் ஒழிக்கும்

# ஸ்டாம் F-34

## தயாரித்திருக்கிறோம்

களையைப் பிய்த்தெடுக்கும்போது நெற்பயிர்களும் பிய்ந்து வருகின்றன அல்லவா? மேலும், கையால் பிய்த்தெடுப்பது சிரமமான காரியம். நேரமும் விரயமாகிறது. களையை அறவே ஒழிக்கவும் முடியாது. [illegible] ஸ்டாம் F-34 [illegible]

ஸ்டாம் F-34 [illegible]






[illegible]
STAM F-34 [illegible]

## 11. உணர்ச்சிக் குழந்தை

அ. மனோரமலையான்

"உள்ளிருப்பு வேலை நிறுத்தம்" என்கிறார்களே, அப்படித்தான் உள்ளத்தில் எழும் எண்ணங்களும் சில சமயம் ஓட்டமின்றி மரத்துப் போகின்றன; சவம்போல விறைத்தும் விடுகின்றன. சவங்களுக்கு எப்போதுமே பளு அதிகம் அல்லவா?

அத்தகைய மனச்சுமையின் பளுவைத் தாங்கமுடியாமல்தான் தேன்மொழியும் இப்போது தவியாய்த் தவித்தாள்.

அவளால் ஓரிடத்தில் உட்காரவே முடியவில்லை. அறையினுள்ளேயே அங்கும் இங்குமாய் உலவினாள்; சன்னலருகே சென்று கீழேயும் எட்டிப் பார்த்தாள்.

'பூங்கா நகரம்' (Garden City) என்னும் புகழுக்கு ஏற்பவே மைசூரின் அந்த அகலமான சாலை அழகு மிளிர நீண்டு சென்றது. அதன் இரு மருங்குகளிலும் தேர்ச் சப்பரம் போலச் செழிப்பாக வளர்ந்திருந்தன மரங்கள்; அவற்றில் ஒன்றிரண்டுதான் இலைகளோடு தென்பட்டன; மற்றவை எல்லாம் இலைகளே இல்லையோ என்னும்படி ஒரே மலர்க் கோபுரங்களாகவே பூப்பந்தல் விரித்திருந்தன.

செந்நிற ஆப்பிள் பழங்களும் மஞ்சள் வண்ண ஆரஞ்சுப் பழங்களும் முட்டு முட்டாகக் குவிந்து கிடப்பது போலச் சில மரங்களில் சிவப்புப் பூக்களும், சில மரங்களில் மஞ்சள் பூக்களும் மாறி மாறிக் காட்சி அளித்தன.

வேறொரு சமயமாக இருந்திருந்தால், 'இவ்வளவு பெரிய தஞ்சாவூர்க் கதம்பம் இப்படித் தரையிலே விழுந்து கிடக்கிறதே!' என்று வியந்து போயிருப்பாள் தேன்மொழி.

இன்றோ — —! அந்த மலர் மலைக் குன்றுகளாகவே அவள் முட்டுகள் அத்தனையுமே எரி விழிகளுக்குத் தெரிந்தன.



அதறகுக் காரணம் மாதவனின் நாட்குறிப்புத்தான்.

குளிர்நீர் என்று கைவைக்கப் போக, அதுவோ கொதி நீராகவே கையைக் கொப்புளிக்கச் செய்து விட்டால் எப்படி இருக்கும்?

அந்த நாட் குறிப்பை ஏன்தான் படித்தோம் என்று ஆகிவிட்டது தேன்மொழிக்கு.

'......இவர் எழுதியதையெல்லாம் நான் படிக்காமலே இருந்திருக்கக் கூடாதா?.... இவருடைய குடும்பத்தைப் பற்றி—குறிப்பாக, இவருடைய அக்காளைப்பற்றி—நான் தெரிந்து கொள்ளாமலே இருந்திருக்கக் கூடாதா?'

—புழுங்கி வெந்தது அவளுடைய பூப்போன்ற நெஞ்சம்.

அதே சமயம், மாதவனின் எழுத்துக்களிலே ஓர் ஒப்பில்லாத 'நேர்மை' ஒளி வீசுவதையும் அவள் உணராமல் இல்லை.

அவன் நினைத்திருந்தால் தன்னைப்பற்றிய எல்லாத் தகவல்களையுமே, சோற்றுக்குள் புதைத்து வைத்த முட்டையாகவே மூடியிருக்கலாம். தான் மேட்டுக் குடியிலே பிறந்ததாகவும் பெருமை அடித்திருக்கலாம்; மெத்தையிலே புரண்டதாகவும் பீற்றியிருக்கலாம்; தனக்கு முன்னே ஒரு தமக்கை பிறந்தாள் என்றே எழுதாமலும் விட்டிருக்கலாம்; அப்படியே பிறந்ததை ஒப்புக்கொண்டாலும் அவள் எப்போதோ இறந்துவிட்டாள் என்றும் சாதித்திருக்கலாம்.

மாதவனோ......? அம்மாதிரி அற்பத்தனமான பொய்களையே ஆடைகளாக அணிந்து கொண்டு தன்னை அற்புதமான மனிதனாகக் காட்டிக் கொள்ள அவன் அணுவும் விழையவில்லை; அதன்மூலம் தனக்காக உயிரையே தரத் தயங்காத தேன்மொழியையும் அவன் வஞ்சிக்க நினைக்கவில்லை.

பொய்மைகளால் கட்டப் பெறும் புழுதி மாளிகை எவ்வளவு காலத்திற்குத்தான் நிலைகுலையாமல் நிமிர்ந்து நிற்க முடியும்? அது சரிந்து சிதைவதற்குப் புயலா வீச வேண்டும்? சாதாரணப் பூங்காற்றே போதாதா?



அதனால்தான், தன் வாழ்க்கைப் பாதையிலே அதுகாறும் ஏற்பட்டுவிட்ட பள்ளம்—படுகுழிகளை—ஒளிவு மறைவு எதுவுமின்றித் தன் நாட்குறிப்பிலே வெளிப்படையாகவே எழுதிக் காட்டியிருந்தான் மாதவன்.

அவனுடைய எழுத்துக்களில் ஒளிர்ந்த அந்த 'நேர்மை' தேன்மொழியின் இதயத்தைக் கவர்ந்தது என்னவோ உண்மைதான்; ஆனால், அதேவேளையில் தொண்டையில் சிக்கிக் கொண்ட மீன் முள்ளைப்போல, இன்னொரு நினைவும் வந்து அவளது நெஞ்சை நெருடாமல் இல்லை.

'......இவருடைய அக்காளுக்கு அப்படியொரு கொடிய நோய் ஏன்தான் வந்ததோ, பாலிலே தேள்விழுந்த மாதிரி ......அப்பப்பா எவ்வளவு பெரிய பயங்கரம்! அவளோடு ஒரே தாய் வயிற்றில்—ஒரே உதிரத்தில்—பிறந்தவர் தாமே இவரும்?......ஒருவேளை இவருக்கும் தன் அக்காளைப் போலவே......?'

—அதற்குமேல் கற்பனையே செய்ய முடியவில்லை தேன்மொழியால்.

நெஞ்சுக் கூடே விண்டு வெடித்து விடும்போல் விண்விண் என்று தெறித்தது.

கண்களிலும் நீர் துளிர்த்து விட்டது.

சன்னலோரத்தில் நின்று முன்போல வீதியின் அழகை—அங்கே சுறுசுறுப்பாகப் பறந்து கொண்டிருக்கும் மனிதர்களை—வண்டி, வாகனங்களை—அவளால் பொறுமையோடு வேடிக்கை பார்க்கவே முடியவில்லை. அவளது கொடியுடல் முழுவதுமே தடதடவென்று ஆடிற்று.

படுக்கையில் வந்து 'பொத்' தென்று விழுந்து விட்டாள் அவள்.

சிறிது நேரம் சென்று, குப்புறப் படுத்துக்கொண்டிருந்த அவளது கரம், படுக்கையை ஒட்டியே கிடந்த சிறு மேசையில் இருந்த (கைகளில் எடுத்துச் செல்லக்கூடிய) சிறு வானொலிப் பெட்டியைத் திருகி விட்டது. அதுவோ.......?

'ஆடி அடங்கும் வாழ்க்கையடா!

ஆறடி நிலமே சொந்தமடா!'

—உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் அந்த உருக்கமான திரைப்படப் பாடல் தேனாக ஒலித்தது கணீரென்று.

அந்தப் பாட்டைக் கேட்கக் கேட்க, தன்னுடைய வாழ்வும் உடனே அப்படி ஆடி அடங்கி விடாதா என்று ஏங்கியவளைப் போலக் குலுங்கிக் குலுங்கி அழுதாள் அந்த அப்பாவிப் பெண்!

* * *

புகைவண்டி நிலையத்திற்குத் தன் நண்பன் அமலனைப் பார்க்கச் சென்றிருந்த மாதவன் திரும்பி வருவதற்குச் சற்று நேரமே ஆயிற்று.

அவன் தேன்மொழியின் அறைக் கதவைத் தட்டிய போது அது தானாகத் திறந்து கொண்டது.

தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு தன் காதலி முடங்கிக் கிடக்கும் அவல நிலையைப் பார்த்து மாதவனுக்கே இரக்கமாகத்தான் இருந்தது.

அவன், அவள் அருகே சென்று தோளைத் தொட்டான் உரிமையோடு.

அவள் அடுத்த கணமே எழுந்து விட்டாள் சரேல் என்று.

''தூக்கத்தைக் கெடுத்து விட்டேனா?'' —முறுவலித்தவாறே கேட்டான் மாதவன்.

'' அதெல்லாம் ஒன்றும் இல்லை ''—என்றவாறே நழுவிக் கிடந்த புடவைத் தலைப்பைச் சரிசெய்து கொண்டாள் தேன்மொழி.

'' நேற்று நாம் போட்டிருந்த திட்டப்படி இந்நேரம் நாம் எங்கே இருக்க வேண்டும் தெரியுமா ? ''

'' எங்கே ? ''

'' சகன்மோகன் அரண்மனை ஓவியக் கூடத்தில் ''

'' ஓ ! ''

'' என்ன, 'ஓ' என்று உற்சாகம் இல்லாமல் கொட்டாவி விடுகிறாய் ? நாம் உடனே புறப்பட வேண்டாமா?''

'' நீங்கள் மட்டும் போய்ப் பார்த்து விட்டு வாருங்களேன்!''

'' என்ன தேன்மொழி அப்படிச் சொல்லிவிட்டாய் ? நான் அங்கே போக வேண்டும் என்று திட்டமிட்டதே உனக்காகத் தானே ! அதுவும், கும்மிருட்டில் அகல் விளக்கை ஏந்தி, அது காற்றினால் அணைந்து விடாத படி கையினால் மறைத்துச் செல்கிறாளே அந்த அழகியின் ஓவியத்தை உனக்குக் காட்ட வேண்டும் என்பதற்காகத் தானே ! ''

தேன்மொழியோ மறுமொழி ஏதும் கூறாமல் சன்னல் வழியே வெண்முகில் மிதந்து செல்லும் விண்வெளியையே வெறிக்கப் பார்த்தாள்.

' ... ... ... ... ... ..என்னுடைய வாழ்க்கை விளக்குக்கூட இப்போது காற்றிலே ஆடிக் கொண்டுதான் இருக்கிறது! — —

—அவளுடைய நெஞ்சினுள் என்னென்னவோ நினைவுகள் எல்லாம் அலை பாய்ந்தன.

'' என்ன தேன்மொழி, ஒன்றுமே பேசாமல் இருக்கிறாய் ! ஓவியக் கூடத்துக்குப் போவோமா வேண்டாமா ?''

—அவளது அமைதியைக் கலைத்தான் மாதவன்.

'' வேண்டாங்க ; எனக்கு ஒரே அலுக்கையாக இருக்கிறது.'

'' அலுக்கை உடம்புக்கா ? இல்லை, உள்ளத்துக்கா ? '' சிரித்துக்கொண்டே கேட்டான் அவன்.

தேன்மொழி அவனுக்கு விடையேதும் சொல்லவில்லை.

'' ஆமாம், கேட்க மறந்து விட்டேனே ! நான் எழுதியிருந்தேனே அதைப் படித்து விட்டாயா ? ''

'' ம் ''

'' அதைப்பற்றி என்ன நினைக்கிறாய் ? ''

'' நினைப்பதற்கு என்ன இருக்கிறது ? ஆனால், எதையுமே ஒளிக்காமல் நடந்தது நடந்தபடியே எழுதியிருக்கிறீர்கள் ''

'' இப்போதாவது, நான் என் நிதானத்தை இழந்து அந்தக் கன்னடக்காரியைத் துரத்திக்கொண்டு ஓடினேன் என்பது உனக்குப் புரிகிறதா ? ''

'' ம் ''

'' என்ன தேன்மொழி, இது ! உன் குரலிலே வழக்கமான உணர்ச்சியே இல்லையே ! என்னவோபோல் இருக்கிறாயே!''.

—தன் நெஞ்சிலிருந்த சுமையை எழுத்துக்களாக இறக்கி வைத்துவிட்டதால் கலகலப்பாகப் பேசினான் மாதவன்.

ஆனால் அதே சுமை இப்போது தேன்மொழியின் நெஞ்...



கல்லவா குடிபெயர்ந்து விட்டது ? அவளால் எப்படி- அவனைப் போலக் கலகலப்போடு பேச முடியும் ?

பெருமூச்செறிந்தவளாக,

'' இன்றைக்கே சென்னைக்குக் கிளம்பி விடுவோமே ! இத்தனை நாட்களாக அப்பாவின் முகத்தைப் பார்க்காமல் இருப்பது மனத்துக்கு என்னவோபோல் இருக்கிறது ! ''

—என்று வறட்சியாகச் சிரித்தாள் தேன்மொழி.

'' சாமுண்டீசுவரி கோவில், சீரங்கப்பட்டினம் இங்கெல்லாம் போகவேண்டும் என்று சொன்னாயே ? ''

'' இன்னொரு முறை வரும்போது பார்த்துக் கொண்டால் போகிறது ! இப்போது புறப்பட்டு விடுவோம் ''

—அவளுடைய குரலில் ஒலித்த அழுத்தத்தைக் கொண்டு அவளுடைய மன நிலையைப் புரிந்து கொண்டு விட்டான் மாதவன்.

அன்றைக்கு மதிய உணவு முடிந்தவுடனேயே ஓய்வு கூட எடுத்துக் கொள்ளவில்லை ; இருவரும் மைசூருக்கு விடை கொடுத்துவிட்டுச் சென்னையை நோக்கிக் கிளம்பிவிட்டனர்.

முன்பு மைசூருக்கு வந்த பொழுது முன்னிருக்கையில் மாதவனோடு ஒட்டிந்தான் உட்கார்ந்திருந்தாள் தேன்மொழி அவனுடைய தோளை—கழுத்தை —தொட்டுக் கொண்டும் வந்தாள் உற்சாகமாக.

இப்போதோ—

தலையை வலிக்கிறது என்று சொல்லிப் பின்னிருக்கையிலே போய்ப் படுத்தேவிட்டாள் அவள்.

• • •

சென்னைக்குத் திரும்பிய தேன்மொழிக்கும் மாதவனுக்கும் சில நாட்கள் தொடர்ந்து ஓய்வே கிட்டவில்லை; வெற்றி விழாக்களும் விருந்துகளும் அவர்களைத் தெவிட்டிப் போகும் அளவுக்குத் திணற அடித்தன.

'டேபிள் டென்னிஸ்'-ஆட்டப் பந்தயத்திலே மற்ற மாநிலங்களையெல்லாம் மண்டியிடச் செய்து தமிழ்நாட்டின் தனிப்பெருமையைத் தலைநிமிரச் செய்துவிட்டார்கள் அல்லவா? அந்த உற்சாக வெறியிலேதான், விளையாட்டுப் பந்தயங்களிலே ஈடுபாடு கொண்ட நண்பர்களும் நல்லெண்ணம் கொண்டவர்களும் அவர்களைத் திக்குமுக்காட வைத்தனர் பாராட்டு மழையிலே நனைய விட்டு.

இவ்வாறு சிரிப்பும் விளையாட்டும் புகழும் பூமாலையுமாகப் பொழுது போய்க் கொண்டிருந்தாலும் தேன்மொழியின் மனம் மட்டும் தங்கள் குடும்ப டாக்டர் பூங்கொடியைத் தனித்துச் சந்தித்து உள்ளந்திறந்து உரையாடுவது பற்றியே எந்த நேரமும் எண்ணிக் கொண்டிருந்தது.

அவளோ அப்போது சென்னையில் இல்லை. விடுமுறையில், தெற்கே எங்கோ தன் சொந்த ஊருக்குப் போய்விட்டாளாம்.

இதற்கிடையில், பேரின்பமுத்தும் முக்கியமான பொறுப்புகளையெல்லாம் முன்பு கூறியவாறே, படிப்படியாக மாதவனிடம் ஒப்படைத்து வந்தார். தம்முடைய பரந்த நிறுவனத்தின்கீழ் உள்ள பல்வேறு அங்கங்களைப் பற்றிய அந்தரங்கச் செய்திகளையும் அவனிடம் ஒன்று விடாமல் கூறினார். தொழில் நுணுக்கங்கள் — வணிகத் தொடர்புள்ள சில 'முடு மந்திரங்கள்',— வருமானவரி அதிகாரிகளின் கண்ணிலே மண்ணைத் தூவுவதற்குத் தேவையான சில 'கறுப்பு—வெள்ளை'க் கணக்குகள் சில பொருளாதாரச் செலாவணி 'முடிச்சுகள்'— அவற்றை அவிழ்ப்பதற்குரிய 'வழி, துறைகள்'—எல்லாவற்றையுமே அவனிடம் அவர் ஒளிக்கவில்லை.

மாதவனுக்குக் கூட அவற்றையெல்லாம் கேட்டுத் தன் மனத்திலே பதிய வைத்துக் கொள்வதற்குச் சற்று அலுப்பாகவே இருந்தது.

'எங்கோ வெளிநாட்டுக்குப் பயணம் போகிறவர் போலவும், அங்கேயே தங்கிவிடப் போகிறவர் போலவும் எதற்கு நம்மிடம் எல்லாவற்றையுமே சொல்கிறார்?'—என்றும் அவன் எண்ணினான்.

ஆனால், இரண்டே வாரங்களில் அவனுடைய எண்ணமே பலித்து விடுவது போன்ற நிலைமையே உருவாகி விட்டது.

ஆம்; பேரின்பமுத்து உடனடியாகச் சிங்கப்பூர் செல்ல வேண்டியவர் ஆகிவிட்டார்.

அங்கேயும் அவருக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்று பொன்முட்டையிடும் வாத்தாக வளர்ந்து கொண்டிருந்தது.

சொல்லப் போனால், அவர் பாடத் தொடங்கிய தொழில் துறைப் பாட்டுக்கு அந்தச் சிங்கப்பூர்க்கடைதான் 'பல்லவி' ஆகும். அதிலிருந்து கிடைத்த அளவில்லாத இலாபமே தமிழகத்திலும் ஒரு நிறுவனத்தைத் தோற்றுவிப்போமே என்கிற துணிச்சலைக் கொடுத்தது அவருக்கு.

அந்த வெளிநாட்டு விற்பனை நிலையத்தைப் பொறுப்போடு கவனித்துக் கொண்டிருந்த அவரது தூரத்து உறவினர் திடீரென்று சில வன்முறையாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டாராம்; தந்தி வந்தது.

அதனால்தான் உடனே அங்கே பறந்து செல்ல வேண்டியதாயிற்று பேரின்பமுத்துக்கு.

விமானத்தில் ஏறுமுன் அவர் உரைத்த சொற்கள் மாதவனின் மனத்தை அப்படியே பாகாக உருக வைத்து விட்டன.

"......மாதவா! நமக்கு என்று ஓர் ஆண்பிள்ளை இல்லாமல் போய் விட்டதே என்று சில நாட்களாக நான் ஏங்கியது உண்டு; ஏன், அழுததும் உண்டு. ஆனால்...... உன்னைப்போல ஒரு நல்லபிள்ளை—நாணயமான பிள்ளை—எனக்கு உற்ற துணையாக வாய்க்க வேண்டும் என்பதற்காகத்தான் எனக்கு ஓர் ஆண்பிள்ளை தரிக்காமல் போனதோ என்று இப்போது நினைக்கிறேன். நீ காப்பாற்றி விடுவாய் என்கிற நம்பிக்கையில்தான் என் சொத்துக்களை மட்டுமல்ல, தேன்மொழியையும் உன்னிடம் ஒப்படைத்து விட்டுப் போகிறேன். தேன்மொழி.....அது ஒரு குழந்தை! வெறும் உணர்ச்சிகளால் மட்டுமே ஆன குழந்தை துன்பம் என்றால் என்னவென்றே அவளுக்குத் தெரியாது. சாதாரண எறும்பு கடித்தாலே கருந்தேள் கொட்டிவிட்டதைப் போலக் கத்தக் கூடியவள். இனி அவளுடைய வாழ்வு—தாழ்வு எல்லாமே உன் கையில்தான். சிங்கப்பூர் செல்கிற நான் திரும்பித்தான் வருவேனோ, இல்லை, என் சொந்தக்காரரைப் போல அங்குள்ள குண்டர்களுக்குத் தீனியாகத்தான் ஆவேனோ? எதுவானாலும் இனி எல்லாமே உன் பொறுப்புத்தான்!—கூறி வரும் பொழுதே பேரின்பமுத்தின் குரல் தழு தழுத்தது; கண்ணீரும் தாரை தாரையாக வழிந்தது.

மாதவனுக்கும் விழிகள் கலங்கி விட்டன.

தேன்மொழியோ ......... தேம்பித்தேம்பி அழுதே விட்டாள். தன் தந்தையைச் சுமந்து செல்லும் விமானம் வெகு தொலைவுக்கு அப்பால் மறைந்தபிறகும் கூட, அவளால் நிறுத்தவே முடியவில்லை அழுகையை.

* * *

விமான நிலையத்திலிருந்து தேன்மொழியும் மாதவனும் பிளைமவுத் காரில்தான் ஒன்றாகத் திரும்பிவந்தார்கள். எனினும் இருவருக்குமிடையே எந்த விதப் பேச்சோ, வார்த்தையோ, ஏன், பார்வையோ கூட இல்லை!

ஆனால் வீட்டில் நுழைந்த போதோ ......... முன் கூடத்தில் கிடந்த சோபாவில் அமர்ந்து நாளிதழ் ஒன்றை விரித்துப் படித்துக்கொண்டிருக்கும் டாக்டரைக் கண்டதும் ஒரே உற்சாகத்துடன் உரக்கக் கூவலானாள் தேன்மொழி:

"வாங்க, டாக்டர்! எப்போது வந்தீர்கள் ஊரிலிருந்து? உங்களைத் தேடி எத்தனை தடவை நான் அலைவது?"

"ஆமாம், அப்படியென்ன முக்கியமான செய்தி?"—முறுவலுடன் கேட்டாள் பூங்கொடி.

"அதுவா? வாருங்கள் மாடிக்குப் போவோம்; தனியாகச் சொல்கிறேன்."

(வளரும்)

16-12-7




என்றுமுள தென்றமிழை என்தாய்த் திருநாட்டைத்
தன்னுயிர்போல் காக்கும் தகையர்க்கு—மன்னுலகில்
தாரமாய் யானாவேன் நான்மணக்க அத்தகைய
வீரர் எழுக விரைந்து.

ந. சுந்தரராசன், தர்மபுரி.

சாலை பலவமைத்துத் தன்னிறைவைச் சீராக்கிப்
பாலைநிலப் பாங்கைப் பசுமையுறு—சோலையாக்கி,
வாரக் குடிசைகளை மாடமாக்கும் சீரணி
வீரர் எழுக விரைந்து.

பாவை. மயிலோன், அறந்தாங்கி.

அறங்குலைந்து நாட்டில் அமைதிகுன்றி மக்கள்
திறங்குலைந்து வாடுகையில் தீயோர்—மறங்களைந்து
சீரமைப்புச் செய்திடவே தீரமுடன் மார்தட்டும்
வீரர் எழுக விரைந்து.

கு. ஜெயப்பிரகாஷ் நாராயணன், திருமங்கலம்.

ஊரெங்கும் பள்ளி உயர்வான ஊருணிகள்
சீரோங்கும் சாலைகளும் செய்திடவே—பார்போற்றும்
சீரணியில் சேர்ந்து சிறக்கத் தமிழ்நாட்டு
வீரர் எழுக விரைந்து.

புலவர் கி. காளியப்பன், பி.ஏ., காரைக்குடி-4.

முத்தும் மரகதமும் மும்மணியும் வேண்டேன்நான்
சித்தத்தில் வீரம் செழித்தோங்கும்—அத்தானே !
மாற்றானைக் கொல்லும் மறத்தமிழன் நீங்களொரு
வீரர் எழுக விரைந்து.

ச. சன்னாசி, மாரியம்மன், கோவில்பட்டி.

நாடுகாக் கும்படையில் நானுமோர் வீரனென்று
பீடுடைய நம்முதல்வர் பேசியதால்—நீடுபுகழ்
பாரதத்தைச் சூழும் பகைவெல்ல வீட்டுக்கோர்
வீரர் எழுக விரைந்து.

அ. செந்திவேலு, பி.இ., சென்னை-2.

இப்படை தோற்றிடில் எப்படை வெல்லுமென்(று)
ஒப்பிலா அண்ணா உரைத்ததற்(கு)—ஒப்பவே
பாரதிர மாற்றார் படைநடுங்கப் போர்முனைக்கு
வீரர் எழுக விரைந்து.

கோம்பை. கா. செயபாலன், பி.இ., சென்னை-1.

தாய்மானம், தாய்நாட்டின் மானம், தமிழ்மானம்
'வாய்மையே வெல்லும்' வளமானம்—தூய்மையே
ஆரச் செறிந்த அழகுமா னங்காக்க
வீரர் எழுக விரைந்து.

வே. அரங்கராசன், தாராசுரம்.

வண்ணப் புறாபறந்த வானத்தில் போர்ப்பருந்தா ?
கண்களெனக் காப்போர் களத்துள்ளார்—மண்மகளும்
ஈர வயிற்றோ டிருக்க, உழுபடைசேர்
வீரர் எழுக விரைந்து.

அரி. நாமதேவன், புதுச்சேரி.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :

திரு ந. சுந்தரராசன், தமிழாசிரியர்,
அ. உ. பள்ளி, அன் செட்டி அஞ்சல்,
தேன்களிக் கோட்டை வட்டம்,
தர்மபுரி மாவட்டம்.

# டான்சி

## தனது பணியின்
## 7வது ஆண்டு
## துவக்கம்







*துறைகள்*

கட்டுமான கட்டமைப்புகள்
இரும்பு மர சாமான்கள்
விவசாய கருவிகள்
காலணிகள்
தோலணிப் பொருட்கள்.
கண்ணாடி உபகரணங்கள்
பீங்கான் பொருட்கள்
உப்பு மெருகிட்ட குழாய்கள்
பொறியியல் உதிரி உருப்புக்கள்

TANSI

**தமிழ்நாடு சிறு தொழில்**
**நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

35/2 உட்ஸ் சாலை, சென்னை-2

**53 தொழிற் கூடங்களை தன்னகத்தே கொண்ட**
**ஓர் வலிமையான அமைப்பு**

துள்ளி வரும்வேலைத் தோள்தாங்கிக் கையிரண்டில்
அள்ளிச் செருக்கழித்த அஞ்சார்முன் ;—தள்ளாடிப்
போருக்கு வந்திட்ட புல்லனை ஓட்டிடவே
வீரர் எழுக விரைந்து.

உடுமலை அர. தமிழ்ச்செல்வன், உடுமலை.

ஆகா ! முரசொலிகேள் அன்பே ! விடைதருக
நாகாவான் வீழ்த்த நானெழுந்தேன்—சாகார்யார் ?
போரெடுத்து மாண்டேனும் பொன்னாட்டைக் காப்பவரே
வீரர் எழுக விரைந்து.

புலவர் வள்ளிவேலன், திருப்பத்தூர்.

சாதிச் சழக்குகளைத் தீச்சமயச் சண்டைகளை
நீதி வழுவும் நெறிகேட்டை—மோதியுமிழ் !
வேரதிர வீழ்த்து ! விளைவுநன் ருக்கிடும்
வீரர் எழுக விரைந்து.

ப. அறவாழி, தளவாய்ப்பட்டணம்.

ஆயுதத்தைத் தாங்கி அரும்போர் புரிபவரே
தேயமுறு வீரர்எனச் செப்பாதே—சாயாத
தீரர் உளமெதையுந் தாங்குந் திறமறியும்
வீரர் எழுக விரைந்து.

சு. காந்திமதி, மதுரை-9.

போர்என்றால் புன்முறுவல் பூத்திட்ட நற்றமிழீர் !
கூர்புயலால் இந்நாட்டைக் கொள்ளுதற்குச்—சீர்அற்ற
ஆரவாரப் பாகிஸ்தான் ஆசையுடன் எண்ணுவதால்
வீரர் எழுக விரைந்து.

சு. ம. சுப்பிரமணியன், மதுரை-18.

சிங்கமுன் சிற்றெலியாய்த் தீச்சுடர்முன் வைக்கோலாய்ப்
பொங்கும் எரிமலைமுன் பூநீராய்—இங்குவந்து
போரெடுத்துப் பார்க்கிறது பொல்லாத பாகிஸ்தான் ;
வீரர் எழுக விரைந்து.

ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

வஞ்சியுடன் கொஞ்சியும் வம்பளந்து பேசியும்
வஞ்சித்து வாழ்ந்ததெலாம் போதுமே !—துஞ்சிடவும்
நேரம் இனியில்லை நெஞ்சில் துணிவுள்ள
வீரர் எழுக விரைந்து.

கு. பிரான்சிஸ், சென்னை-11.

மங்காப் புகழ்நூற்கள் மக்களுக் கிந்நாளில்
பொங்குதமிழ்ப் பாவலரே போதாது—சங்கம்போல்
தீரறிவு கொண்ட திருநூற்கள் யாத்திடப்பா
வீரர் எழுக விரைந்து.

வெ. சுப்பிரமணியன், சென்னை-5.

செங்குருதி நீராகச் செத்தார் கரையாகப்
பொங்கும் நிணத்தாறாய்ப் போவதுவோ ?—வங்கத்தான்
போராடிச் சாகுமுன் போய்க்காக்க இந்திய
வீரர் எழுக விரைந்து.

பாவெழிலன், பெரம்பலூர்.

சாவோ ஓர்முறைதான் ; சாற்றுங்கால் நோயுற்றுப்
போவோர் புகழின்றிப் பொல்லாங்கு—போவதற்குப்
போராடிப் பொன்றுங்கால் பொன்னுலகு பெற்றிடுவீர்
வீரர் எழுக விரைந்து.

மு. காளத்தி, பி.ஏ., சென்னை-52.

பஞ்சத்தை நோயைப் படையெடுப்பை மாற்றலரின்
வஞ்சத்தைத் தூளாக்கி வாகைபெற—நெஞ்சத்தில்
வாரமுடன் தன்மானம் மண்டிடும் பற்றுடைய
வீரர் எழுக விரைந்து.

சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

உழுவார் விதைப்பார் உயர்தொழில்கள் செய்வார்
அழுவார் உழைப்பினை அள்ளிக்—கொழுப்பார்நெஞ்
சீரமே அற்றவர் இந்நிலையை மாற்றிட
வீரர் எழுக விரைந்து.

அ. வை. முத்துச்சாமி, அந்தியூர்.

சிங்கத்தை வெல்லச் சிறுநரி நின்றதுபோல்
பங்கமுற வந்த பகைவருடன்—மங்காமல்
தீரமுடன் நின்று திருநாட்டைக் காப்பதற்கு
வீரர் எழுக விரைந்து.

அரு. மதிவாணன், திருச்செங்கோடு.

ஆண்டவனைத் தேன்தமிழில் வேண்டுதல் தீதென்றும்
மாண்டமொழி ஆரியந்தான் மாண்பென்றும்—ஈண்டுசிலர்
தீரமுடன் செப்புகின்றார் செந்தமிழைக் காப்பதற்கு
வீரர் எழுக விரைந்து.

குழ. அண்ணாமலை, கோவை.

சிங்கத்தாய் நாடே சிறியோர்க்கு ஞாபகம்செய்
'வங்கம்' நமதங்கம்' மண்ணுலகில்—செங்களத்துப்
போரில் பகைவென்று பூமாலை சூடவே
வீரர் எழுக விரைந்து.

பாவலர். கருமலைப்பழம்நீ, ஊத்தங்கரை.

பெற்ற சுதந்திரத்தைப் பேணித் தினங்காக்க
முற்றும் துறப்போம்; முனைந்துழைப்போம்—பற்றுடனே
தீரங்கொள் போர்த்திறத்தால் தீர்த்தே பகையொழிக்க
வீரர் எழுக விரைந்து.

சண்முக. தாயுமானவன், பொன்மலை.

என்னுயிரைத் தாலியிலே ஏற்றவளே வெற்றியுடன்
உன்முகத்தில் நான்விழிப்பேன் ஒய்யாரி!—என்றன்பை
ஆரத் தழுவி அணைத்து விடைபெற்று
வீரர் எழுக விரைந்து.

ந. சுப்பையா, மதுரை-2.

ஈரச் சுவடில்லா எண்ணத்தோன் சோதரனின்
ஈரற் குலையுருவி இன்புறுவோன்—ஓரத்தில்
சோரம் விளைக்கின்ற தீயோனைப் போயழிக்க
வீரர் எழுக விரைந்து.

தி. இரத்தினம், பி.எஸ்ஸி.,பி.டி., நாகர்கோயில்.

நெஞ்சப் புனத்தினிலே நேர்மை நிறைந்திருக்க
வஞ்சனைகள் வெல்ல வழியென்ன?—அஞ்சாத
தீரர் இவரென்று தீயவர் அஞ்சிட
வீரர் எழுக விரைந்து.

அ. கிருட்டிணசாமி, சென்னை-15.

எல்லையிலே நம்படைகள் எற்றமுடன் முன்னின்றே
ஒல்லையிலே மாற்றாரை ஒட்டுதற்கும்—எல்லையிலாச்
சீர்பொருட்கள் உற்பத்தி செய்வதற்கும் நாட்டகத்தே
வீரர் எழுக விரைந்து.

வீர. முருகேசன், எம்.ஏ.,பி.டி., களிமங்கலம்.

முன்பொருநாள் போர்தொடுத்து மொய்ம்பிழந்து தோற்[றெழிந்த
துன்பம் ஒருசிறிதும் தோற்றாமல்—வன்புடனே
சீரழியப் போர்தொடுக்கும் தீயவரை வென்றிடவே
வீரர் எழுக விரைந்து.

வித்துவான். க. சேதுராமலிங்கன், இராமேச்சுரம்.

வந்தாரை வாழ்விப்போம் வாளெடுத்தால் வாலறுப்போம்
சிந்தாத செங்குருதி சிந்தவைப்போம்—வந்தபோர்ப்
பாரம் பெரிதோ? பகைபெரிதோ? பேராண்மை
வீரர் எழுக விரைந்து.

குகதாஸ். விசுவநாதன், நாக்கநாயக்கன்பாளையம்.

தங்கத் தமிழ்நாட்டில் தங்கு தடையின்றி
எங்கும் தமிழ்மணக்க ஏற்றமுடன்—சங்கொலிப்பீர்!
சீரான இந்நிலைக்குச் சீறும் பகையிருப்பின்
வீரர் எழுக விரைந்து.

மெளனி ''கோ'', சிலம்பகம்.

பெற்றதாய் நாட்டைப் பிறரடிமை கொளவந்தால்
சற்றுமஞ் சாமற் சமர்புரிந்து—வெற்றிகொள்வோம்
தீரரிவர் என்றுலகம் தேர்ந்திடவே நாடெங்கும்
வீரர் எழுக விரைந்து.

நா. முத்தையா, அறந்தாங்கி.

நெஞ்சினிலே நீதி நிறைதோளில் துப்பாக்கி
துஞ்சலிலும் நாட்டுக்காய்த் தொண்டெண்ணம்,—அஞ்சாமை
ஆரத் தழுவிநிற்கும் ஆண்மை அணியாக
வீரர் எழுக விரைந்து.

புலவர் கரு. சுப்பையா, கல்லூரணி (அருவை).

தொண்டுள்ளம் கொண்டோர் தொடர்ந்திடுக தம்பணியை
மண்டுகின்ற துன்பத்தால் வாடாதீர்—ஒண்டமிழின்
தீரர் எனத்தக்க சீரணியால் வாழ்வுறவே
வீரர் எழுக விரைந்து.

புலவர் தென்னவன், செம்பனூர்.

வடக்கின் புறத்தினிலே வாலாட்டி இன்றும்
இடக்குத்தான் செய்கின்ற எத்தர்—அடங்கியே
போரில் புறமோடப் பொன்னித் திருநாட்டு
வீரர் எழுக விரைந்து.

புலவர் இரா. முருகையன், சென்னை-1.

உறங்கு கின்றோமென் றுள்ளியே எல்லைக்
கிறங்கி வரவே எழுந்தார்—முறங்கொண்டு
சூரப் புலியெதிர்த்த செந்தமிழ்த்தாய்ப் பாலுண்ட
வீரர் எழுக விரைந்து.

மீராமணாளன், சீர்காழி.

நொந்திட்ட நம்மக்கள் நோய்தீரும் வேளையிலே
வந்திட்ட வெம்பகைவன் வாலறுக்க—தந்திட்ட
தீரம் துணிவாற்றல் தேர்ந்த திறத்துடன்
வீரர் எழுக விரைந்து.

புலவர் தி. செ. கந்தசாமி, சங்ககிரி.

இற்றைநாள் இந்திய எல்லைப் புறத்தைக்கைப்
பற்ற நினைத்திடும் பண்பிலாப்—பற்றலரை
வேரறுக்கப் பாய்ந்திடும் வேங்கையாய் மார்தட்டி
வீரர் எழுக விரைந்து.

சு. தருமர், மேலாண்மறைநாடு.

ஆரத் தழுவிவிட்டாய் அங்கமெங்கும் முத்தமிட்டாய்
வீரத்தாய் நாயகியே வீற்றிருந்து—பாரடிநீ
தீரமுடன் போர்புரிந்து தீமைகளை மாய்ப்பதற்கு
வீரர் எழுக விரைந்து.

குப்பிச்சிப் பாளையக் குமரன், திருமூர்த்தி நகர்.

அறிவியற் கல்வி அருந்தமிழ்நா டெங்கும்
பொறியியலிற் காணும் புதுமை—நெறிமுறையில்
சீருறவே தோன்ற சிறந்தபல் நூலாக்க
வீரர் எழுக விரைந்து.

தி. கி. சு. கலியாணசுந்தரம், பி.எஸ்ஸி., பி.எட்.,
வசந்தநகர், மதுரை-3.

எல்லையில் எல்லையில் தொல்லைக ளெந்நாளும்
நல்குவது நாங்களில்லை நீங்களெனச்—சொல்லிய
ஈரமிலா நெஞ்சரை இக்கணமே வீழ்த்துதற்கு
வீரர் எழுக விரைந்து.

புலவர் எ. இராதாகிருஷ்ணன், கம்மவான்பேட்டை.

வீட்டுக்கும் நாட்டுக்கும் வெல்லும் தமிழுக்கும்
பாட்டுக்கும் தொண்டு பலசெய்ய—வேட்டுப்பெண்
வீரர் எழுந்தார் விரைந்தாரே ; கண்டேனும்
வீரர் எழுக விரைந்து.

இராமரத்னம், புகலூர்.

தாய்மொழியில் கல்விபெறத் தன்செய்யில் நெல்பெருகச்
சேய்இரண்டால் இல்லம் சிறப்பாக—ஆய்ந்தறிந்து
நேரத்தில் செய்தக்க நீதிவழித் தொண்டுசெய
வீரர் எழுக விரைந்து.

க. சுரேந்திரன், விருத்தாசலம்.

வில்லும் புலியும் விரையும் கயல்மீனும்
வெல்லும் பனிவரையில் வீற்றிருக்கச்—சொல்லுதமிழ்
வீரம் நிலைநாட்டி வீணர் முதுகொடிக்க
வீரர் எழுக விரைந்து.

திரு. சிவ. கிருட்டிணன், கனியூர்.

உரிமை பறித்தால் உறைநீங்கும் வாளால்
எரிசினம் கொண்டே எதிர்ப்போம்—அரிமாவின்
தீரச் சினங்கொண்டு தீயவரைத் தீர்த்திட
வீரர் எழுக விரைந்து.

து. பால்ராசு, விருதுநகர்கல்லூரி.

அன்பைப் புதைப்போர் அழிவுக்குக் கைகொடுப்போர்
துன்பம் விளைக்கத் தொடங்குவோர்—மன்பதையில்
வேரோ டொழிந்திடவே வெல்லும் அறப்போர்செய்
வீரர் எழுக விரைந்து.

சி. சௌ. கருப்பன்செட்டி, திருச்சி-15.

நாட்டுரிமை காப்பதற்கும் நல்லதமிழ் பேணுதற்கும்
வீட்டுக்(கு) ஒருவர் விரைந்திடுமின்—பாட்டினிலே
சூரரெனத் தீரரெனச் சொற்சிலம்பம் ஆடாமல்
வீரர் எழுக விரைந்து.

நா. தண்டபாணி, புதுக்கோட்டை.

எண்ணி இறுமாந்(து) இருக்கின்ற நாடெல்லாம்
நண்ணி வியந்து நமையறிய—விண்ணதிரப்
போராடி வென்று புறப்பகையை ஓட்டுதற்கு
வீரர் எழுக விரைந்து.

விழியிறை, மதுரை மாவட்டம்.

பேரற்றுப் போனார் பெரும்போர் புரிந்தவர்தாம்
வேரற்றுப் போனார் வெறிகொண்டோர்—சீரற்றார்
பாரினில் போரற்ற பண்புதனை நாட்டவே
வீரர் எழுக விரைந்து.

வெற்றிமணி, மயிலம்.

கற்றென்ன, மேடையிலே கைதூக்கிப் பேசியென்ன.
வெற்றுரையால் ஏழைதுயர் வீழுமோ? —வெற்றிதரும்
ஏரெடுத்தும் சோறெடுக்கா ஏழைகளைத் தூக்கவினை
வீரர் எழுக விரைந்து.

மு. சேதுபதி, பி.எஸ்ஸி., சிவகங்கை.

# அறிவிப்பு

## Spartan

ஸ்பார்ட்டன்
என்ற பெயர்




## Addisons

அடிஸன்ஸ்
என்று மாற்றப்பட்டிருக்கிறது

சென்ற 20 ஆண்டுகளாக நாங்கள் தயாரித்து வழங்கி வரும் ஸ்பார்ட்டன் பெயிண்டுகளும், உபபொருட்களும் இனி அடிஸன்ஸ் என்ற பெயரில் உங்களுக்கு கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

அடிஸன்ஸ் என்ற பெயரில் இனி எங்கள் தயாரிப்புகளை கேட்டு வாங்குங்கள்.

**பெயரில் தான் மாற்றம்! தயாரிப்பிலும், தரத்திலும் அதே மேன்மை!!**

அடிஸன்ஸ் பெயிண்ட்ஸ் & கெமிகல்ஸ் லிட்
செம்பியம், சென்னை-11

# முந்திரி நாள் விழா

"அமெரிக்காவிலிருந்து அந்நியச் செலாவணியாக டாலர் பெறுவது கஷ்டம். அந்த டாலர்களை இந்தியா இருவகைகளில் பெறுகிறது. ஒன்று சணல் மூலமாக; மற்ரென்று முந்திரி மூலமாக.

சணலுக்கு அடுத்தபடியாக, முந்திரிதான் அந்நியச் செலாவணியை அதிகமாகச் சம்பாதித்துக் கொடுக்கிறது.

ஆனல் சணலுக்கு ஏராளமான சலுகைகள் தருகிருர்கள். அந்தச் சலுகைகள் ஏன் முந்திரிக்குத் தரப்படவில்லை? தென் மாநிலங்களில் பயிரிடப்படும் பயிர் என்பதாலா என்று இந்திய முந்திரி வளர்ச்சிக் குழுவின் கூட்டத்தில் நான் உறுப்பினராக இருந்த பொழுது கேட்டேன்.

முந்திரியில் சராசரியாக ஏக்கருக்கு 1 மூட்டைகூட மகசூல் கிடைக்கவில்லை. முந்திரி முன்பெல்லாம் காடு கரம்பாக உள்ள இடங்களில் பயிரிடப்படும் பயிராக(wasteland crop)இருந்தது. ஆனல் தற்பொழுது டாலர் சம்பாதித்துக் கொடுக்கும் பயிராக விளங்குகிறது. முந்திரியால் கிடைக்கும் வருமானம் இந்திய அரசுக்கே செல்வதால், முந்திரிச் சாகுபடிக்கு இந்திய அரசு அதிகச் சலுகைகளை—மானியங்களை அளிக்கவேண்டும்.

நமது வேளாண்மை அமைச்சர் விவசாயிகளின் கஷ்டத்தை உணர்ந்தவர். அவர் வேளாண்மை அமைச்சராக ஆகிய பிறகு எங்குப் பார்த்தாலும் பசுமையாக இருக்கிறது. நல்ல மழை பெய்து கொண்டிருக்கிறது. நான் போக்குவரத்து அமைச்சராக இருப்பதால் இங்கும் அங்கும் போய் வரும்பொழுது பார்க்கிறேன். நாடு எங்கும் பசுமையாக இருக்கிறது. எனவே சாமானிய நிலத்தில் பயிராகும் முந்திரிக்கு அதிகச் சலுகைகளைச் செய்து, முந்திரிச் சாகுபடி செய்யும் உழவர்களின் வருவாயைப் பெருக்க, வேளாண்மை அமைச்சர் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழ்நாட்டில் நவீன முந்திரித் தொழிற்சாலைகளை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உருவாக்க முயன்று வருகிறோம். கேரளாவில் உள்ளது போன்ற தொழிற்சாலைகள் இங்கு ஏற்படுத்தப்பட வேண்டும். அத்தொழிற்சாலைகளில்விவசாயிகளைப் பங்குதாரர்களாகச் சேர்த்து, அவர்களும் பலன்பெற ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது. இந்தப் பகுதியில் முந்திரிப் பழத்திலிருந்து மதுபானம் தயாரிக்கும் தொழிற்சாலையை அருணா சுகர்ஸ் நிறுவனத்தார் ஆரம்பிக்க விருக்கிருர்கள். அதனல் தற்பொழுது வீணாகிவரும் முந்திரிப் பழங்கள் பயன் படுத்தப்படும். அதன் காரணமாக முந்திரிச் சாகுபடி செய்பவர்களுக்கு அதிக வருவாய் கிடைக்கவிருக்கிறது. விரைவில் இப்பகுதி பொன்விளையும் பூமியாகிவிடும். எனவே, நமது வேளாண்மை அமைச்சர் மைய அரசுடன் கலந்து பேசி, முந்திரிச் சாகுபடி செய்யும் உழவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்க வேண்டும்'' என்று தமிழ்நாடு அரசு போக்குவரத்து அமைச்சர் திரு இராமச்சந்திரன் அவர்கள் 20—11—1971 அன்று விருத்தாசலத்தில் நடைபெற்ற முந்திரி நாள் விழாவில், மலர் வெளியிட்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

'' தாசில்தாரைப் பார்க்கப் பயந்த குடியானவர்கள் இருந்த நிலை உண்டு. ஒரு காலத்தில் உரத்திற்கு உழவர்கள் பட்ட கஷ்டம் சொல்ல முடியாததாக இருந்தது. அப்படிப்பட்ட நிலை இன்று இல்லை. அதற்குக் காரணம் இன்றைய அரசுதான் என்பதைப் பெருமையுடன் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் உழவர்களைப் பற்றி அடிக்கடி நினைப்பார். உழைத்து உழைத்து உலகுக்குச் சோறு போடும் உழவன்தான் கருக்காச்சோறு சாப்பிட்டு வருகிருன். எனவே உழவனின் வாழ்வை உயர்த்த வேண்டுமென்பதில் அண்ணாவுக்கு மிகுந்த அக்கறை இருந்தது.

நமது நாட்டிலே நல்ல வளம் இருக்கிறது. உழவர்களிடையே நல்ல மனம் இருக்கிறது. ஏன் உணவு உற்பத்திப் பெருக்கம் இல்லை என்று அண்ணா ஆழ்ந்து சிந்தித்தார். உலகை வாழவைக்கும் உழவுத் தொழிலுக்குப் பல்வேறு இன்னல்கள் இருக்கலாமா என்று கலைஞரிடம் கேட்டார். கலைஞரும் கூடாதுஎன்ருர். இருவரும் சேர்ந்து சிந்தித்துப் பல்வேறுதிட்டங்களைத் தீட்டினர். கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து உழவர்களின் கருத்தறிந்தனர். உழவர்களுக்கு உழவுத் தொழிலில் ஊக்கம் ஏற்படுவதற்கான சலுகைகள் அளித்தனர். அதனல்





[illegible] உணவுப் பற்றுக்குறை மறைந்து, தன்னிறைவு பெற்றுள்ளோம்.

வேளாண்மைத்துறையில் பணியாற்றும் களப்பணியாளர்களிலிருந்து, இயக்குநர் வரை தங்கள் பணியைத் திறமையாகவும் கடமையுணர்ச்சியுடனும் செய்கிறார்கள். அவர்கள் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் நல்ல பணி செய்கிறார்கள்.

முந்திரிச் சாகுபடிக்கு அதிகச் சலுகை அளிக்கவில்லை என்று சட்டமன்ற உறுப்பினர் சுப்பிரமணியம் குறிப்பிட்டார். தமிழ்நாடு அரசு முந்திரிச் சாகுபடி செய்பவர்களுக்குப் பல உதவிகளைச்செய்கிறது.'' என்று முந்திரி நாள் விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் அன்பில் தருமலிங்கம் அவர்கள் குறிப்பிட்டு விட்டு, என்னென்ன உதவிகளைத் தமிழ்நாடு அரசு செய்கிறது என்பதைத் 'தமிழரசு' இதழிலிருந்து படித்துக் காட்டி விளக்கினார். அவர் மேலும் பேசுகையில், போக்குவரத்து அமைச்சர் குறிப்பிட்டது போல் நிச்சயமாக நவீன முந்திரித் தொழிற்சாலை அமைக்கப்படும் என்றார்.

"இந்த ஆண்டில் 7,500 ஏக்கர் முந்திரியில் 2 முறை இலவசமாக மருந்து தெளிக்கப்படும். முந்திரிக்கு ஆகாய விமானம் மூலம் மருந்து தெளிக்கவும், திட்டமிட்டுள்ளோம். அதற்கு ஆகும் முழுச் செலவையும் மைய அரசே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டு எழுதியுள்ளோம். இச்சலுகைகளையெல்லாம் பயன்படுத்தி முந்திரி உற்பத்தியைப் பெருக்க வேண்டும்'' என்று அவர் முந்திரிச் சாகுபடி செய்யும் உழவர்களைக் கேட்டுக் கொண்டார்.

முந்திரி நாள் விழாவிற்கு வந்திருந்தவர்களைத் துணை வேளாண்மை இயக்குநர் திரு சிவசுப்பிரமணியம் அவர்கள் வரவேற்றுப் பேசினார். விழாவில் விருத்தாசலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு செல்வராஜ் அவர்களும், உளுந்தூர்பேட்டைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சுப்ரமணியம் அவர்களும் முந்திரிச் சாகுபடியில் உள்ள பிரச்சினைகளை விளக்கிப் பேசினார்கள். துணை வேளாண்மை இயக்குநர் திரு பூ. சோலையப்பன் அவர்கள் நன்றி கூறினார். முந்திரி நாள் விழா விருத்தாசலத்தில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நடைபெற்றது. அதையொட்டி ஒரு பொருட் காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முந்திரிச் சாகுபடி செய்யும் உழவர்கள் பெருந்திரளாக வந்திருந்தனர். முந்திரி நாள் விழா மொத்தத்தில் ஒரு திருநாளாகவே இருந்தது.

---


# பசுமைப் புரட்சிக்கும் பச்சைச் சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை, தொழில், போக்குவரத்து ஆகிய துறைகள் வளம் பெற அரும்பணி ஆற்றும் நிறுவனம் என்பீல்டு இந்தியா.



தி என்பீல்டு இந்தியா லிமிடெட்
சென்னை-19

FDSEI-1513TM

# புரட்சித்தீ மூட்டிய போர்க்கவி முரசு



வாளினைப் போலும் மீசை
வல்லமை துள்ளும் நெஞ்சம்
ஆளினை மயக்கும் கண்கள்
அழகிய நெற்றிப் பொட்டு
கேளிரை மறவாப் பாசம்
கீழ்நிலை ஒழிக்கும் வேகம்
தோளினை உயர்த்தும் வீரம்
தோய்ந்தபா ரதியாம் செல்வர்!

அன்னையின் நாட்டில் உள்ளார்
அடிமையாய் நாமம் பெற்றுக்
கண்ணையும் விற்றுக் கொண்டு
கடுந்துயர் உற்ற போழ்தில்
புண்ணியப் புலவர் வந்தார்
புலியெனச் சீறிப் பாய்ந்தார்!
எண்ணிலாக் கவிதை தந்தார்;
இமயமாய் எழுந்தே நின்றார்!

உண்மையைத் தெய்வம் என்றார்
உரிமையைச் செல்வம் என்றார்
திண்மையை வாக்கிற் சேர்த்தார்
திக்கெலாம் பரவச் செய்தார்
பெண்மையைப் போற்றிச் சொன்னார்
பேதைமை ஒழித்துப் போனார்!
நன்மையை நாட்டில் காண
நாளெலாம் துடித்தார் அன்பாய்!

வள்ளுவர், கம்பர், கூத்தர்
வாய்மையர், சாத்தர்; நெஞ்சை
அள்ளிடும் சிலம்புச் செல்வம்
ஆக்கிய வேந்தர்; பேய்போல்
துள்ளிடும் மாற்றார் ஆட்சித்
துன்பினை அறியார்; தீமை
கிள்ளிடும் புரட்சித் தீயின்
கிளர்ச்சியில் இவரே நின்றார்!

பைந்தமிழ்ப் புலவர் எல்லாம்
பயத்தினில் மிதப்பார்; அன்னார்
ஐந்திணைப் பாடம் அன்றி
அரசியல் அறியார் என்றே
தொய்ந்திடும் மதியார் எல்லாம்
சொல்லிய போழ்தில் வீர
மைந்தராய்த் தோற்றம் தந்தார்
பாரதி வாழ்த்துப் பெற்றார்!



புலவர் தமிழ்ப்பித்தன்

வினா : நவம்பர் 1-ஆம் தேதி 'தமிழரசு' இதழில் ''பாரி முல்லை'' பற்றிப் படித்தவுடன், எனது வீட்டின் தோட்டத்தில் அதைப் பயிரிட விரும்பியுள்ளேன். ஆகையால் அதன் பதியம் எங்கு, எவ்வாறு பெற இயலும் என்பதை எழுத வேண்டுகின்றேன்.

—ஜி. சந்திரசேகரன்,
கோவிந்தராஜ் நகர்,
தருமபுரி மாவட்டம்.

விடை : பல்லாண்டு ஆராய்ச்சிக்குப் பிறகு, 26—9—1971 அன்றுதான் ''பாரி முல்லை'' வெளியிடப்பட்டது. கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக மலர் ஆராய்ச்சிப் பண்ணையில், தற்பொழுது பாரிமுல்லை இனப் பெருக்கம் செய்யப்பட்டு வருகிறது. விரைவில் பாரிமுல்லைப் பதியங்கள் விற்பனைக்குக் கிடைக்கக் கூடும். பதியங்களின் விலை விவரம், எப்பொழுது கிடைக்கும், எப்படி அனுப்பப்படும் என்ற விவரங்களை அறியத் தயவு செய்து கீழ்வரும் முகவரிக்கு எழுதுங்கள்.

— மலர்வகை நுண்ணறிஞர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

(குறிப்பு : இதே கேள்வியைப் பலர் கேட்டுள்ளதால், ஒவ்வொருவருக்கும் தனியே விடையளிக்கப்படவில்லை.)

வினா : கத்தரிச் செடி பயிரிடும் முறையையும், உழவு முறையையும், உரமிடும் அளவு முறையையும் அடுத்த 'தமிழரசு' இதழில் தெள்ளத் தெளிவாக விளக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

—க. திருஞானசம்பந்தம்,
மாம்பட்டு, வடஆர்க்காடு,
மாவட்டம்.

விடை : கத்தரி பயிரிடுவதற்குக் கீழ்க்கண்ட பருவங்கள் ஏற்றதாகும்.

(1) ஜூன் முதல் நவம்பர் முடிய.

(2) நவம்பர் முதல் ஏப்ரல் முடிய

(3) பிப்ரவரி முதல் ஜூலை முடிய

## வேளாண்மை வினாக்களே கேட்கப்படவேண்டும்

கத்தரியில் உயர்ந்த மகசூல் பெறுவதற்குக் கீழ்வரும் ரகங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

(1) கொத்து வெள்ளை (எஸ். எம். 62).

(2) குடியாத்தம் வரிக்கத்தரி (எஸ்.எம். 68).

(3) நீண்ட ஊதா (எஸ். எம்.60)

(4) பூசா ஊதா நீளம்

(5) பூசா ஊதா உருண்டை

ஓர் ஏக்கர் கத்தரி சாகுபடி செய்ய 150 கிராம் விதைகளை ஒரு சென்ட் நிலத்தில் நாற்றுவிட வேண்டும். ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் அக்ரசான் அல்லது செரசான் மருந்தைக் கலந்து நாற்றுவிட வேண்டும். நாற்று விடுவதற்கு மேடைப்பாத்திகள் அமைப்பதே சிறந்தது.

கத்தரிச் சாகுபடி செய்யவிருக்கும் நிலத்தை இரும்புக் கலப்பையால் 4 அல்லது 5 முறை நன்கு உழுது புழுதியாக்க வேண்டும். ஏக்கருக்கு 10 டன் (26 வண்டி) தொழு உரம் இட வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 100 கிலோ அமோனியம் சல்பேட், 125 கிலோ சூப்பர் பாஸ்பேட், 20 கிலா மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும்.

அதன்பின் 75 சென்டி மீட்டர் (2 அடி) இடைவெளியில் பார் அமைக்க வேண்டும். பார்களில் தண்ணீர் விட்டு 36 முதல் 35 நாட்கள் வயதுடைய நாற்றுகளைப் பார்களின் ஒரு பக்கத்தில் மட்டும் 60 சென்டி மீட்டருக்கு (2 அடி) ஒன்று வீதம் நட வேண்டும். நாற்று நட்ட 3-ஆம் நாள் உயிர் நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

கத்தரி நாற்றுநட்ட 3 வாரங்களுக்குப் பின் ஏக்கருக்கு 50 கிலோ அமோனியம் சல்பேட் உரத்தை மேலுரமாக இட்டு, மண் அணைத்துத்தண்ணீர் பாய்ச்ச வேண்டும். கத்தரி நாற்று நட்ட 6 வாரங்களுக்குப் பிறகு இரண்டாம் முறையாக ஏக்கருக்கு 50 கிலோ அமோனியம் சல்பேட் உரத்தை மேலுரமாக இட்டு மண் அணைத்துத் தண்ணீர் விட வேண்டும்.

கத்தரி வயலில் 2 அல்லது 3 முறை களைஎடுத்தல் அவசியம். இளஞ்செடிகளுக்கு வாரம் 2 முறையும், வளர்ந்த செடிகளுக்கு வாரம் ஒரு முறையும் முறையாகத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

மேற்கூறிய முறைகளை மேற்கொண்டு கத்தரிச் சாகுபடி செய்து, பயிர்ப்பாதுகாப்பு முறைகளையும் முறையாகச் செய்து வந்தால், ஓர் ஏக்கரிலிருந்து 16,000 முதல் 18,000 கிலோ கத்தரிக்காய்கள் கிடைக்கும்.

வினா : எங்கள் நிலத்தில் ஒரு ஏக்கர் கத்தரி சாகுபடி செய்துள்ளோம். செடி நன்றாகச் செழித்து வளர்ந்திருந்த போதிலும் காய்கள் அதிகமாகக் காய்க்கவில்லை. மேலும் பூச்சிகளால் நிறையப் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு என்னென்ன பூச்சி மருந்துகள் அடிக்க வேண்டும் ? எந்தெந்தச் சமயத்தில் அடிக்க வேண்டுமென்பதைத் தயவு செய்து விளக்கவும்.

—கே. எஸ். கலியபெருமாள்
கட்டமுத்துப்பாளையம்,
தென்னார்க்காடு மாவட்டம்.

விடை : கத்தரிச் செடிகள் நன்றாகச் செழித்து வளர்ந்திருந்த போதிலும்காய்கள் அதிகமாகக் காய்க்கவில்லையென்றால், தங்கள் நிலத்தில் தழைச்சத்து அதிகமாக இருக்கக் கூடும். போதிய அளவு சூப்பர்பாஸ்பேட் உரமும், மூரியேட் ஆப் பொட்டாஷ் உரமும் இட்

டிருந்தால் தான் நிறையக் காய்க்கும். இல்லாவிட்டால் தழைச்சத்து மிகுதியின் காரணமாகச் செடிகள் செழித்து வளருமே ஒழிய நிறையக் காய்க்காது. இதை மனத்திற்கொண்டு இனிமேலாவது மேலே கூறப்பட்டுள்ள விடையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள அளவு உரங்களை இட்டுக் கத்தரி பயிரிட முயலுங்கள். தங்கள் கத்தரிச் செடிகள் பூச்சிகளால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் எந்த வகைப் பூச்சி என்பதைக் கூறவில்லை. பூச்சிகளுக்கு ஏற்ற மருந்தினைத் தெளித்தால் தான், அவைகளின் தாக்குதலை முழு அளவில் கட்டுப்படுத்த முடியும்.

பொதுவாகக் கத்தரிச் செடிகளைப் புள்ளி வண்டு (கடலை வண்டு), அசுவணி, காய் துளைக்கும் புழு, மாவுப் பூச்சி, உண்ணி ஆகிய பூச்சிகளும், வாடல் நோயும் தாக்கக் கூடும்.

புள்ளி வண்டுகளைக் கட்டுப்படுத்த 1 பங்கு கால்சியம் ஆர்சினேட் என்ற மருந்தையும், 4 பங்கு சுண்ணாம்புத் தூளையும் சேர்த்து, ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவலாம் அல்லது கார்பரில் 10 சதத் தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவலாம்.

அசுவணி, கொழுந்து துளைப்பான், காய் துளைக்கும் புழு, புள்ளிவண்டு ஆகிய 4 வகைப் பூச்சிகளும் காணப்பட்டால் என்ட்ரின் 0.02 சதம் (100 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) அல்லது டி.டி.டீ. 0.1 சதம் (1 கிலோ 50 சத டி.டி.டீ. நனையும் தூளை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து அல்லது கார்பரில் 0.1 சதம் (1 கிலோ கார்பரில் 50 சத நனையும் தூளை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்க வேண்டும்.

மாவுப்பூச்சி (சப்பாத்திப்பூச்சி, பஞ்சுப் பூச்சி என்றும் கூறப்படுவது உண்டு) தாக்கினால், பாரத்தியான் 0.05 சதம் (100 மில்லி லிட்டர் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்க வேண்டும்.

உண்ணிகள் (Mites) தாக்கியிருந்தால் ஏக்கருக்கு 10 கிலோ கந்தகத் தூளை தூவ வேண்டும் அல்லது 1 கிலோ தண்ணீரில் கரையும் கந்தகத்தை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

வாடல் நோய் தாக்கினால் செடிகள் திடீரென்று இறந்து காய்ந்துவிடும். இதைத் தடுக்க தண்ணீரில் கரையும் செரசான் மருந்தைத் தெளித்து (1 கிலோ மருந்தை 1000 லிட்டர் தண்ணீரில் கரைத்து) மண்ணை நன்கு நனைக்க வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு மருந்து தெளிக்க மேற்கூறிய அளவு மருந்துக் கரைசலில் 360 லிட்டர் பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு தடவை மருந்து தெளித்த பின்பும் பூச்சி அல்லது நோயின் தாக்குதல் காணப்படின் 15 நாட்கள் கழித்து மீண்டும் அதே முறையில் மருந்து தெளிக்க வேண்டும்.

மருந்து தெளிப்பதற்கு முன்பு காய்களைப் பறித்துவிட வேண்டும். கூடுமானவரை மருந்து தெளித்த 15 நாட்களுக்குக் காய்களைப் பறிக்காமல் இருப்பதே நல்லது. அதற்குள் காய்களைப் பறிக்க வேண்டிய அவசியம் ஏற்படின் காய்களைத்தண்ணீரில்நன்கு கழுவிய பின்பே, சமைப்பதற்குப் பயன்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் காய்களின் மேல் படிந்துள்ள மருந்தின் நஞ்சு உடலுக்குத் தீங்கு விளைவிக்கும். எனவே இதில் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் முக்கியம்.

வினா: தமிழ்நாட்டில்வேளாண்மை வளர்ச்சிக்காகக் குழாய்க் கிணறுகள் போடுவதாக 'தமிழரசு' மூலம் அறிந்தேன். ஒரு குழாய்க் கிணறு போட எவ்வளவு செலவு ஆகும். நாங்கள் 4 அல்லது 5 பேர் சேர்ந்துபோடலாம் என ஆசைப்படுகின்றோம். அதற்கு எங்களுக்கு அரசு உதவி செய்யுமா?

—வி. அளகேசன்,

கொமரப்பாளையம், சேலம் மாவட்டம்.

விடை: நிலத்தின் கீழே உள்ள பாறை அல்லது மலை ஆகியவைகளுக்கு ஏற்பவும் தண்ணீர் கிடைக்கும் ஆழத்திற்கு ஏற்பவும் குழாய்க்கிணறு அமைக்கும் செலவு ரூபாய் 5,000 முதல் ரூ. 10,000 வரை ஆகலாம். சில இடங்களில் ரூபாய் 20,000-க்கு மேலும் ஆகியுள்ளது. இதுபற்றி அறிய

சேலம் 1-ல் உள்ள துணை வேளாண்மைப் பொறியாளர் (மெக்கானிக்கல்) அவர்களை அணுகுதல் நல்லது. நான்கு அல்லது ஐந்து பேர் சேர்ந்து குழாய்க் கிணறு அமைக்க நீர்ப்பாசனக்கூட்டுறவுச்சங்கம் அமைத்தால்தான் இயலும். நீர்ப்பாசனக்கூட்டுறவுச்சங்கம் அமைப்பது பற்றிய விவரங்களை அறிய உங்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள வளர்ச்சி அலுவலர் (கூட்டுறவு) அவர்களைக் கலந்தாலோசியுங்கள்.

# செய்திகள்

ஜெர்மனி நாட்டில் உள்ள அனைத்துலக ஜெட் விமான நிலையம் எந்த நேரத்திலும் பரபரப்பாகக் காணப்படுகிறது. விமானங்கள் அங்கு வந்த வண்ணமும் சென்ற வண்ணமுமாகவே இருக்கின்றன. பொதுவாக — விறுவிறுப்பான பகல் வேளைகளில் நிமிடத்திற்கு ஒரு விமானம் அந்த விமான நிலையத்தில் காட்சி தருகிறது. அமைதி நிறைந்த இரவு வேளைகளில் நான்கு நிமிடத்திற்கு ஒரு விமானம் அங்கே காட்சி தருகிறது. அங்கே உள்ள ரெயின் மெயின் விமான நிலையத்தில் ஏறக்குறைய 210 விமான நிறுவனங்களைச் சேர்ந்த விமானங்கள் வந்து செல்கின்றன.

* * *

கல்கத்தாவிலிருந்து சென்னைக்குக் குழாய் மூலம் பால் வழங்கும் புதிய திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இது போலவே டில்லியிலிருந்து பம்பாய்க்கும், கல்கத்தாவிற்கும் குழாய் மூலம் பால் அனுப்பப்படும்.

டெல்லி, கல்கத்தா, சென்னை, பம்பாய் ஆகிய 4 நகரங்களும் குழாய்களின் மூலம் இணைக்கப்படும். எந்த நகரில் பால் உபரியாக இருக்கிறதோ, அங்கிருந்து மற்ற நகரங்களுக்கு விரைவாகக் குழாய் மூலம் பால் அனுப்பப்படும்.

இம் மாபெரும் திட்டத்திற்கு ரூபாய் 100 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு உலக வங்கி 31½ கோடி ரூபாய் மதிப்புள்ள 1,26,000 டன் பால் பவுடரும் 42,000 டன் நெய்யும், கொடுத்து உதவுகிறது.

இத்திட்டத்திற்காகக் குழாய்கள் பூமிக்கு அடியில் புதைக்கப்படும். தற்பொழுது டெல்லியிலிருந்து பம்பாய்க்குக் குழாய்கள் புதைக்கப் பட்டுவிட்டன. டெல்லியிலிருந்து கல்கத்தாவுக்குக் குழாய்கள் புதைக்கும் வேலையும் துவங்கப்பட்டுள்ளது.



# செய்திகள்

பின்பு கல்கத்தாவிலிருந்து சென்னைக்குக் குழாய்கள் புதைக்கப்படும். இவ்வேலைகள் 1975-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடிந்துவிடும். அதன் பிறகு பம்பாய்க்கும், சென்னைக்கும் இடையே குழாய்கள் புதைக்கப்படும்.

சென்னை, பம்பாய், கல்கத்தா, டெல்லி ஆகிய 4 நகரங்களிலும் பெரிய அளவில் பால் பண்ணை துவங்கப்படும், இத்திட்டத்தினால் 2 கோடி மக்கள் பயன் பெறுவார்கள்.




காகிதப் புட்டிகளில் பால் அடைக்கப்பட்டு விற்பனை செய்யும் புதிய முறையும் புகுத்தப்படும். இம்முறையினால் பால் 15 நாட்களுக்குக் கெடாமல் இருக்கும். காசு போட்டவுடன் பால் வழங்கக் கூடிய சிறிய இயந்திரங்களை, நகரின் முக்கிய இடங்களில் வைக்கும் திட்டமும் பரிசிலனையில் உள்ளது.

* * *

இன்று, மக்களின் வாழ்க்கையில் பெரும் பங்கு வகிக்கும் தட்டெழுத்துப்பொறியைக் கண்டு பிடித்தவர் கிறிஸ்ட்டபர் லாதம் ஷோல்ஸ் ஆவார். அவரது கண்டு பிடிப்பு ஒவ்வொரு கட்டமாக வளர்ச்சியடைந்தது. ரெமிங்டன் என்பவரின் கூட்டுறவுடன் இறுதியில் வெளிவந்தது. அந்தப் பொறிக்கு ரெமிங்டன் என்று பெயர் வந்தது.

# செய்திகள்

மாற்று இருதயம், மாற்றுச் சிறுநீரகம் போன்ற சிகிச்சைகளைப் போலவே பற்களையும் மாற்றி வைத்துச் சிகிச்சை செய்யும் முறை ஒன்று தற்போது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

பற்களே இல்லாத பொக்கை வாய்க்கு, பல் செட் வைத்துக் கொள்வது அல்ல இந்த முறை. விழுந்துவிட்ட—அல்லது எடுக்கப்பட்ட—ஒரு பல்லின் இடத்தில், வேறு ஒருவரின் வாயிலிருந்து ஈறுடன் கூடிய பல்லை எடுத்து வைத்து இவரது வாய் ஈறுடன் ஒட்டவைப்பது இந்த முறை. சிறிது நாட்களில் அந்தப் பல் அவரது பிற பற்களைப் போலவே ஈறுடன் ஒட்டிக் கொண்டு, வளரவும் ஆரம்பிக்கும்.

வடகிழக்கு இங்கிலாந்தில் உள்ள மருத்துவமனை ஒன்றில் இந்தப் பல் மாற்றுச் சிகிச்சையை டேவிட் டிக்ஸன் என்னும் பிரிட்டிஷ் டாக்டர் வெற்றிகரமாகச் செய்து முடித்தார்.

* * *

ஜெர்மனி ஒரு புதுவகைப் புகைப்படக் கருவியைத் தயாரித்திருக்கிறது. ஏறக்குறைய ஒரு விரல் அளவே உள்ளது அந்தக் கருவி. இதில் அரைக்கால் அங்குல பிலிம்தான் பயன்படுத்தப்படுகிறது. இரண்டாம் உலகப் பெரும் போரின் போது, துப்பறியும் நிபுணர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட இந்தச் சிறிய புகைப்படக் கருவி, தற்போது, மேலும் சில நவீன அமைப்புகளுடன் உருவாக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இந்த அதிசயப் புகைப்படக் கருவி, அமெரிக்க நாட்டில் அதிக அளவில் விற்பனையாகிறது.

# ஏழையாய் இருந்து ஏற்றம் பெற்றவர்

"அண்ணா ! அண்ணா! அந்த வண்ண விளக்குகளைப் பார்த்தீர்களா, எவ்வளவு அழகாக இருக்கிறது !" என்று கண்காட்சியைச் சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்த கண்ணகி சொன்னாள்.

"ஆமாம்.......... இன்றைக்கெல்லாம் அதையே பார்த்துக் கொண்டிருக்கலாம் போல இருக்கிறது. இல்லையா ?" என்றான் மகிழ்ச்சியாகக் கண்ணகியின் அண்ணன் இளங்கோ.

கண்காட்சியில் மக்கள் திரள் திரளாகக் கண்ணுக்கு விருந்தான காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டே சென்றார்கள். ஓரிடத்தில் பால்நிலவைப்போலப் 'பளிச்' சென்று மின்சார விளக்கு ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தது. அந்த விளக்கின் ஒளியில் கண்ணகி பார்க்க இன்னும் அழகாக இருந்தாள். அவள் தன்னையே ஒரு முறை பார்த்துக் கொண்டாள்.

"என்னம்மா, கண்ணகி ! உன் அழகைப் பார்க்க உனக்கே கண்கள் கூசுகிறதா ?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் இளங்கோ.

"இல்லை, அண்ணா. இவ்வளவு ஒளியுள்ள இந்த மின்சார விளக்கை யார் கண்டு பிடித்திருப்பார்கள் ? அதற்கு எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பார்களென்று யோசனை பண்ணினேன்...... அவ்வளவு தான்" என்றாள் கண்ணகி. இளங்கோவுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. "இப்படியல்லவா கேள்வி கேட்க வேண்டும். அப்பொழுது தானே அறிவு வளர்ச்சி ஏற்படும் ?" என்று தனக்குள் எண்ணிக்கொண்டு, ஒரு சிற்றுண்டி விடுதிக்குத் தன் தங்கையை அழைத்துச்சென்றான்.

"என்னண்ணா ! விளக்கைப் பற்றிக் கேட்டால்,காபி வாங்கித் தரச் சிற்றுண்டி விடுதிக்குப் போறீங்க ?" என்றாள் புரியாமல் கண்ணகி.

"எல்லாம் வேலையாகத்தான் ...... கொஞ்சம் வயிற்றுக்குப் போட்டுவிட்டுப் பிறகு நீ கேட்ட கேள்விக்கு ஒரு கதை சொல்லப் போகிறேன்......" என்றான் இளங்கோ நாற்காலியில் உட்கார்ந்துகொண்டே.

"கதையா? அப்படியென்றால் அதை இப்போதே செல்லுங்களண்ணா........கதை என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும்...." என்றாள் ஆவலுடன் கண்ணகி.

சிற்றுண்டி முடிந்து இருவரும் அருகே இருந்த மணற் பரப்பில் வந்து உட்கார்ந்தனர். கண்காட்சியாயிற்றே, சொல்ல வேண்டுமா ? எந்தப் பக்கம் திரும்பினாலும் வண்ண விளக்குகள் தான் ! மின்சாரத்தின் விந்தை அவர்களை வியப்படையச் செய்து கொண்டிருந்தது.

"அண்ணா ! சொல்லுங்கள் கதையை......?" என்று வற்புறுத்தினாள் கண்ணகி.

விளக்கின் ஒளி மிகுதியால் கண்களைக் கசக்கிக் கொண்ட இளங்கோ கதை சொல்ல ஆயத்தமானான்.

"கண்ணகி ! கதையைச் சொல்வதற்கு முன், ஒரு குறிப்பை உனக்குச் சொல்கிறேன். மின்சாரப்பல்பைஎடிசன்என்னும் விஞ்ஞானி கண்டு பிடிப்பதற்கு முன்பே, மைக்கல் ஃபாரடே என்பவர், மின்சாரத்தின் மூலம் ஒளியை உற்பத்தி செய்யலாம் என்பதைக் கண்டு பிடித்தார். அந்த ஒளிதான் இப்போது நம் கண்களைக் கூசச் செய்கிறது. இப்போது மைக்கல் ஃபாரடே என்பவரைப் பற்றி உனக்குச் சொல்லப் போகிறேன். அவர் யார் ? எப்படி வாழ்க்கையிலே முன்னேறினார் என்பதைப் பற்றியெல்லாம் நீ தெரிஞ்சிக்கப் போறே...."

"சொல்லுங் கண்ணா !" கண்ணகி, கதை கேட்கக் காதை தீட்டிக் கொண்டாள்.

"மைக்கல் ஃபாரடே இலண்டனில் பிறந்தவர். அவருடைய அப்பா இரும்பு வேலை செய்யும் ஒரு கருமான். இவர்களுடைய குடும்பம் மிகவும் வறுமையிலே இருந்தது. ஒரு குதிரை இலாயத்திலே குடிசையைக் கட்டிக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள்" என்று இளங்கோ சொல்லி முடிப்பதற்குள் கண்ணகி "ஐயோ பாவம் !" என்று இரக்கப்பட்டாள்.

இளங்கோ மேலும்சொன்னான்; "மைக்கல் ஃபாரடேயின் குடும்பம் அந்தக் குதிரை இலாயத்தில் குளிராலும், பட்டினியாலும் தவித்தன. சில சமயங்களில் ஒரே ஒரு ரொட்டித் துண்டைப் பங்கு போட்டுக் கொண்டு நாட்களைக் கழித்திருக்கிறார்கள்".

கண்ணகி கேட்டாள் ; "மைக்கேல் படிக்கவில்லையா ?"

"ஏன் இல்லை. மைக்கேல் தன் கிராமத்தில் ஒரு பள்ளியில் சேர்ந்து, ஓரிரண்டு ஆண்டுகளில் எழுதவும் படிக்கவும், கணக்குப் போடவும் கற்றுக் கொண்டான். அதோடு அவன் பள்ளிப் படிப்பு முடிந்தது !"

"ஏன் ?"

"வயிறு இருக்கிறதே! அதற்கு வழி தேட வேண்டாமா ? ஒரு புத்தக வியாபாரியிடம் வேலைக்குச் சேர்ந்தான். அந்த வியாபாரி செய்திப் பத்திரிகை படிப்பகம் ஒன்றையும் நடத்தி வந்தான். சிறுவன் மைக்கேல் நாள்தோறும் காலையில் ஒரு பத்திரிகையை எடுத்துக்கொண்டு, வாடிக்கைக்காரர்களின் வீடுகள் ஒவ்வொன்றிற்கும் செல்வான். அவர்கள் ஒவ்வொருவரும் அதைப் படித்து முடிக்கும் வரையிலும் மைக்கேல் காத்திருப்பான் ! பிறகு அதை வாங்கிக் கொண்டு அடுத்தவர் வீட்டுக்குச் செல்வான். இதற்காக அவர்கள் ஒவ்வொருவரும்

நாளையத் தலைமுறை

அவனுக்குக் காசு கொடுப்பார்கள். இப்படிக் கொஞ்ச நாள் வேலை பார்த்து வந்தான்....''

'' பிறகு? அவனை வேலையிலிருந்து நீக்கி விட்டார்களா?''

'' இல்லை, கண்ணகி! மைக்கேலின் திறமையைக் கண்ட முதலாளி அவனைத் தம்மிடமே 'பைண்டிங்' வேலைக் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தார். சில சமயம் அந்தக் கடைக்கு விஞ்ஞானப் புத்தகங்கள் 'பைண்ட்' செய்வதற்கு வரும். மைக்கேல் அந்தப் புத்தகங்களைப் 'பைண்ட்' செய்வதற்குள், ஒரு வரி கூட விடாமல் படித்து முடித்து விடுவான்! கண்ணகி! உன்னால் அது முடியுமா?''

'' ம்........மேலே சொல்லுங்கண்ணு!''

'' மைக்கேல் விஞ்ஞான சம்பந்தமான புத்தகங்களை ஆர்வத்தோடு படித்தான். ஒரு சமயம் கலைக் களஞ்சியம் புத்தகத்திலே மின்சாரம் பற்றி இருந்ததைப் படித்து அளவிலா ஆனந்தம் அடைந்தான். அதோடு நின்றானா அவன்? கொஞ்சம் காசைச் சேர்த்துக்கொண்டு, சொந்தமாக ஒரு மின்சார இயந்திரத்தையே உண்டாக்க முற்பட்டான்!''

'' அப்படியா? அப்போது அவனுக்கு என்ன வயது இருக்கும்?''

'' பதின்மூன்று! ஆம். அந்த வயதிலேதான் அவன் இப்படியொரு அதிசயச் செயலிலே ஈடுபட்டான். இதற்கிடையே அவன் விஞ்ஞானச் சொற்பொழிவைக் கேட்கவும் பேராசை கொண்டான்.

ஒரு சமயம் 'இயற்கை விஞ்ஞானம்' என்பது பற்றிப் பிரபல விஞ்ஞானி ஒருவர் பேசுவதாக அறிந்தான். அதற்குப் போகக் கட்டணம்வேறு போட்டிருந்தார்கள். மைக்கேல் என்ன செய்வான், பாவம்! உடனே அவனுக்கு ஒரு யோசனை வந்தது. தயங்கித் தயங்கி தன் அண்ணன் ராபர்ட்டிடம் சொன்னான். ராபர்ட் ஒரு கொல்லன் பட்டறையில் வேலை செய்பவன்; அவன் தம்பியின் விஞ்ஞான ஆர்வத்தைக் கண்டு பெருமைப்பட்டான். உடனே அவனுக்குக் காசு கொடுத்து அந்தப் பேச்சைக் கேட்க அனுப்பிவைத்தான்.''

''அண்ணன் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும். நீங்களும் இருக்கிறீர்களே!''

''மைக்கேலிடம் ஒரு நல்ல பழக்கம் இருந்தது. அதுதான் குறிப்பெழுதும் பழக்கம். விஞ்ஞானிகள் பேசும்போது முக்கியமானவற்றைக் குறிப்பு எழுதிக் கொள்வான். அப்படி எழுதிய நோட்டுப் புத்தகங்களைத் தானே அழகாகப் 'பைண்ட்' செய்து கொள்வான்.

''இப்போதுள்ளவர்கள் தம் பாடத்தை எழுதுவதற்குக் கூடச் சோம்பல் படுகிறார்கள். மற்றவர்கள் பேச்சை எங்கே குறிப்பு எழுதப்போகிறார்கள்?''

''நன்றாகச் சொன்னாய் கண்ணகி! மைக்கேல் வேலை செய்த புத்தகக் கடைக்கு ஒருவர் வழக்கமாக வந்து கொண்டிருந்தார். அவர் மைக்கேலின் விஞ்ஞான ஆர்வத்தைக் கண்டு மிகவும் மகிழ்ந்தார். அந்தச் சமயம், சர் ஹம்பிரி டேவி என்னும் பிரபலவிஞ்ஞானி நான்கு சொற்பொழிவுகள் நிகழ்த்தவிருந்தார். அந்தக் கூட்டத்துக்கு மைக்கேலை அவர் அழைத்துச் சென்றார். நான்கு சொற்பொழிவுகளையும் மிக உன்னிப்பாகக் கேட்ட மைக்கேலுக்கு எல்லையில்லா ஆனந்தம் ஏற்பட்டது. உடனே ஒரு பெரிய கடிதத்தை எழுதி சர் ஹம்பிரிக்கு அனுப்பினான்...''

''கடிதத்தில் மைக்கேல் என்ன எழுதியிருந்தார்?''

''சர் ஹம்பிரி 'ராயல் இன்ஸ்ட்டிடியூஷன்' என்ற விஞ்ஞானக் கூடத்தை நிறுவியிருந்தார். அங்கு ஒரு சிறு வேலை தர முடியுமா என்றும், தனக்கு விஞ்ஞானத்தில் அளவு கடந்த ஆர்வம் உண்டு என்றும் எழுதியிருந்தான்.''

''அதற்கு அவரிடமிருந்து பதில் வந்ததா?''

''வந்தது. ஆனால் எந்த உறுதிமொழியும் அதில் இல்லை. 'விஞ்ஞானம் ஒரு பொல்லாத எஜமானி; அதன் மூலம் ஒருவர் பிரதிபலன் பெறுவது முடியாத காரியம்' என்று எழுதியிருந்தார். பிறகு ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று முயற்சிப்பதாகவும் அதில் அவர் குறிப்பிட்டிருந்தார்.''

''ஐயோ, பாவம்! மைக்கேலுக்கு வேறு வேலையே கிடைக்கவில்லையா?''

''மைக்கேலின் தகப்பனார் இறந்துவிட்டதால், குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பு இவர் மேல் விழுந்தது. அமைதி சிறிதும் இல்லாமல் எங்கெங்கோ அலைந்தார். ஆனால், இதற்கிடையில் ஏதேதோ சோதனைகளைச் செய்து கொண்டுதான் இருந்தார். இலண்டனில் உள்ள ஒரு புத்தகப் 'பைண்டிங்' கடையில் மைக்கேல் வேலைக்கு அமர்ந்தார். ஆனால் அதிலும் அவருக்குச் சலிப்பு ஏற்பட்டது.....''

### ஐ. நா. வில்

ஐக்கிய நாடுகள் அவையில் சீன நாடு சேர்க்கப்பட்டது. இதனால் உலக மக்கள் தொகையில் **95** சதவீதம் ஐ. நா. அவையில் பிரதிநிதித்துவம் பெற்றதாகிவிடுகிறது.

இன்னும் ஒன்பதே நாடுகள்தான் இதில் அங்கம் பெற வில்லை. அவை இரு ஜெர்மனிகள்; இரு கொரியாக்கள்; இரு வியட்நாம்கள்; ரொடீசியா நாடு (இது இன்னும் சட்டபூர்வமாக உலக நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்படாதது); சுவிட்சர்லாந்து; (ஐ. நாவில் அங்கம் வகிக்காமல் தனித்து இயங்க விரும்புவது) தாய்வான் (தற்போது ஐ நா. விலிருந்து வெளியேறி விட்டது. சீனாவில் பிரதி நிதித்துவம் அளிக்கப்படுவதாக எடுத்துக் கொள்ளலாம்.

அங்கம் வகிக்காத இந்த 9 நாடுகளின் மக்கள் தொகை 20 கோடி ஆகும்.

''அந்த வேலையையும் அவர் விட்டு விட்டாரா ?''

''ஆமாம். திடீரென்று ஒரு நாள் சர் ஹம்பிரியிடமிருந்து கடிதம் வந்தது. தம்மை வந்து 'ராயல் இன்ஸ்டிட்டியூஷனில்' பார்க்கும்படி அதில் குறிப்பிட்டிருந்தது. மைக்கேல் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தான். மறுநாள் காலை ஹம்பிரியைச் சந்தித்தான். மைக்கேலுக்கு அச்சோதனைச் சாலையில் 'உதவியாள்' வேலை அளிக்கப்பட்டது. சோதனைச் சாலையைப் பெருக்குவது, சோதனைக் கருவிகளைத் துடைப்பது, மற்ற எடுபிடி வேலைகளைச் செய்வதுதான் இந்த உதவியாளன் வேலை! இதற்குச் சம்பளம் வாரத்துக்கு ஆறு டாலர்!''

''மைக்கேலுக்கு இந்த வேலையாவது பிடித்ததா?''

''அவருக்கு விருப்பமான வேலையாயிற்றே இது. விடுவாரா? ஹம்பிரியின் மேற்பார்வையில், மைக்கேல் பீட்ரூட் கிழங்கிலிருந்து சர்க்கரை எடுப்பதிலும் நைட்ரஜன் குளோரைடு தயாரிப்பதிலும் வெற்றி கண்டார்.

ஹம்பிரி வெளிநாடுகளுக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தார். மைக்கேலையும் தம்மோடு வரும்படி அழைத்தார். அதற்கு மனப்பூர்வமான ஒப்புதலை அளித்த மைக்கேல் அவருடன் பல நாடுகளைக் காணும் அரிய வாய்ப்பைப் பெற்றார். பல நாட்கள் மேனாடுகளிலேயே சுற்றிக்கொண்டிருந்த மைக்கேலுக்குத் தாய் நாட்டின் நினைவு வராமலில்லை. தம் குடும்பத்தினரின் நினைவும் அடிக்கடி வந்தது. அவர் தம் தாயாருக்கு ஒரு கடிதம் எழுதினார்..'

''கடிதமா? அதில் என்ன எழுதியிருந்தார், அண்ணா?''

''எத்தனை நாடுகளுக்குச் சென்றாலும், நம் இங்கிலாந்தையும், வீட்டாரையும், நண்பர்களையும் என்னால் மறக்கவே முடியவில்லை. 'எதற்கு இந்த வீண் அலைச்சல்? வீட்டுக்குப் போய் விடுவோம்' என்ற எண்ணம் எனக்கு வந்ததுண்டு. ஆனால் என் எதிர்காலம் ஒன்று இருக்கிறதே, அதற்காக நான் பொறுமையாயிருக்கிறேன் — என்று அவர் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.''

''பிறகு தாய்நாட்டிற்கு வந்தாரா? வந்து ஏதாவது செய்தாரா?''

''தாய் நாடு வந்தார். தாம் வேலை பார்த்த சோதனைக் கூடத்தில் தாமே சொந்தமாகப் பல சோதனைகளைச் செய்தார். அவருக்குச் சம்பளமும் இப்போது உயர்த்தப்பட்டது. சொற்பொழிவுகள், கட்டுரைகள் எழுதுதல் முதலிய நல்ல பணிகளைத் தொடர்ந்து செய்து வந்தார். 1821-ஆம் ஆண்டில் மைக்கேலுக்குத் திருமணம் நடந்தது. மனைவி பெயர்



சாரா பெர்னார்டு. திருமணத்துக்குப் பிறகு மைக்கேல் மளமளவென்று முன்னேறினார். விஞ்ஞானம் சம்பந்தமாக 158 கட்டுரைகளும், மின்சார ஆராய்ச்சி சம்பந்தமாக 30 தொடர்க் கட்டுரைகளையும் எழுதினார்.

''இவையெல்லாம் ஓர் அறிவுக் களஞ்சியமாக விளங்கியதைப் பலரும் பாராட்டினார்கள். சொற்பொழிவுகள் பல நிகழ்த்திப் பேரும் புகழும் பெற்றார். மைக்கேல் குழந்தைகளுக்காகக் கூடத்தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கிறார்.''

''மைக்கேல் குறிப்பாக என்னெத்தைக் கண்டுபிடித்தார், அண்ணா?''

''காந்தத்திலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியும் என்பதைக் கண்டுபிடித்தார். அன்று முதல் மின்சார யுகம் ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து அவர், மின்சாரத் தூண்டுதல் பற்றிய தம் தத்துவத்தை நிரூபித்துக் காட்டினார். இதை ஆதாரமாகக் கொண்டுதான் இப்போது தொலைபேசி இயங்குகிறது. மேலும் பலவித மின்சாரங்களிடையே உள்ள ஒற்றுமைகளை அவர் நிரூபித்துக் காட்டினார். மின்சாரத்தின் மூலம் ஒளியை உற்பத்தி செய்யலாம் என்ற மைக்கேலின் வெற்றி, மகத்தான வெற்றியாகும்.''

''முயற்சி இருந்தால் எவரும் முன்னேறலாம் என்பதற்கு மைக்கேல் வாழ்க்கை ஒரு முன்னுதாரணம். இல்லையா அண்ணா?''

''ஆமாம், கண்ணகி. மைக்கேலுக்கு 49 வயதாகி விட்டது. கடைசி வரை அவர் கொஞ்சமும் தளராமல் உழைத்து வந்தார். உலகம் முழுவதிலுமிருந்து மைக்கேலுக்குப் புகழ் தேடி வந்தது. பிரிட்டிஷ் அரசியார் மைக்கேலுக்கு ஒரு அழகிய மாளிகையை அன்பளிப்பாக அளித்தார். இந்த மாளிகையில் தான் மைக்கேல் 1867-ஆம்ஆண்டு காலமானார்.''

''ஐயோ, பாவம்...... வாழ்நாள் முழுவதும் விஞ்ஞானத்துக்காகவே வாழ்ந்த மைக்கேல் ஃபாரடேயின் புகழ் மறையாது, இல்லையா?''

''ஆமாம், இவ்வளவு புகழ் வாய்ந்த மைக்கேல் ஆடம்பரமற்றவர்; எளிமையானவர். அவர் இறப்பதற்கு முன்பு, தம் உடல் அமைதியான சாதாரண இடத்தில் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்றும், தம் கல்லறை மீது ஏதும் எழுதப்படாத ஒரு சலவைக் கல் மட்டுமே பதிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டாராம். அவர் விருப்பம் போலவே அவர் அடக்கம் செய்யப்பட்டார். மைக்கேல் ஃபாரடேயின் வாழ்வு இன்றையப் பிள்ளைகளுக்கு ஒரு முன் மாதிரியாக இருந்து, அவர்கள் முன்னேற வழி செய்யும் என்று நம்புகிறேன்!''



12
எப்படி நான் சொன்னபடியே நடந்ததா?
வேலா! நல்லவேளை உங்க தமிழாசிரியரோடு வந்தே. காரியம் முடிஞ்சுது!
நீ எனக்குச் சொன்னது நல்லதாப் போச்சு.... அது சரி... உனக்கு எப்படி தெரிஞ்சுது எனக்கு எதிரா இப்படிக் கூட்டம் நடத்துறது?
எப்பவுமே நமக்கு எதிரியா இருக்கவுங்களை குறைச்சு மதிப்பிடக் கூடாது!
அது கிடக்கட்டும்! நானே கேட்கணும்னு நினைச்சேன் உனக்கு எப்படித்தெரிஞ்சுது?
சஸ்பென்ஸ்! இப்ப நடக்க வேண்டியதை கவனிப்போம்!
அண்ணன் காட்டிய வழி
மறு நாள்
விழாவுக்கான இவ்வளவு பொறுப்புகளையும் நீ, செல்வன் செந்தாமரை மூணு பேருமே செய்ய முடியுமா?
நாங்க செய்து காட்டுவோம் அண்ணே!
ஒன்று பட்டு ஒரு காரியத்தைச் செய்றதுதான் உயர்வைத் தரும். நமக்குள்ளே பேதம் என்றும் அனைவருக்கும் தாழ்வுதான்! வேலா! இதைக் கவனத்திலே வைச்சுக்கிட்டு எல்லா வேலையும் செய்!
நான் தப்பா ஏதும் செய்ய மாட்டேன் அண்ணே!
செல்வன் வீட்டில்
எல்லாமே கெட்டுப் போச்சு!
ஏன் இப்படிக் கத்தறே? உனக்கு இப்ப என்ன ஆச்சு?
நம்ப திட்டமே குட்டிச்சுவராப் போச்சு எல்லாம் வேலன் பண்ணின வேலைதான்!
கதை: நம்பியின்தம்பி, படம்: குமார்
என்ன சொல்றே செந்தாமரை? எனக்கு ஒண்ணுமே புரியலை....
உனக்கு எங்கே புரியப் போவுது?
"கெடுவான் கேடு நினைப்பான்!"
என்ன எங்களைக் கிண்டல் பண்றீங்களா அப்பா?
தொடரும்

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

## அரசினர் காசநோய் மருத்துவ மனை

1972–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்தோ அல்லது ஒப்பந்தக் குத்தகையை ஏற்றுக்கொள்ளும் தகுதிப் பெற்ற அதிகாரி ஒவ்வொரு விசயத்திலும் திட்டமாக குறிப்பிடும் மற்ற தேதியிலிருந்தோ 1973-ஆம் ஆண்டு மார்ச்சு 31-ஆம் தேதியோடு முடிவடையும் காலத்திற்கு நாகர்கோவில் அரசினர் காசநோய் மருத்துவ மனைக்குத் தேவைப்படும் உணவுப் பொருட்களையும், மற்றும் மருத்துவ மனைக்கான இதர சாதனங்களையும் வழங்குவதற்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (டெண்டர்கள்) தமிழ்நாடு ஆளுநர் அவர்களது சார்பில் இம்மருத்துவமனை கண்காணிப்பாளரால் 1972–ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 7–ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தப்புள்ளி பற்றிய நிபந்தனைகளடங்கிய பிரதி, ஒப்பந்தப் புள்ளி நமூனா தேவையான பொருட்களின் அட்டவணை இவைகளை இம்மருத்துவமனை அலுவலகத்திலிருந்து அலுவலக நேரங்களில் பணிபுரியும் எல்லா நாட்களிலும் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான அடக்கவிலை ரூ.5·18 (ரூபாய் ஐந்து, காசு பதினெட்டு) விற்பனைவரி உட்பட இந்தத் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. இந்தத் தொகையைத் தமிழ்நாடு ரிசர்வ் பாங்கியிலோ அல்லது ஸ்டேட் பாங்கியின் ஏதாவது ஒரு கிளையிலோ அல்லது அரசாங்கக் கருவூலத்திலோ, கீழ்க்கண்ட விவரப்படி,

ஒப்பந்தப்புள்ளி நமூனா—ரூ.5·00
விற்பனை வரி —ரூ. 0.18

மொத்தம்—ரூ. 5.18

பணம் செலுத்தும் சீட்டில் எழுதி (சலானில்) XXIII. Medical G. Miscellaneous Director of Health Services & Family Planning என்ற தலைப்பில் செலுத்தி, செலுத்துச் சீட்டை இவ்வலுவலகத்திற்கு அனுப்பும் விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டும். ஒப்பந்த நமூனாவின் கிரயத்தை ரொக்கமாகப் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேற்கொண்டுள்ள முழு விவரங்களுக்கு கீழே ஒப்பமிட்டவரை அணுகவும்.

**டாக்டர் டி.எல். இராசசேகரன்,**
எம்·பி,பி.எஸ், டி.டி.டி.
கண்காணிப்பாளர்,
அரசினர் காசநோய் மருத்துவ மனை.

நாகர்கோவில்,
8—11—1971.

(த. 16)

## குடிநீர், வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக் காரர்களிடமிருந்து எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2, என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 6—1—1972 (வியாழக்கிழமை) பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்: திருச்சி வடிகால் திட்டம்—இரண்டாம் நிலை—பகுதி ஒன்று ஐந்தாவது பகுதியில் ஸ்டோன்வேர், சி. ஐ. குழாய்களும், ஏனைய இதர உறுப்புகளும் பதித்தலும், இணைத்தலும்—சம்பந்தமாக.

ஒப்பந்த வகை — மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை: ரூ. 19,000 (ரூபாய் பத்தொன்பதாயிரம் மட்டும்). இத்தொகை கருவூலச்செலான் பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப்பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப் பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும். காசோலை ஒப்புக் கொள்ளப்பட மாட்டா.

வேலையினை முடிப்பதற்குரிய காலஅளவு: பன்னிரண்டு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை: 20.70 (ரூபாய் இருபதும் காசு எழுபதும் மட்டும் விற்பனைவரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி. 15, தில்லை நகர் மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 30-12-71 (திங்கட்கிழமை) மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
(பொ. சு. பொ.) குடிநீர்,
வடிகால் வாரியம்.

மதுரை–2,
14—11—71.

(த.14)

## நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

### தேசீய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசீய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 22-12-71 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கு பெற்றுக்கொள்ளப்படும்.

| வேலை விவரம். | முன்வைப்புத் தொகை. ரூ. |
|---|---|
| 1 தேசீய நெடுஞ்சாலை-மைசூர் சாலை எல்லை, கிருஷ்ணகிரி சேலம் சாலையில் கி.மீ. 161.2-ல் உள்ள சிறு பாலத்தைப் புதுப்பித்தல். | 7,325 |
| 2 தேசீய நெடுஞ்சாலை-மைசூர் சாலை எல்லை, கிருஷ்ணகிரி, சேலம் சாலையில் கி.மீ. 163.4-ல் உள்ள சிறு பாலத்தைப் புதுப்பித்தல். | 9,080 |
| 3 தேசீய நெடுஞ்சாலை-மைசூர் எல்லை, கிருஷ்ணகிரி சேலம் சாலையில் கி.மீ. 171.4-ல் உள்ள சிறு பாலத்தைப் புதுப்பித்தல். | 1,400 |
| 4 தேசீய நெடுஞ்சாலை-மைசூர் கிருஷ்ணகிரி சேலம் சாலையில் கி.மீ. 177.8-ல் உள்ள சிறு பாலத்தைப் புதுப்பித்தல். | 3,035 |
| 5 தேசீய நெடுஞ்சாலை 7-ல் சேலம் மாற்றுப் பாதையில் உள்ள மணிமுத்தாற்றின் குறுக்கே கி.மீ. 44-ல் பாலம் கட்டுதல். | 4,875 |

ஒப்பந்தப் புள்ளிகள் 22-12-71 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரைப்படங்கள் முதலிய வற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ) தேசீய நெடுஞ்சாலை கோட்டம், சேலம் அலுவலகத்தில் 15-12-71 முதல் 21-12-71 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25.88 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேல்குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசீய நெடுஞ்சாலை கோட்டம், சேலம் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் 'ரெவினியூ டெபாஸிட்' என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர்(நெ) தேசீய நெடுஞ்சாலை கோட்டம், சேலம் பெயரில் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

தி. மு. அ. ஜெயராமன்,
(த.3) மேற்பார்வைப் பொறியாளர் (நெ).

---

## நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

### தேசீய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசீய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 22-12-71 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கு பெற்றுக் கொள்ளப்படும்.

| வேலை விவரம். | முன்வைப்புத் தொகை. ரூ. |
|---|---|
| தேசீய நெடுஞ்சாலை-பனரஸ், கன்னியாகுமரி சாலை கி.மீ. 209/2 (மைல் 80/1) உள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல். | 1,420 |

ஒப்பந்தப் புள்ளிகள் 22-12-71 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள், வரைப்படங்கள் முதலிய வற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், சிறப்புக் கோட்டம், சேலம் அலுவலகத்தில் 15-12-71 முதல் 21-12-71 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25·88 கட்டி பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேல்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசீய நெடுஞ்சாலை கோட்டம், சேலம் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர் (நெ) தேசீய நெடுஞ்சாலை கோட்டம், சேலம் பெயரில் செலுத்தி செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

தி. மு. அ. ஜெயராமன்,
(த.13) மேற்பார்வைப் பொறியாளர்.

## போக்குவரத்துத் துறை

அண்ணா சாலை, சென்னை-2

தமிழ்நாடு ஆளுநருக்காக, ஆளுநர் சார்பில், நிருவாகப் பொறியாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை, சென்னை-2 அவர்களால் வரும் மூன்று வருடத்திற்குக் கீழ்க்கண்ட ஸ்டால்கள் குத்தகைக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், அண்ணாசாலை(மவுண்ட்ரோடு), சென்னை 2-ல்உள்ளபோக்குவரத்து இல்லத்தில், நிருவாகப் பொறியாளர் அலுவலகத்தில் 20-12-1971 3 மணிவரை பெற்றுக்கொள்ளப் படும்.

1. மந்தைவெளி பேருந்து நிலையத்தில் உள்ள 2-வது நெம்பர் ஸ்டால் பலவகைப் பொருள்கள் (General Merchants).

2. மந்தைவெளி பேருந்து நிலையத்தில் உள்ள 3-வது நெம்பர் ஸ்டால் புதிய பழங்கள் காய்கறி கள்விற்றல்(General Merchandise).

ஒப்பந்தத்திற்கான விதிகள், நிபந்தனைப் பத்திரங்கள் முதலியவற்றை, நிருவாகப் பொறியாளர், போக்குவரத்து இல்லம், சென்னை-2 அவர்களிடம் ரூ. 1.04 கட்டி எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 3-15 மணிக்கு திறக்கப்படும். எக்காரணத்தைத் கொண்டும், இந்தப் பணம் திருப்பித் தரமாட்டாது.

**இயக்குநர்.**

(த.2)

---

## மின்சார வாரியம்

மேட்டூர் மின் இயக்கத் திட்டம்,
மேட்டூர் அணை-1

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பொருட்டு, மேட்டூர் மின் திட்ட மேற்பார்வை மின் பொறியாளரால் 31-12-1971 தேதி பிற்பகல் 3-00 மணி வரை முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (Sealed Tender) ''மேட்டூர் கான்கிரிட்டு கம்பங்கள் செய்யும் இடங்களாகிய (1) நேரு நகர், (2) டி. டி.சி. சென்ட்டர் அருகிலுள்ள தொட்டிகளிலிருந்து மேட்டூர் மின் திட்ட எல்லைக்கு ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு 7.32 மீட்டர், 8.23 மீட்டர் மற்றும் 9.14 மீட்டர் கான்கிரிட்டு கம்பங்களை குத்தகைச் சீட்டு ஒப்புக் கொள்ளக்கூடிய தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குக் கொண்டு சேர்க்கின்ற வேலைக்குவரவேற்கப்படுகின்றன:

ஒப்பந்தப் புள்ளிகள், நிபந்தனைத் தாள்கள், பிரதி ஒன்றுக்கு ரூ. 5.00 (ரூபாய் ஐந்து மட்டும்) (திருப்பித்தரத் தக்கது அல்ல) பண அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ, மேட்டூர் மின் இயக்கத் திட்ட தலைமைக் கணக்காயரிடம் (செலவினம்) செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம்.

பண அஞ்சல் பெறும் கடைசி நாள் 24-12-1971. குத்தகை விவரங்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய தாள்கள் சாதாரண அஞ்சல் மூலமாக மட்டும் (அஞ்சல் செய்யப்பட்ட அடையாளம் பெற்று) அனுப்பப்படும் அவ்வாறு அனுப்பப்படும் அஞ்சல் தவறினலோ அல்லது உரியகாலத்தில் கிடைக்காது போனாலோமின் சார வாரியம் பொறுப்பேற்காது. ஒப்பந்தப் புள்ளி மற்றும் நிபந்தனைகள் அடங்கிய தாள்கள் மாற்றித்தரத்தக்கதல்ல. கீழே கையொப்பமிட்டவரால் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எவ்வித காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தக்காரர்களிடையே பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார். ரூ. 2,000 (ரூபாய் இரண்டு ஆயிரம் மட்டும்) கட்டுத் தொகையாக மேட்டூர் மின்திட்ட தலைமைக் கணக்காயரிடம் நேரில் செலுத்தி ரசீது பெற்றோ அல்லது ஷெட்யூல் வங்கியில் செலுத்தப்பட்ட (Demand Draft) பண மாற்றோலையோ குத்தகை நிபந்தனைத் தாளுடன் இணைத்துஅனுப்ப வேண்டியது. பணமாற்றோலையோ அல்லது கட்டுத் தொகை செலுத்தியதற்கான ரசீதோ இணைக்கப்படாத குத்தகைத் தாள்கள் தள்ளுபடிசெய்யப்படும். குத்தகை தாள்கள் வந்திருக்கும் குத்தகைதாரர்கள் முன்னிலையில் 31-12-1971 தேதி பிற்பகல் 4-00 மணியளவில் திறக்கப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகளும்ஒப்பந்தங்களும் 30-11-1971ஆம் தேதியிலிருந்து விற்பனைக்குக் கிடைக்கும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
மேட்டூர் மின் திட்டம்,
மேட்டூர் அணை-1.

(த.1)

---

## வனத்துறை

வனப்பொறியாளர் கோட்டம்

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்களை ''வனப் பொறியாளர், திருச்சி'' தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

'' உள்ளூர் தாண்டா—பர்கூர் சாலை 6.4 கி. மீ. அமைத்தல், பர்கூர் வனச்சரகம், கோயம்புத்தூர் வடக்குவனக்கோட்டம்''

அச்சாரம் (இ. எம். டி.) ரூ. 4,200.

ஒப்பந்தப் புள்ளி பெற்றுக் கொள்ளவும் திறக்கவும் கடைசி நாள் 20—12—1971; நேரம் முறையே மாலை 3-00, 3-05 மணி.

2. ஒப்பந்தப் பத்திரங்களை ''வனப்பொறியாளர் 1-ஏ ராயல் ரோடு'' கண்டோ மெண்ட், திருச்சி-1'' என்றமுகவரியிலிருந்து ரூ. 1.04 நேரிலோ அல்லது பண ஆணை மூலமாகவோ செலுத்தி அலுவலக வேலை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**ச. சண்முக சுந்தரம்,**
வனப்பொறியாளர்.

(த.9)

---

## ஏலம்

---

### காவல்துறை நீலகிரி மாவட்டம்

இக்காவல் துறைக்குச் சொந்தமான ஒரு பழுதடைந்த பர்கோடைப் மூடப்பட்ட மோட்டார் வாகனம் (Fargo closed type pick up Van) MDN 5021(1960) மாடல் வண்டி 25-12-1971 தேதியன்று காலை 10 மணியளவில் இம்மாவட்டக் காவல் துறை அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும்.

2. ஏலம் எடுக்க விருப்பமுள்ளவர்கள் அதற்கான விதிகளை இந்த அலுவலகத்தில் தெரிந்துக்கொள்ளலாம்.

**டி. நாராயணசாமி,**
மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர், நீலகிரி
உதகமண்டலம்.

22—11—1971

(த.10)

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 22—12—71 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்கு ''குறளக கட்டடம்'' நான்காவது மாடியில் உள்ள மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப் படும்.

| வேலை விவரம். | முன்வைப்புத் தொகை. ரூ. |
|---|---|
| 1 வாரணசி கன்னியாகுமரி சாலையையும் கிருஷ்ணகிரி இராணிபேட்டை சாலையையும் இணைக்கும் துணைச் சாலையில் கி. மீ. 1.6-ல் ஒரு பாலம் கட்டும் வேலை. | 3,290 |
| 2 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசீய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ண கிரி சேலம் பகுதியில் கி.மீ. 33/2-ல் பாலம் கட்டுதல். | 1,810 |
| 3 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசீய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ணகிரி சேலம் பகுதியில் கி.மீ. 38/6-ல் பாலம் கட்டுதல். | 3,610 |
| 4 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசீய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ண கிரி சேலம் பகுதியில் கி.மீ. 40/2-ல் பாலம் கட்டுதல். | 1,350 |
| 5 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசீய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ண கிரி சேலம் பகுதியில் கி.மீ. 52/2-ல் பாலம் கட்டுதல். | 4,090 |
| 6 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசீய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ண கிரி சேலம் பகுதியில் கி.மீ. 55/0-ல் பாலம் கட்டுதல். | 3,000 |
| 7 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசீய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ண கிரி சேலம் பகுதியில் கி.மீ. 94/4-ல் பாலம் கட்டுதல். | 3,720 |
| 8 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசீய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ண கிரி சேலம் பகுதியில் கி.மீ. 98/2-ல் பாலம் கட்டுதல். | 1,830 |
| 9 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசீய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ண கிரி சேலம் பகுதியில் கி.மீ. 107/6-ல் பாலம் கட்டுதல். | 4,860 |
| 10 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசீய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ண கிரி சேலம் பகுதியில் கி.மீ. 84/4-ல் பாலம் கட்டுதல். | 2,000 |
| 11 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசீய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ண கிரி சேலம் பகுதியில் கி.மி. 73/0-ல் கட்டுதல். | 1,920 |

ஒப்பந்தப் புள்ளிகள் 22—12—71 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப் படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனக்கள் வரைபடங்கள் முதலிய வற்றை கோட்டப் பொறியாளர் (நெ) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், சென்னை-1 அலுவலகத்தில் 15—12—71 முதல் 21—12—71 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25.88 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப் பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், சென்னை-1 அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் 'ரெவின்யூ டெபாஸிட்' என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர் (நெ) தேசீய நெடுஞ்சாலை கோட்டம், சென்னை-1 பெயரில் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பாங்கு காரண்டி முன்வைப்புத் தொகையாக பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமானல் மேற்படி பாங்கு காரண்டி தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில்தான் இருக்கவேண்டும். தவிர, இந்திய ரிசர்வ் பாங்கின் மேற்படி பாங்கு காரண்டிற்கான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

தி. மு. அ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த.6)

## பொறியியல் பணித்துறை

சென்னை—செங்கற்பட்டு வட்டம், சென்னை-5

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும், கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் பத்திரங்கள், மேற்பார்வைப் பொறியாளர், பொ. ப. து. சென்னை-செங்கற்பட்டு வட்டம், சென்னை-5 அவர்களால் அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்ட விவரங்களின்படி பெற்றுக்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| 1. வேலையின் பெயர் .. | சைதாப்பேட்டை வட்டம், வேளச்சேரியில் 1 உதவி ஆய்வாளர், 2 தலைமைக் காவலர், 9 காவலர் குடியிருப்பு கட்டுதல். | சைதாப்பேட்டை வட்டம், திருவான்மியூரில் 1 உதவி ஆய்வாளர், 1 தலைமைக் காவலர், 13 காவலர் குடியிருப்பு கட்டுதல். |
| 2. ஒப்பந்த முறை .. .. | மொத்தத் தொகை .. | மொத்தத் தொகை. |
| 3. பிணைப்பொறுப்புத்தொகை: | ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்). | ரூ. 3,600 (ரூபாய் மூவாயிரத்து அறுநூறு மட்டும்). |
| 4. ஒப்பந்தப் பத்திரங்களின் : விலை. | ரூ. 20. | ரூ. 20. |
| 5 விற்பனை வரி ... | ரூ. 0–66 (அறுபத்தாறு காசு மட்டும்). | ரூ.0–66 (அறுபத்தாறு காசு மட்டும்). |
| 6. முடிக்கவேண்டிய காலம் : | 4 மாதங்கள். | 4 மாதங்கள். |
| 7. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாட்கள் (கிடைக்குமிடம் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம்). | 20—12—1971-லிருந்து 27—12—1971 வரை. | 20—12—1971-லிருந்து 27—12—1971 வரை . |
| 8. விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் முன்பாக ஒப்பந்தம் திறக்கப்படும் நாள். | 28—12—1971 மாலை 3 மணி | 28—12—1971 மாலை 3 மணி. |

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையும், விற்பனை வரியும் முறையே அரசின் கருவூலத்தில் (XXXVII Public Works—state Misc. ) மற்றும் ( XII sales tax (b) receipts under the state sales-tax—General Sales–tax) என்ற தலைப்புகளின் கீழும் ஒரே சலானில் செலுத்தலாம். இந்தச் சலான் மேற்கண்டவேலைகளுக்கான ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்கவேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளருக்கு எந்த ஒப்பந்தங்களையும் காரணம் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையுண்டு

மற்ற விதிகளும், விவரங்களும் விரிவாக ஒப்பந்தப் பத்திரங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**பி. கே. கந்தசாமி,**
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை-செங்கை வட்டம்.

(நு. 11)

## ஒப்பந்தப் புள்ளி

ந.க. எண். 31136/71/வ 2/நாள் 17–11–1971.

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநரின் சார்பில் பொதுப் பணித்துறை மதுரையில் உள்ள இராமநாதபுரம் பெரு வட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க் கண்ட வேலைக்கு பதிவுச் செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிட மிருந்து மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் 30-12-1971-ஆம் தேதி மாலை 4 மணி வரை அரக்கு முத்திரை யிடப்பட்ட உறையில் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள் ளப்படும்.

| | | |
|---|---|---|
| வேலையின் பெயர்: | (1) முதுகுளத்தூர் வட்டம் பரளை ஆற்றின் குறுக்கே அணைக்கட்டிகீழத் தூவல் கீரனூர் மற்றும் 32 கண் மாய்களுக்குப் பாசனம் வழங் குதல். | (2) கீரனூர் கீழத் தூவல் கால் வாய் வெட்டு தல். |
| ஒப்பந்த வகை: | கே. 2. | கே. 2. |
| கட்டுத் தொகை: | ரூ. 7,290. | ரூ. 2,220. |
| ஒப்பந்தப்புள்ளிவிலை பிளான்கள் உட்பட. | ரூ. 20.70. | ரூ. 10.35. |
| வேலை முடிக்க வேண்டிய காலம். | 12 மாதங்கள். | 12 மாதங்கள். |

ஒப்பந்தப் புள்ளி விலையாக ரூ. 20, ரூ. 10, ''பி.டபிள்யு டி. III ஓ.ஆர்'' என்ற கணக்குத் தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொ.ப.து., சிவகெங்கை அவர்கள் கணக்கி லும் விற்பனை வரிக்கான ரூ. 0.70, 0.35 காசை ''12 விற்பனை வரி'' என்ற கணக்குத் தலைப்பிலும் அரசாங்கக் கரு வூலத்தில் செலுத்தி ரசீதுகளைத் தனித்தனியாக அனுப்ப வேண்டும். இத் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர்(பொ.ப. து.), இராமநாதபுரம் பெருவட்டம், மதுரை அலுவலகத்தில் 22–12–1971 முதல் 28–12–1971 வரை விற்பனைக்காக இருக்கும். ஒப்பந்தப் புள்ளிகள் கோரி வரப்படும் மனுக்கள் இவ்வலுவலகத்திற்கு 28–12–1971 மாலை 5 மணிக்கு வந்து சேர வேண்டும். இதற்குப் பின் வரும் மனுக்கள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்பும் ஒப்பந்தக்காரர் களிடமிருந்து கட்டுத் தொகையை அரசாங்கக் கருவூலத்தி தில் செலுத்திய கருவூல ரசீது மூலமாகவோ அல்லது ஷெட் யூல்டு வங்கிகளின் மூலமாகவோ ஏற்றுக் கொள்ளப்படும், மாநில அரசு செக்யூரிட்டிகள், தமிழ்நாடு மின்சாரவாரியக் கடன் பத்திரங்கள்,அரசாங்கச் சேமிப்பு பத்திரங்கள் முதலிய வைகள், அவைகள் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு இவற்றில் எவ் வளவு குறைவாக உள்ளதோ அவற்றில் 5 சதவீதம் குறைவாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எவ்விதமாகவும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்புவோர் நடப்பு வருடத்திற்கான வருமான வரி,விற்பனை வரி முதலியவைகளைச் செலுத்தியதற்கு அத்தாட்சியாக சான்றிதழ் கொடுக்க வேண்டும். கட்டுத் தொகை செலுத்தாமலோ அல்லது இவ்வலுவலகத்தில் நிர்ண யிக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தில் தொகைக் குறி யிட்டு கொடுக்காமலோ இருந்தால் அவை மேற்பார்வைப் பொறியாளரால் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறிளர் அவர்கள் எக்காரண அறிவிப் பையும் உரிமைப் படுத்தாமல் ஏதாவது அல்லது வரப்பெற்ற அத்தனை ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரிக்க உரிமைப் பெற்றுள்ளார்.

**ரெ. ராமசாமி,**
மேற்பார்வைப் பொறியாளர்,
இராமநாதபுரம் வட்டம், மதுரை.

(த.19)

## தடிகள் ஏலம்

தேக்கு, மருது, வேங்கை, வெந்தேக்கு மற்றும் பல ஜாதிகள்

இடம்—அரசாங்க தடிமண்டி, நாகர்கோவில்.

தேதியும் நேரமும்—27 & 28—12—1971 முற்பகல் 9·00.

அளவு—ஏறத்தாழ 1,000 கன மீட்டர்.

மேற்கொண்டு விவரங்களுக்கு நாகர்கோவிலுள்ள மண் டிச்சிறக அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

**எஸ். கொண்டாஸ்,**
மாவட்ட வன அலுவலர், திருநெல்வேலி,
தென் பிரிவு.

(த.29)

## அரசினர் மருத்துவமனை தஞ்சாவூர்

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் முதலியவற்றை வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழே கொடுக்கப்பட்டுள்ள அரசினர் மருத்துவமனைகளுக்கு 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் ஆரம்பமாகும் அல்லது ஒவ்வொரு விஷயத்திலும் அதிகாரியால் ஒப்பந்தப் புள்ளி ஏற்றுக்கொள்ள குறிப்பிடப்படும் அத்தகைய இதர நாளிலிருந்து 1973-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் நாளோடு முடிவடையும் காலத்திற்கு உணவு மற்றும் இதர மருத்துவமனைகளுக்குத் தேவையான பொருள்கள் வழங்குவதற்கான முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 1972-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 7-ஆம் நாள் வெள்ளிக்கிழமையன்று மாலை 2 மணிவரை சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்கள், சூப்பிரின்டெண்டெண்ட் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும் என்று இதனல் அறிவிக்கப்படுகிறது :—

(1) அரசினர் மாவட்ட தலைமையக மருத்துவ மனை, நாகப்பட்டினம்.

(2) கும்பகோணம், மன்னார்குடி, மாயூரம், திருவாரூர், பட்டுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி, சீர்காழி, நன்னிலம், அதிராம்பட்டினம், அறந்தாங்கி, பொறையார், திருக்காட்டுப்பள்ளி, கூத்தாநல்லூர், திருப்பனந்தாள், பேராவூரணி ஆகிய இடங்களிலுள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் திருத்துறைப்பூண்டியில் உள்ள அரசினர் பெண்கள் மற்றும் சிசு மருத்துவமனை.

(3) பாபநாசம், குற்ருலம், குடவாசல், சுவாமிமலை, அம்மாபேட்டை, வைத்தீஸ்வரன் கோவில், திருவிடமருதூர், நாச்சியார் கோயில், வலங்கைமான், சுந்தரப்பெருமாள்கோயில் மற்றும் கிளியனூர் ஆகிய இடங்களிலுள்ள அரசினர் மருந்தகங்கள்.

குறிப்பு.—திருத்துறைப்பூண்டி பெண்கள் மற்றும் சிசு மருத்துவமனைக்கான ஒப்பந்தப் புள்ளி, திருத்துறைப் பூண்டி அரசினர் மருத்துவமனை மருத்துவ அலுவலர், அவர்களால் அவரது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.

தேவைப்படும் பொருள்களின் அட்டவணையுடன் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரதியும் மற்றும் ஒப்பந்த நமூனுவின் பிரதியும் மேற்படி அலுவலர்களிடமிருந்து மேற்படி நமூனுக்களின் விலையான ரூ. 5-யும், விற்பனை வரிக்காக காசு (15) பதினைந்தையும் சேர்த்து (ரூ. 15)-ஐ ஒரே செலானில் கட்டி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகைத் திரும்பப் பெறக் கூடியதல்ல. இக்கட்டணம் ரூ. 5.15-யை சென்னை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிலோ அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் எந்தக் கிளைகளிலோ அல்லது ஏதேனும் அரசுக் கருவூலத்திலோ சென்னை அரசின் கணக்கிற்கு முறையே, XXXIII Medical-I. Director of Health services and Family Planning—G. miscellaneous other receipts", "XII sales-tax receipts under the state sales-tax Act—General sales-tax". என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரி செலுத்துவதை விவரமாக செலானில் குறிப்பிட்டுள்ள (On what account with authority if any and Head of Account)-ன் கீழ் குறிப்பிட வேண்டும். நமூனுக்களைப் பெறுவதற்காக சம்பந்தப்பட்ட மருத்துவமனை அல்லது நிறுவனங்களில் அலுவலகத்தில் எந்த வேலை தினத்திலும் காலை 11 மணி மற்றும் மாலை 5 மணிக்கு இடையில் செலான்கள் தாக்கல் செய்யப்பட வேண்டும். எக்காரணத்தைமுன்னிட்டும் ரொக்கம் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

குறிப்பு:—(1) ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாளன்ருே அல்லது அந்த நாளுக்குப் பிந்திய ஏதாவதொரு நாளிலோ பெறப்பட்ட சால்வென்சி சர்டிபிகெட்டை, அதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள நமூனுவில் ஒரு தாசில்தார் கையொப்பத்துடனே அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரின் நற்சான்றுடன் கூடிய அதன் நகல் பிரதியையோ கட்டாயமாக இணைத்து அனுப்ப வேண்டும்.

(2) ஒப்பந்தத்தின் மதிப்பீடானது ரூ. 10,000-க்கும் மேம்பட்டதாக இருப்பின் அத்தகைய ஒப்பந்தத்துடன் இன்கம்டாக்ஸ் கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட் ஒன்றை இணைத்து அனுப்ப வேண்டும். சேல்ஸ் டாக்ஸ் கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட் ஒன்றையும் ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

(3) ஒவ்வொரு ஒப்பந்தத்துடன் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாளன்ருே அல்லது அதற்குப் பிந்திய ஏதாவது ஒரு நாளிலோ தாசில்தார் அந்தஸ்திற்குக் குறையாத ரெவின்யூ அலுவலர் அல்லது தாசில்தார் சார்பில் செயல்படும் ஹெட்குவாட்டர்ஸ்டெபுடிதாசில்தாரிடமிருந்து பெறப்பட்ட நேஷனலிட்டி சர்ட்டிபிகேட் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் ஒருவரின் நற்சான்றுடன் கூடிய அதன் நகல் பிரதியையோ இணைத்து அனுப்ப வேண்டும்.

(4) ஒப்பந்தப் புள்ளி கொடுப்பவர், ஒப்பந்தத்தைக் கொடுத்த பின்பு தன்னுடைய ஒப்பந்தம் சம்பந்தமாக இவ்வலுவலகத்திற்கு தனிப்பட்ட எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளக்கூடாது.

**டாக்டர் கா. குழந்தைவேலு,**

எம்.பி.பி.எஸ்., மாவட்ட மருத்துவ அலுவலர், தஞ்சை இருப்பு, நாகப்பட்டினம்.

21-10-1971.

(த. 12)

## குறுகிய கால மறு ஒப்பந்தப் புள்ளி

## நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை சென்னை வட்டம், சென்னை-25

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை) சென்னை வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 29—12—1971 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வேலை விவரம். | முன் வைப்புத் தொகை. ரூ. | ஒப்பந்த நமூனா கிடைக்குமிடம். |
|---|---|---|
| கீழ்பாலூர். என். சி. வீரலூர் சாலைக்குச் செல்லும் சாலையை மேம்பாடு செய்தல், கி.மீ. 0·0—11·2. | 2,750 | கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), திருவண்ணாமலை. |

ஒப்பந்தங்கள் 29—12—1971 அன்றே மாலை 3·15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள் வரைப்படங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), திருவண்ணாமலை அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூபாய் 25·75 செலுத்தி 15—12—1971 முதல் 28—12—1971 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக்கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருவண்ணாமலை அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருவண்ணாமலை பெயரில் செலுத்தி செலுத்துச் செல்லுச்சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான, ''ரிசர்வ் வங்கி''யின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

**ஜி. ஜார்ஜ் ஜேகப்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
(நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை) சென்னை வட்டம்.

26—11—1971.

(த.31)

## ஒப்பந்தப் புள்ளி

## குடிநீர், வடிகால் வாரியம்

1642/எஸ்.டி. 2/71, தேதி 24—11—1971.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம், சார்பாக கீழ் வரும் பணிக்கு, அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள், 30—12—1971 மாலை 3·00 மணிமுடிய கோவை பொதுச் சுகாதார மேற்பார்வைப் பொறியாளரால் அவரது அலுவலகம் 25-1, மூன்றாவது வீதி, டாடாபாட், கோவை-12-ல் வரவேற்கப்படுகிறது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாளில் மாலை 4-00 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட அதிகாரிகளாலோ, வரப்பெற்ற ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

(1) பணியின் பெயர்—சேலம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம். இரண்டாம் நிலை-இரண்டாம் கட்டம் (பகுதி 1) 20, 24 அங்குல கிராவிட்டி மெயின் பைப்புகளைப் பதித்தல் மற்றும் இணைத்தலும் மற்ற வேலைகள் செய்தல்.

(2) ஒப்பந்த முறை—மொத்தத் தொகை (L. S.).

(3) பிணைப்பணம்—ரூ. 8,960 (ரூபாய் எண்ணாயிரத்து தொளாயிரத்து அறுபது மட்டும்.)

(4) பணி முடிக்க வேண்டிய காலம்—ஆறு மாதங்கள்.

(5) ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 10·35 (விற்பனை வரி உட்பட).

(6) ஒப்பந்தப் பத்திரங்கள் விற்கப்படும் தேதி—29—11—1971 முதல் 28—12—1971 முடிய.

மேற்படி பணிக்கான ஒப்பந்தப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர், 28, ஔவையார் தெரு, சுப்பிரமணியம் நகர், சேலம்-5 விலாசத்துக்கு, மணி ஆர்டர் மூலமாகவோ, நேரில் பணம் செலுத்தியோ பெற்றுக் கொள்ளலாம்.

பிணைப்பணத்தை மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின்''கேட்பு வரைவோலை'',சேலம் நிருவாகப் பொறியாளரின் சார்பில் செலுத்தவோ அல்லது கருவூலகத்தில், சேலம் நிருவாகப் பொறியாளரின் சார்பில் ''பி.டபிள்யூ. III OR''—தலைப்பில் செய்யப்படலாம். அங்கீகாரம் செய்யப்பட்ட வங்கிகளின் பொறுப்புறுதிகள் பிணைப் பணத்திற்காக ஒப்புக் கொள்ளப்படும். பிணைப்பணம் இணைக்கப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்க உட்பட்டது.

மேற்பார்வைப் பொறியாளருக்கு ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா ஒப்பந்தங்களையோ காரணம் கூறாமல் நிராகரிக்க உரிமையுண்டு.

**சே. ம. சாகுல்அமீது,**
மேற்பார்வைப் பொறியாளர்.

(த.30)

## பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்:—வேலூர் கோட்டையிலுள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியில் ஓர் ஆய்வாளர் மற்றும் மூன்று உதவி ஆய்வாளர்கள், ஒரு ரிசர்வ் ஆய்வாளர் நான்கு தலைமை காவலர்கள் ஆகியோருக்குக் குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப்பணித்துறை மற்றும் அரசினர் பிறதுறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 29—12—1971 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை:—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை—ரூ. 3,100.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரைபடங்களுடன்:—ரூ. 20-60 விற்பனை வரி 3 சதவீதம் சேர்த்து.

முடிக்கப்பட வேண்டிய காலம் ஒப்பந்தப் புள்ளி—6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 13—12—1971 தேதி முதல் 27—12—1971 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும் ஒப்பந்தப் புள்ளி பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20-00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது) கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் P. W. D. Remittaces III Other Remittances என்ற தலைப்பின் கீழ் நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, வேலூர் கோட்டம், வேலூர் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0·60 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் X-II Sales tax(b)Receipts Under State Sales tax Act General sales tax என்ற தலைப்பின் கீழ் செலுத்துப் படவேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத் தொகை, கருவூலச் சீட்டுவடிவிலோ தேசியச் சேமிப்புப்பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது ''டிமாண்ட்'' டிராப்டாகவோ '' ஏற்றுக்கொள்ளப்படும். முன் வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படும் ஷெடியூல்டு பாங்குகளின் ''டிமாண்டு டிராப்ட்டுகள்'' செயற் பொறியாளர், (பொ. ப. து.) வேலூர், கோட்டம், வேலூர் அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக்கொள்ளப்படும். தேசீயச் சேமிப்பு நற்சான்று பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்தபட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**த. சு. இராமசுவாமி,**
மேற்பார்வைப் பொறியாளர், (பொ.ப.து.)
(த.36) **செங்கற்பட்டு வடார்க்காடு மாவட்டம், வேலூர்.**

## வேலைவாய்ப்பு

கோவை மாவட்டம், தாராபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கொளத்துப்பாளையம் ஆயுர்வேதிக் கிராம மருந்தகத்திற்குப் பகுதி நேர ''ஏ'' வகுப்பு மருத்துவராக நியமனம் செய்ய 10–1–72-க்குள் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மாதச் சம்பளம் ரூ. 150 (நிர்ணயம் செய்யப்பட்டத் தொகை).

**ஈ. முகமது ஜலீல், பி.இ.,**
ஆணையர் (பொறுப்பு),
தாராபுரம்.

(த.22)

---

சேலம் மாவட்டத்தில் உள்ள துவக்கப் பள்ளிகள், உயர் துவக்கப் பள்ளிகளுக்கு 1971–72 ஆம் ஆண்டிற்கு விஞ்ஞானக் கருவிகள் மற்றும் விளக்கப் படங்கள் முதலியன வழங்குவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 31–12–71 தேதி மாலை 4 மணி வரை வரவேற்கப்படுகின்றது. ஒப்பந்த விதிகள் மற்றும் விநியோகம் செய்யப்பட வேண்டிய விஞ்ஞானக்கருவிகளின் பட்டியலை அலுவலக வேலை நேரத்தில் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

2. மேலும் ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியுடனும் ரூ. 300 (ரூபாய் முன்னூறு மட்டும்) மதிப்புள்ள பேங்க் டிராப்ட் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் பெயரில் பெறப்பட்டு காப்புத் தொகையாக இணைக்கப்பட வேண்டும்.

3. ஒப்பந்தப் புள்ளிகள் சேலம் மாவட்ட வளர்ச்சி அலுவலர் (தெற்கு) அவர்களாலோ, அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களாலோ சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 3–1–72 காலை 12 மணிக்கு ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

**ஆட்சித் தலைவர்,**
சேலம் மாவட்டம்.

(த.32)



16-12—10

## பொது விளம்பரம்

எண் : 27670/க/71, நாள் : 9-11-1971.

1972-73-ஆம் ஆண்டில் சேலம் மாவட்ட மருத்துவமனைக்கும் இதர அரசினர் மருத்துவ மனைக்கும் ஆகாரப் பொருள்கள் முதலியன சப்ளை செய்தலுக்கான ஒப்பந்தம்.

1972 ஏப்ரல் 1-ஆம்தேதி முதல் அல்லது அதற்குப்பிந்தைய தொரு தேதி முதல் 1973 மார்ச்சு 31-ஆம் தேதி வரையில் சேலம் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கும் மற்றும் இம் மாவட்டத்திலுள்ள இதர மருத்துவமனைகளுக்கும் ஆகாரப் பொருள்களையும் இதர மருத்துவமனை தேவைப் பொருட்களையும் வழங்குவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளின் மேற்பார்வையாளர்கள் அல்லது மருத்துவ அதிகாரிகள் 1972 ஜனவரி 7-ஆம் தேதி வெள்ளிக் கிழமையன்று பிற்பகல் 2 மணி வரையில் பெற்றுக் கொள்வார்கள்.

2. ஒப்பந்த நிபந்தனைகள், ஒவ்வொரு மருத்துவமனைக்கும் தேவைப்படும் பொருட்களின் பட்டியல் ஆகியவற்றையும் ஒப்பந்த நமூனாவையும் அந்தந்த மருத்துவமனைக்கு விண்ணப்பம் செய்து பெறலாம். ஒப்பந்தம் செய்ய விரும்புபவர் மூன்றரை சதவிகிதம் விற்பனை வரி உட்பட ஒப்பந்த நமூனா முதலியவற்றிற்கு விலையான ரூ. 5·20 (ஐந்து ரூபாய் இருபது காசு) தொகையை ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிலோ அல்லது அரசினர் கருவூலமொன்றிலோ தமிழ்நாடு அரசினர் கணக்கில் செலுத்த வேண்டும். ஒப்பந்த நமூனாவுக்கான விலைத் தொகையை "XXIII Medical g. Miscellaneous Director of Health Services and Family Planning......other receipts" என்ற தலைப்பிலும், விற்பனை வரியை "XII Sales Tax Receipts under the State Sales Tax Act-General Sales Tax" என்ற தலைப்பிலுமாக ஒரே சலானில் செலுத்த வேண்டும். ஒப்பந்த நமூனா சப்ளை செய்யக்கோரி செய்து கொள்ளப்படும் விண்ணப்பத்துடன் கூட, அசல் சலானை சேர்த்து அனுப்ப வேண்டும். இந்தத்தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரமாட்டாது. ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பித்த பின்பு, ஒப்பந்தப் புள்ளி சம்பந்தமாக எந்தவிதமான கடிதப் போக்குவரத்தும் மேற்கொள்ளக்கூடாது.

சேலம் மாவட்டம்.

1. அரசினர் தலைமை மருத்துவமனை, சேலம்.
2. அரசினர் மருத்துவமனை, ஆத்தூர்.
3. ஷை மேட்டூர் தேக்கம்.
4. ஷை ஓமலூர்.
5. அரசினர் மருத்துவ மனை, நாமக்கல்.
6. ஷை இராசிபுரம்.
7. ஷை திருச்செங்கோடு.
8. ஷை ஏத்தாப்பூர்.
9. ஷை சேந்தமங்கலம்.
10. ஷை வேலூர்.
11. ஷை ஏற்காடு.
12. ஷை ஜலகண்டாபுரம்.
13. ஷை மோகனூர்.
14. ஷை குமாரபாளையம்.
15. ஷை வேம்படிதாளம்.
16. ஷை சங்ககிரி.
17. ஷை வெண்ணந்தூர்.
18. ஷை ஆலம்பட்டி.
19. ஷை தம்மம்பட்டி.
20. அரசினர் தொழுநோய் மருத்துவமனை, ஏத்தாப்பூர்.

குறிப்பு :—ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு ஒப்பந்தத்துடன் 1971 அக்டோபர் 1-ஆம் தேதியன்றோ அல்லது அதற்குப் பிறகோ பெறப்பட்டு தாசில்தார் ஒருவரால் கையொப்பமிடப்பட்ட ஒரு சால்வன்சி சர்ட்டிபிகேட்டும், நேஷனலிடி சர்ட்டிபிகேட்டும் ஒப்பந்தத்தின் மொத்தத் தொகை மதிப்பு ரூ. 10,000-க்கு அதிகமானால் வருமானவரி வெரிபிகேஷன் சர்ட்டிபிகேட்டும் மற்றும் ஒப்பந்தத்தின் மொத்தத் தொகை மதிப்பு ரூபாய் 1,000-க்கு அதிகப்படுமானால் விற்பனைவரி கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட்டும் அல்லது தமிழக அரசின் அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரி ஒருவரால் அத்தாட்சியிடப்பட்ட அவற்றின் உண்மை நகலும் ஒப்பந்தத்துடன் சேர்த்து அனுப்பப்படவேண்டும்.

**வி. செல்வராசு, எம்.பி.பி.எஸ்,**
மாவட்ட மருத்துவ அலுவலர், சேலம்.

(த. ஆர். 1)

## ஏல விற்பனை

வாரிசுதார் இல்லாத சொத்துக்கள் 1971-ஆம் வருடம், டிசம்பர் மாதம், 23-ஆம் தேதி, வியாழக் கிழமை, காலை 10-30 மணியளவில் என்னுடைய அலுவலகத்தில் பகிரங்கமான ஏலத்தில் விற்கப்படும். பொருள்களின் பட்டியலை 21-12-71 செவ்வாய்க் கிழமையன்றும், 22-12-71 புதன் கிழமையன்றும், அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

வசதி வாரியம்.

தெ. 71890/டி.2/71.

நாள், 1-12-71.

**ஆணையர்,**
காவல் துறை அலுவலகம்.

சென்னை-8,
1—12—71

(த.41)

## குடிநீர், வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழே குறிப்பிடப் பட்டுள்ள வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், அவர்களால் எண் 52, கெங்கு ரெட்டி சாலை, சென்னை-8 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 29–12–1971 அன்று மாலை 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஏதேனும் ஒரு அலுவலர் அவர்களால் திறக்கப்படும்.

| எண்ணும் வேலையின் விவரமும். | ஒப்பந்த முறை. | கட்டுத் தொகை. ரூ. | வேலை முடிவுற காலம். | ஒப்பந்தப் பத்திர விலை. ரூ. |
|---|---|---|---|---|
| 1. மேல் விஷாரம் குடிநீர்த் திட்டம்—1வது பகுதியில் 2.5 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஆர்.சி.சி. நில மட்ட நீர்த் தேக்கம் கட்டுதல். | மொத்தத் தொகை. | 785 | எட்டு மாதங்கள். | 10.35 |
| 2. மேல் விஷாரம் குடிநீர்த் திட்டம் II-ம் பகுதியில் 6 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள நில மட்ட நீர்த் தேக்கம் கட்டுதல். | மொத்தத் தொகை. | 1,700 | ஷை | 10.35 |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான பணத்தை நிருவாகப் பொறியாளர் (ம.ந.வா.பொ). தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வாணியம்பாடி என்பவர் கணக்கில் " P. W. III—OR". என்ற தலைப்பிலும், விற்பனை வரிக்கான தொகையை " XII Sales Tax-Miscellaneous I-General Sales Tax " என்ற தலைப்பிலும் தனித் தனிச் செலான்களாகக் கட்ட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிருவாகப் பொறியாளர் (ம.ந.வா.பொ.), மக்கள் நல் வாழ்வுப் பொறியியல் கோட்டம், 301, ஜமாது ரோடு, வாணியம்பாடி-3 அவர்களிடமிருந்து, ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணத்தை நேரில் செலுத்தியோ அல்லது பண அஞ்சல் மூலம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப் பட மாட்டாது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை வழங்கக், கால நீட்டிப்புத் தரப்பட மாட்டாது.

மேற்பார்வைப் பொறியாளர்(ம. ந. வா. பொ.),
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம்,

சென்னை-8.
(த.ஆர். 7)

## விளம்பரம்

எல்.ஐ.எம். (ஆயுர்வேதம்) டாக்டர் பட்டம் பெற்ற 35 வயது மேற்படாத தகுதி வாய்ந்த ஆண்களிடமிருந்தும் பெண் ளிடமிருந்தும் இந்த நகராட்சி ஆயுர்வேத வைத்தியசாலை மருத்துவ அலுவலருக்கான வேலைக்கு விண்ணப்பங்கள் 30–12–1971 மாலை 4 மணி வரை வரவேற்கப் படுகின்றன. ரூபாய் ஒன்று செலுத்தி மாயூரம் நகராட்சி அலுவலகத்திலிருந்து மனு வடிவங்களைப் பெறலாம்.

கி. வீரையன்,
ஆணையர்.

1- 12–71
மாயூரம்
(த. 24)

## நாகர்கோயில் நகராட்சி

இந் நகராட்சி பொதுச் சுகாதாரப் பிரிவின் பார உந்து எண் எம்.டி.கே. 1352-ஐ பழுது பார்க்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 27–12–1971 மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப் படும். பழுது தீர்க்க வேண்டிய விவரங்கள், நிபந்தனைகள் முதலியன விண்ணப்பித்தோ அல்லது நேரிலோ நகர் நல அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். கூடுதல் விவரங்கள் தேவைப்பட்டால் நேரில் தெரிந்துக்கொள்ளலாம்.

பொறுப்புத் தொகை ரூ. 100.

நிபந்தனைகள்.

1 பழுது பார்க்கப்பட்டபின் பார உந்து தகுதிச் சான்றிதழ் பெறத் தக்கதாக இருக்கவேண்டும்.

2 பழுது வேலைகள் நகராட்சிப் பொறியாளர் அவர்களின் அங்கீகாரத்திற்குட் பட்டதாக இருக்கவேண்டும்.

3 ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலையைத் தவிர கூடுதல் வேலையோ, கூடுதல் உதிரி உறுப்புக்களோ அனுமதிக் கப்பட மாட்டாது.

4 எல்லாப் பழுது வேலைகளும் நகராட்சி வளைவினுள் செய்யபடவேண்டும்.

தங்கவேலு,
ஆணையர்.

நாகர்கோயில்
29—12—71
(த.21)

## ஸ்ரீரங்கம் நகரார்ட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் கீழே கையொப்பமிட்டவரால் 29–12–1971 மாலை 4 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

| | வேலை விபரம். | மதிப்பீடு. | கட்டுத் தொகை. |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1. | திருவானைக்காவல் சன்னதி வீதியின் தென்புறம் புதிய சாக்கடை கட்டவும் மேற்படி தெருவின் வட புறமுள்ள பழைய சாக் கடைக்கு மராமத்து செய் வதற்கும். | 3,600 | 90 |
| 2. | மேல விபூதி பிரகாரம் பழைய கக்கூசிற்கருகில் மண் தரை கக்கூஸ் ஒன்று கட்டுவதற்கு. | 2,700 | 70 |

ஆணையர்,
ஸ்ரீரங்கம் நகராட்சி.

(த. 51)

## வீட்டு வசதி வாரியம்

கீழ்க்கண்ட வேலைக்காக, உறையின் மீது ஒப்பந்தப்புள்ளி தாரர் பெயரும், வேலையின் பெயரும் எழுதப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 22–12–1971 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர் : காஞ்சிபுரத்தில், தமிழ்நாடு அரசினர் வாடகை வீடுகள் திட்டம்—கட்டம் II, தொகுதி I-ன் கீழ் 2ஏ/68 T.D. யின்படி இரண்டு அறைகள், இரண்டு தளங்கள் உள்ள பிளாக்குகள், இரண்டு பிளாக்குகள் கட்டுதல்.

வேலையின் மதிப்பு : ரூ. 66,400

கட்டுத் தொகை : ரூ. 995.

வரைபடங்கள், ஒப்பந்தப் பத்திரங்கள் ஆகியவைகளை நிருவாகப் பொறியாளர் (K) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அறிஞர் அண்ணு நகர், சென்னை-40 அவர்கள் அலுவலகத்திலிருந்து 15–12–1971 முதல் ரூ. 10 அத்துடன் விற்பனை வரி சர்சார்ஜ் ஆகியனவும் (இது திருப்பித்தரப்படமாட்டாது) செலுத்தி எல்லா அலுவலர் நாட்களிலும் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிகள் 22–12–1971 மாலை 3–05-க்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

டி. பி. காளியப்பன்,
நிருவாகப் பொறியாளர் (K.)
கொரட்டூர் கோட்டம்.

(த. 39)

## வீட்டு வசதி வாரியம்

### தக்கைக்கல் திட்டப் பிரிவு

எண்ணூர், சென்னை-57.

குறிப்பு எண். சி.சி.பி. 5/1345/69

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் (உறையின் மீது வேலையின் பெயரை குறித்து) பெருந்திட்ட அதிகாரி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தக்கைக்கல் திட்டப்பிரிவு, எண்ணூர், சென்னை -57. அவர்களால் மாலை 3-00 மணிக்குள் 29—12—1971 அன்று வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் 29—12—1971 அன்று மாலை 3-15 மணிக்கு ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறந்து பார்க்கப்படும்.

வேலையின் பெயர்—எண்ணூரிலுள்ள தக்கைக்கல் திட்டப் பிரிவின் தொழிற்சாலையில் கரி வழங்கி, தாக்கு கட்டி கொடுத்தல்.

அளவு—7,200 மெட்ரிக் டன் (ஒரு மாதத்திற்கு 1,200 மெட்ரிக் டன் வீதம்).

வைப்புத் தொகை—ரூ. 10,800.

ஒப்பந்த நமூனுவின் விலை—ரூ. 10 விற்பனை வரி.

ஒப்பந்த நமூனுவின் விலை திரும்பப் பெறமுடியாதது.

ஒப்பந்த நமூனுக்களையும் மற்ற விவரங்களையும் எண்ணூரிலிருக்கும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தக்கைக்கல் திட்டப் பிரிவு அலுவலகத்திலிருந்து 6—12—1971 முதல் 28—12—1971 முடிய எல்லா அலுவலக வேலை நாட்களிலும் காலை 9-45 மணியிலிருந்து மாலை 4-15 மணி வரையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்த நமூனுக்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ, எவ்விதக் காரணமுமின்றி மறுப்பதற்குத் திட்ட அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

27—11—1971.

ஜெயராமன்,
திட்ட அதிகாரி.

(த. 23)

## நல்வாழ்வுத் துறை

அரசினர் தலைமை மருத்துவ மனைகள் இதர மருத்துவ மனைகளுக்கு 1972-ஆம் ஆண்டுக்கு உணவுப் பொருள் வகைகள் முதலியன வழங்குவதற்காக ஒப்பந்தப்புள்ளிகள்.

மக்கள் நல்வாழ்வுப் பணி—குடும்ப நலத்திட்ட இயக்குநர் நிருவாகத்தில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனைகள் இதர மருத்துவ மனைகளுக்கு 1972 ஏப்ரல் 1-லிருந்து அல்லது அதற்குப் பிற்பட்ட ஒரு தேதியிலிருந்து 1973 மார்ச்சு 31 வரை உள்ள காலத்துக்கு உணவுப் பொருள் வகைகள், இதர மருத்துவமனைத் தேவைகளை வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள், சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளின் கண்காணிப்பாளர்கள் மருத்துவ அலுவலர்களால் 1972 ஜனவரி 7 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு மருத்துவமனைக்கும் தேவைப்படும் பொருட்கள் நிபந்தனைகள், ஒப்பந்த வடிவங்கள் ஆகியவைகளை சம்பந்தப்பட்ட மருத்துவ மனைகளுக்கு மனுச்செய்து பெறலாம். ஒப்பந்தப்புள்ளி வடிவம் முதலியவைகளுக்கான விலை ரூ. 5·19 (ஐந்து ரூபாய் 19 காசுகள் மட்டும்), விற்பனை வரி 3 சதவிகிதம்—சர்சார்ஜ் 5 சதவிகிதம் உட்பட) இத் தொகை இந்திய ரிசர்வ் பாங்கியிலோ, அரசுக் கருவூலத்திலோ தமிழ்நாடு அரசின் கணக்கில் கட்டப்படவேண்டும். இத்தொகை ஒரே சலானில் "XIII -Medical-g. Misc.—I-Director of Health Services and Family Planning—other receipts"..என்ற தலைப்பில் ஒப்பந்தப் புள்ளி வடிவத்துக்காகவும், " XII Sales tax Receipts under Sales tax Act–General Sales tax"என்ற தலைப்பில் விற்பனை வரியும் கட்டப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி வடிவங்கள் கோரும் மனுவுடன் அசல் சலான்கள் இணைக்கப்படவேண்டும். இத்தொகை திருப்பித் தரப்படாது.

குறிப்பு:—ஒரு மருத்துவமனை சம்பந்தப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளியுடனும் 1971 அக்டோபர் 1-ல் அல்லது அதற்குப் பிறகு பெறப்பட்ட சால்வன்சி சான்றிதழும், நேஷனலிட்டி சான்றிதழும், தாசில்தாரால் கையொப்ப மிடப்பட்டும், ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. 10,000-ஐ மீறுமானால் வருமானவரி வெரிபிகேஷன் சான்றும், ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. 1,000-ஐ மீறுமானல் வருமானவரி கிளியரன்ஸ் சான்றும் அல்லது மாநில அரசிதழ் பதிவு அலுவலரால் கையொப்பமிடப்பட்ட சரியான நகல்களும் தரப்படவேண்டும்.

எம். பழனிச்சாமி,

மக்கள் நல்வாழ்வுப் பணி குடும்ப நலத் திட்டம் (கணக்குகள்), இயக்குநர், உதவியாளர்.

(த.ஆர். 9)

---

## குடிநீர், வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுத் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை,நெடுஞ்சாலைகிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் நிறுவனங்களில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 22-12-1971 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்: இலப்பைக் குடிகாடு குடிநீர்த்திட்டம்—முதல் நிலை—3·5 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ளஉயர்மட்ட, உறுதிபெறு கற்காரை நீர்த் தாங்கி கட்டுதல்.

ஒப்பந்த வகை: மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை—ரூ. 2,650 (ரூபாய் இரண்டாயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்).

இத்தொகை, கருவூலச்செலான் பணஉத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல்துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சிப் ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலை முடிப்பதற்குரிய அளவு:—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை: ரூ. 10.35 (விற்பனை வரி உட்பட)

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சி பொதுச்சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளரிடமிருந்து பி,—15 தில்லை நகர் மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச்செலுத்தி20–12–1971 திங்கட்கிழமை மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்.

(பொ. சு.)

(த.5)

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), சென்னை வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 29—12—1971 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வேலை விபரம். | முன் வைப்புத் தொகை. ரூ. | ஒப்பந்த நமூனா கிடைக்குமிடம். |
|---|---|---|
| காஞ்சிபுரம், திருவத்திபுரம் சாலையில் பிரிந்து விண்ணவேதி, மரியநல்லூர், சுமங்கலி, கொத்தனூர் வழியாகப் புதுப்பாடி வட இலுப்பைச் சாலையில் சேரும் சாலையை (கி.மீ. 0·0 முதல் 23·1 வரை) மேம்பாடு செய்தல். | 5,485 | கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), திருவண்ணாமலை. |

ஒப்பந்தங்கள் 29—12—1971 அன்று மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள், வரைப்படங்கள் முதலியனவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), திருவண்ணாமலை அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூபாய் 25·88செலுத்தி 15–12–1971 முதல் 28–12–1971 வரைஅலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத்தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருவண்ணாமலை அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருவண்ணாமலை பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ''ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்''.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா.

சென்னை-25,
1—12—1971.

ஜி. ஜார்ஜ் ஜேகப்,
மேற்பார்வைப் பொறியாளர்(நெ.கி.)

(த. 42)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவர் பொருட்டும், தமிழக பொதுப்பணித்துறை தஞ்சைமாவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அன்னாரது அலுவலகத்தில் 29-12-1971 மாலை 3—00 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்த விவரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| 1. வேலையின் பெயர் | தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினம் வட்டம் வேளாங்கண்ணி மாதா கோவில் சமீபத்தில் வெள்ளை யாற்றின் இடது கரை மைல்99/4-260-ல் தடுப்புச் சுவர் கட்டுதல். |
| 2. ஒப்பந்த வகை | கே. 2. |
| 3. வைப்புத் தொகை (கருவூல செலான் உருவில்). | ரூ. 6,000. |
| 4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசினர் கருவூலங்களில் பொதுப்பணித்துறை செலுத்துகை என்ற தலைப்பில் செயற் பொறியாளர், வெண்ணாறு கோட்டம், தஞ்சை, அவர்களின்கணக்கில்கட்டவேண்டும். | ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும். |
| 5. விற்பனை வரி அரசினர் கருவூலங்களில் '' XII விற்பனைவரி (பி) பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரி சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி'' என்ற தலைப்பில் செலுத்த வேண்டும். | ரூ. 0·88 (காசு எண்பத்தெட்டு மட்டும்). |
| 6. ஒப்பந்தப் பத்திரங்கள், கொடுக்க ஆரம்பிக்கும்நாள். | 10–12–1971. |

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
தஞ்சை வட்டம், தஞ்சாவூர்.

(த. ஆர்.2)

தாம்பரம், அரசு காசநோய் சானடோரியம் மேற்பார்வையாளர் அவர்களால், தாம்பரம் அரசு காசநோய் சானடோரியத்துக்கு உணவுப் பொருட்கள், மற்றும் மருத்துவமனைக்குத் தேவையான பொருட்கள் 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் தேதியிலிருந்து அல்லது வேறு குறிப்பிட்ட தேதியிலிருந்து ஓராண்டுக் காலத்திற்கு வழங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் தமிழ்நாடு ஆளுநர் சார்பாகவும், அவர் ஆணையின்படியும், 3—1—1972 மாலை 2·00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் தேவையான பொருட்களின் பட்டியல்கள், ஒப்பந்த நமூனு முதலியன வேண்டுவோர் பத்திரங்களின் விலை ரூ. 5 விற்பனை வரி ரூ. $3\frac{1}{2}$ சதவிகிதம், சர் சார்ஜ் ரூ. 5 சதவிகிதம். இக்கட்டணத்தை இந்திய ரிசர்வ் வங்கியில்அல்லதுஅரசுக் கருவூலத்திலோ தமிழ்நாடு அரசினர்கணக்கில் செலுத்த வேண்டும். "XXII மெடிகல் II இயக்குநர் மருத்துவக்கல்வி ஜே. மிஸ்ஸலேனியஸ் மற்ற ரசீதுகள்" என்ற தலைப்பில் ஒப்பந்தப்பத்திரத்தின் விலையையும், "XII விற்பனை வரி—விற்பனை வரிச் சட்டத்தின்தின் கீழ் வரவினம்" என்ற தலைப்பில் விற்பனை வரியையும் செலுத்தப்பட வேண்டும். ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவில் செலுத்தினுல் அசல் செல்லுச்சீட்டைக் கொடுக்க வேண்டும். ஸ்டேட் வங்கியிலோ அல்லது அரசுக் கருவூலத்திலோ பணம் செலுத்தினுல் செல்லுச் சீட்டினுடைய எண், தேதி, செலுத்தப்பட்ட பணம், செலுத்துபவருடைய பெயர் விவரங்களை ஒப்பந்த நமூனுவைப் பெறுவதற்கான விண்ணப்பத்தில் விவரமாகக் குறிப்பிட வேண்டும். மேற்கண்ட பணம் எக்காரணம் முன்னிட்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

2. மேற்பார்வையாளர், அரசு காசநோய் சானடோரியம், தாம்பரம் அவர்களுக்கு முகவரியிட்ட ஒப்பப்புள்ளிகள் அவருக்குக் கொடுக்கப்படவேண்டும்.

குறிப்பு:—ஒப்பந்தப்புள்ளி ஒவ்வொன்றுடனும் 1—10—1971-ஆம் தேதிக்குப் பிற்பட்டு, தாசில்தார், ஒருவரால் கையெழுத்திடப்பட்ட சால்வன்சி சான்றும் ஒப்பந்த மதிப்பு ரூ. 10,000க்கு அதிகப்படுமானுல் வருமானவரி ஆய்வுச் சான்றிதழும், ஒப்பந்தத் தொகை ரூ. 1,000க்கு மேலானுல் விற்பனை வரி கணக்குத் தீர்ப்புச் சான்றிதழும், மற்றும் நேசனுலிட்டி சான்றும் அல்லது கெஜட் பதிவு பெற்ற ஓர் அதிகாரியால் அத்தாட்சி இடப்பட்ட அதன் சரியான நகலும் ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் சேர்த்து அனுப்ப வேண்டும். ஒப்பந்த நிபந்தனைகள் விதிகள் ஆகியவற்றின் நகல்களில் ஒப்பந்தக் கவரின் சான்றும் இருத்தல் வேண்டும்.

**டாக்டர் வி. ரங்கசாமி,**
மேற்பார்வையாளர்,
அரசினர் காசநோய்
சானடோரியம்,
தாம்பரம், சென்னை-47.

(த.15)

## நல்வாழ்வுத் துறை

தமிழ்நாட்டில் மக்கள் நல்வாழ்வுப்பணிகள்.—குடும்ப நலத்திட்ட இயக்குநர் அவர்களின் நிர்வாகத்திலுள்ள அரசாங்க மருத்துவ நிறுவனங்களுக்கு 1972-73-ஆம் ஆண்டுக்கு எக்ஸ்ரே டெவலப்பர்கள் பிக்சர்ஸ், அப்சார்பெண்ட் பஞ்சு ஆகியவைகளை வழங்குதல்.

1972 ஏப்ரல் 1 முதல் அல்லது அதற்குப்பிற்பட்ட ஒரு தேதியிலிருந்து 1973 மார்ச்சு 31 வரை உள்ள காலத்துக்கு மக்கள் நல்வாழ்வு—குடும்பநலத் திட்ட இயக்குநர் நிர்வாகத்திலுள்ள அரசினர் மருத்துவ நிவனங்களில், ஊராட்சி மன்றங்களால் நிருவகிக்கப்படுபவர்களின் தேவைக்காக எக்ஸ்ரே டெவலப்பர்கள், பிக்சர்ஸ் ஆகியவைகள் வழங்குவதற்கும், அப்சார்பெண்ட் பஞ்சு, கம்பளம் வழங்குவதற்கும், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் துணை இயக்குநர், மக்கள் நல்வாழ்வுப் பணி, குடும்ப நலத்திட்டம் (கணக்கு) அவர்களால் 1972 ஜனவரி 10-ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் விவரங்கள், ஒப்பந்தப்புள்ளி வடிவங்கள் ஆகியவைகளுக்கு மக்கள் நல்வாழ்வுப்பணி குடும்ப நலத்திட்ட அலுவலகம், சென்னை-6க்கு 1971 டிசம்பர் 15-ஆம் தேதியிலிருந்து மனுச் செய்து பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை ரூ. 10·37 (ரூபாய் பத்து காசுகள் 37 மட்டும்) $3\frac{1}{2}$ சதவிகித விற்பனைவரி மீது 5 சதவிகித சர்சார்ஜ் வரி உட்பட) இக்கட்டணத்தை இந்திய ரிசர்வ் பாங்கியிலோ அல்லது அரசுக் கருவூலத்திலோ தமிழ்நாடு அரசினர் கணக்கில் செலுத்த வேண்டும். இத்தொகை ஒரே சலானில் "XXIII" மருத்துவம் ஜி. மிஸ்ஸலேனியஸ்—I மக்கள் நலப்பணி குடும்ப நலத்திட்ட இயக்குநர்—இதர வரவினங்கள்கள்" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை "XII விற்பனை வரி அரசு விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் வரவினம்—பொது விற்பனை வரி" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப் புள்ளி வடிவத்தைக் கோரும் மனுவுடன் அசல் சலான்கள் இணைக்கப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

1971 அக்டோபர் 1-க்குப் பிறகு பெறப்பட்ட சால்வன்சி நேசனுலிட்டி சான்றிதழ் தாசில்தாரால் கையொப்பமிடப்பட்டும், ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு ரூ. 10,000க்கும் மேல் இருக்குமானுல் வருமான வரி வெரிபிகேசன் சான்றும், ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு ரூ. 1,000க்கு மேற்பட்டிருக்குமானுல் விற்பனை வரிச்சான்றும் அல்லது அரசிதழ் அலுவலரின் ஒப்பத்துடன் கூடிய சரியான நகல்கள் ஒப்பந்தப் புள்ளியுடன் இணைக்கப்படவேண்டும்.

**எம். பழனிச்சாமி,**
மக்கள் நல்வாழ்வுப்பணி
குடும்ப நலத்திட்டம்
(கணக்குகள்) உதவியாளர்—
சென்னை-6.

10—11—1971

(த. ஆர்.3)

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை) திருச்சிராப்பள்ளி அவர்கள் சுப்பிரமணியபுரம், புதுக் கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 29-12-1971 அன்று பிற்பகல் 3-30 மணி (அலுவலக கெடிகாரப்படி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள் வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| எண். | வேலையின் பெயர். | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் விலாசம். |
|---|---|---|---|
| | | ரூ. | |
| 1. | மதுரை பாலமேடு சாலைக்கு 100 எம்.எம். (4") கனத்திற்குச் சிமெண்ட் கான்கீரீட் தளம் அமைத் தல் கி.மீ. 6/6—10/0. | 3,800 | கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) திண்டுக்கல். |
| 2. | ஷை கி.மீ. 10/0-15/0. | 5,500 | ஷை |
| 3. | ஷை கி.மீ. 15/0—20/0. | 5,500 | ஷை |
| 4. | கி.மீ. 20/0—24/4. | 4,900 | ஷை |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20.60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள் வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) திண்டுக்கல் விலாசத்திலிருந்து 15-12-1971 முதல் 28-1-1972 வரையி லான வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள் நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத் தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ் சாலை கிராமப் பொறியியல் பணித் துறை) அதிகார எல்லைக் குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிக்கும், 12 வருட தேசீயத் தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங் களும் ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும் டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு காரண்டிகள் சமர்ப்பிக்கப்படும்பொழுது ரிசர்வ் பேங்க் ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன் பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந் தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப)
திருச்சிராப்பள்ளி-1.

(த. 45)

## வீட்டுவசதி வாரியம்

10'' (250 மி.மி.) விட்ட முள்ள C.1 குழாய்களைப் பட் டினப்பாக்கம் கடற்கரை எஸ் டேட்டிலுள்ள அலுவலகத்திற்குத் தருவித்துக் கொடுக்க ஒப்பந்தப் புள்ளிகளைச் சமர்ப்பிக்க வேண் டிய கடைசித் தேதி 24-12-71, மாலை 3 மணி வரை நீட்டிக்கப் பட்டுள்ளது.

சென்னை-35.
25-11-71.

டி. சாமுவேல்தம்பு,
நிருவாகப் பொறியாளர்,
கிழக்குக் கோட்டம்.

(த. 48)

## ஏலம்

தர்மபுரி மாவட்டம், ஒசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் 22—12—1971 (புதன்) அன்று காலை 11—00 மணி அளவில் சிந்தி பசுக்கள், சிந்தி கிடாரிகள், சிந்தி காளைகள், கலப்பு இனப் பசுக்கள், கலப்பு இனக் கிடாரிகள், மற்றும் வேலைக்காளைகள் முதலியன அடங்கிய மொத்தம் 60 (அறுபது) கால்நடைகள் பகிரங்க ஏலத்தில் விடப்பட இருக்கின்றன.

ஏலம் பற்றிய விதிமுறைகளைக் குஞ்சு பொரிப்பு அலுவலர் உடன் கண்காணிப்பாளர் அலுவலகம் மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர், தர்மபுரி மாவட்டம் என்ற முகவரியில் நேரிலோ அல்லது பதில் எழுதப் போதிய உரையுடன் கூடிய தபால் தலைகளுடனே விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்லாம். மேற்கண்ட கால்நடைகளை எந்த வேலை நாட்களிலும் பண்ணையின் வேலை நேரங்களில் நேரில் வந்து பார்வையிடலாம்.

**குஞ்சு பொரிப்பு அலுவலர்,**
உடன் கண்காணிப்பாளர்,
மாவட்டக் கால்நடைப்பண்ணை,
ஒசூர்.

(த. 52)

## மருத்துக் கல்வித்துறை

டீப் எக்ஸ்ரே தேரபி யூனிட் வழங்குவதற்காக மருத்துவக் கல்வித் துறை இயக்குநர் அவர்களால் 1971 டிசம்பர் 22 மாலை 2—00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. இயக்குநர், மருத்துவக் கல்வி, '' எழிலகம் '', சேப்பாக்கம், சென்னை-5-ல் ரூ. 10-ம் விற்பனை வரி 3 சதவிகிதமும் செலுத்தி ஒப்பந்தப்புள்ளிப்பத்திரத்தையும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைபற்றிய விளக்க நகலையும் பெறலாம்.

விலைப்புள்ளிகள், இயக்குநர் மருத்துவக் கல்வி, சென்னை-5, என்ற முகவரிக்கு மூடி முத்திரையிடப்பட்ட கவரில் அனுப்ப வேண்டும். '' Quotation for XI The supply of deep X-Ray Theraphy Unit '' என்று குறிப்பிட்டு 1971 டிசம்பர் 22-க்குள் அனுப்ப வேண்டும். குறிப்பிடப்பட்ட நாள் நேரத்திற்குப் பின்னர் வரும் புள்ளிகளும் மேலே குறிப்பிட்டுள்ளதைப் போல் குறிப்பிடப்படப்படாதவைகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இயக்குநர், மருத்துவக் கல்வித் துறை, சென்னை, அவர்களிடம் மேற்கொண்டு தகவல்கள் தேவைப்பட்டால் தெரிந்து கொள்ளலாம்.

**என். ஆர். ரத்னகண்ணன்,**
இயக்குநர், மருத்துவக் கல்வி.

(த.49)

## செங்கோட்டை நகராட்சி

இந் நகராட்சியின் பொதுச் சுகாதார உபயோகத்திற்கு 200 லிட்டர் பிஞயில் (லோசன்)சப்ளை செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 30—12—1971 வியாழன் மாலை 4 மணி வரை நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். வந்துள்ளஒப்பந்தங்கள் 30—12—1971 மாலை 4—30 மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்தத்தார் ரொக்கமாக ரூ. 25.00 கட்டி ரசிதை ஒப்பந்தத்துடன்இணைத்துஅனுப்ப வேண்டும். காலம் கடந்துவரும் ஒப்பந்தமும், கட்டுத்தொகை கட்டாத ஒப்பந்தமும் கவனிக்கப் படமாட்டாது. ஏனைய விவரங்கள் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**ஆணையர்,**
செங்கோட்டை நகராட்சி

(த. 49)

## மாயூரம் நகராட்சி

மாயூரம் நகராட்சிக்குச் சொந்தமான திரு வி. க. காய்கறி அங்காடியில் தற்போது கீற்றுக் கொட்டகையாக இருக்கும் 5 கடைகளைப் புதிதாக ஓட்டுக் கட்டடங்களாகக் கட்டுவதற்கு ரூ. 15,000 மதிப்பீட்டிற்கான வேலைக்கும், கூறைநாடு நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் ஒரு மல அறை (கக்கூஸ்) கட்டுவதற்கும் ரூ. 6,700 மதிப்பீட்டிற்கான வேலைக்கும் 30—2—1971ஆம்தேதி மாலை 4—00 மணி வரை ஆணையர் அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். மேற்கண்ட வேலைகளின் விவரங்களை நகராட்சிக்கருவூலத்தில்கடைகள் கட்டும் வேலைக்கு ரூ. 3-00-ம் விற்பனை வரி பதினொன்று காசும் மேற்படி கக்கூஸ் கட்டுவதற்கு ரூபாய் ஒன்றும் காசு நான்கு விற்பனை வரி செலுத்தி 28—12—1971-க்குள் பெற்றுக் கொள்ளலாம். 28—12—1971-க்குப் பிறகு ஒப்பந்தப் புள்ளி நமூனு வழங்கப்படமாட்டாது.

**சி வீரைய்யன்,**
ஆணையர்.

மாயூரம்,
2—12—1971.

(த. 48)

## பொதுப்பணித் துறை

ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு.

வேலையின் பெயர்:—பூந்தமல்லி அரசினர் (போர்டு) உயர் நிலைப்பள்ளியில் பொன்விழாக் கட்டடம் கட்டுதல், செங்கற்பட்டு மாவட்டம்.

மேற்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 22—12—1971 வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. 22—12—1971 மாலை 3.00 மணிவரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும். அதே நாளில் மாலை 3·15 மாணிக்கு அவை திறக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் 20—12—1971வரை அலுவலக நேரங்களில் விற்கப்படும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதும் இல்லை.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பொதுப்பணித் துறை,
செங்கை—வடார்க்காடு
பெருவட்டம், வேலூர்-1.

(த.28)

## எண்ணூர் அனல் மின் திட்டம்

குறிப்பு எண். AEP 77 to 82.

1. மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அதன் உறையில் ''தமிழ்நாடு மின்சார வாரியம், எண்ணூர் அனல் மின் திட்டம் குறிப்பு எண். AEP 77 to 82 Supply of Pull lifts etc. எனவும்மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க்கையொப்பமிட்டவரால் 30—12—1971 மாலை 3-30 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

2. தேவையான பொருள்கள் அவற்றின் அளவு குறிப்பு எண் விவரம் முன் பணம் முதலியன கீழே தரப்பட்டுள்ளன.

| Serial number. | Detail. | Specu number. | Cost of Tender. RS. | Earnest Money Deposit. RS. |
|---|---|---|---|---|
| 1 | Pulling and lifting machine stores. Capacity M. 50, Make Mex-pull. | AEP· 77 | 5 | 1,100 |
| 2 | Pulling and lifting machine 3 and $1\frac{1}{2}$ tons Capacity mightly Max-pull M· 30 and M. 15. Chain Pully block Index make 5 tons, 3 tons. $1\frac{1}{2}$ tons Capacity. | AEP 78 | 5 | 1,100 |
| 3 | Wire ropes slings wire rope clamps shackles, bull doggrips. | AEP 79 | 5 | 600 |
| 4 | Grinding machines and blowers Ralli Wolf Make. | AEP 80 | 5 | 1,100 |
| 5 | Grinding discs Carborandum Universal Make 101.6 × 10·5 × 4·76 mm, A. 24., A. 30 RB. | AEP 81 | 5 | 500 |
| 6 | M.S· Block Tublar Scaf folding pipes $1\frac{1}{2}$ in dia. with plain ends. | APE 82 | 5 | 825 |

3. துறையினரைச் சார்ந்த நமூனுக்களில்லாத ஒப்பந்தங்களும் இறுதித்தேதிக்கும் நேரத்திற்கும் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும் பிரித்துக் கொடுக்கவும் கீழ்க்கையொப்பமிட்டவரே உரிமையுடையவர்.

4. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணுமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்களும் மாற்றத்தக்கவையல்ல.

தொலைபேசி எண். 59556. **மேற்பார்வைப் பொறியாளர்,**
தந்தி ENTERMAL எண்ணூர் அனல் மின் திட்டம் எண்ணூர்.
(த.33) சென்னை-57.

---

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக் காரர்களிடமிருந்து எண். 17, சர். பி.டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 22—12—1971 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக் காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—கோவில்பட்டி குடிநீர்த் திட்டம்-மூன்றும் கட்டம்-தலைமை நீரேற்று நிலையம்-நீரேற்றிகளும் அதன் உபகரணங்களும் அளித்தல்—நிறுவுதல்.

ஒப்பந்த வகை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை ரூ. ஐயாயிரத்து அறு நூற்று நாற்பது (ரூ. 5,640).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச்சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் கோவில்பட்டி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு—ஆறு மாதம்.

ஒப்பந்தப்படிவங்களின் விலை—ரூ. இருபதும் காசு எழுபத்தி ஐந்தும் மட்டும். (விற்பனை வரி உட்பட.)

ஒப்பந்தப்படிவங்கள் வேண்டுவோர் கோவில்பட்டி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து, 25, வக்கீல் தெரு, கோவில்பட்டி என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 18—12—1971 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
(த.ஆர்.4) (பொ.சு.)

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை திண்டுக்கல் கோட்டம்

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்கள் சார்பாகவும், திண்டுக்கல் (நெடுஞ்சாலை கிராமப்பொறியியல் பணித்துறை) கோட்டப் பிராந்தியத்தில் உள்ள அரசினர் சாலைகளில் 1972—73-ம் ஆண்டிற்கான பராமரிப்பு வேலைகளுக்கான மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (டெண்டர்கள்) அட்டவணையில் திண்டுக்கல் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல்) அவர்களால் அவர்களுடைய அலுவலகத்தில்20—1—1972ஆம் தேதி பிற்பகல் 4—00 மணி வரையில் (கோட்டப் பொறியாளர் அலுவலக நேரப்படி) பெற்றுக்கொள்ளப்படும். பெற்றுக் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் அன்றைய தினமே பிற்பகல் 4—05 மணி அளவில் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிப் பற்றிய விவரங்கள் குறிப்பிட்ட அறிவிப்புப் பட்டியல்களிலும் பொதுவான நிபந்தனைகளுடன் அட்டவணையும் மேற்படி விவரக் குறிப்புகளும் திண்டுக்கல் (நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை) கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் 10—1—1972-ஆம் தேதி முதல் 19—1—1972ஆம் தேதி வரை (இரு நாட்களும் உட்பட) அலுவலக நேரத்தில் எல்லா வேலை நாட்களிலும் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு வேலைக்கான அட்டவணைப் பட்டியலில் அடக்கவிலை விற்பனை உட்பட ரூ. 5.18 (ரூபாய் ஐந்து காசு பதினெட்டு மட்டும்) ஆகும். இந்தத் தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தர இயலாது. 20—1—1972-ஆம் தேதி ஒப்பந்த விவரங்கள் விற்கப்படமாட்டாது.

ஒவ்வொரு வேலைக்கான வேலை விவரங்கள் முன் வைப்புத் தொகை, விவரங்கள் அடங்கிய அட்டவணை இவ்வலுவலகத்திலும் இதன் அனைத்து உட்கோட்ட உதவிப் பொறியாளர் (நெ. கி. ப. து.) அலுவலகங்களிலும், இதன் அனைத்து பிரிவு அலுவலகங்களிலும் (நெ.) உள்ள அறிவிப்புப் பலகையில் 10—1—1972-ஆம் தேதி முதல் 19—1—1972-ம் தேதி வரை விளம்பரம் செய்யப்படும். முன்வைப்புத் தொகை திண்டுக்கல் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) கோட்டப் பொறியாளர் அவர்களின் எல்லைக்குட்பட்ட அரசினர் கருவூலங்கள் ஏதேனும் ஒன்றில் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டு இணைக்கப்பட வேண்டும். இதைத்தவிர கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை) திண்டுக்கல் சார்பில் மாற்றப்பட்ட பன்னிரண்டு ஆண்டுதேசியத் தற்காப்புப் பத்திரங்களும், மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின் சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல்டு வங்கிகளால்வழங்கப்படும் வங்கி உத்திரவாதங்களும், டிமாண்டு-டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், முன்வைப்புத் தொகைக்காகப் பெற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகை இல்லாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

**வி. எம். ராமதாஸ் ராவ்,**

கோட்டப் பொறியாளர்,

(நெ. கி. ப. து.), திண்டுக்கல்.

(த.37)

---

## திண்டுக்கல் நகராட்சி

திண்டுக்கல் நகராட்சியின் உபயோகத்திற்காகக் கீழ்க்கண்ட அளவுள்ள குப்பைத் தொட்டிகள் வினியோகிப்பதற்குத் திண்டுக்கல் நகராட்சி ஆணையராலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவராலோ 29—12—1971 மாலை 4-00 மணி வரை முத்திரையிடப் ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தம் கொடுக்க விருப்பம் உள்ளவர்கள் ரூ. 200 பொறுப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தம் கொடுக்கலாம்.

ஒப்பந்த நிபந்தனைகளை அலுவலக நேரத்தில் பொறியர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. 2'—0'' × 2'—0'' Size Rcc Dustbins—100
(யந்திரத்தால் தயார் செய்யப்பட்டது).

2. 2'—6'' × 2'—00 Size Rcc Dustbins—100
(யந்திரத்தால் செய்யப்பட்டது).

**ஆணையர்,**

திண்டுக்கல் நகராட்சி.

(த.46)

---

## செங்கோட்டை நகராட்சி

திருநெல்வேலி மாவட்டம்

செங்கோட்டை நகராட்சி (Escort-37) டிராக்டர் மற்றும், டிரெய்லர் ஆகியவற்றிற்குத் தேவையான சாதனங்கள் ( spare parts ) போட்டு நல்ல நிலையில் பழுதுபார்த்துக்கொடுக்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 20—12—1971 திங்கட்கிழமை மாலை 3 மணி வரை நகராட்சி ஆணையர் அவர்களால் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்றவர்களால் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 3-30 மணிக்கு வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். டிராக்டரையும் டிரெய்லரையும் அலுவலக வேலை நாட்களில் வந்து பரிசோதனை செய்து கொள்ளலாம்.

ஒப்பந்ததார், ஒப்பந்த டிபாசிட் ரூ. 50 கட்டி ரசீதை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். டிபாசிட் இல்லாத ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏனைய நிபந்தனைகளை அலுவலகத்தில் கேட்டுத்தெரிந்துகொள்ளலாம்.

**ஆணையர்,**

செங்கோட்டை நகரசபை.

செங்கோட்டை,
1—12—1971.

(த.19)

## ஒப்பந்தப் புள்ளி

### மருத்துவ மனை

உணவுப் பொருள்கள் மற்றும் மருத்துவத் தேவைகட்கு 1972 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து 1973 மார்ச்சு 31-ந் தேதி வரை உள்ள காலங்கட்கு கீழ்க்கண்ட மருத்து மனைக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. அவை கண்காணிப்பாளர்-மருத்துவ அதிகாரிகளிடம், 7–1–1972 வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்குள் கிடைக்க வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகளின் பிரதிகளை, கருவூல ரசீது-சலான் இணைத்து மனுச் செய்து மருத்துவ மனைகளிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிக்கான பணம் 5·19 (ரூபாய் ஐந்து, காசு பத்தொன்பது மட்டும்) விற்பனை வரி 3½ சத வீதம், விற்பனை வரிக்கான சர்சார்ஜ் 5 சத வீதம், இவை ரிசர்வ் வங்கியிலோ அல்லது ஸ்டேட் பாங்க் அலுவலகங்களின் ஏதாவது ஒன்றிலோ அல்லது அரசுக் கருவூலங்களிலோ தமிழ்நாடு அரசின் கணக்கில் XXIII Medical—I Director of Health and Family Planning—G. Miscellaneous other receipts என்ற தலைப்பில் ஒப்பந்தப் புள்ளிக்கான தொகையைச் செலுத்த வேண்டும். விற்பனை வரிக்கானத் தொகையை "XII Sales tax Receipts under the State Sales tax Act—General Sales Tax" என்ற தலைப்பில் கட்ட வேண்டும். எக்காரணம் கொண்டும் இந்தப் பணம் திரும்ப தரப்படமாட்டாது.

1. காந்தியடிகள் மெமோரியல் மாவட்டத் தலைமை மருத்துவ மனை, திருச்சி.
2. நகர் பொது மருத்துவ மனை, புதுக்கோட்டை.
   அரசினர் ரேனிஸ் மருத்துவ மனை, புதுக்கோட்டை.
3. அரசினர் மருத்துவ மனை, கரூர்.
4. அரசினர் மருத்துவ மனை, திருவரங்கம்,
5. அரசினர் மருத்துவ மனை, அரியலூர்.
6. அரசினர் மருத்துவ மனை, பெரம்பலூர்.
7. அரசினர் மருத்துவ மனை, லால்குடி.
8. அரசினர் மருத்துவ மனை, ஆலங்குடி.
9. அரசினர் மருத்துவ மனை, குளித்தலை.
10. அரசினர் மருத்துவ மனை, கீரனூர்.
11. அரசினர் மருத்துவ மனை, துறையூர்.
12. அரசினர் பாப்பாயி ஆச்சி மருத்துவமனை, வளையபட்டி.
13. அரசினர் செல்லப்பா மருத்துவ மனை, அரிமலம்.
14. அரசினர் நாச்சம்மாள் ஆச்சி மருத்துவ மனை, கோப்பனப்பட்டி.
15. அரசினர் மருத்துவ மனை, வேலாயுதம்பாளையம்.
16. அரசினர் கஸ்தூர்பாய் மருத்துவ மனை, ஓமந்தூர்.
17. அரசினர் மருத்துவ மனை, பள்ளப்பட்டி.
18. அரசினர் காந்தி லெப்ரோசிரியம், தோலூர்பட்டி.
19. அரசினர் மருத்துவமனை, ஜெயங்கொண்டாச்சோழபுரம்.

குறிப்பு:—ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியும் கீழ்க்கண்ட இணைப்புகளுடன் அதாவது உண்மையான அல்லது உண்மை நகல்களுடன் இருத்தல் வேண்டும்.

(I) 1. சால்வன்ஸி சர்டிபிகேட்டும் நேஷனலிட்டி சர்டிபிகேட்டும் அக்டோபர் திங்கள் முதல் தேதிக்குப் பிறகு (1971) பெற்றதாக தாசில்தாரிடம் கையெழுத்துப் பெற்றிருக்க வேண்டும்.

2. ரூ. 1,000 மதிப்பீட்டிற்கு மேற்பட்ட ஒப்பந்தப் புள்ளிக்கு இந்த ஆண்டுக்கான விற்பனை வரி ஆய்வுப் பத்திரம் இணைக்கப்பட வேண்டும்.

3. ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு ரூ. 10,000-க்கு மேற்பட்டவற்றிற்கு, விற்பனை வரி கிளியரன்ஸ் சர்டிபிகேட் இணைக்கப்பட வேண்டும்.

(II) ஒப்பந்தப் புள்ளிகள் சம்பந்தமாக எந்த விதத் தொடர்பும் ஒப்பந்ததாரர்கள் வைத்துக்கொள்ளக் கூடாது.

**டாக்டர் வி. சந்திரசேகரன்,**
உதவி மாவட்ட மருத்துவ அலுவலர்,
திருச்சி.

7–11–1971.

(த.ஆர். 10)

---

### வீட்டு வசதி வாரியம்

அறிஞர் அண்ணு நகர் (மேற்கு விரிவினை)யில் பொது மக்கள் மனை நிலங்களை ஒரேயடியாக வாங்கவும், வாடகை கிரய முறையில் வாங்கவும் இடங்கள் ஒதுக்குதல்.

| | |
|---|---|
| கிடைக்கும் வீட்டு மனைகளின் எண்ணிக்கை. | 1,000. |
| மனையின் பரப்பு | 1 கிரவுண்டுக்கும் 2 கிரவுண்டுக்கும் இடைப்பட்டவை. |
| மனுதாரருக்கு வேண்டுமான தகுதி. | ரூ. 3,000-க்கு மேற்பட்ட மதிப்புள்ள சொந்த வீடோ, மனை நிலமோ இருக்கக்கூடாது. |
| மனுக்கள் பெற இறுதி நாள். | 17–1–1972. |
| மனுவடிவங்கள் கிடைக்கும் காலம். | 15–12–1971 காலை 10–00 மணி முதல் மாலை 2 மணி வரை ரூ. 5 செலுத்தி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், 36, அண்ணு சாலை, நந்தனம், சென்னை—35-ல் வரவேற்பு அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். |

**டி. வி. வாசுதேவன்,**
தலைவர்,
வீட்டு வசதி வாரியம்.

(த. 7)

## நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை, தேசீய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக அன்னார் சார்பில் தேசீய நெடுஞ்சாலை வட்டம் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 22—12—1971 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்கு பெற்றுக் கொள்ளப்படும்.

| | வேலையின் பெயர். | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | சென்னை, திருச்சி, திண்டுக்கல் சாலை மைல் 91/7-ல்(கி.மீ.148-5) பாலத்தைத்திரும்பக் கட்டுதல். | 9,000 |
| 2 | தேசீய நெடுஞ்சாலை 45, சென்னை திருச்சி, திண்டுக்கல் சாலை மைல் 85/1-ல் (கி.மீ. 137/8-ல்) பாலம் திரும்பக் கட்டுதல். | 11,366 |
| 3 | சென்னை, திருச்சி, திண்டுக்கல், சாலை (தேசீய நெடுஞ்சாலை 45) மைல் 85/1-ல் (கி.மீ. 137/8-ல்) பாலத்திற்கு அணுகு சாலையைக் கட்டுதல். | 4,640 |

ஒப்பந்தப் புள்ளிகள் 22—12—1971 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசீய நெடுஞ்சாலை கோட்டம்-II கிண்டி சென்னை அலுவலகத்தில் 15—12—1971 முதல் 21—12—1971 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25·88 கட்டி பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசீய நெடுஞ்சாலைக் கோட்டம் கிண்டி அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலகத்தினுள்ளும் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசீய நெடுஞ்சாலைக் கோட்டம்-II கிண்டி பெயரில் செலுத்திச் செல்லு சீட்டையாவது அல்லது வங்கிபொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

**தி. மு. ஆ. ஜெயராமன்,**
மேற்பார்வைப் பொறியாளர்.

(த.34)

## குடிநீர் வடிகால் வாரியம்

வேலையின் பெயர்.—காவேரிப்பாக்கம் குடிநீர் வழங்கு திட்டம்—முதல் நிலை—1-வது பகுதிக்கு 2·50 இலட்சம் லிட்டர்கள் கொள்ளளவுள்ள ஆர்.சி.சி. நீர்த்தேக்கம் கட்டுதல்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் மேற்கண்ட பணிக்காக இந்தத் துறை அல்லது இது போன்ற அரசு நிறுவனங்களில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து துறையின் படிவத்தில் அனுப்பப்படும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்ட மேற்பார்வைப் பொறியாளரால், எண் 52, கெங்கு ரெட்டி ரோடு, சென்னை-8 என்ற முகவரியில் உள்ள அவருடைய அலுவலகத்தில் 28-12-1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படும். அதே நாள் மாலை 3-30 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்களின் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளரால் பிரிக்கப்படும்.

1. ஒப்பந்த முறை—முழுத் தொகை.
2. கட்டுத் தொகை—ரூ. 1,620.
3. வேலையை முடிக்க வேண்டிய காலம்—6 மாதம்.
4. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 10·35

ஒப்பந்தப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வாணியம்பாடி என்பவர் கணக்கில், P.W. III O.R.'' என்ற தலைப்பிலும், விற்பனை வரிக்கான தொகையை ''XII—Sales—Misc. I—General Sales Tax'' என்ற தலைப்பிலும், தனித் தனியாகச் செலானில் செலுத்த வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர் (ம.ந.வா.பொ. கோட்டம்) குடிநீர் வடிகால் வாரியம் 301, ஜமாத் ரோடு, வாணியம்பாடி, என்ற முகவரிக்கு ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமாகவோ பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். இந்தப் பணம் எந்தச் சூழ்நிலையிலும் திருப்பப்படமாட்டாது.

**மேற்பார்வைப் பொறியாளர் (ம.ந.வா. பொ.)**
குடிநீர், வடிகால் வாரியம், சென்னை-8.

(த.ஆர்.5)

## பொதுப் பணித்துறை

செங்கற்பட்டு, வடஆர்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

வேலையின் பெயர் : குடியாத்தம் வட்டம்—உமராபாத்தில் ஓர் உதவி ஆய்வாளர், இரண்டு தலைமைக் காவலர்கள் பத்து காவலர்கள் ஆகியோருக்குக் குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும் பொதுப்பணித்துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற் குறிப்பிட்ட பணிக்காக செங்கற்பட்டு—வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 30—12—1971 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை—ரூ. 3,300.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரைபடங்களுடன்—ரூ. 20·60 விற்பனை வரி 3 சதவீதம் சேர்த்து.

முடிக்கவேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் செங்கற்பட்டு வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 14—12—1971-ஆம் தேதி முதல் 28—12—1971-ஆம் தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20·00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது). கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் (P.W. Remittances III Other Remittances) என்ற தலைப்பின் கீழ் ''நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை வேலூர் கோட்டம், வேலூர் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0·60 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் (XII Sales tax (b) Receipts Under State Sales tax Act-General Sales tax) என்றதலைப்பின்கீழ் செலுத்தபடவேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத் தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ தேசீயச் சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் ''டிமாண்ட் டிராப்டாகவோ '' ஏற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படும் ஷெடியூல்டு பாங்குகளின் ''டிமாண்டு டிராப்ட்டுகள்'' செயற் பொறியாளர், (பொ. ப. து.), வேலூர் கோட்டம், வேலூர். அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின் வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசீயச் சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் எற்றுக்கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்தபட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**க. சு. இராமசுவாமி,**

மேற்பார்வைப் பொறியாளர், (பொ.ப.து.),
செங்கற்பட்டு, வடஆர்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த. 40)

## சின்கோனத் துறை

ஆனைமலை அரசினர் சின்கோனத் தோட்டம் தொழிலாளர் குடியிருப்புக்களில் புதைக் கக்கூஸ்கள் ரூ. 70,000 மதிப்பில் கட்டுவதற்காக, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு ஆளுநர் சார்பில் வரவேற்கப்படுகின்றன.

31—12—1971 மாலை 3·00 மணிவரை ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கப்படும். அதே நாளில் மாலை 3·30 மணிக்கு கீழே கையொப்ப மிட்டவராலோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அவரது உதவியாளராலோ ஒப்பந்தப் புள்ளிகள் பிரிக்கப்படும்.

மேற்பார்வையாளர், அரசினர் சின்கோனத் தோட்டம், ஆனைமலை, சின்கோனு அஞ்சல், வால்பாறை வழி, கோவை மாவட்டம் என்ற முகவரியில் ரூ. 2·07 (விற்பனைவரி உட்பட) நேரில் பணமாகவோ, அல்லது மணியாடர் மூலமாகவோ செலுத்தி ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு பற்றிய விளக்க நகல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**எம். மோகன்ராவ்,**

இயக்குநர்,

சின்கோனத்துறை.

த. 20)

## பொதுப்பணித் துறை

செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம் வேலூர்-1

**வேலையின் பெயர்:**—கட்டடங்கள்—வடஆர்க்காடு மாவட்டம், வாலாஜாபேட்டை அறிஞர் அண்ணு அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும் பொதுப்பணித் துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 30–12–1971 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை—ரூ. 10,200.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை (வரை படங்களுடன்)—ரூ. 51·50 விற்பனை வரி 3 சத வீதம் சேர்த்து.

முடிக்க வேண்டிய காலம்—பத்து மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 14–12–1971 தேதி முதல் 28–12–1971 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 50·00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது. கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் ''P. W. D. Remittances, III—Other Remittances'' என்ற தலைப்பின் கீழ் '' நிருவாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 1.50 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் ''XII Sales Tax (B) receipts, Under State Sales Tax Act—General Sales Tax'' என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வுலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினுல் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத் தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ, தேசீய சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெட்யூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ அல்லது ஷெட்யூல்டு பாங்குகளின் '' டிமாண்ட் டிராப்டாகவோ '' ஏற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படும் ''ஷெட்யூல்டு பாங்குகளின் '' டிமாண்ட் டிராப்டுகள் '' செயற் பொறியாளர், பொ.ப.து., கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம், அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சத வீதம் குறைத்து ஏற்றுக்கொள்ளப்படும். தேசீய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்த பட்சம் மூன்று வருட காலம் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**மேற்பார்வைப் பொறியாளர், (பொ.ப.து.)**
செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம்,
வேலூர்.

(த.ஆர். 8)

---

## ஏல விற்பனை

## தீ அணைப்புத் துறை

திருச்சிராப்பள்ளிக் கோட்டத்தைச் சேர்ந்த கண்டம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட தொடர் ஊர்தி பம்ப் (பம்ப் மாத்திரம்) திருச்சிராப்பள்ளி தீ அணைப்பு நிலையத்தில் 27–12–1971 திங்கட்கிழமை காலை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும். இந்தப் பம்ப்பை திருச்சிராப்பள்ளித் தீயணைப்பு நிலையத்தில் பார்வையிடலாம்.

பம்பின் விவரங்கள்.

| பதிவு எண். | ஊர்தியின் வகுப்பு. | மேக். | வருட மாடல். |
|---|---|---|---|
| எம்.எஸ்.ஒய். 7843 | தொடர்ஊர்தி பம்ப். | கொடிவா கவண்ட்ரி கிளைமேக்ஸ் பேபி. | 1956 |

விற்பனை நிபந்தனைகள் திருச்சிராப்பள்ளியில் கோட்டத் தீயணைப்பு அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**ஐ. ரெத்தினசாமி,**
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.

(த. 17)

## ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் செனய்நகரில் பல அடுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 21–12–1971 அன்று பிற்பகல் 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிடவேண்டும்.

| எண். | பதிவு எண். | வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு. ரூ. | கட்டுமானத் தொகை. ரூ. | ஒப்பந்தப் பத்திரங்களின் விலை. |
|---|---|---|---|---|---|
| 1 | I | 32 குடியிருப்புகள் கொண்ட எ1, எ2 .. .. .. | 2,47,000 | 3,700 | ரூ. 15 மற்றும் விற்பனை வரி[(திருப்பித் தரப்பட மாட்டாது) (ஒவ்வொரு வகைக்கும்)] |
| 2 | II | 32 குடியிருப்புகள் கொண்ட எ3, எ4 .. .. .. | 2,47,000 | 3,700 | ஷை |
| 3 | III | 32 குடியிருப்புகள் கொண்ட எ5, எ6 .. .. .. | 2,47,000 | 3,700 | ஷை |
| 4 | IV | 32 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் எ7, எ8 16 16 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் சி1. | 3,09,000 | 4,630 | ஷை |
| 5 | V | ஷை எ9, எ10, சி2. | 3,09,000 | 4,630 | ஷை |
| 6 | VI | 32 குடியிருப்புகள் கொண்ட கட்டடம் எ11, 24 குடியிருப்புகள் கொண்ட பி2. | 2,16,500 | 3,250 | ஷை |
| 7 | VII | ஷை எ12, பி1. | 2,16,500 | 3,250 | ஷை |
| 8 | VIII | பி3, சி3 .. .. .. .. .. .. .. | 1,55,000 | 2,325 | ஷை |
| 9 | IX | பி4, சி4 .. .. .. .. .. .. .. | 1,55,000 | 2,325 | ஷை |

வரைபடங்களையும், ஒப்பந்தப் பத்திரங்களையும், கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 10–12–1971 முதல் 20–12–1971 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 21–12–1971 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்கவோ, ஏற்றுக் கொள்ளவோ நிருவாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

தாண்டவராய சத்திரம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.

நிருவாகப் பொறியாளர்,
கோட்டம் எண் 3.

(த 18)

# ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைகளுக்கான ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 22–12–1971 அன்று பிற்பகல் 3–00 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

| வரிசை எண். | வேலையின் பெயர். | கொள் ளளவு (லிட்டர் களில்.) | உயரம் (மீட்டரில்.) | வேலையின் சுமார் மதிப்பு. | கட்டுத் தொகை. |
|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | ரூ. |
| 1. | தாண்டவராயச் சத்திரத்தில் மேல்நீர் நிலைத்தேக்கம் கட்டுதல். | 4,50,000 | 20 | 1,35,000 | 2,000 |
| 2. | திருமங்கலத்தில் (கோயம்பேடு; அண்ணா நகருக்கு மேற்கு) மேல் நீர்நிலைத் தேக்கம் கட்டுதல். | 2,75,000 | 20 | 82,000 | 1,250 |
| 3. | பார்வதி கக்கன் குடியிருப்பில் (புளியந் தோப்பு) மேல்நீர் நிலைத்தேக்கம் கட்டுதல். | 1,15,000 | 20 | 35,000 | 525 |
| 4. | கிரேநகர் பள்ளத்தில் (புளியந்தோப்பு) மேல் நீர்நிலைத் தேக்கம் கட்டுதல். | 1,50,000 | 20 | 45,000 | 675 |
| 5. | மீனும்பாள் சிவராஜ் நகரில் (சேத்துப் பட்டு) மேல் நீர்நிலைத் தேக்கம் கட்டுதல். | 80,000 | 20 | 24,000 | 360 |
| 6. | சாலைமாநகரில் (புரசைவாக்கம்) மேல் நீர்நிலைத் தேக்கம் கட்டுதல். | 1,15,000 | 20 | 35,000 | 525 |

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை :—ரூ. 15 மற்றும் விற்பனை வரி (ஒவ்வொரு வகைக்கும், திருப்பித் தரப்படமாட்டாது.)

ஒப்பந்தப் பத்திரங்களையும் வரைபடங்களையும் கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 12–12–1971 முதல் 21–12–1971 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 22–12–1971 அன்று பிற்பகல் 3–15 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப் படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ நிருவாகப் பொறி யாளருக்கு உரிமையுண்டு.

தாண்டவராயச் சத்திரம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.

நிருவாகப் பொறியாளர்,
கோட்டம் எண் 3.

(த. 60)

16–12—12

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

டி.என்.வி. 25/71–72

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க் கண்ட வேலையை மேற்கொள்வதற்காக மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திருநெல்வேலி கன்னியாகுமரி வட்டம், திருநெல்வேலி-2 அவர்களால் 12–1–1972 மாலை 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 4 மணிக்கு திறக்கப்படும்.

| | |
|---|---|
| வேலையின் பெயர்: | "R. C. C. Box for the reach 0-0-486 to 0-1-275 of Karungal distributary" ஒன்று கட்டுதல். |
| ஒப்பந்த வடிவம்: | மொத்தத் தொகை. |
| கட்டுத் தொகை: | ரூபாய் 4,300 |
| ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை: | ரூபாய் 20 |
| விற்பனை வரி: | ரூ. 0.70 |
| வேலையை முடிக்க வேண்டிய காலம்: | 4 மாதங்கள். |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படாது) அரசுக் கருவூலத்தில் "P. W. III. O. R. Receipts" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை, ராதாபுரம் கால்வாய் கோட்டம், நாகர்கோயில் கன்னியாகுமரிமாவட்டம் அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரி "XII S. T. (b) Receipts under the State Sales Tax Act General Sales Tax" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களையும் இதர விவரங்களையும் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திருநெல்வேலி கன்னியாகுமரி வட்டம், திருநெல்வேலி-2 அவர்கள் அலுவலகத்தில் 16–12–71-லிருந்து 7–1–72 வரை நேரிலோ அஞ்சல் மூலமோ, மேலாளருக்கு, ஒப்பந்தப் புள்ளிப் பத்திர விலையையும் விற்பனை வரியையும் செலுத்தியதற்கான ரசீதை உடன் வைத்து மனுச்செய்துப் பெற்றுக்கொள்ளலாம். இத் தேதிக்குப் பிறகு வரும் மனுக்கள் ஏற்கப்படமாட்டா. மேற்கொண்டு விவரங்களை அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் பெறலாம்.

**மேற்பார்வைப் பொறிஞாளர், பொ. ப. து.**
திருநெல்வேலி, கன்னியாகுமரி வட்டம்,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி-2.

(த. 44)

## வேலை வாய்ப்பு

### அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு வேலைவாய்ப்பு தொழில் பயிற்சி சர்வீசில் தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கு மூன்று முதல்வர்களுக்கான மனுக்கள் 1972 ஜனவரி 6, மாலை 5–00 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

சம்பளம் : ரூ. 550—25—600—35—950 மாதத்திற்கு.

தகுதி : பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றில் மெக்கானிக்கல், எலக்டிரிகல் அல்லது ஆட்டோ மோபைல் பொறியியல் இவற்றில் ஏதேனும் ஒன்றில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். தொழிற்கூடம் அல்லது தொழிற்சாலையில் மூன்று வருடங்களுக்குக் குறையாத செய்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்

அல்லது

சென்னை தொழில்நுட்ப நிறுவனம் அல்லது பல்கலைக் கழகம் மானியக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றில் ஆட்டோ மோபைல் பொறியியல் டிப்ளமா பெற்றிருக்க வேண்டும். தொழிற்கூடம் அல்லது தொழிற்சாலையில் மூன்று வருடங்களுக்குக் குறையாத செய்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயது : 1–7–1972-ல் 30 வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதியினர் பிற்பட்ட வகுப்பினர் விசயத்தில் வயது வரம்பு கிடையாது. தங்கக் கட்டுப்பாடுச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லரின் மகன்கள், மணமாகாத மகள்கள் 1–1–1963-ல் அல்லது அதற்குப் பிறகு முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் இன்ஸ்ரக்டராகப் பணிபுரிந்த முன்னாள் தேசீய மாணவர்ப் படையைச் சேர்ந்தவராக இருந்தால் வயது விசயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கடற்படை, விமானப் படை, ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1–4–1972 அன்று 40 வயதிற்குக் குறைவானவர்கள் 1–1–1964-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் விசயத்திலும், இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும், இதர விவரங்களையும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி, 23 செ.மீ. உள்ள தன்முகவரி எழுதிய 0.35 காசு நூல் அஞ்சல் வில்லை ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த.25)

## போக்குவரத்துத் துறை, சென்னை-2

தமிழ்நாடு ஆளுநருக்காக, தமிழ்நாடு ஆளுநர் சார்பில், தலைமைப் பொறியாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, சென்னை-2, அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட இனவரி ஒப்பந்தப் புள்ளிகள், அண்ணா சாலை, சென்னை-2-ல் உள்ள போக்குவரத்து இல்லத்தில், தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் மாலை 3—00 மணி வரை கீழே ஐந்தாவது காலத்தில் குறிக்கப்பட்ட தேதியில் பெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண். | வேலை விவரம். | முடிக்கும் காலம். | முன் வைப்புத் தொகை. | ஒப்பந்தத் தேதி. | ஒப்பந்த விதிகளின் விலை விற்பனை வரி உட்பட. |
|---|---|---|---|---|---|
| | | | ரூ. | | ரூ. |
| | சைதாப்பேட்டையில் பேருந்து நிலையம் மற்றும் பணிமனை கட்டுதல். தார் சாலை அமைத்தல், முள் வேலி அமைத்தல். | ஒரு மாதம். | 3,300 | 5—1—1972 | 15.55 |

ஒப்பந்தம் :—மொத்தத் தொகை.

ஒப்பந்தங்கள் மேலே ஐந்தாவது காலத்தில் குறிப்பிட்ட தேதியில் மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனுக்கள், வரைபடங்கள் முதலியவற்றை நிருவாகப் பொறியாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, சென்னை-2 அலுவலகத்தில் மேலே குறிப்பிட்ட வேலைக்கு, மேலே குறிப்பிட்டத் தொகையைக் கட்டி கீழ்க்கண்ட தேதிகளில் எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்க காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது. (20—12—1971 to 4—1—1972)

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையை நிருவாகப் பொறியாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை. சென்னை-2, அவர்களுக்கு அரசாங்கக் கருவூலத்தில் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின் கீழ் செலுத்தி செல்லுச்சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

எஸ். சிவானந்தா,
தலைமைப் பொறியாளர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்து, சென்னை-2.

(த. 59)

---

## ஒப்பந்தப் புள்ளி

### பாளையங்கோட்டை நகராட்சி

பாளையங்கோட்டை நகர் மன்றத்திற்குத் தேவையான 100 சிமிண்ட் குப்பைத் தொட்டிகள் விநியோகம் செய்ய நகர்மன்ற ஆணையர் அவர்களால் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 27—12—1971-ஆம் தேதி மாலை 4 மணி வரை கட்டுத் தொகை ரூ. 300 உடன் வரவழைக்கப்படுகின்றன. சப்ளை செய்ய வேண்டிய காலம் 2 மாதம். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் 4—30 மணிக்குத் திறக்கப்படும். விவரம் கீழ்வருமாறு :

சென்டிரிபூகல் முறையில் கம்பி யிணைக்கப்பட்ட சிமெண்டு காங்கிரீட்டால் செய்யப்பட்ட இரு புறமும் திறந்த உருண்டையான சிமெண்டுத் தொட்டி கனம் 2'' உயரம் 2'-7'' உள் விட்டம் 36'' வெளி விட்டம் 40'', தொட்டியைச் சுற்றி ¼'' உருட்டுக் கம்பி 4'' மத்திக்கு மத்தி கட்டி உயரத்தில் ¼'' உருட்டுக் கம்பி 6'' மத்திக்கு மத்தி கட்டி 2'' கனத்துக்கு 1:2:4 கான்கிரிட் போட்டு நல்ல முறையில் செய்து கொடுக்க வேண்டும்.

ஆணையர்.

2—12—71.

(த. 53)

## நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை

## தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக அன்னார் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்டம் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 29-12-71 மாலை 3 மணிவரை கீழ்க்கண்ட வேலைக்குப்பெற்றுக் கொள்ளப்படும்.

| வேலையின் பெயர். | கட்டுத் தொகை. |
|---|---|
| | ரூ. |
| சென்னை, திருச்சி, திண்டுக்கல் (தே. நெ. 45) சாலையில் கி.மீ. 38/2-4 (மைல் 23/7)-ல் உள்ள பாலத்தைத் திருப்பிக் கட்டுதல். | 1,472 |

ஒப்பந்தப் புள்ளிகள் 29-12-71 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப் படும். ஒப்பந்தத்திற்கான நமூனாக்கள், வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் II, சென்னை (கிண்டி, சென்னை-25) அலுவலகத்தில் 22-12-71 முதல் 28-12-71 முடிய விற்பனை வரியுட்பட ரூ.25.88 கட்டிப்பெற்றுக்கொள்ள லாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கோட்டம் கிண்டி, சென்னை -25) அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்தி னுள்ளும், ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் II கிண்டி, சென்னை-25 பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியை யாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந் தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

**தி. மு. ஆ. ஜெயராமன்,**
மேற்பார்வைப் பொறியாளர் (நெ).

(த. 35)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளி கள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகா தாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அர சினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக் காரர்களிடமிருந்து எண். 17, சர் பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர் களால், 5-1-1972 புதன்கிழமை பிற்பகல் 3 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு, அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறி யாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்: பொதுச் சுகாதாரப் பொறியியல் கோட்டம், திருச்சி, இரும்பு எஃகு கம்பிகள் சப்ளைசெய்தல்.

ஒப்பந்த வகை: மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை: ரூ. 6,000 (ரூபாய் ஆறுயிரம் மட்டும்).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற் றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி, பொதுச் சுகா தாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு: இரண்டு மாதம்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை. ரூ. 15.53 (விற்பனை வரி உட் பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி. 15, தில்லை நகர் மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 3-1-1972 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள் ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பொது சுகாதாரப் பொறியியல் வட்டம்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

மதுரை-2,
28-11-1971.
(த. 55)

## ஒப்பந்தப் புள்ளி

**தமிழ்நாடு அரசு (வாழ்க்கைப் பொருள் வழங்குத் துறை) வெற்றுக் கோப்பைகள் விற்பனைக்கு**

தருமபுரி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு சேமிப்பு நிறுவனத்தின் தருமபுரி கிடங்கிலுள்ள பயன்படுத்தவியலாத மற்றும் பழுதுற்ற 75 கிலோ கிராம் மற்றும் 100 கிலோ கிராம் கொள்ளளவுள்ள 16,442 வெற்றுக் கோணிப்பைகளை விற்பனை செய்ய அரக்குமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரால் 1971-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் புதன் கிழமை 22-ஆம் நாள் பிற்பகல் 2 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறைகளில் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்ப வேண்டியது. முத்திரையிடப் பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் பிற்பகல் 2-30 மணிக்கு திறக்கப்படும். மேற்சொன்ன நாள் அரசாங்க விடுமுறை நாளாக இருந்தால் மறு நாள் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிப் படிவங்கள், விற்பனை வரை முறைகள், வரையறைகள், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து ரூபாய் ஐந்தும் மற்றும் மூன்றரை நூற்று விழுக்காடு விற்பனை வரி ஆக ரூ.5-20 காசுகள் செலுத்தி, 2—12—1971-ஆம் நாளிலிருந்து 21—12—1971-ஆம் நாள் வரை பெற்றுக் கொள்ளலாம். இத் தொகைத் திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது.

**ரா. பத்மநாபன்,**
மாவட்ட ஆட்சித் தலைவர்,
தருமபுரி.

(து: 47)

**மாவட்ட வேளாண்மை அலுவலர் அலுவலகம்**

மாவட்ட வேளாண்மை அலுவலர் (பருத்திப் பெருக்கு), திருப்பூர் அவர்களுக்கு, 1972—73-ஆம் ஆண்டிற்குத் தேவைப்படும் சுமார் 30,000 (முப்பதாயிரம்) (101·6 செ.மீ. நீளமும், 71·1 செ.மீ அகலமும், 1 கிலோ எடையுமுள்ள) டி. டபிள்யூ. பிளைன் கோணிப்பைகள் வழங்குவதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

திருப்பூர் கிடங்கிற்கு இரயில் செலவில்லாமல் ( F.O.R. .) விநியோகம் செய்யும் வகையில் விலைவிகிதம் குறிப்பிடப்பட வேண்டும். மற்றும் விநியோகத்திற்கான ஆணையிட்ட 10 (பத்து) தினங்களுக்குள் கோணிப்பைகள் வழங்கப்படவேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் தரும்பொழுது, மாதிரிக் கோணிப்பைகள் கண்டிப்பாக அனுப்புதல் வேண்டும். மாதிரிக் கோணிப்பைகள் அனுப்பாத ஒப்பந்தப் புள்ளிகள்கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியுடனும் பிணைவைப்புத் தொகை ரூ. 500 (ரூபாய் ஐநூறு மட்டும்) கருவூலத்தில் செலுத்தி செலான்கள் அனுப்புதல் வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் இரு பிரதிகளாகத் தாக்கல் செய்யப்பட்டு, '' மாவட்ட வேளாண்மை அலுவலர் (பருத்திப் பெருக்கு), இராயபண்டாரம் தெரு, திருப்பூர்-2'' என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமாகவோ ரூ. 2·07 செலுத்தி, ஒப்பந்தப் பாரமும், சட்ட-திட்டங்களும் இரு பிரதிகளாக இந்த அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

'' 1972—73-ஆம் ஆண்டிற்குக் கோணிப் பைகள் சப்ளை செய்வதற்காக ஒப்பந்தப் புள்ளி'' என்று உறையின் மேல் குறிப்பிட்ட மூடி முத்திரையிடப்பட்ட உறைகள் '' மாவட்ட வேளாண்மை அலுவலர் (பருத்திப் பெருக்கு), இராயபண்டாரம் தெரு, திருப்பூர்-2'' அவர்களுக்கு 6—1—1972-ஆம் தேதி, நண்பகல் 12 மணிக்குள் அல்லது அதற்கு முன்னரோ சேர வேண்டும். காலம் கடந்துவரும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

மேலே குறித்த தேதியில், மாவட்ட வேளாண்மை அலுவலர் (பருத்திப் பெருக்கு), திருப்பூர் அலுவலகத்தில் பிற்பகல் 3-00 மணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள், வருகை தந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

**ந. கிருஷ்ணமூர்த்தி,**
மாவட்ட வேளாண்மை அலுவலர்
(பருத்திப் பெருக்கு),
திருப்பூர்-2.

(து. 70)

## தொழில் வணிகத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைகளை மேற்கொள்வதற்காகத் தொழில் துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பகுதி, தொழில் வணிகத் துறை அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட தேதிகளில் மாலை 3-00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர் கட்டுமானப்பகுதி தொழில்துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

| தொடர் எண்ணும், வேலையின் பெயரும். | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் பத்திரங்கள் விலை. | வேலை முடிக்க வேண்டிய காலம். | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி. | ஒப்பந்தப் புள்ளிப் பெற கடைசித் தேதி. |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | | |
| 1 அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 'எப்' வகை தொழிற் கூடங்கள் இரண்டு கட்டுதல். | 6,900 | 10·40 | 12 மாதங்கள். | 15-12-1971 | 22-12-1971 |
| 2 அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 'எப்' வகை ஒன்று 'ஜி' வகை ஒன்று தொழிற்கூடங்கள் கட்டுதல். | 5,650 | 10·40 | ஷை | 15-12-1971 | 22-12-1971 |
| 3 அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 'ஜி' வகை இரண்டு தொழிற்கூடங்கள் கட்டுதல். | 4,400 | 10·40 | 10 மாதங்கள். | 15-12-1971 | 22-12-1971 |
| 4 அம்பத்தூர் தொழிற்பேட்டை 'ஜி' வகை தொழிற் கூடங்கள் இரண்டு கட்டுதல். | 4,400 | 10·40 | ஷை | 15-12-1971 | 22-12-1971 |
| 5 அம்பத்தூர் தொழிற்பேட்டை 'எச்' வகை தொழிற்கூடங்கள் மூன்று கட்டுதல். | 5,850 | 10·40 | 12 மாதங்கள். | 15-12-1971 | 22-12-1971 |
| 6 அம்பத்தூர் தொழிற்பேட்டை 'எச்' வகை தொழிற்கூடங்கள் மூன்று அமைத்தல். | 5,850 | 10·40 | ஷை | 15-12-1971 | 22-12-1971 |

1. ஒப்பந்த வடிவம்:—மொத்தத் தொகை.

2. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர் (சி) அம்பத்தூர் கோட்டம் 35/2 உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களது அலுவலகத்தில் மேலே குறிப்பிடப்பட்ட தேதி முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை அதற்குரிய விற்பனை வரி உட்பட்டத் தொகையான ரூபாய் 10·40-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX Industries—other receipts" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) அம்பத்தூர் கோட்டம் 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களது கணக்கில் செலுத்த வேண்டும்.

4. கட்டுத் தொகையைச் சலான் வடிவிலோ 'கால் டிபாசிட்' வடிவிலோ ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்டு டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். கட்டுத் தொகைக்காக, ஷெட்யூல்டு பாங்குகளின் டிமாண்டு டிராப்டுகள் (நிருவாகப் பொறியாளர். கட்டுமானம்) அம்பத்தூர் கோட்டம், 35/2, உட்ஸ் ரோடு, சென்ன-2 அவர்களது கணக்கில் செலுத்தப்பட்டவை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பீட்டில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சகலத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகைக் செலுத்தப்படுமானல் ஏற்றுக் கொள்ளப்படமாட்டது.

5. ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகிறவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர், (கட்டுமானப் பகுதி).

சென்னை-2.
(த.26)

## வீட்டு வசதி வாரியம்

### சென்னை வடக்குப் பிரிவு

கீழ்க்கண்ட வேலைகளுக்காக வேலையின் பெயர் ஒப்பந்தக்காரரின் பெயர் ஆகியவை உறை மீது குறிப்பிடப்பட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அதனதன் பெயர்களுக்கு எதிரில் குறிப்பிட்ட நாட்களில் மாலை 2-30 மணிக்கு முன் அடியில் கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் வந்திருக்கும் ஒப்பந்ததாரரின் முன்னிலையில் மாலை 2-35 மணியளவில் பிரிக்கப்படும்.

| வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு சுமார். | ஒப்பந்த முன் வைப்புத் தொகை. | ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை (விற்பனை வரி உட்படமாட்டாது.) |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1 அறிஞர் அண்ணா நகர், பகுதி மூன்று தொகுதி ஒன்று, ஒன்றில் நான்கு (1—4) வீடுகள் கொண்ட மூன்று நடுத்தர வருமானப் பிரிவு வகை பிளாக்குகள் கட்டுதல். | 2,27,400 | 3,415 | 15+4% சதவிகித வி.வ. |
| 2 அறிஞர் அண்ணா நகர், பகுதி மூன்று தொகுதி இரண்டு, ஒன்றில் நான்கு (1—4) வீடுகள் கொண்ட மூன்று நடுத்தர வருமானப் பிரிவு வகைபிளாக்குகள் கட்டுதல். | 2,27,400 | 3,415 | 15+4% சதவிகித வி.வ. |
| 3 அறிஞர் அண்ணா நகர், பகுதி மூன்று தொகுதி மூன்று, ஒன்றில் நான்கு (1—4) வீடுகள்கொண்ட நான்கு நடுத்தர வருமானப் பிரிவு வகை பிளாக்குகள் கட்டுதல். | 3,03,200 | 4,555 | 15+4% சதவிகித வி. வ |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மற்றும் பிற தகவல்களை நிருவாகப் பொறியாளர், சென்னை வடக்குக் கோட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அவர்தம் அலுவலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் காலை 11 மணி முதல் மாலை 2 மணி வரையில் 29—11—71ல் அல்லது அதற்குப் பிறகு ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை விற்பனை வரி செலுத்தப்பட்ட இரசீது சலான்களைக் கொடுத்துப் பெறலாம்.

**வி. எஸ். இராமகிருஷ்ணன்,**
மேற்பார்வைப் பொறியாளர்,

(ரு. 8)

---



## கதர் கிராமத்தொழில் துறை

1972-ஆம் ஆண்டு கதர் கிராமத் தொழில் துறை கை முறைக் காகித அலகுகளுக்குத் தேவை யான வெள்ளைப் பருத்தி பனியன் வெட்டுத் துண்டுகள் (White Cotton Hosiery Cuttings சப்ளை செய்வதற்கான முத்திரை யிடப்பெற்ற ஒப்பந்தங்கள் 31–12–1971 மாலை 4 மணி வரை அடியிற் குறிப்பிட்ட அலுவலரால் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்றே மேற்படி ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

கீழ்க்கண்ட முகவரியில் ஒப்பந்தத்துக்கான நிபந்தனைகள் மற்றும் விவரங்களை 3½ சதவிகிதம் விற்பனை வரியுடன், ரூ. 5-ம் (ரூபாய் ஐந்து மட்டும்) மணியார்டர் மூலமோ அல்லது ரொக்கமாக நேரில் செலுத்தியோ பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்த நமூனாக்கள் மாற்றத் தக்கதல்ல.

**மண்டல துணை இயக்குநர்,**
கதர் கிராமத்தொழில்கள்,
18, ஜி. குமாரநகர்,
(ரு.69) திருப்பூர்-3.

---

ஏல விளம்பரம்

## தீயணைப்புப் பணித்துறை

கண்டனம் செய்யப்பட்ட இழுக்கும் மோட்டார் வண்டி, ஸ்டுடிபேக்கர், 1957-ஆம் வருட மாடல் எம்.எஸ்.எக்ஸ். 183 என்னும் வண்டியை, கோயம்புத்தூர் ஸ்டேட் பாங்க் சாலையில் உள்ள கோயம்புத்தூர் தீயணைப் புத்துறை காம்பவுண்டில், 1972-ஆம் வருடம் சனவரி மாதம் 5-ந் தேதி காலை 11 மணிக்கு பகிரங்கமாக ஏலம் விடப்படும். மேற்கண்ட இழுக்கும் மோட்டார் வண்டியைக் கோயம்புத்தூர் தீயணைப்பு நிலையத்தில் பார்வையிடலாம். ஏல நிபந்தனைகள் கீழே கையொப்பமிட்டவருடைய அலுவலகத்தில் பெறலாம்.

**ஏ. கே. இராமநாதன்,**
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
கோயம்புத்தூர் கோட்டம்.

(ரு. 68)

# ஒப்பந்தப் புள்ளி

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைகளுக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, திருச்சி வட்டம், திருச்சி அவர்களால் திருச்சியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக்கொள்ளப்படும்.

| எண். | வேலையின் பெயர். | ஒப்பந்தம் பெறுவதற்குக்கான கடைசி தேதி மற்றும் நேரம். | பிணைப் பொறுப்புத் தொகை. | ஒப்பந்த முறை. | முடிக்க வேண்டிய காலம். | ஒப்பந்தப் பத்திரத்தின் விலை. | விற்பனை வரி. | ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கக் கூடிய கடைசித் தேதி. | விரும்பும் ஒப்பந்தக்காரர்களின் முன்பாக ஒப்பந்தம் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | | | ரூ. | ரூ. காசு. | | |
| 1 | திருச்சியில் உள்ள அரசினர் ரயில்வே போலீஸ் பிரிவில் ஒரு போலீஸ் தலைமைச் சேவகர் குடியிருப்பும், 20 போலீஸ் சேவகர்கள் குடியிருப்புகளும் கட்டுதல். | 24–12–1971 மாலை 3-00 மணி. | 3,200 | எல். எஸ் | பத்து மாதங்கள். | 25 | 0·88 | 13–12–1971 | 24–12–1971 மாலை 3-30 மணி. |
| 2 | திருச்சியில் உள்ள சிந்தாமணி போலீஸ் குடியிருப்புப் பிரிவில் 4 போலீஸ் தலைமைச் சேவகர் குடியிருப்பும், 6 போலீஸ் சேவகர் குடியிருப்பு வீடுகளும் கட்டுதல். | 24–12–1971 மாலை 3-00 மணி. | 2,500 | எல். எஸ். | எட்டு மாதங்கள். | 25 | 0·88 | 13–12–1971 | 24–12–1971 மாலை 3-30 மணி. |

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும் விற்பனை வரியையும் (ஒவ்வொரு வேலைக்கும் தனியே) முறையே அரசின் கருவூலத்தில் XXXVII Public Works—State Revenue—Miscellaneous மற்றும் XII Sales Tax (b) receipts under the State Sales Tax Act General Sales Tax என்ற தலைப்புகளின் கீழ் ஒரே சலானில் செலுத்தி இந்தச் சலான் மேற்கண்ட வேலைகளுக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளரின் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமையுண்டு.

மற்ற விதிகளும், விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நா. முத்துகிருஷ்ணன்,
திருச்சி வட்ட மேற்பார்வைப் பொறியாளர்.

(த. ஆர். 6)

## ஒப்பந்தப் புள்ளி

வெள்ளிப் பதக்கங்கள் (மெடல்) பொன் முலாமிட்ட வெள்ளிப் பதக்கங்கள், சென்னை-6ல் உள்ள உடற்பயிற்சிக் கல்வி தலைமை ஆய்வாளர் அலுவலகத்தில் தெரிவிக்கப்படும் வரை அளவுகளின் படி வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் சென்னை-6, உடற்பயிற்சிக் கல்வித் தலைமை ஆய்வாளர் அவர்களால் 1—9—1971 முதல் டிசம்பர் 20-ந் தேதி மாலை 2-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

வெள்ளிப் பதக்கங்கள் முதலியன வழங்குவதற்காக விலைப் புள்ளிகள், குடியரசுத் திருநாள் விளையாட்டுகள் 1971—72 என்று உறையின் மீது குறிப்பிட்டு, ஒப்பந்தப் புள்ளிகளை பதிவு அஞ்சல் மூலம் அனுப்பலாம் அல்லது நேரில் தரலாம். ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியுடனும் கட்டுத் தொகை ரூ. 200 (இருநூறு மட்டும்) கட்டப்பட வேண்டும். ஒப்பந்த மொத்த மதிப்பு ரூ. 8,355 விற்பனை வரி நீங்கலாக.

20—12—1971 மாலை 2–00 மணிக்குப் பிறகுவரும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்கப்படமாட்டா. 20—12—1971 மாலை 3–00 மணிக்கு கீழ்க்கண்டவரின் அலுவலகத்தில் ஒரு குழு, ஒப்பந்த புள்ளிகளைத் திறக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரரோ அல்லது அவருடைய பிரதிநிதியோ அப்போது இருக்கலாம்.

எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தத்தை ஏற்கவோ நிராகரிக்கவோ, அனைத்தையும் நிராகரிக்கவோ குழுவுக்கு உரிமை உண்டு.

கீழ்க்கண்டவரின் அலுவலகத்தில் அலுவல் நாட்களில் காலை 10-30லிருந்து மாலை 3 மணி வரை பதக்கங்களைப் பார்வையிடலாம். ஒப்பந்த நிபந்தனைகளையும் அறிந்து கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்ட மூன்று நாட்களுக்குள் ஒப்பந்தப் புள்ளிதாரர் ஒரு உடன்பாடு எழுதிக் கொடுக்க வேண்டும்.

### பதக்கங்கள் பற்றிய விவரம் வருமாறு

| விலை விகிதம். ரூ. | அளவு | விவரம். | | தேவைப்படும் பதக்கங்கள் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| 15 | 3·4 செ.மீ. | Die struck Silver medals with Gopuram emblem with Die struck matter in front of the medals and engraving matter at the back of the medal | Dist. level | 183 |
| | | | State level | 138 |
| | | | Total | 321 |
| 20 | ஷை | Do (Gold plated) | Divisional level | 30 |
| | | | State level | 138 |
| | | | Total | 168 |
| 30 | ஷை | Do | State level | 6 |

ஒவ்வொரு வகையிலும் வெள்ளியின் எடை எவ்வளவு என்பது ஒப்பந்தப் புள்ளிதாரரால் குறிப்பிடப்பட வேண்டும்.

வெள்ளி நூற்றுக்கு நூறு சுத்த வெள்ளி என்பதற்கு உத்தரவாதம் வேண்டும்.

வி. எம். ரகுபதி,
உடற்பயிற்சிக் கல்வித் தலைமை ஆய்வாளர்,
சென்னை.

1—12—1971
(த.79)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண்-17 சர். பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 5-1-1972 புதன் கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—ஸ்ரீரங்கம் குடிதண்ணீர்த் திட்டம்—தலைமை நீரேற்று நிலையம்—இரண்டாம் நிலை—நீரேற்றிகள் அளித்தல்—நிருமாணித்தல் சம்பந்தமாக.

ஒப்பந்த வகை.—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை.—ரூ.4,500(ரூபாய் நான்காயிரத்து ஐநூறு மட்டும்).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசீய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையின் முடிவிற்குரிய கால அளவு.—ஆறு மாதம்

ஒப்பந்தப் படிவங்களின் விலை.—ரூ. 15·56 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் நிருவாகப் பொறியாளர்,பொதுச்சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி 15, தில்லை நகர் சாலை, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 3-1-1972 மாலை 5 மணிவரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மதுரை-2, **மேற்பார்வைப் பொறியாளர்,**
26-11-1971. பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம்,
தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம்.

(த. 92)

## காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் தமது அலுவலகத்தில் 24-12-1971 மாலை 4 மணிவரை கீழ்க்கண்ட வேலைகளுக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு. ரூ. | வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 உடன் தனிக்கை ஆய்வாளர் பிரிவிற்கு இட வசதி செய்ய ஓர் அறை கட்ட. | 10,500 | 525 |
| 2 குமாரி செட்டித் தெருவிலுள்ள தாய்சேய் நலவிடுதியைப் பழுது பார்க்க. | 6,700 | 335 |
| 3 ஒலிமுகம்மதுபேட்டை தாய் சேய் நலவிடுதி கட்டடத்தை விரிவுபடுத்த. | 9,000 | 450 |

காஞ்சிபுரம், **த. ஆ. சிவசுப்பிரமணியன்,**
3-12-1971. ஆணையர்.

(த. 96)

## ஏல விற்பனை

### தலைமைச் செயலகம் (ஊர்திகள்)

இராஜபவன் பிளிமவுத்கார் (பதிவாகாதது), தலைமைச் செயலகம் அலுவலர் ஊர்திகள் நிறுத்தப்படும் இடம், சென்னை-9ல், 27-12-1971 காலை 11-00 மணிக்கு பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

காரின் பெயர்.—ராஜபவன் பிளிமவுத் (பதிவாகாதது).
மாடல்.—1960 மாடல்.

ஏலம் கோர விரும்புவோர், கண்காணிப்பாளர் தலைமைச் செயலகம் (ஊர்திகள்) அவர்களிடம் தொடர்பு கொண்டு விற்பனை நிபந்தனைகளை அறிந்து கொள்ளலாம்.

**டி. வி. வெங்கட்டராமன்,**
அரசு இணைச்செயலாளர்,
பொதுத்துறை.

(த. 87)

## வனத் துறை

### அரசினர் தேயிலைத் தோட்டத் திட்டம்

### நெல்லியாளம் கோட்டம், கூடலூர், நீலகிரி

கீழ்க்காணும் வேலைகளை மேற்கொள்வதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாக நெல்லியாளம் கோட்ட வன அலுவலர் அவர்களால் 17—1—1972-ஆம் தேதி காலை 11 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு ஒப்பந்த விண்ணப்பமும் கீழ்க்குறிப்பிட்ட வைப்புத் தொகை அரசுக் கருவூலத்தில் செலுத்திய சலானுடன் அனுப்பப்பட வேண்டும்.

| வேலை விளம்பரம். | மதிப்பீட்டுத் தொகை. | வைப்புத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1 1972-ஆம் ஆண்டின் தேயிலைச் செடி நடும் இடங்களுக்குச் சாலைகள் அமைத்தல். | 45,000 | 1,350 |
| 2 நாற்றங்காலிலிருந்து நெல்லியாளம் சாலையில் இரண்டு பாலங்கள் கட்டுதல். | 20,000 | 600 |
| 3. 1972 மற்றும் 1973-ஆம் ஆண்டு தேயிலைத் தோட்டங்களின் சாலையில் ஒரு பாலம் கட்டுதல். | 10,000 | 300 |
| 4. எலமண்ணு அம்மன்காவு சாலை சீர்படுத்துதல். | 10,000 | 300 |

மேற்குறிப்பிட்ட வேலைகள் 31—3—1972-க்குள் முடிக்கப்படவேண்டும். ஒப்பந்த நமூனாவும் மற்ற விவரங்களும் ரூ. 4·14 கீழே ஒப்பமிட்டவரிடம் செலுத்திக் பெற்றுக் கொள்ளலாம்.

மு. ரமேஷன்,

கோட்ட வன அலுவலர்.

(ஏ. 67)

## பொதுப் பணித் துறை

கள்ளிப் பெட்டிகள் (Dealwood Boxes) வழங்குவது சம்பந்தமாக முத்திரையிட்ட ஒப்பந்த அறிவிப்புகள் நிருவாகப் பொறியாளர், மண்தன்மை ஆராய்ச்சிக் கோட்டம், பொதுப் பணித்துறை, சென்னை-5 அவர்களால் 15—1—1972, 3 மணிக்கும் அதற்கு முன்பே ஏற்கப்படும். ஒப்பந்த அறிவிப்பு செய்யவிரும்புபவர்கள் எழுத்து மூலமாக கேட்டுக் கொண்டால், சாமான்கள் வழங்கவேண்டிய அளவு நிபந்தனைகள் பற்றிய குறிப்புகள் கொடுக்கப்படும்.

"P.W. III Other Remittances Executive Engineer, P.W.D. Soil Mechanics and Res. Divn., Madras–5", என்ற கணக்குத்தலைப்பில் ஒப்பந்த அறிவிப்புப் பத்திரத்துக்கான கட்டணம் ரூபாய் ஒன்றும், "XII. Sales-tax Under State Sales-tax Act" என்ற கணக்கின் கீழ் விற்பனை வரி காசு மூன்றும் செலுத்தியதற்கான வங்கி சலான் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

ஒப்பந்த அறிவிப்புப் பத்திரங்களின் தேவைக்கான விண்ணப்பங்கள் 10—1—1972-க்கு மேல் வந்தால் கவனிக்கப்பட மாட்டா.

நிருவாகப் பொறியாளர்,

மண்தன்மை ஆராய்ச்சிக் கோட்டம்.

(கு. 58)

## மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக, கோவை மத்திய பண்டகச்சாலையிலுள்ள கழிவு இரும்புச் சாமான்கள், துத்தநாகக் கம்பிகள், உபயோகப்படாத வன (M. D. C. 7726) மற்றும் இதர கழிவுப் பொருள்கள் வாங்குவதற்கான முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 7—1—1972-ஆம் தேதி மாலை 3 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் பெற்றுக்கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 3-30 மணியளவில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

இந்த ஒப்பந்தப் புள்ளிகள் சம்பந்தப்பட்ட முழு விபரங்களடங்கிய நமூனைக்களை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ ரூ. 3 (ரூபாய் மூன்று மட்டும், இது திருப்பித்தரதக்கது அல்ல) "தலைமைக் கணக்காயர் (செலவினம்) பைக்காரா மின்திட்டம், டாடாபாத் கோவை-12" என்ற விலாசத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் 6—1—1972 தேதி மாலை 5 மணிவரைதான் கொடுக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளி படிவங்கள் அஞ்சல் பிரயாணத்தின் போது தவறினாலோ அல்லது தாமதமாகக் கிடைத்தாலோ இவ்வாரியம் எந்த விதமான பொறுப்பும் ஏற்காது. ஒருவர் பெயருக்கு வாங்கிய ஒப்பந்தப் பத்திரங்கள் மற்றவர் பெயருக்கு மாற்றத்தக்கது அல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,

பைக்காரா மின்திட்டம்,
டாடாபாத், கோவை-12.

(கு-88)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடுபொதுச்சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால் வாரியம்), பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண். 17, சர். பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 5—1—1972 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—பள்ளப்பட்டி குடிநீர்த்திட்டம்—இரண்டாம் நிலை—தலைமையில் பணிகள் வடித்து நீர்சேகரிக்கும் அமைப்பு (ஃபிஸ்டர் பெசின்) அமைத்தல்.

ஒப்பந்த வகை—மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை—ரூ. 2,325 (ரூபாய் இரண்டாயிரத்து முன்னூற்று இருபத்து ஐந்து மட்டும்).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசீய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை—ரூ. 10·35 (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி. 15, தில்லை நகர் மெயின்ரோடு, திருச்சி, என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 3—1—1972 திங்கட்கிழமை மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**

மதுரை,
26—11—1971.

பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம்,
தமிழ்நாடு குடிநீர் வாரியம்.

(த. 66)

## தீ அணைப்புத் துறை

திருச்சிராப்பள்ளிக் கோட்டத்தைச் சேர்ந்த கண்டம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட தொடர் ஊர்தி (பம்ப் மாத்திரம்) திருச்சிராப்பள்ளித் தீ அணைப்பு நிலையத்தில் 5—1—1972 புதன்கிழமை காலை 11 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விடப்படும். இந்தப் பம்ப்பை திருச்சிராப்பள்ளி தீ அணைப்பு நிலையத்தில் பார்வையிடலாம்.

பம்ப்பின் விவரங்கள்.

| பதிவு எண். | ஊர்தியின் வகுப்பு. | மேக். | வருட மாடல். |
|---|---|---|---|
| எம்.எஸ்.ஓய். 7843. | தொடர் ஊர்தி பம்ப். | கொடிவா கவண்ட்ரி கிளைமேக்ஸ் பேபி. | 1956 |

விற்பனை நிபந்தனைகள் திருச்சிராப்பள்ளிக் கோட்டத் தீயணைப்பு அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**ஐ. ரெத்தினசாமி,**
கோட்டத் தீயணைப்பு அலுவலர், திருச்சிராப்பள்ளி.

(த. 63)

## குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலையமும் மருத்துவமனையும் எழும்பூர், சென்னை

சென்னை—8 எழும்பூரிலுள்ள குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலையமும் மற்றும் மருத்துவ மனைக்கு (Institute of Child Health and Hospital for Children, Madras-8) 1972 ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் 1973 மார்ச்சு 31-ஆம் தேதி வரையிலுள்ள காலத்திற்குத் தேவைப்படும் ஆகார வகையில்லாத பொருள்கள் (Non-diet articles) சப்ளை செய்வதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிட்ட உறைகளில் அடியில் கையொப்பமிட்டுள்ளவரால் 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த நிபந்தனைகள் தேவைப்படும் பொருட்களின் பட்டியல் மற்றும் ஒப்பந்த வடிவங்களை மனுச்செய்து அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலை ரூ. 5-ஐ (ரூபாய் ஐந்து மட்டும்) "XXIII—Medical DME-J Misc" என்ற தலைப்பிலும் மற்றும் 3½ சதவீத விற்பனை வரியும், அதற்கான சர்சார்ஜ் 5 சதவீதத்தையும் "XII Sales Tax receipts under the Sales Tax Act" General Sales Tax, என்ற தலைப்பிலுமாகச் சென்னையில் உள்ள ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவிலோ அல்லது அரசினர் கருவூலம் ஒன்றிலோ தமிழ்நாடு அரசின் கணக்கில் செலுத்த வேண்டும்.

**டாக்டர் வி. பாலகோபால் ராஜு,**
நெறியாளர் மற்றும் கண்காணிப்பாளர், குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலையமும், மருத்துவமனையும், எழும்பூர், சென்னை-8.

(த. 61)

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் துறை

### தேசிய நெடுஞ்சாலை வேலைகள் (மதுரை மாவட்டம்)

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தப்புள்ளிகளை மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை, அவர்கள் நெ. 11, ஔவையார் தெரு, நரிமேடு மதுரை-2 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 12—1—1972 புதன் கிழமை அன்று பிற்பகல் 3-30 மணிவரையில் (அலுவலக கடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தப் புள்ளிகள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| எண். | வேலையின் பெயர். | கட்டு தொகை. | ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் விலாசம். |
|---|---|---|---|
| | | ரூ. உ | |
| 1 | மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7—கி.மீ. 37/6-55/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல். | 32,100 | கோட்டப்பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) மதுரை-2. |
| 2 | கி.மீ. 55/0-65/0 சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 24,800 | ஷை |
| 3 | கி.மீ. 65/0-77/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல். | 31,500 | ஷை |
| 4 | கி.மீ. 77/0-88/4 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல். | 29,100 | ஷை |
| 5 | கி.மீ. 95/0—105/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல். | 25,900 | ஷை |
| 6 | கி.மீ. 105/0—115/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல். | 30,000 | ஷை |
| 7 | கி.மீ. 115/0—125/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல். | 27,800 | ஷை |
| 8 | கி.மீ. 125/0—134/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல். | 19,000 | ஷை |
| 9 | கி.மீ. 134/0—146/4 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல். | 31,300 | ஷை |
| 10 | கி.மீ. 170/0—183/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல் | 25,600 | ஷை |
| 11 | கி.மீ. 183/0—195/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல். | 36,200 | ஷை |
| 12 | கி.மீ. 195/0—203/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல் | 21,400 | ஷை |
| 13 | கி.மீ. 203/0—213/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல். | 20,200 | ஷை |
| 14 | கி.மீ. 213/0—224/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல். | 31,700 | ஷை |
| 15 | கி.மீ. 224/0—231/6 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல். | 21,700 | ஷை |
| 16 | சேலம்—திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை 7—கி.மீ. 345!0—355/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல். | 31,000 | கோட்டப்பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) திருச்சி கோ-2. |
| 17 | தேசிய நெடுஞ்சாலை எண் 45—கி.மீ. 403/0—417/250 சாலையை அகலப்படுத்தி விரிவுப்படுத்துதல். | 33,700 | ஷை |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனைவரி உட்பட ரூ. 20.70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம், கோட்டப்பொறியாளர் அலுவலகம் (தேசிய நெடுஞ்சாலை)

மதுரை-2 மேலும் கோட்டப்பொறியாளர் அலுவலகம் தேசிய நெடுஞ்சாலை திருச்சி கோட்ட எண் 2 விலாசத்திலிருந்து 5—1—1972 முதல் 11—11—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணயப்படிவங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப் புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகையை மேற்கண்ட தனிக் கோட்டப் பொறியாளர்கள் (தேசிய நெடுஞ்சாலை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும் 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும் மாநில அரசு ஈட்டுப்பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரியப்பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்குஒப்புதலைப் பெற்று ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப் படும்.

முன்பண வைப்புத்தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**பி. ஜெய்ராமன்,**

மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை),
மதுரை-2.

(த. 81)

---

## ஒப்பந்தப் புள்ளி

### மின்சார வாரியம்

**விளக்க விவரம் எண். SEG BB 44**

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக தமிழ்நாடு மின்சாரவாரியத்துக்கு உபயோகப்படக்கூடிய பலதரப் பொருள்களை சென்னை எழும்பூர், ஸால்ட் குவார்ட்டர்ஸ், கொருக்குப்பேட்டை, மத்திய இரயில் நிலையம் சரக்குத் தொழுவங்களிலிருந்தும் சென்னையில் உள்ள மற்ற இடங்களிலிருந்தும் சென்னை-12-ல் உள்ள பேஸின் பிரிட்ஜ் மின் உற்பத்தி நிலையம் சரக்கு நிலையத்திற்குப் போக்கு வரவு ஏற்றிச் செல்லல் வேலைக்கான முத்திரையிட்ட தனித்தனி விலை ஒப்பங்கள் கீழே கையொப்பமிட்டவரால் 20—12—1971 அன்று பகல் 1-00 மணிவரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகளின் படிவங்களின் விலை ஒவ்வொரு சாற்றுக் குறிப்புப் பிரதிக்கும் ரூ. 10·00 (ரூபாய் பத்து) ஆகும். மேற்படி ஒப்பந்தப் புள்ளி விளக்க விவரப் பிரதிகள் வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு ரூ. 10·00 வீதம் துணைத் தலைமைக்கணக்கர், மின் உற்பத்தி நிலையம், பேஸின் பிரிட்ஜ் மின்நிலையம், சென்னை-12 என்ற முகவரிக்கு பண அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலேயோ செலுத்தி அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்பட மாட்டாது. இத்தொகையை பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர் தமது முகவரியையும் தேவையான பிரதிக்குரிய விளக்க விவர எண்ணையும் ( Specification No. ) தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவர்க்குச் சேர்க்கப் படாவிட்டால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பிரதிகள் பிறருக்கு மாற்றிக் கொள்ளத் தக்கதல்ல. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு விலை ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா விலை ஒப்பந்தங்களையோ எந்தவிதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விலை ஒப்பந்ததாரர்களுக்கிடையே ஆணையைப் பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார்.

ஒவ்வொரு குத்தகை ஒப்பந்தத்துக்கும் ரூ. 500 (ரூபாய் ஐந்நூறு மட்டும்) பிணைத் தொகையாக பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தில் நேரில் செலுத்தி அதற்கான ரசீதை விலை ஒப்பந்தத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டும். மேற்படி ரசீது இல்லாத விலை ஒப்பங்களும் உரிய தாள்களில் சேர்க்கப் படாத விலை ஒப்பங்களும், குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் விலை ஒப்பங்களும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. 20-12-71 அன்று மாலை 4-00 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளின் முன்னிலையில் அடியிற் கையொப்பமிட்டுள்ளவரால் அவருடைய அலுவலகத்தில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**

சென்னை மின் பெருவட்டம்,
மின் உற்பத்தி நிலையம்,
பேஸின் பிரிட்ஜ் மின் நிலையம்,
சென்னை-12.

(த. 83)

## ஒப்பந்தப் புள்ளி

கீழ்க்கண்ட லெட்ஜரை அச்சிட்டு வழங்குவதற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (Sealed Tenders) அடியில் கையொப்பம் இட்டவரால் 30—12—1971 பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| வரிசை எண், பொருள். | சாற்றுக் குறிப்பெண். | அச்சிட வேண்டிய பிரதிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. தமிழ்நாடு மின்சார வாரியம் 39-பி, காலம்வார் லெட்ஜர், (T.N.E.B.—39-B, Column war Ledgers) | (Specification No. ) PA/HC/Tender No. 1/71. | சுமார் 25,000 பிரதிகள். |

மேற்படி லெட்ஜரை அச்சிட்டு வழங்குவதற்கான விவரங்களும், விலைப்புள்ளிகள் குறித்து அனுப்புவதற்கான குறிப்புத்தாள் ஒன்றும் அடங்கிய ஒப்புச் சாற்றுக் குறிப்புப் பிரதிகள் ( Copies of Specn.) வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) (விற்பனை வரி உட்பட), '' அக்கௌண்ட்ஸ் ஆபீஸர், தமிழ்நாடு மின்சார திட்டம், 157, அண்ணா சாலை, சென்னை-2 '', என்ற முகவரிக்கு, ரொக்கமாகவோ அல்லது பணஅஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலேயோ செலுத்தி மேற்படி விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி செலுத்தப்பட்ட தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

பிரதிகள் ( Copies of Specification ) சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அஞ்சலில் தவறி விட நேரிட்டால் எக்காரணம் முன்னிட்டும் மின்சார வாரியம் பொறுப்பு ஆகாது.

**ச. சபாபதி,**
மேற்பார்வைப் பொறியாளர்
(விநியோகம்)
சென்னை மின்சார திட்டம்.

157, அண்ணா சாலை,
சென்னை-2

த. 101

## நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1.

தமிழ்நாடு மாநில ஆளுநர்க்காக ஆளுநர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 29—12—71 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கு குறளகக் கட்டடம் நான்காவது மாடியில் உள்ள மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

| வேலை விவரம். | முன்வைப்புத் தொகை. ரூ. |
|---|---|
| 1. தேசிய நெடுஞ்சாலை எண். 47-ல் பவானி-குமாரபாளையம் புறச்சாலை அமைத்தல். | 65,660 |
| 2. பவானி-குமாரபாளையம் புறச்சாலையில் காவிரியின் குறுக்கே பாலம் கட்டுதல். | 1,15,550 |
| 3. பவானி-குமாரபாளையம் புறச்சாலையில் கி.மீ. 4·5-ல் காளிங்கராயர் கால்வாய் குறுக்கே பாலம் கட்டுதல். | 4,230 |

ஒப்பந்தப் புள்ளிகள் 29—12—71 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனாக்கள், வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர்(நெ), தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், சேலம் அலுவலகத்தில் 21—12—71 முதல் 28—12—71 முடிய ரூ. 250 உடன் விற்பனை வரியும் முதல் இரண்டு வேலைகளுக்கும் ஒவ்வொன்றிற்கும் ரூ. 25 உடன் விற்பனை வரியும் மற்ற மூன்றாவது வேலைக்கும் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மேற் குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையை கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், சேலம் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெ) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், சேலம் என்ற பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

**தி. மு. ஆ. ஜெயராமன்,**
மேற்பார்வைப் பொறியாளர் (நெ)

(த.85)

## சைனிக் பள்ளி

### அமராவதி நகர்

### கோயம்புத்தூர் மாவட்டம்

### 5-வது வகுப்பு

### 1972-ஆம் ஆண்டு ஜூலை வகுப்புத் தொடருக்கான நுழைவுத் தேர்வு

1972 பிப்ரவரி மாதம் 19, 20 தேதிகளில் நுழைவுத் தேர்வு நடைபெறும். (விடைகளை, தமிழ், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆகிய மொழிகளில் எழுதலாம்.) இந்தத் தேர்வில் தேர்ச்சி பெற்ற சிறுவர்கள் நிர்ணயிக்கப்படும் தேதியன்று நேர்முகப் பேட்டி மற்றும் மருத்துவ தேர்வுக்கு, தேர்வு போர்டு முன் ஆஜராக வேண்டும்.

வயது.—1962 ஜூலை 2 மற்றும் 1963 ஜூலை 1-ந் தேதிக்கு இடையே பிறந்திருக்க வேண்டும். (இரண்டு நாட்களும் உட்பட).

தமிழ் நாட்டில் தேர்வு நிகழும் இடங்கள்:—

| | |
|---|---|
| சென்னை. | திருநெல்வேலி. |
| கடலூர். | சேலம். |
| தஞ்சாவூர். | வேலூர். |
| திருச்சிராப்பள்ளி. | அமராவதிநகர். |
| மதுரை. | |

பள்ளிப் பாடத்திட்டம்.—திறமையான கல்வி உணவு வசதி மற்றும் விளையாட்டு பயிற்சிகள் அளிக்கப்படும். நல் ஒழுக்கமும், உடற்பயிற்சிகளும் விசேஷ முக்கியத்துவத்துடன் கவனிக்கப்படும். தேசிய பாதுகாப்பு அகாடமி நுழைவுத் தேர்வுக்கும் மத்திய செகண்டரி கல்வி போர்டால் நடத்தப்படும் அகில இந்திய உயர் செகண்டரி தேர்வுக்கும் (புகுமுக வகுப்பிற்குச் சமமானது) சிறுவர்களைத் தயார் செய்யும். போதனை மொழி ஆங்கிலம். தவிர உயர்-கீழ் மட்டத்தில் மாணவர்கள் தமிழ் அல்லது இந்தியைக் கட்டாயப் பாடமாக தேர்ந்தெடுக்க வேண்டும்.

பள்ளிக் கட்டணம்.—ஆண்டுக்கு ரூ. 2,050 (உணவு, இருப்பிடம், போதனை, பாடப் புத்தகங்கள் நோட்டுப் புத்தகங்கள் ஆகிய செலவுகள் உள்பட); உடை வகைகள் கட்டணம் (Out Fit Charges) ரூ. 300 முதல் ஆண்டும், மற்றும் ரூ. 150 பின்வரும் ஆண்டுகளிலும், செலுத்த வேண்டும். எச்சரிக்கைத் தொகை ரூ. 150 (இது பள்ளியை விட்டுச் செல்லும்போது திருப்பித் தரப்படும்). கைச்செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 100.

தகுதி மற்றும்—வருமான அடிப்படையில் அரசாங்க உதவி தொகைத் திட்டங்கள்.—

தமிழ்நாடு :—தமிழ் நாட்டில் நிலைத்து வாழ்ந்து வரு சிறுவர்களுக்கும் மற்றும் இதற்குச் சேர்த்துக்கொள்ளு வருடத்தில் ஜனவரி 1-ஆம் தேதியன்று உள்ளபடி குறைந் பட்சம் மூன்று வருடங்களுக்குத் தமிழ் நாட்டில் தொடர்ந்து உத்தியோகத்தில் இருந்து வந்திருக்கும் மற்ற மாநிலங்களை சேர்ந்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்கும் தாராளமாக உ காரச் சம்பளம் கிடைக்கும்.

கூட்டாகப் பெற்றோர்களின் மாத வருமானம் ரூ. 400 ரூ. 500, ரூ. 700, ரூ. 1,000 வரையில் இருக்குமானால் அப் பொழுது அளிக்கப்படக்கூடிய உபகாரச் சம்பளத்தின் மதிப்ப முறையே முழுதும், முக்கால், பாதி, கால் பாகம்.

பாதுகாப்பு அமைச்சகம்.—பணிபுரிந்து வரும் முன்னாள் JCOகள், ORகள் மற்றும் அவர்களுக்குச் சமமான கடற்படை விமானப்படைகளில் பதவிகளை வகித்தவர்களின் பிள்ளைகளுக்கு அளவான எண்ணிக்கையுள்ள பாதுகாப்பு அமைச்சகத்தின் உபகாரச் சம்பளங்கள் கிடைக்கும்.

உள்துறை அமைச்சகம்.—மத்திய அரசு நேரடி ஆட்சி யின் பகுதிகளைச் சேர்ந்த சிறுவர்களுக்குத் தாராளமான உபகாரச் சம்பளங்கள் கிடைக்கும்.

விண்ணப்பம் மற்றும் விளக்கக் குறிப்புகள்.—விண்ணப்பப்படிவம், பள்ளி விளக்கக் குறிப்புகள், மாதிரி வினாத்தாள் ஆகியவைகள் வேண்டுவோர் 90 காசு தபால் தலையும் அதனோடு 5 காசு வரித் தபால் தலையும் ஒட்டிய 42 செ. மீ.×15 செ. மீ. அளவுள்ள சுய விலாசமிட்ட உறையுடன் முதல்வர் சைனிக் பள்ளி, அமராவதிநகர் (அமராவதி நகர் தபால் அலுவலகத்தில் பெறுமாறு), அவர்கள் பெயருக்கு ரூ. 3-க்கான கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டருடன் முதல்வர் அவர்களுக்கு மனுச்செய்து பெறலாம். மேலும் மனுவில் எந்த மொழியில் வினாத்தாள் தேவை என்பதைக் குறிப்பிட வேண்டும்.

கடைசித் தேதி.—குறிப்பிட்ட படிவத்தில் பூர்த்தி பெற்ற விண்ணப்பங்களுடன் ரூ. 5-க்கான கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டரை இணைத்து முதல்வருக்கு 20—1—1972 தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

(த. 82)

## ஒப்பந்தப் புள்ளி

கீழ்க்கண்ட மருத்துவ நிலையங்களுக்கு 1972-ஆம வருடம் ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி அல்லது ஒப்பந்தம் அங்கீகரிக்கும் அதிகாரி குறிப்பிடும் தேதியிலிருந்து 1973-ஆம் வருடம் மார்ச்சு மாதம் 31-ஆம் தேதிவரை தேவைப்படும் உணவுப் பொருட்களும், மருத்துவ நிலையங்களுக்கான இதர சாமான்களும் வழங்குவதற்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ் நாடு அரசினரின் ஆளுநருக்காக மேற்படி மருத்துவ நிலையங்களின் கண்காணிப்பாளர் மற்றும் மருத்துவ அதிகாரிகளால் 1972-ஆம் வருடம் ஜனவரி மாதம் 7-ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2·00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் ,தேவைப் படும் சாமான்களின் பட்டியல், விதிகள் அடங்கிய அட்டவணை முதலியவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ரூ. 5·00 (ரூபாய் ஐந்து மட்டும்) ''XXIII, Medical G. Miscellaneous I DHS & EPM என்ற தலைப்பில் விற்பனை வரி 18 காசு மட்டும் ''XII Sales Tax'' என்ற தலைப்பிலும் ரிசர்வ் பாங்கிலோ அல்லது ஸ்டேட் பாங்கிலோ அரசுக் கருவூலங்களிலோ செலுத்தி மேற்படி இரண்டு செலான்களையும் மேற்படி கண்காணிப்பாளர் மற்றும் மருத்துவ அதிகாரிகளிடம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

1. அரசினர் தலைமை மருத்துவ நிலையம், தூத்துக்குடி.
2. அரசினர் மருத்துவ நிலையம், தென்காசி.
3. அரசினர் மருத்துவ நிலையம், நான்குநேரி.
4. அரசினர் மருத்துவ நிலையம், சங்கரன்கோவில்.
5. அரசினர் மருத்துவ நிலையம், அம்பாசமுத்திரம்.
6. அரசினர் மருத்துவ நிலையம், செங்கோட்டை.
7. அரசினர் மருத்துவ நிலையம், கோவில்பட்டி.
8. அரசினர் மருத்துவ நிலையம், திருச்செந்தூர்.
9. அரசினர் மருத்துவ நிலையம், ஸ்ரீவைகுண்டம்.
10. அரசினர் மருத்துவ நிலையம், ஆயக்குடி.
11. அரசினர் மருத்துவ நிலையம், சேர்மாதேவி.
12. அரசினர் மருத்துவ நிலையம், சாத்தான்குளம்.
13. அரசினர் மருத்துவ நிலையம், எட்டையபுரம்.
14. அரசினர் மருத்துவ நிலையம், ஓட்டப்பிடாரம்.
15. அரசினர் மருத்துவ நிலையம், காலங்குடியிருப்பு.
16. அரசினர் மருத்துவ நிலையம், கடையநல்லூர்.
17. அரசினர் மருத்துவ நிலையம், மேலப்பாளையம்.
18. அரசினர் மருத்துவ நிலையம், காயல்பட்டினம்.
19. அரசினர் தொழுநோய் தடுப்பு நிலையம், சிருடையார்புரம்.
20. அரசினர் தொழுநோய் தடுப்பு நிலையம், சிவகிரி.
21. அரசினர் ஆயுர்வேத மருத்துவ நிலையம், செங்கோட்டை.

குறிப்பு:—(1) ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ஆம் தேதிக்குப் பின் தாசில்தார் கையொப்பமிட்ட சொத்துக்களின் பெறுமான சான்றிதழ் (Solvency Certificate) அல்லது அதன் உண்மையான நகல் கெஜட் பதிவான அதிகாரியின் கையொப்பமிட்டாவது அனுப்பவேண்டும்.

(2) ஒப்பந்தம் கொடுக்கப்படும் சலான்களின் மதிப்பு ரூ. 10,000-க்கு மேற்பட்டால் வருமான வரி பாக்கி இல்லாமல் செலுத்தியதற்குரிய அத்தாட்சியும் ரூ. 1,000-க்கு மேற்பட்டால் விற்பனை வரி கட்டி முடித்த அத்தாட்சியும், மேலும் தேசிய இனச்சான்றும் (National Certificate ) ஒப்பந்தத்துடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

(3) ஒப்பந்த நிபந்தனை நமூனாவையும், பொருள்களின் அட்டவணையையும் தனிக் குறிப்பீடு அட்டவணையையும் நன்ருகப் படித்து அறிந்து சம்மதித்துக் கொள்ள வேண்டும். அதன் ஒப்புதலுக்காக மேற்படி நமூனாவையும், அட்டவணையையும் கையெழுத்திட்டு ஒப்பந்தத்துடன் திருப்பித்தர வேண்டும்.

(4) ஒப்பந்தத்துடன் கொடுக்கும் நபர் ஒப்பந்தம் சமர்ப்பித்தபின் அது சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளக்கூடாது.

டாக்டர் எஸ். ரெங்கநாதன், பி.ஏ., எம்.பி.பி.எஸ்.,
மாவட்ட மருத்துவ அதிகாரி, திருநெல்வேலி இருப்பு,
தூத்துக்குடி-3.

(நு. 110)



16-12—14

## மதுரை மாவட்ட மருத்துவ மனைகளுக்கு உணவுப் பொருட்கள் வழங்கல்

ந.க. எண். 24562/பி. வி./71. நாள் : 26—11—71.

1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி முதல் அல்லது அதற்குப்பிந்திய தொரு தேதி முதல் 1973-ஆம் ஆண்டு மார்ச்சு 31-ந்தேதி வரையில் மதுரை மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்கும், ஏனைய கீழ்க்காணும் மருத்துவ மனைகளுக்கும் தேவையான உணவுப் பொருட்கள், இதர மருத்துவமனைத் தேவைகளையும் வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள். சம்பந்தப்பட்ட மருத்துவமனைக் கண்காணிப்பாளர்கள், மருத்துவ மனை அலுவலர்களால் 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ந்தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. அரசினர் தலைமை மருத்துவமனை, திண்டுக்கல்.
2. அரசினர் மருத்துவமனை, பழனி.
3. அரசினர் மருத்துவமனை, கொடைக்கானல்.
4. அரசினர் மருத்துவமனை, உசிலம்பட்டி.
5. அரசினர் மருத்துவமனை, திருமங்கலம்.
6. அரசினர் மருத்துவமனை, மேலூர்.
7. அரசினர் மருத்துவ மனை, போடிநாயக்கனூர்.
8. அரசினர் மருத்துவ மனை, உத்தமபாளையம்.
9. அரசினர் மருத்துவமனை, பெரியகுளம்.
10. அரசினர் மருத்துவ மனை, வத்தலகுண்டு.
11. அரசினர் மருத்துவ மனை, கம்பம்.
12. அரசினர் மருத்துவ மனை, நிலக்கோட்டை.
13. அரசினர் மருத்துவமனை, தாண்டிக்குடி.
14. அரசினர் மருத்துவ மனை, பண்ணைக்காடு.
15. அரசினர் மருத்துவ மனை, ஆயக்குடி.
16. அரசினர் மருத்துவ மனை, ஒட்டன்சத்திரம்.
17. அரசினர் மருத்துவ மனை, தேனி.

ஒவ்வொரு மருத்துவமனைக்கும் தேவைப்படும் பொருட்களின் பட்டியல், ஒப்பந்த வரன் முறைகள், ஒப்பந்த வடிவங்கள், ஆகியவற்றினை, அந்தந்த சம்மந்தப்பட்ட மருத்துவமனைகளும் மனுச்செய்துப் பெறலாம். ஒப்பந்தப் புள்ளி வடிவம் முதலியவைகளுக்கான விலை ரூ. 5-19 ரூபாய் ஐந்து, பத்தொன்பது காசுகள் மட்டும் விற்பனை வரி 3 சதவிகிதம் சர்சார்ஜ் 5 சத விகிதம் உள்பட) இத்தொகை இந்திய ரிசர்வு வங்கியிலோ அல்லது அரசாங்கக் கருவூலத்திலோ தமிழ் நாடு அரசின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப் புள்ளி வடிவத்துக்கு ரூ. 5-0 (XXIII Medical—G. Miscellaneous—I. Director of Health Services and Family Planning—Other Receipts) என்ற தலைப்பிலும், விற்பனை வரி ரூ. 0-19 XII Sales Tax Receipts under Sales Tax Act—General Sales Tax என்ற தலைப்பிலும் ஒரே செலுத்துச் சீட்டில் செலுத்த வேண்டும். ஒப்பந்தப் படிவங்கள் விண்ணப்பத்துடன் அசல் செலுத்துச் சீட்டு இணைக்கப்படவேண்டும். இத்தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

குறிப்பு.—ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் அனுப்பும் ஒப்பந்தப் புள்ளியுடன் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதிக்குப் பின்னர் வட்டத்து ஆட்சியாளரிடமிருந்து பெறப்பட்ட பெரும்புள்ளிச் சான்றிதழும் (Solvency Certificate) தேசிய இனச் சான்றிதழும் (Nationality Certificate) அனுப்ப வேண்டும்.

2. ஒப்பந்தப் புள்ளி மதிப்பு ரூ. 10,000-க்கு மேற்பட்டால் வருமானவரி சான்றிதழும் (Income Tax verification certificate) ஒப்பந்தப் புள்ளி மதிப்பு ரூ. 1,000-க்கு மேற்பட்டால் விற்பனைவரி முழுமையும் பாக்கியின்றி கட்டியமைக்கான சான்றிதழும் ( Sales Tax clearance certificate ) அனுப்ப வேண்டும். தமிழக அரசிதழ் பதிவுபெற்ற அலுவலரால் கையொப்பமிட்ட உண்மை நகல்களும் அனுப்பலாம்.

3. ஒப்பந்தப் புள்ளியுடன் ஒப்பந்த வரன் முறைகள் (Condition of Tender) உணவுப் பொருட்களின், மற்றும் தேவைப்பட்டியல் ( Schedule of Diet, etc. articles ) ஆகியவற்றினையும் நன்கு படித்துத் தெரிந்து, வரன் முறைகளுக்கு உட்பட்டு நடக்கச் சம்மதம் என அதில் கையெழுத்திட்டு திருப்பி அனுப்பி வைக்க வேண்டும்.

4. ஒப்பந்தப் புள்ளிகள் அனுப்பிய பின்னர் ஒப்பந்த சம்மந்தமாய் எந்த விதமான கடிதத் தொடர்பும் செய்யக் கூடாது.

திண்டுக்கல், டாக்டர் இ. சி. நாகராஜன், எம்.பி.பி.எஸ்.,
20—11—71. மாவட்ட மருத்துவ அலுவலர்.

(த. 73)

## ஒப்பந்தப் புள்ளி ஒத்தி வைப்பு அறிக்கை

### பொதுப்பணித்துறை

சென்னை—செங்கற்பட்டு வட்டம்

**வேலையின் பெயர்**—சென்னை அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் அவுட் பேஸண்ட் (out-patient) அலுவலகத்திற்காகக் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்காக ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான கடைசி நாள் 16-10-1971 என்ற கெடு 27—12—1971 மாலை 3-00 மணிவரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் 18-12-1971 முதல் 26-12-1971 வரை பெற்றுக்கொள்ளலாம். மற்ற நிபந்தனைகளில் எந்த மாறுதலும் இல்லை.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறிஞர்,
சென்னை-செங்கை வட்டம்.

(கு. 80)

## ஒப்பந்தப் புள்ளி

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசாங்க மருத்துவ மனைக்காக 1972—73-ஆம் ஆண்டு உணவுப் பொருட்கள் மற்றும் இதர மருத்துவமனை தேவைகளுக்குண்டான ஒப்ப அறிவிப்பு.

1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்தோ அல்லது ஒப்பந்தக் குத்தகை ஏற்றுக்கொள்ளும் தகுதி பெற்ற அதிகாரி ஒவ்வொன்றிற்கும் திட்டமாகக் குறிப்பிடும் மற்ற தேதியிலிருந்தோ 1973-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதியோடு முடிவடையும் காலத்திற்கு நாகர்கோயில் அரசாங்க மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்கும் மற்றும் பத்மனபபுரம், குழித்துறையிலுள்ள அரசாங்க மருத்துவ மனைகளுக்கும் தேவைப்படும் உணவுப்பொருட்களையும் மற்றும் மருத்துவ மனைக்காக இதர சாதனங்களையும் வழங்குவதற்கான முத்திரையிட்ட ஒப்ப அறிவிப்புகள் தமிழ்நாடு அரசு, ஆளுநர் (கவர்னர்) அவர்கள் சார்பில் அந்தந்த ஊர் மருத்துவமனை அலுவலர்களால் 1972-ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 7-ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிவரை வரவேற்கப்படுகின்றனர்.

2. ஒப்ப அறிவிப்புப் பற்றிய நிபந்தனைகளடங்கிய பிரதி, ஒப்ப அறிவிப்பு நமூனு தேவையான பொருட்களின் அட்டவணை நாகர்கோயில் மாவட்ட மருத்துவ அலுவலர் அலுவலகத்திலும், பத்மனபபுரம், குழித்துறை அரசினர் மருத்துவ அலுவலரின் அலுவலகங்களிலிருந்தும், அலுவலக நேரங்களில் பணிபுரியும் எல்லா நாட்களிலும் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

3. மற்றும் தேவையான, விவரங்கள் அனைத்தும் அந்தந்த அலுவலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டாக்டர் ஜ. ஏ. கிருஷ்ணமூர்த்தி,
மாவட்ட மருத்துவ அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்,
நாகர்கோயில்.

நாகர்கோயில்,
27—11—1971

(கு. 74)

## ஏல விற்பனை

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக ஸ்டேஷன் வாகன் எம்.எஸ்.ஒய். 5677, 15—12—71 தேதி புதன் கிழமை காலை 11-00 மணிக்கு செங்கற்பட்டு, மாவட்ட வளர்ச்சி அலுவலர் (தெற்கு) அவர்களால் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் பகிரங்கமாய் ஏலம் போடப்படும். அலுவலக வேலை நாட்களில் ஊர்தியைக் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அலுவலகத்தில் பார்வையிடலாம். ஏலம் கேட்க விரும்புபவர்கள் கட்டுத் தொகை ரூ. 100 மாவட்ட வளர்ச்சி மன்ற அலுவலர், (தெற்கு) அவர்களிடம் செலுத்த வேண்டும்.

மேற்படி தொகை ஏலம் முடிந்தவுடன், ஏலம் கேட்காதவர்களுக்கு வாபஸ் செய்யப்படும். கட்டுத் தொகை ரூ. 100-ஐ கட்டாதவர்கள் ஏலத்தில் பங்கு கொள்ள அனுமதிக்கப் படமாட்டார்கள்.

ஏலமானது, உயர்ந்த தொகை கேட்பவர்களுக்கு விடப்படும். மேற்படி ஏலதார் ஏலத் தொகையில் 25 சதவிகிதத்தை ஏலக் கட்டுத் தொகை ரூ. 100 போக மீதியும் உடனே கட்டிடவேண்டும். அப்படிக் கட்டத் தவறினால் அவர்களது கட்டுத் தொகை ரூ. 100 சர்க்காருக்குத் தாக்கல் செய்து மறு ஏலம் நடத்தப்படும்.

மேற்படி ஏலம் தமிழ்நாடு போக்குவரத்து ஆணையாளர் அவர்களால் காயம் செய்யப்படும். காய உத்திரவு ஏலதாருக்கு அனுப்பிய தேதியிலிருந்து 1 வாரத்தில் மீதித் தொகை பூராவையும் விற்பனை வரியுடன் செலுத்த வேண்டும். பிறகுதான் வண்டி பட்டுவாடா செய்யப்படும். தவறினால் ஏலதார் கட்டியுள்ள 25 சதவிகிதத் தொகையானது அரசுக்குச் சேர்ந்துவிடும். மறு ஏலம் நடத்தப்படும். மேற்படி மறு ஏலத்தில் நஷ்டம் ஏற்பட்டால் ஏற்படும் நஷ்டம் முதல் ஏலத்தாரிடமிருந்து வசூல் செய்யப்படும்.

மேற்படி ஏலமானது தமிழ்நாடு போக்குவரத்து ஆணையாளர் அவர்களால் காயம் செய்யப்படாவிட்டால் ஏலதாரி கட்டியுள்ள 25 சதவிகிதத்தொகை ஏலதாருக்குத் திருப்பி அளிக்கப்படும்.

மாவட்ட வளர்ச்சி அலுவலர்,
(தெற்கு), மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.

(கு. 57)

## மணப்பாறை நகராட்சி

மணப்பாறை நகராட்சிக்குக் கீழ்க்கண்ட வேலைகளைச் செய்து முடிக்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 1971-ஆம் வருடம் டிசம்பர் மாதம் 27-ஆம்தேதி திங்கட் கிழமை மாலை 4-00 மணிவரை நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும்.

வரப்பெற்ற ஒப்பந்தங்கள் மேற்படி டிசம்பர் மாதம் 27-ஆம் தேதி மாலை 4-15 மணிக்கு நகராட்சி ஆணையர் அவர்களால் அப்பொழுது வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | வைப்புத் தொகை. ரூ. |
|---|---|
| 1. 9'—0''×7'—6'' அளவில் ஒப்பந்த அறிவிப்பில் கண்ட அளவு விவரத்தில் பெட்டிக்கடை வழங்குதல். 10 பெட்டிக்கடைகள். | 250 |
| 2. மின்சாரச் சாமான்கள். (ஒப்பந்தப் படிவங்களில் உள்ளபடி). | 100 |

ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி பத்திரம் ஒன்றின் விலை ரூ. 5-18 (விற்பனை வரி உள்ளிட்டு).

வி. நாகராஜன்,
ஆணையர்.

(த. 95)

---

## காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் தமது அலுவலகத்தில் 27-12-1971 அன்று மாலை 4-00 மணி வரை மூடி, முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்கண்ட வேலைகளுக்கு வரவேற்கப்படுகின்றன. அவை அன்று மாலை 4-05 மணிக்கு ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்படும். மற்ற விவரங்கள் நகராட்சிப் பொறியரிடமிருந்து எழுதிக் கேட்டுத் தெரிந்துகொள்ளவும்.

| வேலையின் பெயர். | மதிப்பு. ரூ. | பொறுப்புத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1. நகரக் கூடம் மின்சார ஒயரிங் செய்தல். | 8,000 | 400 |
| 2. நகராட்சி அலுவலக மின்சார ஒயரிங். | 5,000 | 250 |
| 3. வேகவதி தலைமை நீர் நிலையத்தில் 50 குதிரை வேகமுள்ள மின்உந்து பொருத்துவதற்கு அறை கட்டல். | 8,400 | 420 |

த. ஆ. சிவசுப்ரமணியன்,
ஆணையர்.

காஞ்சிபுரம்,
25—11—1971.

(த. 97)

---

## குடிசைப் பகுதி மாற்று வாரியம்

கீழ்க்கண்ட வேலைகளுக்கு, உறையின்மேல் வேலையின் பெயரும், ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயரும் குறிப்பிட்டு மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள், 24—12—1971 மாலை 3-00 மணி வரை கீழ்க்கண்ட முகவரிக்கு வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—யானைக்கவுனி காவல் நிலையத்திற்குப் பின்புறம் கல்யாணபுரத்தில் பலதளக் கட்டடம் கட்டுவதற்கு 'பைல்' அடித்தளம் அமைத்தல்.

வேலையின் சுமார் மதிப்பு.—ரூபாய் 5 இலட்சம்.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.
கட்டுத்தொகை ரூ. 7,500.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை.—ரூ 15+விற்பனை வரி.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், நிருவாகப் பொறியாளர், குடிசைப்பகுதி மாற்று வாரியம், கோட்டம் 1, 35/37, ஜகாங்கீர் தெரு, இரண்டாம் கடற்கரைச் சாலை, சென்னை-7 அவர்தம் அலுவலகத்தில் 15—12—1971 முதல் 23—12—1971 வரை அலுவல் நாட்களில் காலை 10-00 மணி முதல் மாலை 4-00 வரை, ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை, விற்பனை வரியும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

நிருவாகப் பொறியாளர்,
குடிசைப் பகுதி மாற்று வாரியம்,
கோட்டம் 1, சென்னை-1.

(த. 98)

வட ஆர்க்காடு மாவட்டத்தி லுள்ள வட்ட மருத்துவமனை களில் மிதிவண்டி நிலையம், நடத்துவதற்கு 1972—73-ஆம் ஆண்டுக்கான மூடி முத்திரை யிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 14—1—1972 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-00 மணிவரை அந்தந்த மருத்துவமனை மேலா ளர் களால் பெற்றுக் கொள்ளப் படும். மருத்துவமனைக்குள் மிதி வண்டிகள் நிறுத்துமிடம் வைத்து நடத்துவதற்கான விதிகள் :—

1. மிதி வண்டிகள் நிறுத் துவதற்குரிய தகுந்த சாதனங் களைக் குத்தகைக்காரர்கள் வைக்க வேண்டும்.

2. மருத்துவமனை சிப்பந்திகள் மற்றும் அரசினர் இலாக்காவி லிருந்து தபால் அல்லது அலுவலக வேலையாக மிதி வண்டி களில் வந்தால் அவர்களிட மிருந்தும் கட்டணம் வசூலிக்கக் கூடாது. மருத்துவமனை ஒப்பந்த தாரர்கள் அவர்களது ஏஜண்டுகள் முதலியோர் மிதி வண்டிகளும் விலக்குப் பெற்றவை.

3. மிதி வண்டிகளை அவை களின் உரிமையாளர்களிட மிருந்து பெறும்போதும், மீண்டும் திருப்பிக் கொடுக்கும் போதும் அடையாள வில்லைகள், வழங்கும் முறையைக் கையாள வேண்டும்.

4. உரிமையாளர் மிதி வண்டிகளை ஒப்படைத்த பின்னர் அவைகளைக் கவனிப்புடன் பார்த் துக் கொள்ளவேண்டும். வில்லை கள் திருப்பிக் கொடுத்தபின்னர் அவர்கள் மிதி வண்டிகளை ஒழுங் காகச் சரிபார்த்துக் கொடுக்க வேண்டும்.

5. காலை 6 மணி முதல் இரவு 8 மணிவரை மிதி வண்டி களைக் கண்காணிப்பதற்காகக் காவலர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

6. குத்தகைக்காரர் பொறுப்பில் மிதி வண்டிகளை விட்டபின்னர் அவைகள் காணு மற்போனால் குத்தகைக்காரரே பொறுப்பாளியாவார். அத்து டன் இழந்ததை ஈடு செய்வதும் அவருடைய பொறுப்பாகும்.

7. குத்தகை எடுக்க விரும் புவோர் திரும்பப் பெறக் கூடிய ஈட்டுத்தொகையை ரூ. 25 (ரூபாய் இருபத்து ஐந்து) நேரில் ஏல கட்டுத் தொகை கட்டு வது போன்று கட்டியபின் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரம் பெற வேண்டும்.

8. குறிப்பிட்ட குத்தகைக் காக அரசுக்கு 1972—73-ஆம் ஆண்டு முழுமைக்கும் எவ்வளவு பணம் ஒப்புதல தருகிறார் என் பதை ஒப்பந்தப் புள்ளியில் குறிப் பிடவேண்டும்.

9. ஒப்பந்தப் புள்ளிப் படிவங் களை ரூ. 25 கட்டிய பின் பெற்றுக் கொள்ளலாம்.

10. தேர்ந்தெடுக்கப்பட்ட குத்தகைக்காரர் அந்தந்த மருத் துவமனை சூப்பிரண்டெண்ட் அவர்களுடன் ஒரு உடன்படிக் கையில் கையொப்பமிட வேண்டும்.

11. எந்தக் குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று இவ்வலுவலகத்திலிருந்து அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்ட அன்றே ஏலத்தொகைக்கட்டிவிட வேண்டும். அவ்வாறு கட்டத் தவறினல் அன்றைது பொறுப் பிலேயே முன் அறிவிப்பு இல்லா மல் குத்தகைவேறு ஒருவருக்கு வழங்கப்படும்.

12. ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்ட வுடன் முழுத்தொகையும் கட்டி ஒப்பந்தம் செய்து கொள்ளா விட்டால் ஈட்டுப் பணத்தைப் பறிமுதல் செய்வதுடன், மேலும் அதனல் அரசினருக்கு ஏற்படும் நஷ்டத்தையும் அவரிடமிருந்து அரசினர் விதிகளின்படி வசூலிக் கப்படும். இது முக்கியமான விதிமுறை.

13. ஏலத்தொகை கட்டி முடிந்த பின்பு ரூ. 2·25 மதிப் புள்ள அரசினர் முத்திரைக் காகிதத்தில் ஒப்பந்தம் கை யெழுத்து செய்ய வேண்டும்.

மாவட்ட மருத்துவ அலுவலர்,

வட ஆர்க்காடு, வேலூர்.

தேதி : 3—12—1971

(த.91)

## ஏல விற்பனை

### வனத்துறை

மரக்கிடங்கு, பொள்ளாச்சி.

சுமார் 70 கனமீட்டர் ஈட்டி, 50 கனமீட்டர் தேக்கு, 50 கனமீட்டர் கரிமருது, 50 கன மீட்டர் தடசு, 200 கனமீட்டர் பில்லமருது, 80 கனமீட்டர் பல ஜாதி மரங்கள் ஆகியவைகளை 22-12-1971-ஆம் தேதி தமிழக அரசு ஆளுநர் அவர்கள் சார்பாக தென்கோவை மாவட்ட வன அலுவலர் அவர்களால் அல்லது அவரது உத்தரவுப் பெற்றவர் களால் பகிரங்கமாய் ஏலம் விடப்படும். ஏலம் காலை 9 மணி முதல் தொடர்ச்சியாக நடத்தப்படும்.

மற்ற விவரங்கட்கு பொள் ளாச்சியிலுள்ள தமிழக அரசி னர் மரக்கிடங்கின் வனச்சரக அலுவலருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

பூ. க. பொன்னுசாமி,

மாவட்ட வன அலுவலர்,

தென்கோவைப் பிரிவு.

பொள்ளாச்சி,

3—12—1971

(த. 90.)

## திருச்சிராப்பள்ளி நகராட்சி

இந்நகராட்சிக்குத் தேவையான ஒரு ஆங்கில டைப் ரைட்டிங் மெஷின் ( Policy Size ) வழங்க அரக்கு முத்திரையிட்ட உறைகளில் ஒப்பந்தப் புள்ளிகள் 28-12-71-ஆம் தேதி மாலை 4-00 மணிக்குள் ஆணையர் அவர்களால் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். மற்ற விவரங்களை அலுவலகத்தில் விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்.

(த.93)

## மணப்பாறை நகராட்சி

மணப்பாறை நகராட்சிக்கு சுமார் ரூ. 38,000 மொத்த மதிப்புள்ள 17 வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 1971ஆம் வருடம் டிசம்பர் மாதம் 27-ஆம் தேதி திங்கள் கிழமை மாலை 4-00 மணி வரை நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும்.

வரப்பெற்ற ஒப்பந்தங்கள் மேற்படி 27—12—71-ஆம் தேதி மாலை 4-15க்கு நகராட்சி ஆணையர் அவர்களாலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவராலோ அப்பொழுது ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

இதர விவரங்களை அலுவலகத்தில் எழுத்து மூலமாகவோ நேரிலோ கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். செட்யூல் பாரம் ஒன்றின் விலை ரூ. 5-18.

வி. நாகராஜன்,
ஆணையர்.

(த.94)

## பொதுப்பணித்துறை
### ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு

எண். 29214/70/வ2/
நாள். 3—12—71

வேலையின் பெயர்.—செங்கல்பட்டு மருத்துவமனை, கல்லூரியில் இரண்டாவது பகுதியின் மேல் முதல் மாடியும் இரண்டாம் மாடியும் கொண்ட கட்டடம் கட்டுதல்—செங்கல்பட்டு மாவட்டம்.

மேற்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசி தேதி 22—12—1971 வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. 22—12—71 மாலை 3-00 மணி வரை ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும். அதே நாளில் மாலை 3-15 மணிக்கு அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் 20—12—71 வரை அலுவலக நேரங்களில் விற்கப்படும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதும் இல்லை.

க. சு. இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொ.ப.து. செங்கை-வடஆர்க்காடு பெருவட்டம்,
(த. 99) வேலூர்-1.

## பொதுப்பணித்துறை
### காவிரி வளர்ச்சிப் பணி வட்டம் தஞ்சாவூர்
### ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு அறிக்கை

வேலையின் பெயர் : தூரியாறு, மன்னியார் வடிகால் அபிவிருத்தித் திட்டம். வேலைகள் 1 முதல் 6 பிரிவுகள்.

பார்வை : தமிழரசு தேதி 1—11—71-ல் வெளியிட்ட ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு.

மேற்குறித்த வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் பெறும் தேதி 23—12—71 அன்று மாலை 4-00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 21—12—71 வரை கிடைக்கும். மற்ற விதிகளில் மாற்றம் ஏதும் இல்லை.

அ. சேஷாத்திரி,
தனிமேற்பார்வைப்
(த.100) பொறியாளர்.

## மின்சார வாரியம்

கோவை இரயில்வே கூட்ஸ் ஷெட், பார்சல் ஆபீஸ் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் குறிப்பிட்டுள்ள இடங்களிலிருந்து, பைக்காரா சென்ட்ரல் ஸ்டோர்ஸ், சென்ட்ரல் ஆபீஸ் டாடாபாத் ஆகிய இடங்களுக்கும் அதற்கு மாறாகவும் இவ்வாரிய சாமான்களை ஏற்றிச் செல்வதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 5—1—1972 மாலை 3-00 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் பெற்றுக் கொள்ளப்படும். அன்று மாலை சுமார் 3-30 மணியளவில் வந்திருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி சரத்துக்களும், விதிகளும் அடங்கிய படிவங்களை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ "தலைமைக் கணக்காயர் (செலவினம்) பைக்காரா மின்திட்டம், டாடாபாத், கோவை-12" அவர்களிடம் ரூபாய் 2 (ரூபாய் இரண்டு மட்டும், திருப்பித்தரத்தக்கது அல்ல) செலுத்தி அதற்கான ரசீதைப் பண்டக மேற்பார்வையாளர், பைக்காரா மின்திட்டம், கிராஸ்கட் ரோடு, கோவை-12" அவர்களிடம் காண்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் படிவங்கள் 4—1—72 அன்று மாலை 5 மணி வரைதான் கொடுக்கப்படும். முன்பணம் 5—1—72 மாலை 1-30க்குள் கட்டிவிட வேண்டும். முன்பணம் கட்டியதற்கான ரசீது இணைத்து வராத ஒப்பந்தப்புள்ளிகளும், அலுவலகப் படிவங்கள் அல்லாத ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்படும்.

தபாலில் ஏற்படும் எந்தத் தவறுகளுக்கும் இவ்வாரியம் எந்தப் பொறுப்பும் ஏற்காது.

மேற்பார்வைப் பொறியாளர்,
பைக்காரா மின் திட்டம்,
டாடாபாத், கோவை-12.

(த.105)

## பொதுப்பணித் துறை

ஒப்பந்தத்தேதி நீட்டிப்பு.

வேலையின் பெயர் : திருவையாற்றில் 1 உதவி ஆய்வாளர், 4 தலைமைக் காவலர்கள், 18 காவலர்கள் ஆகியோருக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.

பார்வை : தமிழரசு தேதி 1—11—1971, 16—11—1971-ல் வெளியிட்ட ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

மேற்கண்ட வேலைக்கான ஒப்ப அறிவிப்புகள் பெறும் தேதி 6—1—1972 அன்று மாலை 3-00மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 5—1—1972 அன்று மாலை 5-00 மணிவரை கிடைக்கும். மற்ற விதிகளில் மாற்றம் ஏதும் இல்லை.

ரா. வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
30—11—1971
தஞ்சை வட்டம், தஞ்சாவூர்.

(த.108)

# ஒப்பந்தப் புள்ளி

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, திருச்சிக் கோட்டம்

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்கள் சார்பாகவும் திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறைக் கோட்டப் பிராந்தியத்தில் உள்ள காவேரி டெல்டாவின் வாணிப வளர்ச்சி மேம்பாடு செய்யும் வேலைக்கும், மண்ணச்சநல்லூரில் கட்டவிருக்கும் மார்க்கெட் கட்டட வேலைகளுக்கான மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் (டெண்டர்கள்) அட்டவணைப் பட்டியல்களில், திருச்சிராப்பள்ளி கோட்டப் பொறியாளர் அவர்களால், அவர்களுடைய அலுவலகத்தில் 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ஆம் தேதி புதன்கிழமை பிற்பகல் 4 மணி வரையில் (கோட்டப் பொறியாளர் அலுவலக கடிகாரத்தின்படி) பெற்றுக் கொள்ளப் படும். பெற்றுக்கொண்ட ஒப்பந்த அறிவிப்புகள் அன்றைய தினமே பிற்பகல் 4-15 மணியளவில் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்கள் நியமனம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப் படும்.

ஒப்பந்த அறிவிப்பு பற்றிய விவரங்கள் குறிப்பிட்ட அறிவிப்புப்பட்டியல்களிலும், பொதுவான நிபந்தனைகளுடன் அட்டவணையும், மேற்படி விவரக் குறிப்புகளும், திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறைக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் (12—1—72 முதல் 18—1—72 வரை, இரு நாட்களும் உட்பட) அலுவலக நேரத்தில் எல்லா வேலை நாட்களிலும் விண்ணப்பித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு வேலைக்கான அட்டவணைப் பட்டியலின் அடக்கவிலை, விற்பனை வரி உட்பட ரூ. 10.35 (ரூபாய் பத்தும் காசு முப்பத்தைந்தும்) ஆகும். இந்தத் தொகை எக்காரணத்தைக் முன்னிட்டும், திருப்பித்தர இயலாது. 19—1—72-ஆம் தேதி ஒப்பந்தப் பட்டியல்கள் விற்கப்படமாட்டாது.

முன்வைப்புத் தொகை திருச்சிராப்பள்ளி (நெ.கி.ப.) கோட்டப் பொறியாளர் அவர்களின் எல்லைக்குட்பட்ட அரசினர் கருவூலங்கள் ஏதேனும் ஒன்றில் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டு இணைக்கப்பட வேண்டும். இதைத் தவிர கோட்டப்பொறியாளர் பெயருக்கு வாங்கப்பட்ட பன்னிரண்டண்டு தேசீய தற்காப்புப் பத்திரங்களும், மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும் ஷெட்யூல் வங்கிகளால் வழங்கப்படும் வங்கி உத்தரவாதங்களும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் முன்வைப்புத் தொகைக்காகப் பெற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத்தொகை வங்கி உத்தரவாதமாக இருப்பின் அவைகள் ரிசர்வ் வங்கியின் ஒப்புதலுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். முன்வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

| வரிசை எண். | வேலையின் பெயர். | ஒப்பந்த மதிப்பு. | கட்டுத் தொகை. | வேலையை முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | |
| 1 | அப்பாதுரை கிராமம் டி. வளவனூர் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0-2/0 | 43,700 | 1,100 | 4 மாதங்கள். |
| 2 | அப்பாதுரை கிராமம் டி. வளவனூர் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 2/0-4/0 | 43,100 | 1,080 | ஷை |
| 3 | அப்பாதுரை கிராமம் டி. வளவனூர் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 4/0-5/8 | 40,500 | 1,020 | ஷை |
| 4 | புள்ளம்பாடி—செங்கரையூர் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0-2/0 | 46,100 | 1,160 | ஷை |
| 5 | புள்ளம்பாடி—செங்கரையூர் சாலை மேம்பாடு செய்தல் 2/0-4/0 | 47,200 | 1,180 | ஷை |
| 6 | கூகூர்—ஆனந்திமேடு சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0-2/0 | 50,600 | 1,270 | ஷை |
| 7 | கூகூர்—ஆனந்திமேடு சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 2/0-3/2 | 31,300 | 790 | ஷை |

| வரிசை எண். | வேலையின் பெயர். | ஒப்பந்த மதிப்பு. ரூ. | கட்டுத் தொகை. ரூ. | வேலையை முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|---|
| 8 | திருமருதூர்-கீழபெருங்கனூர்-நகர்சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 1/6-4/0 | 42,000 | 1,050 | 4 மாதங்கள். |
| 9 | திருமருதூர்-கீழபெருங்கனூர்-நகர்சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 4/0-6/0 | 34,700 | 870 | ஷை |
| 10 | புள்ளம்பாடி—வண்டலை கூடலூர் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0-2/0 | 40,000 | 1,000 | ஷை |
| 11 | புள்ளம்பாடி—வண்டலை கூடலூர் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 2/0-4/4 | 48,000 | 1,200 | ஷை |
| 12 | அன்பில்–குரிச்சி சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0-1/0 | 28,000 | 700 | ஷை |
| 13 | அன்பில்–குரிச்சி சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 1/0-2/4 | 40,000 | 1,000 | ஷை |
| 14 | வாளாடி–எசனக்கரை தண்டன்கரை சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0-2/0 | 46,000 | 1,150 | ஷை |
| 15 | அன்பில்-தின்னியம் சாலை மேம்பாடு செய்தல் 0/0-1/0 | 37,500 | 940 | ஷை |
| 16 | அன்பில்-தின்னியம் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 1/0-3/0 | 43,000 | 1,080 | ஷை |
| 17 | புள்ளம்பாடி சங்கேந்தி சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0-1/0 | 19,000 | 480 | ஷை |
| 18 | புள்ளம்பாடி சங்கேந்தி சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 1/0-3/0 | 40,000 | 1,000 | ஷை |
| 19 | வாளாடி-சிறுமருதூர்-வி. துறையூர்-சமயபுரம் சாலை கி.மீ. 0/0-2/0 | 47,000 | 1,180 | ஷை |
| 20 | வாளாடி-சிறுமருதூர்-வி. துறையூர்-சமயபுரம் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 2/0-4/0 | 46,000 | 1,150 | ஷை |
| 21 | வாளாடி-சிறுமருதூர்-வி. துறையூர்-சமயபுரம் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 4/0-6/2 | 49,000 | 1,230 | ஷை |
| 22 | மாந்துறைநகர்-மருதூர் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0-2/0 | 30,000 | 750 | ஷை |
| 23 | மாந்துறைநகர்—மருதூர் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 2/0-4/0 | 45,500 | 1,140 | ஷை |
| 24 | மாந்துறைநகர்-மருதூர் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 4/0-5/4 | 35,500 | 890 | ஷை |
| | மண்ணச்சநல்லூர் மார்க்கெட்டுக்கான கட்டடங்கள் கட்டுதல் | | | |
| 25 | மார்க்கெட்டுக்கு அலுவலக கட்டடம் கட்டுதல் | 55,000 | 1,380 | ஷை |
| 26 | நடவடிக்கை மன்றம் ஷெட் கட்டுதல் (எண் 1) | 30,100 | 760 | ஷை |
| 27 | நடவடிக்கை மன்றம் ஷெட் கட்டுதல் (எண் 2) | 30,100 | 760 | ஷை |
| 28 | மார்க்கெட்டுக்குக் கிடங்கு கட்டுதல் | 36,000 | 1,050 | ஷை |

எம். டி. பால்மாணிக்கம்,

(த. 109) கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) திருச்சிராப்பள்ளி.

# ஒப்பந்தப் புள்ளி

## தொழில் வணிகத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தொழில் வணிகத் துறை பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து, மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத் துறை அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட தேதியில் மாலை 3 மணி வரை பெறப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளில் கீழே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப் புள்ளிகள் பெற கடைசி நாள் மாலை 3–10 மணிக்கு, அந்த சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2, அவர்களால் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | கட்டுத் தொகை | ஒப்பந்தப் படிவத்தின் விலை | வேலை முடிக்க வேண்டிய காலம் | [illegible] | ஒப்பந்தப் புள்ளிகள் பெற கடைசி நாள். |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | | |
| 1. காக்கலூர் தொழிற்பேட்டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் வீதம் தொழிலாளர்களுக்கான குடியிருப்பு ஒரு பிளாக்கு கட்டுதல். | 1,100 | 10.40 | 6 மாதங்கள். | 18-12-1971 | 2[illegible]-12-1971 |
| 2. மாதவரம் தொழிற்பேட்டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் வீதம் தொழிலாளர்களுக்காக 2 பிளாக்குகள் கட்டுதல். | 2,100 | 10.40 | 6 மாதங்கள். | 18-12-1971 | [illegible]8-12-1971 |

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை

2. நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) [illegible] கோட்டம், தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32 அவர்தம் அலுவலகத்தில், மேலே குறிப்பிடப்பட்ட தேதிகளில், அலுவலக நேரங்களில் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும்.

3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை அதற்குரிய [illegible] தொகையான ரூ. 10·40-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது) [illegible] கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXI. [illegible]" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) [illegible] கோட்டம், தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32 அவர்களது கணக்கில் செலுத்த வேண்டும்.

கட்டுத் தொகையைச் சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' ரசீது [illegible] ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) தொழிற் பேட்டை, கிண்டி சென்னை-32 அவர்களது [illegible] ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். [illegible] கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் [illegible] குறைத்து கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் [illegible] சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தில் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். [illegible] பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பகுதி.

(த. 76)

6–12–15

## ஒப்பந்தப் புள்ளி

### தொழில் வணிகத்துறை

வேலையின் பெயர் .. .. கிண்டி தொழில்பேட்டை தொழில் நுணுக்கப் பயிற்சி நிலையத்தில் துணைக் கூடங்கள் இரண்டு கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கூறப்பட்ட வேலையை மேற்கொள்வதற்காகத் தொழில்துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, மேற்பார்வைப்பொறியாளர் கட்டுமானப் பகுதி தொழில் வணிகத்துறை அவர்களால் 29—12—1971 அன்று மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில்துறை, 35/2, உட்ஸ் ரோடு/ சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம் .. மொத்தத் தொகை
2. கட்டுத் தொகை .. ரூபாய் 3,200 (ரூபாய் மூவாயிரத்து இரு நூறு மட்டும்)
3. மாதிரி வரைப்படத்துடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையும், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலைக்குரிய விற்பனை வரியும் சேர்த்து. ரூபாய் 10·40
4. வேலையைமுடிக்கவேண்டிய காலம். 6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் (கட்டுமானம்) வடக்குக்கோட்டம் தொழிற்பேட்டை, கிண்டி, என்ற முகவரியில் உள்ள நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), வடக்குக் கோட்டம் அவர்களது அலுவலகத்தில் 17—12—1971 அன்று முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்ட தொகையான ரூபாய் 10·40 (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படாது), அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX Industries other Receipts" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) வடக்குக் கோட்டம், தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32, அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத் தொகையைச் சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' ரசீது வடிவிலோ ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) வடக்குக் கோட்டம், தொழிற்பேட்டை, கிண்டி, அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்ட் வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமை யாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகிறவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி.பி. மாத்யூ,
மேற்பார்வையாளர், (கட்டுமானப்பகுதி)

(த. 72)

## ஒப்பந்தப் புள்ளி

### எழுதுபொருள் அச்சுத்துறை

அரசு அச்சகம் தங்கசாலை கட்டடம் சென்னையில் 1—2—72 முதல் 31—1—73 வரை உள்ள காலத்திற்குக் கழிவுப் பொருட்களை அன்றாடம் எடுத்துக் கொள்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 29—12—1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள், மூடி முத்திரையிட்டு பதிவு அஞ்சலில் எழுது பொருள் அச்சுத்துறை இயக்குநர், சென்னை என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். வேறு வழியில் அனுப்பக்கூடாது. "29—12—71 கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான ஒப்பந்தப் புள்ளி" என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

எழுது பொருள் அச்சுத் துறை இயக்குநர், சென்னை-1-ல் எல்லா வேலை நாட்களிலும், ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் மற்ற விவரங்கள் தெரிந்து கொள்ளலாம்.

இயக்குநர்

(த. 65)

ஒப்பந்தப் புள்ளி

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், கோட்டம் எண் 4, அசோக் நகர், சென்னை-83.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைகளை மேற்கொள்வதற்காகப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம் எண் 4, அசோக் நகர், சென்னை-83 அவர்தம் அலுவலகத்தில் 30—12—1971 மாலை 3—00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3—10 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | வேலையின் சுமார் மதிப்பு. | ஒப்பந்தப் படிவம் கட்டுத் தொகை. | ஒப்பந்தப் பத்திரத்தின் விலை (திருப்பித் தரப்படாது). | வேலை முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | |
| 1. ஜாபர்கான் பேட்டை, திட்டம் 2, தொகுதி ஒன்று டி.டி. 217/70 படி ஓர் அறை நான்கு தளங்கள் உள்ள குடியிருப்புக்கள் ஒன்றில் 32 (ஏ1, ஏ2.) இரண்டு பிளாக்குகள் கட்டுதல். | 3,97,600 | 6,000 | 15 விற்பனை வரி. | 9 மாதங்கள். |
| 2. ஜாபர்கான் பேட்டை, திட்டம் 2 தொகுதி 2 டி.டி. 217/70 படி ஓர் அறை நான்கு தளங்கள் குடியிருப்புகள் ஒன்றில் 32 (ஏ. 3, ஏ. 4, ஏ. 5) மூன்று பிளாக்குகள் கட்டுதல். | 5,96,400 | 9,000 | 15 விற்பனை வரி. | 9 மாதங்கள். |

மேற்பார்வைப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம்-4, அசோக் நகர், சென்னை-83 அவர் தம் அலுவலகத்தில், 20-12-1971-லிருந்து எல்லா வேலை நாட்களிலும் காலை 11—00 மணி முதல் மாலை 3—00மணி வரை, ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை விற்பனைவரி உட்பட செலுத்தப்பட்ட செலுத்துச் சீட்டைக் கொடுத்து ஒப்பந்தப் புள்ளி வடிவங்களைப் பெறலாம்.

பெற்றுக் கொள்ளப்பட்ட எந்த ஒரு அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளும் காரணம் கூறாமல் நிராகரிக்க உரிமையுண்டு.

எஸ். மாரியப்பன்,
மேற்பார்வைப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம் எண்-4.

அசோக் நகர், சென்னை-83,
25—11—1971.

(ந. 71)

## ஒப்பந்தப் புள்ளி

### தொழில் வளர்ச்சித் துறை

வேலையின் பெயர் ...

தஞ்சாவூர் தொழிற் பேட்டையில் [illegible] பணிக்கூடங்கள் அமைக்க [illegible] கட்டுமானம்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ் குறிப்பிட்ட வேலையை மேற்கொள்வதற்காக, [illegible] வழங்குவதற்காக, தொழில் துறை [illegible] களின் கட்டுமானப் பகுதியின் [illegible] ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, [illegible] மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் [illegible]-12-1971 அன்று மாலை 3-00 மணி வரை [illegible] ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. [illegible] ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு, அந்த சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வகை ... மொத்தத் தொகை
2. கட்டுத் தொகை ... சுமார் 2,500 ரூபாய் (இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்)
3. மாதிரி வரைப்படத்துடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையும், ஒப்பந்தப் புள்ளிப்பத்திரங்களின் விலைக்குரிய விற்பனை வரியுஞ் சேர்த்து. ... ரூபாய் 10·40 காசு
4. வேலையை முடிக்க வேண்டிய காலம். ... 6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர் அலுவலகம், திருச்சி கோட்டம், 63, ரங்கஜைதபுரம், புத்தூர் என்ற முகவரியில் உள்ள நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), திருச்சி கோட்டம் அவர்களது அலுவலகத்தில் 15—12—1971 அன்று முதல், அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்ட தொகையான ரூபாய் 10·40-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது). அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX Industries other Receipts" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) திருச்சி கோட்டம் 63, ரங்கஜைதபுரம், புத்தூர், திருச்சி அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத் தொகை எனக் வசூலிலோ, "கால் டிபாசிட்" ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் [illegible] நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) திருச்சி கோட்டம், [illegible] வங்கியின் [illegible] ஏற்றுக் கொள்ளப்படும். [illegible] தமிழ்நாடு [illegible] 5 [illegible] கட்டுத் தொகையாக [illegible] ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை [illegible] ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் [illegible] கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது [illegible] ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப்பகுதி.

(த. 62)

## ஒப்பந்தப் புள்ளி

தமிழக ஆளுநருக்காக கீழ்க் கையொப்பமிட்டவரால் முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 19—1—1972 மாலை 3·00 மணிவரை அரசு அச்சகத்திற்குத் தேவையான பலவிதமான பொருள்கள் வழங்குவதற்கு வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தங்கள் விவர அட்டவணையில் டைப் செய்து அனுப்பப்பட வேண்டும். விவர அட்டவணைகளை ரூபாய் இரண்டு மட்டும் செலுத்தி, விற்பனை அலுவலர், அரசு வெளியீட்டு அலுவலகம், சென்னை-2 அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். மற்ற விவரங்களுக்கு, இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, சென்னை-1, அவர்களுக்கு எழுதவும்.

—ஜி. ரங்கா ராவ்,
இயக்குநர்.

அரசினர் எழுது பொருள்
அச்சகத்துறை இயக்குநர்
அலுவலகம், சென்னை-1.
3—12—1971

(த-89)

## தொழில் வணிகத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளை மேற்கொள்வதற்காகத் தொழில் துறை மற்றும் இதர அரசுத்துறைகளின் கட்டுமானப்பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத் துறை அவர்களால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10-க்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2 உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் பத்திரத்தின் விலை. ரூ. | வேலை முடிக்க வேண்டிய காலம். | ஒப்பந்தப் பத்திரம் கிடைக்கும் நாள். | ஒப்பந்தப் புள்ளிப் பெறுவதற்கான கடைசிநாள் |
|---|---|---|---|---|---|
| 1 அம்பத்தூர் தொழிற் பேட்டையில், 2 பிளாக்குகள் தொழிலாளர் குடியிருப்புகள் (பிளாக் 1-ல் 6 குடியிருப்புகள்) கட்டுதல். | 2,100 | 10·40 | 6 மாதங்கள். | 17-12-1971 | 29-12-1971 |
| 2 அம்பத்தூர் தொழிற் பேட்டையில் 2 பிளாக்குகள் தொழிலாளர் குடியிருப்புகள் (ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள்) கட்டுதல். | 2,100 | 10·40 | 6 மாதங்கள். | 17-12-1971 | 29-12-1971 |
| 3 அம்பத்தூர் தொழிற் பேட்டையில் 2 பிளாக்குகள் தொழிலாளர் குடியிருப்புகள் (ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள்) கட்டுதல். | 2,100 | 10·40 | 6 மாதங்கள். | 17-12-1971 | 29-12-1971 |
| 4 அம்பத்தூர் தொழிற் பேட்டையில் 2 பிளாக்குகள் தொழிலாளர் குடியிருப்புகள் (ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள்) கட்டுதல். | 2,100 | 10·40 | 6 மாதங்கள். | 17-12-1971 | 29-12-1971 |

1. ஒப்பந்த வடிவம்: மொத்தத் தொகை.

2. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) அம்பத்தூர் கோட்டம், 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர் தம் அலுவலகத்தில் மேலே குறிப்பிட்ட தேதி முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை அதற்குரிய விற்பனை வரி உட்பட்ட தொகையான ரூபாய் 10-40ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ ''XXIX Industries and Other Receipts'' என்ற தலைப்பில், நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) அம்பத்தூர் கோட்டம், 35/2, உட்ஸ்ரோடு, சென்னை-2 அவர்களது கணக்கில் செலுத்த வேண்டும்.

4. கட்டுத் தொகையைச் சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்டு டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), அம்பத்தூர் கோட்டம், 35/2 உட்ஸ்ரோடு, சென்னை-2 அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்ட் வங்கியின் டிமாண்டு டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசு கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்

களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப் பட்ட எந்த வங்கியினுடைய உத்தரவாதமும் ஏற்றுக்கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானல் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகிறவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி பி மாத்யூ,

சென்னை-2. மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி.

(த. 86)

---

## ஒப்பந்தப் புள்ளி

## குடிநீர், வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழே குறிப்பிடப் பட்டுள்ள வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-8 அவர்களால் 52, கெங்கு ரெட்டி சாலை, சென்னை-8 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 29-12-1971 அன்று மாலை 3-00 மணி வரை, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் துறைக்குரிய வடிவத்தில் இத்துறையில் அல்லது இது போன்ற அரசு நிறுவனங்களில் உரிய பிரிவுகளில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்ததாரர் களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

| தொடர் எண்ணும் வேலையின் விவரமும். | ஒப்பந்த வடிவம். | கட்டுத் தொகை. | வேலையைமுடிக்க வேண்டிய காலம். | ஒப்பந்தப் பத்திரங்கள் விலை. |
|---|---|---|---|---|
| | | ரூ. | | ரூ. |
| 1 பண்ருட்டி நீர் வழங்கு திட்டம் இரண்டாவது கட்டம் 1-வது பிராந்தியத்திற்காக, 9 இலட்சம் லிட்டர் திறனுள்ள ஆர். சி.சி. மேல் மட்ட சர்விஸ் ரிசர்வாயர் வேண்டுமான குழாய்கள், இணைப்புகள், வால்வு பிட்டுகள் முதலியவற்றுடன் முழுதுமாக. | மொத்தத் தொகை. | 4,680 | 7 மாதங்கள். | 10·35 |
| 2 பண்ருட்டி நீர் வழங்கு திட்டம் இரண்டாவது கட்டம், 2-வது பிராந்தியத்திற்காக 4 இலட்சம் லிட்டர் திறனுள்ள ஆர்.சி.சி. மேல்மட்ட சர்விஸ் ரிசர்வாயர், வேண்டுமான குழாய்கள், இணைப்புகள், வால்வு பிட்டுகள் முதலியவற்றுடன் முழுமையாக. | மொத்தத் தொகை. | 2,365 | 7 மாதங்கள். | 10·35 |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிருவாகப் பொறியாளர் (ம.ந.வா.பொ.) மக்கள் நல் வாழ்வுப் பொறியியல் கோட்டம், குடிநீர் வடிகால் வாரியம், 28, ராஜாஜி தெரு, சீனிவாசபுரம், தஞ்சாவூர் அவர்களிடமிருந்து, ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணத்தை நேரில் செலுத்தியோ அல்லது பண அஞ்சல் மூலம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப் படமாட்டாது.

(த. 75)

மேற்பார்வைப் பொறியாளர்,
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம்,
குடிநீர், வடிகால் வாரியம், சென்னை-8.

அரசினர் மருத்துவ மனை உதகை

உதக மண்டல அரசினர் தலைமை மருத்துவமனை மற்றும் கூனூர், கூடலூர், கோத்தகிரி, சிங்காரா ஆகியவற்றி லுள்ள மருத்துவ நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு ஆகாரப் பொருட்களும், மருத்துவமனைத் தேவைகளும் 1971 ஏப்ரல் 1-முதல் (அல்லது ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்ட தேதி முதல்) 1973 மார்ச்சு 31 முடிய வழங்குவதற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972, ஜனவரி 7, வெள்ளிக் கிழமை மாலை 2.00 மணி வரை பெற்றுக்கொள்ளப் படும். உதகமண்டலம் அரசினர் தலைமை மருத்துவமனையைப் பொறுத்த அளவில் ஒப்பந்தப் புள்ளிகள் மருத்துவமனையின் மேற்பார்வையாளரால் பெற்றுக்கொள்ளப்படும். இதர மருத்துவ நிறுவனங்களைப் பொறுத்தவரை அந்தந்த நிறு வனங்களுக்குப் பொறுப்பான மருத்துவ அலுவலர்கள் பெற்றுக்கொள்வார்கள்.

ஒப்பந்த வடிவம், நிபந்தனைகள் அந்தந்த மருத்துவ மனை களுக்குத் தேவைப்படும் ஆகாரப் பொருட்கள், இதரப் பொருட்கள் ஆகிய விவரங்களை, மருத்துவ அலுவலர் அல்லது சம்பந்தப்பட்ட மருத்துவமனையின் மேற்பார்வையாளர் இவர் களுக்கு மனுச் செய்து பெறலாம். செலானையும் உடன் வைத்து மனுச் செய்ய வேண்டும். ஒப்பந்தப் புள்ளி வடி வம் முதலியவைகளுக்கான விலை ரூ. 5.20-ஐ விற்பனை வரி உட்பட (திருப்பித்தரப்படாது) ஒரே சலானில் இந்திய ரிசர்வ் வங்கியிலோ, இந்திய ஸ்டேட் வங்கியின் கிளையிலோ, தமிழ் நாடு அரசுக் கருவூலத்திலோ பத்திரத்திற்காக "XXIII Medical G. Miscellaneous 1 Director of Health Services and Family Planning—Other receipts" என்ற தலைப்பில் ரூபாய் ஐந்தும், விற்பனை வரிக்காக ரூ. 0.20 காசு XII Sales-tax receipts under the State Sales tax Act—General Sales tax என்ற தலைப்பிலும் கட்டவேண்டும். ரொக்கமாகப் பணம் ஏற்கப்படமாட்டாது.

குறிப்பு.—(1) 1971 அக்டோபர் 1-ஆம் தேதிக்குப் பிற்பட்டு தாசில்தார் ஒருவரால் கையெழுத்திடப்பட்ட நிர்ணய பாரத்திலமைந்த சொத்துச் சான்றிலோ அல்லது கெஜட் பதிவு பெற்ற அதிகாரி ஒருவரால் சரியான முறையில் அத்தாட்சி இடப்பட்ட அதன் உண்மை நகலோ ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

(2) ஒப்பந்தத்தின் தொகை மதிப்பு ரூ. 10,000-க்கு அதி கப்படுமானால் வருமான வரி ஒப்பாய்வுச் சான்றித ழும், ஒப்பந்தத்தின் தொகை மதிப்பு ரூ. 1,800-க்கு மேலானால் விற்பனை வரிக் கணக்குத் தீர்ப்புச் சான்றித ழும் ஒப்பந்தத்துடன் சேர்த்துத் தாக்கல் செய்ய வேண்டும்.

டாக்டர் கே. ஜே. வர்க்கீஸ்,
மாவட்ட மருத்துவ அலுவலர்,
நீலகிரி,
மேற்பார்வையாளர்,
அரசினர் மருத்துவமனை.

உதகமண்டலம்,
18—11—1971.

(த. 106)



வீட்டு வசதி வாரியம்

கொரட்டூர் கோட்டம்

கே. ஆர். 1/211-ஏ/70.
24-11-71.

கீழ்க்கண்ட வேலைக்காக, உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் எழுதப்பட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள் ளிகள், கீழே கையொப்பமிட் டவரால் 22-12-71 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படு கின்றன.

வேலையின் பெயர்: தமிழ் நாடு அரசு வாடகை வீடுகள் திட்டம். இரண்டாம் கட்டம், தொகுதி I-ன் கீழ் காஞ்சிபுரத் தில் T. D. எண் 2-ஏ/68-ன் படி இரண்டு அறை, இரண்டு தள பிளாக்குகள், இரண்டு பிளாக்குகள் கட்டுதல்.

வேலையின் சுமார் மதிப்பு.—ரூ. 66,400.

கட்டுத் தொகை—ரூ. 995.

வரை படங்கள், ஒப்பந்தப் பத்திரங்கள் ஆகியவைகளை நிருவாகப் பொறியாளர் (கே). தமிழ்நாடு வீட்டு வசதி வாரி யம், அறிஞர் அண்ணா நகர், சென்னை-40 அவர்கள் அலுவ லகத்தில் 15-12-71-லிருந்து ரூ. 10-ம் அத்துடன் விற்பனை வரி, சர்சார்ஜ் ஆகியவையும் (இது திருப்பித் தரப்படாது) சலான் முறையில் செலுத்தி எல்லா அலுவல் நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். ஒப் பந்தப் புள்ளிகள் 22-12-71 மாலை 3-05 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளி தாரர்கள் முன்னிலையில் திறக் கப்படும்.

டி. பி. காளியப்பன்,
நிருவாகப் பொறியாளர்
(கே).

(த.77)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப் பணித்துறை

வேலையின் பெயர்:

கடலூர் மீன்துறை வடகரையில் படகு பேசின் ரிவெட்மென்ட் சுவர் கட்டுதல்.

(1) தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கூறப்பட்டவேலைக்காக 27-12-1971 மாலை 3·00 மணி வரை, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, மத்திய மெக்கானிகல் வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

(2) ஒப்பந்த வடிவம்: கே. 2.

(3) கட்டுத் தொகை: ரூ. 3,000.

(4) ஒப்பந்தப் பத்திரங்கள் விலை: ரூ. 20 (இருபது மட்டும்).

(5) ஒப்பந்தப் பத்திரங்களின் விற்பனை வரி. ரூ. 0.60 காசு (அறுபது காசு மட்டும்.)

(6) வேலை முடிக்கவேண்டிய காலம். 6 மாதங்கள்.

(7) மேற்பார்வைப் பொறியாளர், மத்திய தொழில் வட்டம், சென்னை-5 அவர்தம் அலுவலகத்தில் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கும் காலம். 13—12—1971 முதல் 24—12—1971 முடிய.

(8) பிரிவு 4, பிரிவு 5 இவற்றில் குறிப்பிட்டத் தொகையை முறையே "P. W. Remittances XII. other Remittances" என்றும் 'Sales Tax—B. Receipt under the State Sales tax Act. என்ற தலைப்புகளில் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவிலோ அல்லது ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவின் எந்தக் கிளையிலுமோ அல்லது அரசாங்கக் கருவூலம் எதிலுமோ மேற்பார்வைப் பொறியாளர், மெரைன் ஒர்க்ஸ் கோட்டம், கடலூர் அவர் தம் கணக்கில் செலுத்தியதற்கான சலான்களுடன் மேலே குறிப்பிட்ட ஒப்பந்தப் படிவங்களைப் பெற மனுச்செய்து, பெற்றுக் கொள்ள வேண்டும்.

(9) ஒப்பந்தப் புள்ளி அறிக்கை விவரத்தில் கண்டுள்ள விதிப்படியே கட்டுத் தொகைகள் ஏற்கப்படும்.

(10) துறைக்குரிய வடிவத்தில் மூடி முத்திரையிட்ட உறையில் மேலே வேலையின் பெயரை எழுதி ஒப்பந்தப் புள்ளி என்று குறிப்பிட்டு மட்டுமே ஒப்பந்தப் புள்ளிகள் அளிக்கப்படவேண்டும்.

(11) எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்க மேற்பார்வைப் பொறியாளர், மத்திய மெக்கானிக்கல் வட்டம் அவர்களுக்கு உரிமையுண்டு.

(12) 9, 10-வது பிரிவுகளில் சொல்லப்பட்டதற்கு மாறாக உள்ள ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

**டி. ஐ. பால்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
மத்திய மெக்கானிக்கல் வட்டம்.
சென்னை-5.

(த. 78)

---

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் லிமிடெடின் யூனிட்

(தமிழ்நாடு அரசின் நிறுவனம்)

எண்: ஜி.எல். 3/71.

நாளொன்றுக்குச் சுமார் 1,200 டன் சுண்ணாம்புக் கற்களை ராஜபாளையம் அருகே ஆலங்குளம் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் சுண்ணாம்புக்கல் குவாரியிலிருந்து (தொழிற்சாலை சதுக்கத்திற்கு சுமார் 2-லிருந்து 2·5 கிலோ மீட்டர்) 1971 டிசம்பர் கடைசியிலிருந்து 1½ மாதத்திற்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்குக் கொண்டுசென்று போடும் பணிகளுக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20—12—1971 வரை வரவேற்கப்படுகின்றன.

நிபந்தனைகள், ஒப்பந்தப் புள்ளி வடிவம், இதர விவரங்களை பொது மேலாளர், தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம் அஞ்சல், (வழி) ராஜபாளையம் அவர்களிடம் ரூ. 10·30 மட்டும் (இது திருப்பித் தரப்படமாட்டாது) 8—12—1971 முதல் பண அஞ்சல் மூலம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**பொது மேலாளர்,**
தமிழ்நாடு சிமெண்ட்ஸ் அஞ்சல்,
(வழி) ராஜபாளையம்,
1—12—1971.

(த.107)

ஒப்பந்தப் புள்ளி

கோட்டம் 1, சென்னை-1

தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் சார்பிலும் வாரியத்திற்காகவும், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வேலையின் பெயரும் ஒப்பந்தப் புள்ளி விவரங்களும் உறையில் குறிப்பிட்டு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழ்க்கண்ட வேலைகளை மேற்கொள்வதற்காக மேற்பார்வைப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம்-1, 35/37 ஜகாங்கிர் தெரு, கடற்கரை இரண்டாவது சந்து, சென்னை-1-ல், 30-12-1971 அன்று மாலை 6-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 6-05 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

| வேலையின் பெயர். | தொகை மதிப்பு. | கட்டுத் தொகை. | ஒப்பந்த வடிவம். | ஒப்பந்தப் பத்திரத்தின் விலை. |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | ரூ. |
| சென்னை மாநகராட்சி 10-வது வட்டம் பழைய வண்ணாரப்பேட்டை ஆர். எஸ். 1756/1 செமெட்ரிசாலைத் திட்டத்தில் 2·73 இலட்சம் லிட்டர் திறனுள்ள ஆர். சி. சர்வீஸ் மேல்மட்டதேக்கம், தரை மட்டத்துக்கு மேல் 21.0 மீட்டரில் அமைப்பிட்டுக்கட்டுதல், அவசியமான குழாய்கள் இணைப்புகள், வால்வு பிட்டுகள் நீர் மீட்டர் சமக்கிணறு ஏற்பாடு நியமனம் முழுமையாக. | 1·31 இலட்சம். | 1,070 | மொத்தத் தொகை. | 40- விற்பனை வரி |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், நிர்வாகப் பொறியாளர், குடிசைப் பகுதி மாற்று வாரியம் கோட்டம் எண் 1, 35/37, ஜகாங்கீர் தெரு, கடற்கரை இரண்டாவது சந்து, சென்னை-1 லுள்ள அலுவலகத்தில் 8-12-1971 முதல் 29-12-1971 வரை அலுவலக நாட்களில் காலை 11-00 மணி முதல் மாலை 3-00 மணி வரை, ஒப்பந்தப் பத்திரத்தின் விலையையும் விற்பனை வரியையும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். "Personal Deposit Account (P. D. A.) of the Executive Engineer Slum Clearance Board, Division No. 1." என்ற தலைப்பில் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலையை ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில், சைதாப்பேட்டை, சென்னையில் செலுத்த வேண்டும். விற்பனை வரி, பொது விற்பனை வரி இரண்டு சலான்களும் கொடுக்கப்பட வேண்டும்.

காரணம் ஏதும் குறிப்பிடப்படாமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்க உரிமை உண்டு.

எம். ஆத்மநாதன்,
நிர்வாகப் பொறியாளர்,
குடிசைப் பகுதி மாற்று வாரியம், கோட்டம், சென்னை-1

(ஜ 102)

16-12—16

(3)



உங்களுக்கு வேண்டிய
எல்லாமே இங்கே கிடைக்கும்
குறளகம்
சென்னை.1
கதர்-கைத்தொழில்
அங்காடி
தொலைபேசி எண்கள் : 20461. 20462. 20463. 20464. 20465.
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்

## அரசு எழுதுபொருள் அச்சுத் துறை

1972–73-ஆம் ஆண்டுக்காக எழுதுபொருள்களை, துணைப் பொருட்கள் வழங்குவதற்காக, கீழே குறிப்பிட்ட ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியாக தமிழ்நாடு ஆளுநர் சார்பில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநர், தங்கசாலை கட்டடம், சென்னை-1, அவர்களால் ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்குக் கடைசித் தேதியும் நேரமும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| தொகுதி. | பொருட்கள் விவரம். | ஒப்பந்தப் புள்ளிகள் பெறக் கடைசித் தேதியும் நேரமும். |
|---|---|---|
| 'A' | Drawing meterials (colour cakes, Drawing ink, Tracing cloth, Tracing paper etc.) | |
| 'B' | Accessories for typewriters and duplicators (Typewiter Ribbons carbon paper, Stencil paper, Duplicating ink etc.) | 1972 ஜனவரி 7-ஆம் தேதி மாலை 5 மணி. |
| 'C' | Cutlery (Needles, paper pins, paper clips etc.) | |
| 'D' | Writing Materials (Pencils, Pen-holders, nibs etc.) | |
| 'E' | Miscellaneous articles(Gum, Calico cloth, hessian country twine, packing planks etc.) | |
| 'F' | Inks (Writing ink, Registration ink, Rubber Stamp ink etc.) | 1972 ஜனவரி 10-ஆம் தேதி மாலை 5 மணி. |
| 'G' | Clothing materials (Gold Lace, yellow braid, Woollen Jersey, Socks, buttons etc.) | |

ஒப்பந்த நிபந்தனைகள், கட்டுத் தொகைகள், சாம்பிள்கள் முதலியன குறித்து மேல் விவரங்களை உதவி இயக்குநர், எழுதுபொருள் அரசினர் எழுது பொருட்கள் ஸ்டோர்ஸ், பழைய உயர்நீதி மன்றக் கட்டடம், முதல் கடற்கரைச் சாலை சென்னை-1, அவர்களிடமிருந்து பெறலாம்.

ஜி. ரங்காராவ்,
இயக்குநர்,
எழுதுபொருள் அச்சுத் துறை.

சென்னை,
17—11—1971.
([illegible] 84)

## மகளிர் குழந்தைகள் மருத்துவமனை

மகளிர் மருத்துவம் மற்றும் பெண்கள் நோய் நிறுவனம், அரசினர் மகளிர் குழந்தைகள் மருத்துவமனை, எழும்பூர், சென்னை-8-ல் 1972–73-க்கு உணவு, உணவு அல்லாத மற்ற பொருட்களை வழங்குவதற்கு.

அரசினர் மகளிர் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை-8-க்கு 1972 ஏப்ரல் 1-லிருந்து அல்லதுஅதற்குப் பிற்பட்ட ஒரு தேதியிலிருந்து 1973 மார்ச்சு 31 வரை உள்ள காலத்துக்கு உணவு, இதர மருத்துவமனைத் தேவைகளை வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் இயக்குநரும் மேற்பார்வையாளரும், அரசினர் மகளிர் குழந்தைகள் மருத்துவமனை, எழும்பூர், சென்னை-8, அவர்களால் 1972 ஜனவரி 3, திங்கட்கிழமை மாலை 2 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இயக்குநர், மேற்பார்வையாளர் அலுவலகம், மகளிர் மருத்துவம் மற்றும் பெண்கள் நோய் நிறுவனம், அரசினர் மகளிர் குழந்தைகள் மருத்துவமனை, எழும்பூர், சென்னை-8-ல் ஒப்பந்தப் புள்ளி நமூனவும், மருத்துவ மனைக்கு வழங்க வேண்டிய பொருட்கள் அடங்கிய பட்டியலும், மற்றும் நிபந்தனைகள் அடங்கிய அறிவிப்பும் பெறலாம். ஒப்பந்தப் பத்திரத்திற்கான விலை ரூபாய் ஐந்தும், இதற்கான விற்பனை வரி 3½ சதவீதம் சர்சார்ஜ் 5சதவீதமும் முறையே, XXIII—Medical—II Director of Medical Education–J-Misc.'' என்றும், ''XII Sales Tax Receipts under the Sales Tax Act—General Sales Tax '' என்ற தலைப்புக்களில் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவிலோ அல்லது ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவின் எந்தக் கிளையிலுமோ அல்லது அரசாங்கக் கருவூலம் எதிலுமோ தமிழ்நாடு அரசின் கணக்கில் செலுத்தியதற்கான சலான்களுடன் மேலே குறிப்பிட்ட ஒப்பந்த வடிவங்களைப் பெற மனுச்செய்து, பெற்றுக்கொள்ள வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் இத்தொகை திருப்பித்தரப்பட மாட்டாது.

ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ஆம் தேதிக்குப்பின் தாசில்தார் கையொப்பமிட்ட சொத்துக்களின் பெறுமான சான்றிதழ் அல்லது அதன் உண்மையான நகல் அரசிதழ் பதிவு அலுவலரால் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். ஒப்பந்தம் கொடுக்கப்படும் சாமான்களின் மதிப்பு ரூ. 10,000-க்கு மேற்படுமானல் வருமான வரி பாக்கியில்லாமல் செலுத்துதற்குரிய அத்தாட்சியும் ரூ. 1,000-க்கு மேற்பட்டால் விற்பனை வரிகட்டி முடித்த அத்தாட்சியும் தேசிய இனச்சான்றும் சேர்ந்து அனுப்பப்பட வேண்டும்.

என். ராஜசேகரன்,
இயக்குநரும், மேற்பார்வையாளரும்,

([illegible])

ஒப்பந்தப் புள்ளி

## சுருளியாறு நீர்மின் திட்டம்

குறிப்பிடுகை எண் : SUR 1-எ, SUR 2-எ, SUR 4-எ, SUR 5-எ, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட தனித் தனியான ஒப்பந்தப் புள்ளிகளை அதன் முக உறையில் எழுதப்பட்டு அவைகளை மேற்பார்வைப் பொறியாளர், கோதையாறு நீர்மின் திட்டம், 34-எ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7, திருநெல்வேலி மாவட்டம் என்று முக உறை இட்டவரால் அங்கீகரிக்கப்படுவதால் அவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அவர் பிரதிநிதியால் அவருடைய அலுவலகத்தில் 3-1-1972 அன்று மாலை 3-00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். அவைகளை அதே நாளில் பிற்பகல் 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னால் திறக்கப்படும்.

| எண். | குறிப்பிடுகை எண். | வேலையின் பெயர். | ஒப்பந்தப் புள்ளியின் விலை எஸ்.டி. உட்பட. | கட்டுத் தொகை ரூபாய். | ஒப்பந்தப் புள்ளிப் பெற்றுக் கொள்ளும் கடைசித் தேதி. |
|---|---|---|---|---|---|
| 1 | SUR 1எ | நிரந்தரமான '2ஜி' கட்டடம் ஆறுக்கு. | 10.35 | 2,400 | 3-1-1972 |
| 2 | SUR 2எ | தற்காலிக '8ஜி' கட்டடம் இரண்டிற்கு. | 10.35 | 1,650 | 3-1-1972 |
| 3 | SUR 4எ | நிரந்தரமான மூன்றாவது நான்காவது '2எப்' கட்டடம். | 10.35 | 1,400 | 3-1-1972 |
| 4 | SUR 5எ | தற்காலிக '6எப்' கட்டடம் ஒன்றிற்கு. | 10.35 | 1,350 | 3-1-1972 |

ஒப்பந்தப் புள்ளி நகல்களை (மாற்றத் தகாதவை) ஒவ்வொரு செட்டிற்கும் மேலே குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி, கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்திலிருந்து பெறலாம் அல்லது கோட்டப்பொறியாளர், சுருளியாறு நீர்மின் திட்டம், சின்னமனூர், மதுரை மாவட்டம் என்ற அலுவலகத்திலிருந்தும் இத்தொகையைச் செலுத்தி ஒப்பந்தப் புள்ளிப் படிவத்தைப் பெறலாம். இத்தொகையை எந்தச் சந்தர்ப்பத்திலும் திருப்பித்தரப்படமாட்டாது.

இவ்வலுவலகத்தின் மனுப் பாரத்தில் இல்லாத ஒப்பந்தப் புள்ளிகளையும் குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு வரும் ஒப்பந்தப் புள்ளிகளையும் கட்டுத் தொகையை(Earnest Money deposit) இணைக்கப்படாத ஒப்பந்தப் புள்ளிகளையும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். கட்டுத்தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான ரசீதைப் பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் செக்குகள் (Cheques) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கட்டுத்தொகைக்கான டிமாண்ட் டிராப்ட்ஸ் முன்னதாக அனுப்பிவைக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தப் புள்ளி அனுப்பக் கூடாது.

மேலே குறிப்பிட்டுள்ள வேலைகளை காரணம் தெரிவிக்காமல் சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவோ அல்லது ஒரு ஒப்பந்தப்புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரிக்கவும் கீழே கையொப்பமிட்டவருக்குப் பூரண உரிமையுண்டு.

ஒப்பந்தப் புள்ளிப் பிரதிகள் அஞ்சலில் அனுப்பப்படும்போது இடையில் உண்டாகும் கால தாமதம் அல்லது காணமல் போவது முதலியவைகளுக்கு இவ்வாரியம் பொறுப்பல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர்-மின் திட்டம், 34-எ, பெருமாள்புரம்.
திருநெல்வேலி-7.

(ஜ. 104)

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு.
அச்சு எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-2.